# நாடகமும் அரங்கக் கலைகளும்

## ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி

## தரம் 7





அழகியற்கல்வித் துறை
கலைத்திட்ட அபிவிருத்திப் பீடம்
தேசிய கல்வி நிறுவகம்

# நாடகமும்
# அரங்கக் கலைகளும்

## ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி

## தரம் 07
(2008 தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படும்)

அழகியற்கல்வித் துறை
மொழிகள், மானுடவியல், சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம

**நாடகமும் அரங்கக் கலைகளும்**
**தரம் 07**
**ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி**

© தேசிய கல்வி நிறுவகம்
முதலாம் பதிப்பு - 2008

அழகியல் கல்வித்துறை
மொழிகள், மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம

***பதிப்பு:***

# பணிப்பாளர் நாயகத்தின் செய்தி

புத்தாயிரம் ஆண்டின் முதலாவது கல்வி மறுசீரமைப்பின் மூலம் பாடசாலை முறைமையினுள் பரவிக் காணப்படுகின்ற முரண்பாடுகள் பற்றி ஆராயப்படுகின்றது. ஆகவே இன்றைய இளைஞர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளான சிந்திக்கும் ஆற்றல், சமூக மற்றும் திறன்கள் குன்றியிருத்தல் போன்றவற்றை வெற்றிகொள்வதை அடிப்படையாகக் கொண்டு இக்கலைத்திட்டச் சீர்திருத்தம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

ஆசிய வலய நாடுகளின் கல்வி முறைமையுடன் ஒப்பிடும்போது எமது நாட்டின் கல்வி முறைமை கடந்த காலங்களில் முன்னணியில் திகழ்ந்தது. எனினும் இன்று அந்நாடுகள் இலங்கையை விடக் கல்வியில் முன்னேற்றமடைந்துள்ளன. ஏற்கெனவே தீர்மானித்த வற்றைக் கற்பித்தல், இருப்பதை மாற்றமேதுமின்றிச் சமர்ப்பித்தல் போன்ற புத்தாக்க சிந்தனையற்ற கற்பித்தல் முறைமையே இதற்குக் காரணம் என இனங்காணலாம்.

இதனை வெற்றி கொள்வதற்காகத் தேசிய கல்வி நிறுவக அதிகாரிகள், தெளிவான தூர நோக்குடன் கலைத்திட்டத்தை மறுசீரமைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். ஏற்கெனவே அறிந்தவற்றின் மூலமும் புதிய கருத்துக்களைக் கண்டாய்வதன் மூலமும் எதிர்காலத்துக்குத் தேவையானவற்றை உருவாக்குவதன் மூலமும் மாணவர் சமுதாயத்தின் திறன்களையும் தேர்ச்சிகளையும் விருத்தி செய்வதை நோக்காகக் கொண்டு இப்புதிய கலைத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இதனை அடைவதற்கான ஆசிரியரின் வகிபாகத்தில் பாரிய மாற்றங்கள் ஏற்பட வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது. இதன்படி தற்போது நடைமுறையிலுள்ள ஆசிரிய மைய அணுகுமுறைக்குப் பதிலாக மாணவர் மைய, தேர்ச்சி மைய, செயற்பாடுகளை அடிப்படையாகக் கொண்ட அணுகுமுறை ஆசிரியர்களால் பின்பற்றப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த அறைகூவல்களுக்கு முகங்கொடுக்க அவர்கள் தயாராக வேண்டும்.

ஆசிரியர்கள், இவ்வாறான ஒரு வகிபாகத்திற்கு இயைபாக்கமடைய இவ்வாசிரிய அறிவுரைப்பு வழிகாட்டி உறுதுணையாக அமையுமென நாம் பலமாக நம்புகின்றோம். இதில் தரப்பட்டுள்ள வழி காட்டல்களைப் பின்பற்றுவதன் மூலம் பயனுறுதியுள்ள ஓர் ஆசிரியராக மாற உங்களால் முடியும். மேலும் இது உங்கள் கற்பித்தல் மற்றும் மதிப்பீட்டு வேலைகளுக்கு உதவியாக அமையும். மேலும் நேரசூசி தயாரித்தல், தரவிருத்தி உள்ளீட்டை உபயோகித்தல், உள்வாரி மேற்பார்வை போன்ற விடயங்களில் அதிபர்களுக்கு உதவியாக அமையும். அதே சமயம் மாணவர்கள் கண்டறிவதற்கும் தரவிருத்தி உள்ளீடுகளைப் பயன்படுத்துவதற்கும் வழிகாட்டல்களாகவும் இங்கு தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்கள் அமையும்.

எவ்வாறாயினும், ஆசிரியர் மாணவர்களுக்குக் கற்பிக்கும் போது தேவையான சந்தர்ப்பங்களில் புத்தாக்கத் திறனுடையவர்களாகச் செயற்பட்டு, தாம் உருவாக்கிய செயற்பாடுகளைப் பயன்படுத்துவார்களென நாம் எதிர்பார்க்கின்றோம். ஏனெனில், பிரதேச வேறுபாடுகளை நன்கு அறிந்தவர் ஆசிரியர்களேயாவர். ஆகையால், இங்கு தரப்பட்டவற்றை முன்மாதிரியாகக் கருதிச் செயற்படல் பொருத்தமானதாக அமையும்.

கல்வியாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், ஏனைய அதிகாரிகள் ஆகிய யாவருக்கும் பயனளிக்கக்கூடிய இவ் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியைத் தயாரிப்பதில் பங்கேற்ற யாவருக்கும் எனது நன்றிகள் உரித்தாகட்டும்.

***பேராசிரியர் ஜே. டபிள்யூ. ஜகத் விக்கிரமசிங்ஹ***
பணிப்பாளர் நாயகம்
தேசிய கல்வி நிறுவகம்

# முன்னுரை

இலங்கையின் கலைத்திட்டக் கொள்கையில், பாடசாலைப் பாடத்திட்டமானது எட்டு வருடங்களுக்கு ஒருமுறை காலத்திற்கு இயைந்ததாகத் திருத்தி அமைக்கப்பட்டு வருகின்றது. இதற்கேற்ப 2007 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைக்கு வருகின்ற கல்விச் சீர்திருத்தத்தின் கீழ், இப்பாடத்திட்டமும் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியும் 2008இல் அறிமுகஞ் செய்யப்படுகின்றன.

இதுவரை நடைமுறையில் இருந்த பாடத்திட்டங்களில் குறித்த பாடத்துடன் தொடர்பான விடயத் தலைப்புகளும் அவற்றின் உள்ளடக்கமும், அமைந்திருந்தமையால் அவற்றைக் கற்பிக்கும் பணி ஆசிரியரின் மீது சுமத்தப்பட்டிருந்தது. இச்செயற்பாடுகள் மூலம் ஏராளமான தகவல்களை மாத்திரம் அறிந்த மாணவர் பரம்பரை ஒன்று உருவானது.

புதிய கலைத்திட்டச் சீர்திருத்தத்தின் கீழ் அறிமுகஞ் செய்யப்படுகின்ற பாடத்திட்டங்களில், அவ்வப் பாடங்களில் மாணவர் அடைந்துகொள்ள வேண்டிய தேர்ச்சிகள் பல இனங்காணப் பட்டுள்ளன. இந்தப் புதிய பிரவேசத்தின் மூலம் அதிகமான விடயங்களைக் கற்ற, அதே நேரம் அவற்றை நடைமுறையில் செயற்படுத்துகின்ற தேர்ச்சி கொண்ட மாணவர் பரம்பரை ஒன்றை உருவாக்குவது எதிர்பார்க்கப்படுகின்றது. இதனால், புதிய பாடத்திட்டத்தைக் கையாளுகின்ற ஆசிரியர்கள் இவ்வேறுபாட்டைச் சரியாகப் புரிந்து கொள்வதுடன், அதில் விசேட கவனமும் செலுத்த வேண்டும்.

இந்நூலின் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிப் பகுதியில் புதிய கற்றல் - கற்பித்தற் செயலொழுங்கு ஒன்று விதந்துரைக்கப்பட்டுள்ளது. இச்செயலொழுங்கின் கீழ் மாணவர் நூலகத்தைப் பயன்படுத்துதல், புத்தகங்கள் வாசித்தல், சுற்றாடலை அவதானித்தல், தகவல் அறிந்தோரைச் சந்தித்து விடயங்களைச் சேகரித்தல், தமது சகபாடிகளிடமிருந்து பல்வேறு விடயங்களைக் கற்றல், தாம் அறிந்தவற்றை அவர்களுடன் பரிமாறிக்கொள்ளல், இயலுமெனின் இணையத்தளம் மூலம் தகவல் திரட்டல் போன்ற கண்டறிதல் மூலமான கற்றற் கலாசாரம் ஒன்றைக் காண முடிகின்றது. இவ்வாறு கண்டறியப்படுகின்ற தகவல்கள் மிகச் சரியாகவும், ஒழுங்குபடுத்தப்பட்டும் முழுமையாகவும் மாணவர்களுக்கு அமையச் செய்வது ஆசிரியர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்ற பணியாகும். இந்த வகையில் ஆசிரியரின் வகிபாகம் புதிய அறிவுகள் மூலம் போசிக்கப்படுவது அவசியமாகும். இங்கு மாணவர்கள் ஏராளமான விடயங்களைக் கண்டறிந்து பல்வேறு அம்சங்களையும் தெரிந்தவர்களாக மாறுகின்றனர். இத்தகைய செயற்பாட்டுக் கற்றற் சூழலானது மாணவர்களைப் பெரிதும் கவர்வதாக அமையும்.

இதற்காக, இந்த ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி நூலில் விதந்துரைக்கப்பட்ட மாதிரிச் செயற்பாடுகளைக் கையாண்டு இன்னும் பல்வேறு செயற்பாடுகளை உருவாக்கிக் கொள்வதற்கும் இந்நூலை ஒரு வழிகாட்டியாகக் கொள்ளுங்கள். இதனூடாகப் புத்தாக்கத் திறனுடைய ஓர் ஆசிரியராக இருந்து, பல்வேறு புதிய செயற்பாடுகளை உருவாக்கிக் கொள்வீர்களென எதிர்பார்க்கின்றோம்.

இந்த புதிய வகுப்பறைக் கற்றல் - கற்பித்தற் செயலொழுங்கின்போது, மாணவர் எப்பொழுதும் செயற்படுபவர்களாகக் காணப்படுவர். இதனால் அவர்களது திறமைகள், ஆற்றல்கள் வெளிக்கொணரப்படும். அவற்றுக்கு நீங்கள் மதிப்பளியுங்கள். அவர்களை உற்சாகப்படுத்துங்கள். இன்னும் மாணவர் சில சந்தர்ப்பங்களில் எதிர்கொள்கின்ற கஷ்டங்கள்/இடையூறுகளை உங்களால் அவதானிக்க முடியும்.

அவ்வாறான சந்தர்ப்பங்களில், நீங்கள் உதவி செய்யுங்கள். அயலில் உள்ள சகபாடிக்கு உதவி செய்ய மாணவரை வழிப்படுத்துங்கள். இவ்வாறு செயற்பாட்டின் போது இடம்பெறுகின்ற கணிப்பீட்டுச் செயலொழுங்கானது, சிறந்ததொரு கற்றலுக்கு உதவியாக அமையும்.

இந்த ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி நூலில் குறிப்பிடப்பட்டுள்ள கற்றல் - கற்பித்தற் செயற்பாட்டினை நீடிப்பதற்கான உபகரணமானது, ஒப்படையாக அன்றேல் பயிற்சியாக மாணவர் கற்றவற்றை மேலும் பலப்படுத்தக்கூடிய விதத்தில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. இதனைச் செயற்படுத்துவதில் உங்களது அவதானத்தைச் செலுத்துங்கள். இதனை மாணவரை மதிப்பீடு செய்வதற்கான சந்தர்ப்பமாகவும் ஆக்கிக்கொள்ளுங்கள். இவ்வாறான கற்றல் - கற்பித்தலை நீடிக்கும் உபகரணங்களைத் தயாரித்து, பல்வேறு பயிற்சிகளில் மாணவர்களை ஈடுபடுத்துவதில் உங்களது கவனத்தைச் செலுத்துங்கள்.

இதனூடாகப் புதிய உலகிற்குப் பொருத்தமான தேர்ச்சிகளுடன் கூடிய மாணவர் பரம்பரை ஒன்றை உருவாக்குவதுடன் அதற்குப் பொருத்தமான ஆசிரியர் வகிபாகம், வகுப்பறை என்பன புதிய கற்றற் கலாசாரத்திற்கு ஏற்ப உருவாக வேண்டும் எனவும் எதிர்பார்க்கின்றேன்.

**விமல் சியம்பலாகொட**
உதவிப் பணிப்பாளர் நாயகம்
மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்

# கல்வி வெளியீட்டு ஆணையாளரின் செய்தி

## எழுத்தாளர் குழு

**ஆலோசனை** : ***பேராசிரியர் ஜே. டபிள்யூ. ஜகத் விக்கிரமசிங்ஹ***
பணிப்பாளர் நாயகம்
தேசிய கல்வி நிறுவகம்

திரு. விமல் சியம்பலாகொட
உதவிப் பணிப்பாளர் நாயகம்
மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்

**பணிப்பு** : திரு. சுதத் சமரசிங்க
பணிப்பாளர், அழகியற்கல்வித் துறை
தேசிய கல்வி நிறுவகம்

**இணைப்பாக்கம்** : திரு. செ. செல்வகுமார்
செயற்றிட்ட அதிகாரி (நாடகமும் அரங்கக் கலைகளும்)
அழகியற்கல்வித் துறை - தேசிய கல்வி நிறுவகம்

**பாடத்திட்ட ஆலோசணைக் குழு**

:
- பேராசிரியர் கா. சிவத்தம்பி
  தகைநிலைப் பேராசிரியர் (ஓய்வுபெற்ற),
  யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
- பேராசிரியர். வோல்டர் மாறசிங்ஹ
  ஸ்ரீ ஜயவர்தனபுரப் பல்கலைக்கழகம் (ஓய்வுபெற்ற)
- பேராசிரியர் ரோலண்ட் அபேபால
  கொழும்புப் பல்கலைக்கழகம்
- திருமதி மங்களிக்கா ஜயதுங்க
  சிரேட்ட விரிவுரையாளர், களனிப் பல்கலைக்கழகம்
- திரு. விஜயரத்ன பத்திராஜ
  பிரதம செயற்றிட்ட அதிகாரி (ஓய்வுபெற்ற)
  தேசிய கல்வி நிறுவகம்

**எழுத்தாளர் குழு:**

**உள்வாரி** :
- திரு. செ. செல்வகுமார் (நாடகமும் அரங்கக் கலைகளும்)
  செயற்றிட்ட அதிகாரி,
  அழகியற்கல்வித் துறை - தேசிய கல்வி நிறுவகம்
- திரு. அஜித் ருப்பசேன
  செயற்றிட்டத் தலைவர் (நாடகமும் அரங்கக் கலைகளும்)
  செயற்றிட்ட அதிகாரி
  அழகியற்கல்வித் துறை - தேசிய கல்வி நிறுவகம்

**வெளிவாரி** :

- கலாநிதி. ம. சண்முகலிங்கம்
  ஓய்வுபெற்ற விரிவுரையாளர் - யாழ் பல்கலைக்கழகம்
- திரு. க. திலகநாதன்
  விரிவுரையாளர். கல்வியியற் கல்லூரி, யாழ்ப்பாணம்
- திரு. யோ. ஜோன்சன் ராஜ்குமார்
  ஆசிரியர் சேவை - யா/திருக்குடும்பக் கன்னியர் மடம்
- திரு. எம்.எச்.எம். யாக்கூத்
  பிரதம செயற்றிட்ட அதிகாரி (ஓய்வு பெற்ற)
  தேசிய கல்வி நிறுவகம்
- திரு. பி. ரவீந்திரன்
  ஆசிரியர் சேவை, மட்/செட்டிப்பாளையம் மகா வித்தியாலயம், மட்டக்களப்பு
- திரு. கிளைவ் சாந்த
  ஆசிரியர் சேவை - சாந்த ஆனாள் வித்தியாலயம், குருணாகல்
- திரு. பாலித்த லொக்கு போதாகம
  ஆசிரியர் சேவை - விக்ரமசிலா ம.மவி., கிரிஉள்ள
- திரு. ரணசிங்ஹ அதிகாரி
  சவுத்லன் பெண்கள் கல்லூரி, காலி
- திருமதி. லலிதா ஜயரத்ன
  ஆசிரிய ஆலோசகர் - வலயக்கல்வி அலுவலகம், அம்பிலிப்பிட்டிய
- திருமதி. டீ.பீ. சுவர்ணலதா
  ஆசிரியர் சேவை - போத்திவெல ம.வி. எல்பிட்டிய
- திருமதி. சமன் கஸ்தூரி ரத்ன
  ஸ்ரீ சுனந்த ம.வி. பாரதனியா
  தேவி பாளிகா கல்லூரி கொழும்பு - 8
- திருமதி. ஜீ. கருணாவதி
- திருமதி. அனோமா குமாரி சமரக்கொடி
- திருமதி. ஹனுஷா சமந்தி
  விரிவுரையாளர், றுகுணு தேசிய கல்விக் கல்லூரி, காலி

**ஒளிப்படங்கள்**:

- செயல் திறன் அரங்க இயக்கம்
- இணையம்

**அட்டை வடிவமைப்பு:**

- திருமதி. நிஸ்மியா அமீர்
  தொழிநுட்ப உதவியாளர்
  மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்
  தேசிய கல்வி நிறுவகம்

**கணினி வடிவமைப்பு**

- திருமதி. நிஸ்மியா அமீர்
  தொழிநுட்ப உதவியாளர்
  மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்
  தேசிய கல்வி நிறுவகம்

# உள்ளே உள்ளவை


| | பக்கம் |
|---|---|
| பணிப்பாளர் நாயகத்தின் செய்தி | i |
| முன்னுரை | iii |

**பகுதி I**

| | |
|---|---|
| **விரிவான பாடத்திட்டம்** | **01** |
| அறிமுகம் | 02 |
| விரிவான பாடத்திட்டம் | 03 |
| தகவுத் தேர்ச்சிகள் | 08 |
| தர உள்ளீடுகள் | 10 |

**பகுதி II**

| | |
|---|---|
| **செயற்பாடுகளின் தொடர்** | **11** |
| கற்றல் - கற்பித்தல் முறைமை - அறிமுகம் | 12 |
| செயற்பாடுகளின் தொடர் | 13 |

**பகுதி III**

| | |
|---|---|
| **கணிப்பீடும் மதிப்பீடும்** | **160** |
| கணிப்பீடும் மதிப்பீடும் - அறிமுகம் | 161 |
| கற்றல் - கற்பித்தலை மேலும் விரிவுபடுத்தலுக்கான கருவிகள் | 163 |

# பகுதி I
# விரிவான பாடத்திட்டம்

# அறிமுகம்

11 வயது , 12 வயதுப் பிள்ளைகளுடன் ஊடாடும் ஒரு ஆசிரியருக்கு மாணவர்கள் வெளிக்காட்டும் திறமை பற்றியோ,செயற்பாட்டு உத்வேகம் பற்றியோ சொல்ல வேண்டியதில்லை. ஆனால், நாடகம் இரண்டு வகையில் பயன்படும். ஒன்று மாணவர்க்கு உலக நடைமுறைகள் பற்றிய அறிமுகத்தை ஏற்படுத்தவும் அதற்கு முதல் மாணவர் திறமை ஒன்றை வெளிக்கொணரவும், பயன்படுத்தவும் பயன்படுகின்றது.

நாடகமும் அரங்கக் கலைகளும் என்ற இப்பாடம் ஒரு தனிப்பாடமாகத் தரம் 6இல் இருந்து தொடங்கப் பெறுகிறது. ஏறத்தாழ 12 வயதுள்ள மாணாக்கர் நிலையில் இப்பாடத்தை எவ்வாறு அறிமுகம் செய்வது என்பதிலும் பார்க்க இதனை எதற்காக?, எப்படி? கற்பிப்பது என்பது ஆழமான, அகலமான ஈடுபாட்டினை ஏற்படுத்தும்.

ஆரம்பக்கல்வி முடிந்து பின்நிலை ஆரம்பக்கல்விக்கு மாணவர்கள் வருகின்ற இக்கட்டத்தில் மற்றைய பாடங்களில் சிலவற்றில் பாடத்தரவுகளை எடுத்துக் கூறத் தொடங்குவது மரபு. உதாரணம்: அறிவியல் பாடம் எதுவாக இருப்பினும் அப்பாடம் பற்றிய தரவுகளை வழங்கத் தொடங்குதல் வேண்டும். மொழிப் பயிற்றுதலிற் கூட துரதிஷ்டவசமாக இலக்கணத்தில் தரவுகளையே மாணவர்களுக்கு வழங்குகின்றோம். ஆனால், நாடகம் எனும் பாடத்தின் அறிமுகம் நிச்சயமாக இவற்றை அப்படியே பின்பற்றுவதாக இருக்க முடியாது. இதனை இரண்டு நிலையில் உள்ளடக்கலாம். ஒன்று, நாடகத்திற்கான செய்கைகள் - அந்தச் செய்கைகளுக்கு வேண்டிய செயற்பாடுகள் (Actions' and Activites). இரண்டு, அளிக்கப்படும் ஆற்றுகையை முற்றுமுழுதான ஒரு இரசனை விடயமாகக் கொள்ளுதல். இந்த இரசனை மூலமாகவே நாடகம் எனும் எண்ணக்கரு படிப்படியாக வளர்த் தெடுக்கப்படலாம்.

இந்த இரண்டாவது அம்சத்தை ஆசிரியர் எந்நிலையிலும் எக்கட்டத்திலும் மறக்காது தன் மனதில் அதை ஆழப்பதித்து வைத்துக்கொண்டு முதலாவதாகக் குறிப்பிடப்பட்ட செய்கைகளுக்கும் செயற்பாடுகளுக்கும் செல்லுதல் வேண்டும். அப்படித் தொடங்கும்போது இரண்டு விடயங்கள் முக்கியமாகின்றன.

1. போலச் செய்தல்
2. புத்தாக்கம்

இவை இரண்டுமே மாணவர்களின் கற்பனையைத் தூண்டுவன. கற்பனா சக்தியை வளர்ப்பன. இவற்றினூடாகப் போலச் செய்தலுக்கும் நடவடிக்கைகளுக்கும் அடிப்படை யாக அமையும் அம்சங்கள் பற்றிக் கவனம் செலுத்துதல் வேண்டும். இந்நிலையில் இங்கு குறிப்பிடப்பட்ட செய்கை, செயற்பாடுகள் மாணவர்களின் ஆளுமைகளை விருத்திசெய்வதில் முக்கிய இடம் பெறுவதைக் கண்டுகொள்ளத் தவறிவிடக் கூடாது.

மனிதரை அவதானித்தல், மனித அசைவுகளைப் பிரதி செய்தல், அத்தகைய அசைவுகளுக் கான சம்பவங்கள் பற்றிச் சிந்திக்கத் தூண்டுதல் ஆகியன மாணவர்களுக்கு நாடகம் பற்றிய உணர்வு நிலைப்பட்ட அறிமுகத்தைத் தரலாம். இவ்விடயத்தில் ஈடுபாட்டு ஆர்வம் கொண்ட ஒவ்வோர் ஆசிரியருக்கும் தத்தம் அனுபவம் மூலம் கிடைத்த அறிவுத்தேட்டம் ஒன்று நிச்சயமாக இருக்கும். அந்த அறிவுத் தேட்டத்தைப் பெருக்குவதற்கும், பயன்படுத்துவதற்கும் இவ்வகுப்பிற்கான நாடகக் கற்பித்தல், அந்த ஆசிரியருக்கு உதவவேண்டும் என்பது இப்பாடத்திட்ட அமைப்பாளர்களது எதிர்பார்ப்பாகும்.

**அழகியற்கல்வித் துறை**
தேசிய கல்வி நிறுவகம்

## பாடத்திட்டம் - தரம் 07

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | உள்ளடக்கம் | பாட வேளைகள் |
|---|---|---|---|
| 1.0<br>அனுபவங்களைப் போலச் செய்தல், கருத்துக்களை வெளிப் படுத்தல் ஆகிய திறன் களை வெளிக்காட்டு வார். | 1.1<br>சிறுவர் நாடகம் பற்றிக் கருத்துக்களைக் கூறுவர். | • வெகுசன - Mass (மக்கள் திரள் நிலை) ஊடகங்களில் காட்டப்படுபவை, கூறப்படு பவை<br>- வானொலி<br>- தொலைக்காட்சி<br>- சினிமா<br>- சஞ்சிகைகள் | 03 |
| | 1.2<br>நாடக விடயப் பொருளைத் (Theme) தெரிந்து கொள்வர். | • நயத்தல்/ இரசித்தல் | 04 |
| | 1.3<br>மனித உலகில் காணப் படும் புற அசைவுகள் மெய்நிலைகள், தளவுரு வங்களைப் போலச் செய்வர். | • இத்தகைய ஊடகங்களில் வரும் நாடகப் பாத்திரங்களில்<br>- பிரதான பாத்திரங்கள்<br>- துணைப் பாத்திரங்கள்<br>எவையென அடையாளங் காணுதல். அவற்றின் பண்புகளை விளங்கிக் கொள்ளுதல். | 02 |
| | 1.4<br>சிறுவர் நாடகங்களில் பாத்திரங்கள் வளர்த்தெடுக் கப்படும் முறைமையை அறிந்து கொள்வர். | • சிறுவர் நாடகப் பாத்திரங் களை இனங்காணல். | 02 |
| | 1.5<br>மாணவர்கள் மனதிற்குப் பிடிக்கும் நாடக விடயப் பொருளைத் (கரு) தெரிவு செய்வர். | • சூழலை அனுசரித்துச் சூழல் போலச் செய்தல். | 03 |
| | 1.6<br>சாதாரண வாழ்விலே காணப்படுகின்ற இயைபு கள், ஒத்திசைவுகள், வர்ணங்கள் போன்ற வற்றை அவதானித்துக் கொள்வர். | • இயற்கை உலகில் காணப் படும் அசைவு, ஒத்திசைவு, வர்ணம், வடிவங்கள் | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | உள்ளடக்கம் | பாட வேளைகள் |
|---|---|---|---|
| | 1.7<br>பிராணி மற்றும் மனித உலகில் காணப்படும் அசைவுகள், மெய்நிலைகள் வடிவங்களைப் போலச் செய்வர். | • பிராணி மற்றும் மனித உலகில் காணப்படும் அசைவு, ஒத்திசைவு, வர்ணம், வடிவங்கள். | 02 |
| | 1.8<br>நாடகத்தோடு தொடர்புடைய கலைகள் பற்றி அறிந்து கொள்வர். | • இசை, நடனம்.<br>• ஓவியம், சிற்பம். | 04 |
| 2.0<br>நாடகத்தைப் படைப்பாக்கம் செய்வது பற்றி அறிந்து கொள்வார். | 2.1<br>பொருத்தமான கதையினை எடுத்து அதனை எழுத்துருவாக்குவர். | • மாணவர்களுக்கு நன்கு தெரிந்த கதைகளில் இருந்து பொருத்தமான கதையை எடுத்து நாடகமாக்கும் ஆர்வத்தை ஏற்படுத்தல். | 03 |
| | 2.2<br>மாணவர்களின் அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டு நாடகத்தில் வரும் பல்வேறு வளர்ச்சி வழிகளை வளர்த்துக் கொள்வர். (தனியாகவும், குழுவாகவும்) | • சூழலில் உள்ளவற்றைப் பார்த்து நடித்துக் காட்டும் சூழமைவுகளை ஏற்படுத்தல். (தனியாக, குழுவாக) | 03 |
| | 2.3<br>பாத்திரத்தை மனதிலே நிறுத்திப் பாத்திரவாக்கம் செய்வர். (தனி, குழு) | • பாத்திரத்தை ஆழமாக ஆக்கிக் கொள்ளும் வகையில் பாத்திரத்தை உருவாக்கும் சூழமைவுகளை ஏற்படுத்திக் கொள்ளுதல். (தனியாக, குழுவாக) | 03 |
| | 2.4<br>மிருகங்களை, மனிதர்களை, பொருள்களை அவதானித்துச் சூழமைவுகளை உருவாக்கி உடனடியாக நடித்துக் காட்டுவர். | • பல்வேறு பொருள்களைப் பயன்படுத்திச் சித்திரித்தல். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | உள்ளடக்கம் | பாட வேளைகள் |
|---|---|---|---|
| | 2.5<br>தாம் கற்பனை செய்தவற்றைப் புத்தாக்கம் செய்வர். (Innovate) | • பல்வேறு பொருள்களைக் கொண்டு சித்திரித்தல். | 03 |
| | 2.6<br>குழு நிலையில் கதை புனையச் சூழமைவுகளை ஏற்படுத்திக் கொள்வர். | • கதையைப் பகுதி, பகுதியாகவும் கட்டம் கட்டமாகவும் சொல்லுதல்<br>• முழுமையாகச் சொல்லுதல். | 02 |
| | 2.7<br>வரலாற்றுக் கதைகளைக் கற்பனையுடன் இணைத்து அவற்றை நடிப்பதற்குரிய சூழமைவுகளை ஏற்படுத்திக் கொள்வர்.<br>(அடிப்படைக் கதையை மாற்றாது) | • மாணவர்களுக்குத் தெரிந்த கதைகள் | 03 |
| | 2.8<br>பல்வேறு வேடமுகங்களைக் கருத்துக்கள் புலப்படுமாறு தயாரிப்பர். | • வேடமுகம் தயாரிக்கும்போது உணர்ச்சிகளைக் கவனத்திற் கொண்டு உருவாக்குதல். | 03 |
| | 2.9.1<br>பாத்திரத்திற்கு ஏற்ற வகையில் வேட உடைகளைத் தயாரிப்பர். | • பாத்திரங்களுக்கேற்ப வேட உடைகள் தயாரித்தல். | 02 |
| | 2.9.2<br>பாத்திரத்திற்கு ஏற்ற வகையில் அணிகலன்களைத் தயாரிப்பர். | • பாத்திரத்திற்கேற்ப அணிகலன்களைத் தயாரித்தல். | 02 |
| | 2.10<br>நாடகத்திற்கேற்ப மேடைப் பொருள்களைச் செய்வர். | • நாடகத்திற்கேற்ற மேடைப் பொருள்கள் செய்தல். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | உள்ளடக்கம் | பாட வேளைகள் |
|---|---|---|---|
| 3.0<br>கொள்கை நிலையில் அமைந்த செயன் முறைச் செயற்பாடு களைச் செய்து மகிழ்வர். | 3.1<br>தெளிவான முறையில் கருத்து, உணர்ச்சிகளுக் கான செயல்களைச் செய்வர். | • கருத்தாடலுக்குரிய இசை யமைதியைப் புரிந்து கொள்ளுதல்.<br>• போலச் செய்தல்.<br>• தாளத்திற்கேற்பப் பேசுதல். | 04 |
| | 3.2<br>குரலைப் பயன்படுத்தி அசைந்து அதற்கேற்ப நடிப்பர். | • ஸ்வர, இராகப் பயிற்சி.<br>• கருத்தைத் தெரிவிக்கும் வகையில் வாய்வழியாக வரும் உரையாடல்.<br>• பல்வேறு கருத்துக்கள் புலப்படுமாறு பேசுதல். | 07 |
| | 3.3<br>உடல், உளப் (மன) பயிற்சிகளைச் செய்து கொள்வர். | • பேசுவதற்கும் சிந்திப்பதற்கும் தொடர்பு காணப்படுதல். | 03 |
| | 3.4<br>உயிர்ப்பூட்டும் அரங்கப் பயிற்சிகளில் ஈடுபடுவர். | • நடிப்பதற்கான உயிர்ப்பூட்டும் பயிற்சிகள். | 02 |
| | 3.5<br>உடல் தளர்வுக்கான பயிற்சிகளைச் செய்து கொள்வர். | • மூச்சுவிட்டு இழுத்தல். | 02 |
| | 3.6<br>ஊமச் சித்திரிப்பில் ஈடுபடுவர். | • ஊமச் சித்திரிப்பு. | 04 |
| | 3.7<br>நாடகப் பொருத்தமான நாட்டார் விளையாட்டுக் களில் ஈடுபடுவர். | • நாட்டார் விளையாட்டுக்கள். | 03 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | உள்ளடக்கம் | பாட வேளைகள் |
|---|---|---|---|
| 4.0 பண்பாட்டுப் பின்புலத்தை அறிந்து ஆற்றுகை செய்வார். | 4.1 வரலாற்றுக் கதைகளை அறிந்து ஆற்றுகை செய்வர். | • இலங்கைக்குரிய கதைகளைக் கேட்டல், வாசித்தல், பார்த்தல். | 05 |
| | 4.2 வரலாற்றுக் கதைகளின் உள்ளடக்கத்தை அறிந்து கொள்வர். | • பண்பாட்டுப் பின்புலத்தை அறிந்து அரச, வீரக் கதைகளைத் தெரிந்தெடுத்துக் கொள்ளல். | 05 |
| | 4.3 நாடு பற்றிய விருப்பும், கடப்பாடும் ஏற்படும் வகையில் கதைகளை அறிந்து கொள்வர். | • நாற்றுப்பற்று மிக்க பாத்திரங்களை இனங்காணல். | 05 |

## தகவுத் தேர்ச்சிகள்

1. ''நாடகச் சூழமைவு'' ஒன்றினை நயப்பதற்கான (இரசித்தல்) திறனை வெளிக்காட்டுதலும் வெளிப்படுத்தலும்.

2. நாடகமும் அரங்கக் கலைகள் மூலமாகவும் அவற்றோடு தொடர்புடைய நடவடிக்கைகள் மூலமாகவும் நாடகப் படைப்பாக்கத் திறனைப் பிறர் காண வெளிப்படுத்தல்.

3. நாடகமும் அரங்கக் கலைகளும் பற்றிக் கொள்கை நிலைப்பட்ட பரிந்துணர்வுடன் நடைமுறைச் செயல் விடயங்களில் ஈடுபாடு காட்டுதல்.

4. நாடகமும் அரங்கக் கலைகளுடன் இயைபுடைய சமூக, பண்பாட்டுச் சூழலைப் படித்தறிதல்.

## தகவுத் தேர்ச்சி மட்டங்கள்

### நயத்தலும் விமர்சித்தலும்

1. நமக்குத் தெரிந்த நாட்டார் கதைகளை முதல் - இடை - இறுதியெனக் கட்டமைத்து அற்றினை எடுத்துக்கூறும் ஆற்றலை வழங்குதல்.
2. வகுப்பறைக்கு உள்ளும் வெளியேயும் இவற்றை எடுத்துக்கூறும், வெளிக்காட்டும் சூழமைவுகளை ஏற்படுத்துதல்.
3. சூழலில் காணப்படுவனவற்றைப் போலச்செய்து காட்டுதல்.
4. மனித உலகில் காணப்படும் புறநிலை அசைவுகளைப் போலச்செய்தல்.
5. மிருக உலகில் காணப்படும் புறநிலை அசைவுகளைப் (இருத்தல், நடத்தல்) போலச்செய்து காட்டுதல்.

### செயல் முறைகள் (படைப்பாக்கம்)

1. சம்பவம்/கதைகளைக் கற்பனை செய்து அவற்றை ஆக்கபூர்வமானதாகப் படைப்பாக்கம் செய்து காட்டுதல்.
2. சூழலை மனம் கொண்டு நடவடிக்கைகளையும், சம்பவங்களையும், நடைமுறைகளை யும் படைப்பாக்கம் செய்தல்.
3. அவற்றை மாணவர்கள் தனித்தனியாக எடுத்துக்காட்டும் முறைமையை வெளிப்படுத்துதல்.
4. குழுநிலையில் அவற்றைச் செய்து காட்டுதல்.
5. மிருகங்களின் அசைவுகளை முன் ஆயத்தமின்றி உடனடியாகச் செய்து காட்டுதல்.

6. பொருள்களை அடிப்படையாகக் கொண்டு முன்னாயத்தமின்றி உடனடியாகச் செய்து காட்டுதல். (ஒரு பொருளை இன்னொரு பொருளாகப் பயன்படுத்துதல்)
7. சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டு முன்னாயத்தமின்றி உடனடியாகச் செய்து காட்டுதல்.
8. தன்னுடைய கற்பனைகள் அதிகரிக்கப் பல்வேறு படைப்பாக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
9. பெற்ற அனுபவங்களைக் கேட்டுக்கொண்டு குழுநிலையில் உள்ளவர்கள் ஒவ்வொருவர் ஒவ்வொருவராகச் செய்து காட்டுதல்.
10. நாட்டார் கதைகளைக் கவனத்திற்க் கொண்டு கற்பனா பூர்வமாகப் படைப்பாக்கம் செய்து காட்டுதல்.
11. இயற்கைச் சூழலில் உள்ள தேவையான/தேவையற்ற பொருள்களைக் கொண்டு நாடகம் சம்பந்தமான பல்வேறு பொருள்களைச் செய்தல். (வேட முகமும் மேடைப் பொருள்களும்)
12. நாட்டார் கதைகளை எடுத்து அவற்றினடிப்படையில் நடிப்பதற்கான சந்தர்ப்பங்களைப் படைப்பாக்கம் செய்தல்.

## கொள்கை நிலைப்பட்ட செய்முறைகள்

1. தெளிவான விளக்கத்துடன் கருத்தாடலைச் செய்துகொள்ளும் பழக்கத்தைப் பெறுதல்.
2. கருத்துக்களைத் தெளிவான முறைமையில் சொல்லாடலில் பயன்படுத்துதல்.
3. எழுத்துருவைப் பயன்படுத்தி எதைப் பேசுகிறோம், எதைப் பயன்படுத்துகின்றோம் என்கின்ற தெளிவைப் பெறுதல்.
4. அந்தந்தப் பாத்திரங்களுக்கேற்பச் சந்தர்ப்பச் சூழமைவுகளைச் செய்து காட்டுதல்.
5. மன, உடல் தொடர்புகளை (மெய்ப்பாடுகளை) வெளிக்கொணரக்கூடிய வகையில் செய்து காட்டுதல். (கற்குவியல், ஆறு...)
6. வேறுபடும் சுரம், தாளங்களுக்கேற்ப ஒழுங்காகப்பாடுதல்.
7. பல்வேறு சூழ்நிலைகளுக்கு ஏற்ப உரையாடல்களை அமைத்துக் கொள்ளல்.
8. நாட்டார் விளையாட்டுக்களிலிருந்து ஆட்டமுறைமையைப் பெற்றுக் கொள்ளல்.

## பண்பாட்டுப் பின்புலம்

1. நாட்டார் இலக்கியத்திலிருந்து கதைகளை எடுத்து அவற்றுக்கான பின்புலத்தைச் சொல்லுதல்.
2. நாட்டார் கதைகளையும், நடவடிக்கைகளையும் சொல்லுதல்.
3. நாட்டார் கதைப்பொருளின் இயல்புகளை, பண்புகளைப் பிள்ளைகளுக்கு விளக்குதல்.
4. மரபுவழிக் கதைகளையும், கட்டுக் கதைகளையும் கொண்ட சூழலை விளக்குதல்.
5. நாட்டார்/வரலாற்றுக் கதைகளின் உள்ளடக்கத்தைச் சொல்லுதல்.
6. நாடு பற்றிய விருப்பும் கடப்பாடும் ஏற்படும் வகையில் கதைகளை அறிந்து கொள்ளுதல்.

## தர உள்ளீடுகள் (கற்பித்தல் உபகரணங்கள்)

நாடகமும் அரங்கக் கலைகளும் பாடக் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளின்போது கீழ்க்காணப்படுகின்ற தர உள்ளீடுகளைப் பயன்படுத்துவதும் விரும்பத்தக்கதாகும்.

- ஹார்மோனியம் அன்றேல் ஓர்கன் (Organ)
- ஒலிப்பதிவுக்கருவி
- ஒலிப்பதிவு நாடா (சிறுவர் பாடல்கள்)
- இசைக்கருவிகள் (தோல், துளை, நரம்பு, கஞ்சக் கருவிகள்)
- நூல்கள், சஞ்சிகைகள்
- பல்வேறு சிறுவர் நாடக எழுத்துருக்கள்
- பிரிஸ்டல் அட்டைகள் (விளக்கப்படங்கள், விளக்க அட்டைகள் தயாரித்தல்)
- டிமை தாள்கள்
- நிறப்பேனைகள்
- தட்டச்சுக் கடதாசி (Typing Sheet)
- அச்சுப்பிரதிக் கடதாசி (Photocopy paper)
- கத்தரிக்கோல்
- காட்சிப்பலகை
- மேல் தலைஎறியி (OHP)
- ஒளி ஊடுகடத்தும் கடதாசி
- தொலைக்காட்சிப் பெட்டி
- காண் ஒளிப்பேழை (சிறுவர் நாடகங்கள்)
- கணினி
- இணையம்
- வேடமுகங்கள்
- சிறுவர் கதைகள்
- ஒளிப்படங்கள்
- பைண்டர் கம்
- மேடைப் பொருள்கள்
- ஒப்பனைப் பொருள்கள்
- ஒளிவிதானிப்புக் கருவிகள்

# பகுதி II
# செயற்பாடுகளின் தொடர்

## பாடசாலை ஆசிரியர்கள் செய்ய வேண்டியவை

1. பாடசாலை மட்டத்தில் நாடகம் தொடர்பான புதுத்தகவல்களைப் பேணல்.
2. தவணை முடிவில் நாடகம் போடுதல்.
3. பண்பாட்டு விழாக்களைச் செய்வதன் மூலம் பல்வேறு ஆற்றுகைகளில் ஈடுபடுதல்.
4. மாணவர்கள் தமது ஆற்றுகைகளைத் திறந்தவெளிகளில் ஆற்றுகை செய்ய வழி செய்தல்.
5. நடிப்பதற்கு வேண்டிய உபகரணங்களைச் செய்தலும், அளிக்கைக்கானவைகளைத் தயார் செய்தலும்.
6. சிறுவர் நாடகங்கள் செய்தல்

## கற்றல் - கற்பித்தல் முறைகள்

இந்த மாணவர்கள் கனிஷ்டப் பிரிவில் முதலாம் கட்ட மாணவர் என்பதனை மனதிற் கொண்டு கற்பித்தலைத் தயார் செய்ய வேண்டும். அப்படிச் செய்யும்போது பின்வரும் விடயங்கள் பற்றிக் கவனம் செலுத்துதல் வேண்டும். ஆசிரியர் சிரத்தையுடையவராக இருத்தல் வேண்டும்.

(1) கற்கை
(2) திறன் - கற்கைக்கு வேண்டிய திறன்
(3) மனப்பாங்கு - கற்றல் ஈடுபாட்டுக்கான மனப்பாங்கு
(4) தேர்ச்சி - கற்றலால் ஏற்படும் தேர்ச்சி

இவை பற்றிய தெளிவு இல்லாமல் மாணவர்களின் கற்கைகளை வழிநடத்த முடியாது. நாடகமும் அரங்கக் கலைகளும் பாடத்தை மாணவர்கள் பயில்வதற்குக் கீழ்க்காணும் நான்கும் மிகமுக்கியமானவையாகும்.

(1) நயத்தலும் விமர்சித்தலும்
(2) படைப்பாக்கம்
(3) கொள்கை நிலைப்பட்ட செய்முறைகள்
(4) நாடகம் பற்றிய பண்பாட்டுப் பின்புலம்

இவற்றை நன்கு கற்பிப்பதற்கு ஆசிரியரிடமிருந்து அதற்கு வேண்டிய சிறப்புக் கடப்பாடும், ஆற்றலும் எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும் மாணவர்களின் ஆளுமை வளர்ச்சிக்கு வேண்டிய சூழலை உருவாக்கிக்கொள்ளுதல் வேண்டும். இதற்கு வேண்டியவை:

1. குழுநிலையில் இயங்குதல்
2. எளிமையான அரங்க விளையாட்டுக்களில் ஈடுபடுதல்
3. நாடக ஆக்கத்தில் ஈடுபடல்
4. கதை கேட்கும்போது அக்கதையில் வரும் சூழமைவுகளை நடித்துக் காட்டல்
5. செய்முறைச் செயற்பாடுகள்
6. கேட்பதற்கும் நயப்பதற்கும் உரிய ஆதாரங்கள்
7. செய்து பார்க்கும் இடங்கள்
8. பண்பாட்டு நடவடிக்கைகளில் பங்குகொள்ளுதல்
9. வள ஆளணியினருடைய உதவியைப் பயன்படுத்துதல்
10. இதற்கு வேண்டிய சுவரொட்டி, படங்கள் ஆகியவற்றைச் சேகரித்தல்

**தேர்ச்சி 1.0 : அனுபவங்களைப் போலச் செய்தல், கருத்துக்களை வெளிப்படுத்தல் ஆகிய திறன்களை வெளிக் காட்டுவார்.**

**தேர்ச்சி மட்டம் 1.1** : சிறுவர் நாடகம் பற்றிக் கருத்துக்களைக் கூறுவர்.

**செயற்பாடு 1.1** : ''சிறுவர் நாடகத்தை இனங்காண்போம்''.

**நேரம்** : 03 பாடவேளைகள்

**தர உள்ளீடுகள்** :
- சிறுவர் நாடக வீடியோ இறுவட்டுக்கள்.
  உதாரணம்: பஞ்சவர்ண நரியார்
  கூடித்துயர் வெல்
  பந்தையக் குதிரையார்
- சிறுவர் நாடக எழுத்துருக்கள்

**கற்றல் - கற்பித்தல் முறைகள்**

**படி 1.1.1** :
- சிறுவர் நாடகங்கள் மற்றும் வளர்ந்தோருக்கான நாடகங்களின் காட்சிகளைக் காட்டும் ஒளிப்படங்கள் சிலவற்றை வகுப்பில் காட்சிப்படுத்துங்கள்.
- அந்த நாடகங்களுக்கு இடையிலான வேறுபாடுகளை இனங் கண்டு கூறச் சந்தர்ப்பமளியுங்கள்.
- பின்வரும் விடயங்களை வெளிக்கொணரும் வகையில் கலந்துரையாடுங்கள்.

- வளர்ந்தோருக்காக மாத்திரமின்றிச் சிறுவர்களுக்காகவும் நாடகங்கள் படைக்கப்படும்.
- சிறுவருக்காகப் படைக்கப்படும் நாடகங்கள் 'சிறுவர் நாடகங்கள்' எனப்படும்.
- சிறுவர் நாடகங்களைப் பிரதானமாக மூன்று பிரிவுகளாக வகுக்கலாம்.
  1. சிறுவர்களால் சிறுவருக்காக முன்வைக்கப்படும் நாடகங்கள்.
  2. வளர்ந்தோர்களால் சிறுவருக்காக முன்வைக்கப்படும் நாடகங்கள்.
  3. வளர்ந்தோரும் சிறுவரும் இணைந்து சிறுவருக்காக முன்வைக்கப்படும் நாடகங்கள்.
- பொதுவாக 03 - 14 வருட வயதுக்கு இடைப்பட்ட பருவம் பிள்ளைப்பருவம் எனக் கருதப்படுகின்றது.

- சிறுவரின் எண்ணங்களுடன் பொருந்தும் வகையில் சிறுவரின் உலகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்திச் சிறுவர் நாடகங்கள் படைக்கப்படும்.
- சிறுவர் நாடகத்துக்காக அந்தந்த வயது மட்டத்துக்குப் பொருத்தமானவாறு எளிய மொழி நடையிலான சொல்லாடல்கள் இடம்பெறுதல் வேண்டும்.
- சில பாத்திரங்கள் மாத்திரமே அடங்கியிருத்தல் வேண்டும்.
- சிக்கலான பாத்திரங்கள் இடம்பெறலாகாது.
- நாடகம் மேடையேற்றப்படும் நேரம் ஒரு மணித்தியாலத் திற்கு மேற்படலாகாது.
- பெருங்காட்சி எளிமையாகவும், கவரத்தக்கதாகவும் இருத்தல் வேண்டும். பெருங்காட்சி என்பது பெரிய காட்சியைக் குறிப்பது அன்று
- சிறுவர் நாடகங்களைப் பார்ப்பதன் மூலம் உயரிய இரசனையைப் பெறலாம்.
- சிறுவர் நாடகம் மூலம் வாழ்க்கைக்கான படிப்பினை களைப் பெறலாம்.

**(20 நிமிடங்கள்)**

**படி 1.1.2** :
- மாணவரை 5 குழுக்களாகப் பிரியுங்கள்.
- இணைப்பு 1.1.1 இல் தரப்பட்டுள்ள தேடல் அறிவுறுத்தற் பத்திரப் பிரதிகளைக் குழுவுக்கு ஒன்றாகப் பகிர்ந்தளியுங்கள்.
- தெரிவுசெய்து கொண்ட சிறுவர் நாடக வீடியோவைக் (இறுவட்டைப் பயன்படுத்தி) காட்சிப்படுத்துங்கள்.
- மாணவரைச் செயற்பாட்டில் ஈடுபடுத்துங்கள்.
- குழுநிலையில் கலந்துரையாடித் தாம் கண்டறிந்தவற்றை வகுப்பில் முன்வைக்க ஆயத்தஞ் செய்து கொள்ளுமாறு அறிவுறுத்துங்கள்.

**(80 நிமிடங்கள்)**

**படி 1.1.3** :
- தமது குழுவைப் பிரதிநிதித்துவப்படுத்திக் கருத்து முன்வைப்ப தற்குச் சந்தர்ப்பமளியுங்கள்.
- ஏனைய குழு அங்கத்தவர்களின் ஆக்கபூர்வமான கருத்துக் களை வினவிப் பெறுங்கள்.
- எல்லாக் குழுக்களும் முன்வைப்புச் செய்த பின்னர் பின்வரும் விடயங்களை வலியுறுத்திக் கலந்துரையாடுங்கள்.

- ‘சிறுவர் நாடகம்’ பார்ப்பதால் இரசனை பெறலாம்.
- ஓய்வு நேரத்தைப் பயனுடைய வகையில் கழிப்பதற்காகச் ‘சிறுவர் நாடகம்’ பார்க்கலாம்.

- ''சிறுவர் நாடகக் கருவின் ஊடாக வாழ்க்கைக்குப் படிப்பினை கிடைக்கும்.
- கற்பனா சக்தி, ஆக்கபூர்வமான சிந்தனை ஆகியவற்றின் விருத்திக்குச் சிறுவர் நாடகம் துணையாகும்.
- நாடகம் பார்த்த பின்னர் சிறுவர்கள் தமது உள்ளார்ந்த பாடுதல், நடித்தல், நடனமாடுதல், சித்திரம் வரைதல் போன்றவை சார்ந்த திறன்களினூடாக எதிர்காலத்தில் புத்தாக்கம் படைக்கத் தூண்டப்படுவர்.
- 'சிறுவர் நாடகம்' பார்ப்பதால் விமர்சன ரீதியான சிந்தனை தூண்டப்படும்.

**(20 நிமிடங்கள்)**

**கணிப்பீடும் மதிப்பீடும்:**

- சிறுவருக்கான நாடகமொன்றின் தன்மையை விவரிப்பார்.
- சிறுவருக்கான நாடகங்களைப் பார்க்க விருப்பம் தெரிவிப்பார்.
- சிறுவருக்காக நாடக எழுத்துருவை எழுதுவார்.
- வாழ்க்கையில் பிரச்சினையைத் தீர்ப்பதற்காகப் புதிய கண்ணோட்டத்தைப் பெறுவார்.
- திருத்தமாகத் தொடர்பாடும் திறனைப் பெறுவார்.

**இணைப்பு 1.1.1**

## தேடல் அறிவுறுத்தற் பத்திரம்

- **குழு 1:** சிறுவர் நாடகத்தில் இடம்பெற்ற சம்பவங்களின் ஒழுங்குமுறையை நினைவில் வைத்து, வாய்மொழி மூலம் கதையை வகுப்பில் முன்வைத்தல் வேண்டும்.

- **குழு 2:** - நாடகக் கதை எந்தப் பாத்திரம்/பாத்திரங்களை மையப்படுத்தியதாக உள்ளது?
  - அந்தப் பாத்திரம்/பாத்திரங்களின் பிரதான நோக்கம் யாது?
  - அந்தப் பாத்திரம்/பாத்திரங்களின் கருத்துக்களுக்கு முரணாக வரும் எதிர் நிலைப் பாத்திரம்/பாத்திரங்கள் யாவை? என்பவற்றைக் கண்டறிந்து முன்வைத்தல் வேண்டும்.

- **குழு 3:** நாடகப் பெருங்காட்சியின் எளிமை, கவர்ச்சி, அழகை விவரிப்பதே உங்களது குழுவின் பொறுப்பாகும்.
  இதற்காகப் பின்வரும் அம்சங்கள் குறித்துக் கவனஞ் செலுத்துவது அவசிய மாகும்.
  - பின்னணி/பின்புலம்
  - ஆடையணிகள்
  - ஒப்பனை
  - காண்பியங்கள்/மேடைப் பொருள்கள்
  - மேடை ஒளியேற்றல்
  - இசை
  - நடனம்

- **குழு 4:** சிறுவர் நாடகத்தைப் பார்த்ததன் மூலம் நீங்கள் பெற்ற வாழ்க்கைப் பாடத்தை வகுப்பில் எடுத்துக் கூறுவதே உங்களது குழுவின் பொறுப்பாகும்.

- **குழு 5:** நீங்கள் பார்த்த சிறுவர் நாடகத்தில் காணப்பட்ட, சிறுவர் நாடகத்துக்கு இன்றியமையாத அம்சங்களை விமர்சன ரீதியில் விவரிப்பதே உங்களது குழுவின் பொறுப்பாகும்.

**இணைப்பு 1.1.2**

## தகவற் கோவை

- தெரிவு செய்து கொண்ட சிறுவர் நாடக வீடியோக் காட்சியை வகுப்பில் காட்சிப் படுத்துதல்.

அன்றேல்

- சிறுவர் நாடகமொன்றை நேரடியாகப் பார்க்கச் சந்தர்ப்பமளியுங்கள். (சிறுவருக்கான நாடகமொன்றை நேரடியாகப் பார்க்கச் சந்தர்ப்பமளிப்பதே மிகப் பொருத்தமானதாகும்.)



***உயிர்த்த மனிதரின் கூத்து***



***சிறுவர் நாடகம்***

**தேர்ச்சி 1.0 : அனுபவங்களைப் போலச் செய்தல், கருத்துக்களை வெளிப்படுத்தல் ஆகிய திறன்களை வெளிக் காட்டுவார்.**

**தேர்ச்சி மட்டம் 1.2** : நாடகக் கருவைத் (Theme) தெரிந்து கொள்வர்.

**செயற்பாடு 1.2** : ''நாடகத்தின் கருவைக் கண்டறிவோம்''

**நேரம்** : 04 பாடவேளைகள்

**தர உள்ளீடுகள்** :
- இணைப்பு 1.2.1 இல் தரப்பட்டுள்ள தேடல் அறிவுறுத்தற் பத்திரப் பிரதிகள் - போதுமான தொகை
- சிறுவர் நாடக எழுத்துருக்கள் - 02
  (ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியில் தரப்பட்டுள்ளவை)
  தப்பிவந்த தாடி ஆடு - சி. மௌனகுரு
  மலைகளை அகற்றிய மூடக்கிழவன் - சிவசேகரம், பிரேமளா
- சிறுவர் நாடக காண் ஒளிப்பேழைகள் சில (DVD/VCD)

**கற்றல் - கற்பித்தல் முறைகள்**

**படி 1.2.1** :
- மாணவர் பார்த்துள்ள சிறுவர் நாடகங்கள் பற்றி வினவி, அவர்கள் ஏற்கெனவே பெற்றுள்ள அனுபவங்களைத் துணையாகக் கொண்டு பின்வரும் விடயங்களை வெளிக் கொணரும் வகையில் கலந்துரையாடுங்கள்.

| |
|---|
| • சிறுவர் நாடகத்தைப் பார்த்து நயக்கலாம்.<br>• அவ்வாறான ஒரு கதையைக் கொண்ட நாடகத்தில் கரு காணப்படும்.<br>• சிறுவர் நாடகமானது, பிரதானமாக ஒரு கருவை நோக்காகக் கொண்டு படைக்கப்படும்.<br>• நாடகச் செயற்பாடுகள் மூலம் கரு வெளிக்கொணரப் படும். |

**(20 நிமிடங்கள்)**

**படி 1.2.2** :
- இணைப்பு 1.2.1 இல் தரப்பட்டுள்ள தேடல் அறிவுறுத்தற் பத்திரப் பிரதிகளை ஆளுக்கு ஒன்றாகப் பகிர்ந்தளியுங்கள்.
- நாடக எழுத்துருப் பிரதிகளையும் பகிர்ந்தளியுங்கள்.
- மாணவர் ஒவ்வொருவருக்கும் அந்நாடக எழுத்துருவை வாசிக்கச் சந்தர்ப்பமளியுங்கள். (40 நிமிடம் வழங்குக.)
- நாடக எழுத்துருவை வாசித்து முடித்த பின்னர் சகல மாணவருக்கும் நாடகத்தைப் பார்க்கச் சந்தர்ப்பமளியுங்கள்.
- தேடல் அறிவுறுத்தற் பத்திரத்தின்படி செயற்பாட்டில் ஈடுபட வழிப்படுத்துங்கள்.

- தேடியறிந்தவற்றை வகுப்பில் முன்வைக்க ஆயத்தஞ் செய்து கொள்ளுமாறு அறிவுறுத்துங்கள்.

**(120 நிமிடங்கள்)**

படி 1.2.3 : • மாணவர்கள் தேடியறிந்தவற்றை வகுப்பில் முன்வைக்குமாறு எழுமாறாக ஒரு சிலருக்குச் சந்தர்ப்பமளியுங்கள்.

- கரு என்பது நாடகத்தின் கதைப்பொருளின் ஊடாக வெளிக்கொணரப்படும் பிரதானமான விடயமாகும்.
- நாடகமொன்றின் கரு ஊடாக வெவ்வேறு அர்த்தங்கள் வெளிப்படுத்தப்படும்.
- நாடகத்தின் கருவை வெளிப்படுத்திக் காட்டுவதற்காக நாடகப் பொருத்தமான சூழமைவுகளைப் பயன் படுத்தலாம்.
- நாடகக் கருவை மனிதரின் நன்மைக்காகவே பயன்படுத்துவர்.
- நாடகக் கருவின் ஊடாகப் பார்ப்போருக்கு நல்ல வாழ்க்கைப் படிப்பினையை முன்வைக்கலாம்.

**(20 நிமிடங்கள்)**

**கணிப்பீடும் மதிப்பீடும்:**

- நாடகத்தில் யாதேனும் கதைப்பொருளொன்று காணப்படும் எனக் குறிப்பிடுவார்.
- நாடகத்தின் விடயப் பொருள் என்பது அக்கதைப் பொருளின் ஊடாக வெளிப்படும் பிரதானமான கருத்தாகும் என்பதை வெளிக்கொணர்வார்.
- நாடகம் பார்க்கும்போது விடயப்பொருளின் ஆழத்தைக் கிரகித்துக் கொள்வார்.
- நாடக விடயப் பொருளினால் வெளிக்கொணரப்படும் வாழ்க்கை தத்துவத்தின் மூலம் வாழ்க்கையை அனுபவிக்கும் ஆற்றலைப் பெறுவார்.

**இணைப்பு 1.2.1**

## தேடல் அறிவுறுத்தற் பத்திரம்

- உங்களுக்குத் தரப்பட்டுள்ள நாடக எழுத்துருக்களைக் கருத்தூன்றி வாசியுங்கள்.
- பின்னர் அந்நாடகங்களைப் பாருங்கள். (வீடியோவில்)
- உங்களது கருத்தின்படி கதைச் சுருக்கத்தை எழுதுங்கள்.
- நாடகத்தின் கதையுடன் தொடர்புடைய கருவொன்று உள்ளது என்பது குறித்துக் கலந்துரையாடுங்கள்.
- அக்கதையில் கூறப்படும் கருவை எழுதுங்கள்.
  (இதனை ஓர் பின்தொடர் ஒப்படையாகவும் செய்யலாம்)
- கருவின் மூலம் கிடைக்கும் படிப்பினை குறித்து வகுப்பில் கலந்துரையாடுங்கள். அதற்கான ஆசிரியரின் உதவியையும் பெறுங்கள்.
- அந்தந்த நாடகத்தின் கருவின் ஊடாகப் பெறத்தக்க படிப்பினைகள் பற்றிக் கலந்துரையாடுங்கள். இதற்காக ஆசிரியரின் உதவியைப் பெறுங்கள்.

**இணைப்பு 1.2.2**

## தகவற் கோவை

- **தப்பி வந்த தாடியாடு - சி. மௌனகுரு**

**தப்பி வந்த தாடி ஆடு - சி. மௌனகுரு**

### திரை விலகுகிறது

(மேடையின் இரு பக்கங்களிலிருந்தும், பார்வையாளர் பகுதியிலிருந்தும் மாணவர்கள் மேடைக்கு வருகிறார்கள். கூட்டங் கூட்டமாகின்றார்கள். மேடையை நிறைக்கின்றார்கள். கூடி நின்று தமக்குள் சத்தமிட்டுக் கதைக்கிறார்கள். மாணவர்களில் ஒருவர் (ஆள் 1) ஆரம்பத்திலிருந்தே கதைப்பதிற் திருப்தியில்லாதவர் போற் காணப்படுகின்றார். அவர் DR இல் நிற்கிறார். பின் மாணாக்கரைப் பார்த்துக் கூறுகிறார்)

**ஆள் 1:** (கையைத் தட்டி) ஸ்... ஸ்...
(மாணாக்கர் அவரைத் திரும்பிப் பார்க்கின்றனர்.)

வீணாகச் சத்தம் போடக்கூடாது. சும்மா கதைச்சு வீணாக்கிற நேரத்திலை ஏதாவது பிரயோசனமாகச் செய்யலாம்

**ஆள் 2:** என்ன செய்யலாம்?

**ஆள் 3:** விளையாடுவம்.

**ஆள் 4:** (சலிப்புடன்) ஒரே விளையாட்டுத்தானா வேறை ஏதாவது செய்வம்.

**ஆள் 5:** அப்ப படிப்பம்.

**ஆள் 6:** (அலுப்புடன்) படிப்பு, படிப்பு, படிப்பு அலுத்துப் போச்சு.

**ஆள் 1:** படிப்பும் வேணும் எங்களுக்கு விளையாட்டும் வேணும். படிப்பும் விளையாட்டும் சேர்ந்ததா என்ன செய்யலாம்?

**ஆள் 2:** (சற்று யோசித்துவிட்டு) ஆ! நாடகம் ஒண்டு நடிப்பம்.

**எல்லோரும் :** நாடகம்! நாடகம்!! நாடகம்!!
(துள்ளிக் குதிக்கிறார்கள். குதிப்பும், ஒழுங்கின்மையும் ஓர் ஒழுங்கிற்குள் வர, பின்வரும் பாடலைப் பாடுகிறார்கள்.)

சிறுவர்கள் நாம் சின்னச் சிறுவர்கள் நாம்
சிணுங்கி அழாத சிறுவர்கள் நாம்.
அனைவரும் இணைந்தே கூட்டாக - இங்கு
ஆடி நடிப்போம் நாடகமே.

**ஆள் 1:** சரி என்ன நாடகம் நடிக்கலாம்?

**ஆள் 2:** நாங்கள் ஐந்தாம் வகுப்பு மாணவர்; ஆனபடியா ஐந்தாம் வகுப்பில் படிக்கிற பாடத்தத்தான் நடிக்க வேணும்.

**ஆள் 1:** கடவுள் வாழ்த்து.

**ஆள் 2:** அது கதையில்ல.

**ஆள் 1:** சந்திரன்!

**ஆள் 4:** அது பாட்டப்பா.

**ஆள் 1:** இரு கிராமங்களைத் தின்ற ஆடு,

**ஆள் 5:** எனக்கது பிடிக்கேல்லை.

**ஆள் 6:** (ஆள் 5ஐப் பார்த்து) உனக்குத் தின்னத்தான் பிடிக்கும்.

(ஆள் 6, 5ஐ முறைக்க ஆள் 5 மெல்ல ஒதுங்குகிறார்.)

**ஆள் 1:** புத்திமான் பலவான்?

**ஆள் 2:** எது? அந்தச் சின்னத்தாடி ஆடு பெரிய சிங்கத்த வெருட்டின கதையே?

**எல்லோரும்**
: ஓம், ஓம், ஓம்.

**ஆள் 1:** அது நல்ல கதை, அதை நாங்கள் நடிப்பம், ஆடுகளுக்குச் சிலபேர் நடிக்க வேணும்.
(சிலர் ஆடுகளாக அபிநயித்து நடக்கிறார்கள்.)

**சிலர்** : நாங்கள் ஆடுகள்... மே... மே...
(ஆட்டைப்போல் கத்துகிறார்கள்)

**ஆள் 1:** (அவர்களின் அருகில் சென்று பார்த்துவிட்டு) சரி நீர்தான் தாடி ஆடு. குழப்படி பண்ணக்கூடாது என்ன? சரி.

**எல்லோரும்**
: அங்க, அங்க பாருங்கோ,
(ஆள் 5 மேடையில் DL இல் நின்று சிங்கம் மாதிரி உறுமி, தலையை ஆட்டிப் பயிற்சி பண்ணுகிறார்.)

(அனைவரும் அவருக்கு அருகில் போகிறார்கள்)

**ஆள் 1:** நீர் என்னத்துக்கு வேஷம் போடப்போகிறீர்?
(ஆள் 5 மாணாக்கரைப் பார்த்துச் சிங்கம் போல் உறுமுகிறார்.)

**எல்லோரும்**
: சிங்கம், சிங்கம், சிங்கம்.

**ஆள் 1:** சரி இவர் சிங்கம். (ஆள் 6 நரி போல் நடந்து திரிகிறார்.)

**ஆள் 1:** (அவரை அவதானித்துவிட்டுச் சபையோரைப் பார்த்து, அவரைக் காட்டி) இவர் என்ன?
(நரிக்கு நடந்தவர் திரும்பி குவா குவா கூ என்று நரி போல் கத்துகிறார்.)

**எல்லோரும்**
: நரி, நரி, நரி.

**ஆள் 1:** சரி இவர் நரி.

**ஆள் 7:** நான் தான் யானை. (யானை போல் அசைகிறார்.)

**ஆள் 8:** நான் தான் மான். (மான் போல் துள்ளுகிறார்.)

**ஆள் 9:** நான்தான் குரங்கு.
(ஒரு குத்துக்கரணம் அடித்து இன்னொருவர் மேல் தாவி ஏறுகிறார்).

**ஆள் 10:** நான் தான் கரடி. (கரடி போல் நடக்கிறார்.)

**ஆள் 1:** நான் தான் பன்றி.
(பன்றி போல் உறுமி ஆள் 8 இல் முட்டுகிறார்).

**ஆள் 1:** காட்டுக்கு என்ன செய்யலாம்?

**சிலர்** : காட்டுக்கு மரங்களாக நாங்கள் நிற்பம்.

**ஆள் 1:** ஆ! அது நல்ல ஐடியா,

**சிலர்** : குகைகளாகவும் நிற்பம்.

**சிலர்** : பற்றைகளாகவும் கிடப்பம்.

**ஆள் 1:** சரி பிரச்சினையில்லை. எல்லோரும் போங்கோ. போய் உடுப்புக்களைப் போட்டுக்கொண்டு கெதியாக வாருங்கோ.

(எல்லோரும் போகிறார்கள். ஆள் 1 DC இற்கு வந்து சபையோரைப் பார்த்து)

கொஞ்சநேரம் பொறுத்துக் கொள்ளுங்கோ, போன நண்பர்கள் உடுப்புக்களைப் போட்டுக் கொண்டு வரக் கொஞ்ச நேரம் போகும். அதுக்கிடையில் நாங்கள் ஒரு பாட்டுப் பாடுறம்.

(மேடையில் எஞ்சி நின்றோர் கீழ்வரும் பாடலைப் பாடி ஆடுகிறார்கள். அச்சமயம் மேடையில் நாடக ஒழுங்குகள் நடைபெறுகின்றன. எஞ்சி நின்றோர் பாடகராவர். மேல் மேடையில் UR தொடக்கம் UL வரை மாணவர்கள் கைகளை உயர்த்திச் சபைக்குப் பின்புறம் காட்டிக் குடிசை போன்ற தோற்றத்தை உருவாக்குகிறார்கள். பாடல் முடியும்போது குடிசையும் தயாராகி விடுகிறது. பின் பாடியவர்கள் DR இன் வலதுபக்க ஓரமாக மேடைக்குக் கீழ் இருந்த வாங்கில் அமர்ந்து கொள்கிறார்கள். ஆள் 1உம், 2உம் மேடையில் உலாவியபடி அனைத்தையும் சரிபார்க்கிறார்கள்).

(பாடல்)
சிறுவர்கள் நாம் சின்னச் சிறுவர்கள் நாம்,
சிணுங்கி அழாத சிறுவர்கள் நாம்,
அனைவரும் இணைவோம் கூட்டாக,
ஆடி நடிப்போம் நாடகமே,
சிங்கம் போலே உறுமிடுவோம்,
(உறுமுகிறார்கள்).

சிறு நரிபோலே கத்திடுவோம்,
(நரிபோல் கத்துகிறார்கள்).

குரங்கைப் போலே குதித்திடுவோம்.
(குதிக்கிறார்கள்).

பன்றி, கரடி போல் நடித்திடுவோம்.
(பன்றி, கரடி போல் நடக்கிறார்கள்).

காடுகளாக நாம் நிற்போம்.
(உறைநிலையில் நிற்கிறார்கள்).

குகைகள் குடிசையாய் நாம் நிற்போம்.
(உறைநிலையில் நிற்கிறார்கள்).

ஆடுகளாக மேய்ந்திடுவோம்.
(ஆடுகள் போல் கத்துகிறார்கள்).

பாடகராகப் பாடிடுவோம்.
(ஆ ஆ ஆ எனப் பாடுகிறார்கள்).

**ஆள் 1:** (CC யில் நின்று உள்ளுக்குள் எட்டிப்பார்த்து) எல்லாரும் முடிஞ்சுதோ? சரி நாங்கள் தொடங்கிறம். DC இற்கு வந்து நின்று சபையைப் பார்த்து)

(பாடல்)

**ஆள் 2:** அழகான சின்னக் கிராமத்தில்
ஆடுகள் கூட்டமாய் வாழ்ந்தனவே.

**ஆள் 1:** அயலூர் எதைம் அறியாமல்
அங்கே தனியாய் வாழ்ந்தனவே

**ஆள் 2:** அந்த ஆட்டுக் கூட்டத்தில் அப்பா ஆடு, அம்மா ஆடு, தம்பி ஆடு, தங்கச்சி ஆடு, பாட்டி ஆடு, பாட்டன் ஆடு எண்டு பல ஆடுகள் இருந்தினம். அதுக்குள்ள ஒரு தாடி ஆடும் இருந்தது.

**ஆள் 2:** (வியப்புடன்) தாடி ஆடோ?

**ஆள் 1:** ஓம் மற்ற ஆடுகளைவிட இதுக்கு ஒரு சின்னத்தாடி இருந்தது. அதுதான் ஆடுகளுக்குள்ள சின்ன ஆடு, மற்ற ஆடுகள் எல்லாம் இதை தாடித்தம்பி எண்டுதான் கூப்பிடும். இந்த ஆடுகள் எல்லாம் ஒருநாள் பட்டியைவிட்டுப் புறப்பட்ன மேய்ச்சலுக்கு.

**ஆள் 2:** (தூரப் பாரத்துவிட்டு) அங்க, பட்டியவிட்டுப் புறப்பட்ட ஆடுகள் வரிசையாய் வருகினை.

(ஆள் 1உம், ஆள் 2உம் கீழ்வரும் தாளக்கட்டைப் பாடியபடி பாடகருடன் வந்து அமர்ந்து கொள்கிறார்கள்).

**பாடகர்:** (பாடுகிறார்கள்).

தத்தரிகிட தோம் - தரிகிட
தத்தரிகிட தோம்

(ஆடுகள் தாளத்திற்கு ஏற்ப வரிசையாகக் குடிசைகளுக்கூடாக மேடைக்கு வருகின்றன. பின்வரும் பாடலுக்கு ஆடுகின்றன. பாடலைக் காட்சிப்படுத்துவது நெியாளரின் கற்பனையைப் பொறுத்தது.)

**ஆடுகள்:** (பாடல்)
மே.... மே... மே...
ஆடுகள் நாங்களே - நல்ல
ஆடுகள் நாங்களே

**பாடகர்:** (திருப்பிப் பாடுதல்)

**ஆடுகள்:** அங்கொரு கடி இங்கொரு கடி
இலையைச் செடியைப் புல்லைக் கடித்திடும்.

**பாடகர்:** ஆடுகள் நாங்களே - நல்ல
ஆடுகள் நாங்களே

**ஆடுகள்:** ஆடி ஆடி நடப்போம் - எப்போதும்
அசைகள் போடுவோம்.

**பாடகர் :** (திருப்பிப்பாடுதல்)

**பாடகர்:** ஆடுகள் நாங்களே - நல்ல
ஆடுகள் நாங்களே
மே... மே... மே...

**தாடி ஆடு:** தாடி ஆடு நான் - இங்கே
தாடி ஆடு நான்.

**பாடகர்:** (திருப்பிப்பாடுதல்)

**தாடி ஆடு:** தாவிக் குதித்துப் பாய்ந்து புரள கழுத்துமணி கணீரென்றொலிக்கும்.

**பாடகர்:** தாடி ஆடு நான் - இங்கே
தாடி ஆடு நான்.
மே... மே... மே...

தத்தரிகிட தோம் - தரிகிட
தத்தரிகிட தோம்

(தாடி ஆடு மேய்ந்தபடியே மேடையின் இடது மூலைக்குச் (DC) சென்று எங்கோ பார்த்தபடி நிற்கிறது. தாய் ஆடு அதன் அருகே செல்கிறது).

**அம்மா ஆடு:** தம்பி, தாடித் தம்பி (தாய் ஆடு தாடி ஆட்டைத் தொட்டு உலுப்பி) தம்பி என்ன தூரத்திலை எதையோ பார்த்துக்கொண்டு நிற்கிறா.

**தாடி ஆடு:** அம்மா (தூரக் கையைக் காட்டி) அங்க தெரியிது பெரியமலை... அங்க பாருங்க பெரிய பெரிய மரங்கள்... ஓ (ஆச்சரியத்துடன்) பெரிய காடு. அங்க போய் மேயவும், புதினம் பார்க்கவும் ஆசையாயிருக்கம்மா.

**அம்மா ஆடு:** (பயந்து) ஐயோ நாங்களே இதுவரைக்கும் யோசிச்சுப் பார்க்காத இடம். நாங்கள் இங்கையே மேய்ஞ்சு சாப்பிட்டுவிட்டு நிம்மதியா இருப்பம் ராசா.

**தாடி ஆடு:** (கோபத்துடன்) உங்களுக்கு நல்ல பயம். நீங்க ஊரோட இருங்கோ. எல்லா இடத்துக்கும் போக வேணும். எல்லாரோடையும் பழக வேணும். அங்க கஷ்டம் வந்தால் சமாளிக்க வேணும். இப்பபடித்தானே பாட்டி சொன்னவ.

**தாத்தா ஆடு:** அது சரி; ஆனா நீ சின்னப்பெடி. உனக்கு உலகம் விளங்காது ராசா.

**தாடி ஆடு:** நான் கட்டாயம் போகத்தான் வேணும். அந்தக் காட்டப் பார்க்கத்தான் வேணும். தைரியசாலிகள் என்னோடு வரலாம்.

(ஆடுகள் பயப்பட்டு இயலாது என்கின்றன).

**அம்மா ஆடு:** (தாடி ஆட்டின் கையைப் பிடித்து இழுத்து) ஐயோ தம்பி போகாதேயடா; என் ராசா, குஞ்சு போகாதேயணே)

(மேடைக்கு நடுவில் CC இற்குத் தாடி ஆட்டை ஏனைய ஆடுகள் இழுத்து வந்து சூழநின்று பாடுகின்றன.)

**அம்மா ஆடு:** போகாதே போகாதே குட்டித்தம்பி
பொல்லாத மிருகங்கள் காட்டிலுண்டு.
சின்ன வயசடா குட்டித்தம்பி;
சிங்கம் சிலவேளை கடிச்சுப் போடும்.

**தாடி ஆடு :** (பாடல்)
எல்லா இடத்துக்கும் போகவேணும்;
எல்லாரையும் நாங்க காணவேணும்.
கிணத்துத் தவளையப் போலிருந்தா,
கேவலம் கேவலம் கேவலமே,

**அண்ணை ஆடு:** (பாடல்)
ஆட்டு ரத்தம் எண்டா நரியனார்க்கு
ஆசை என்று யாரோ சொன்னாங்களே.

**தாடி ஆடு:** (பாடல்)
பேட்டுக் கோழியைத்தான் அதுபிடிக்கும்
பேய்க்கதை பேசுறார் பெரிய அண்ணை.

**பாட்டி ஆடு:** (பாடல்)
சின்ன வயசடா குட்டித்தம்பி
சிங்கராசா கண்டாத் தீமைவரும்

**தாடி ஆடு:** சிங்கத்தை முயல் வென்ற கதை தெரியும். சீக்கிரம் போய் வாறன் விடை தாருங்கோ. (தாடி ஆடு CR இல் மேடையின் கிழக்கே பார்த்தபடி நிற்க. ஏனைய ஆடுகள் 3 வரிசையில் தாடி ஆட்டுக்கு எதிரே வந்து நின்று கைகளை நீட்டித் தட்டுமறிக்கும் பாணியில் நிற்கின்றன).

**ஆடுகள் :** போகாதே, போகாதே எங்கள் தம்பி.

**தாடி ஆடு:** போவேன், போவேன் போவேன் நான்.
(தட்டுமறித்தல் விளையாட்டில் வருவது போல முதல் வரிசையில் நிற்பவருடன் தாடி ஆடு விளையாடுகிறது. அவர்களை உச்சி வென்று விட்டு அடுத்த அணியினர் முன்வருகிறது. முதல் அணியினர் கீழே விழுகின்றனர். இரண்டாவது அணியினரையும் உச்சிவிட்டு மூன்றாவது அணியினர் முன்வருகிறது. இரண்டாவது அணியினரும் கீழே விழுகின்றனர். மூன்றாவது அணியினரையும் உச்சிவிட்டுத் தாடி ஆடு DL இற்கு வந்து நின்று நடந்து செல்வது போல அபிநயிக்கிறது. மூன்றாவது அணியினரும் விழுகின்றனர். விழுந்துகிடந்த ஏனைய ஆடுகள் தாடி ஆடு சென்ற திசையை நோக்கித் துக்கத்துடன் பின்வரும் பாடலுக்கு மெல்ல மெல்ல எழுந்து அபிநயித்தபடி ஒவ்வொரு நிலையில் நிற்கின்றன.)

**பாடகர் :** போவேன் போவேன் என்று சொல்லி
போனது போனது போனதுவே.
போகாதேடா என்று சொல்லி
ஏனைய ஆடுகள் கெஞ்சினவே.
அம்மா ஆடு முன்வந்து
அழுது குளறிக் கிடந்ததுவே
பாட்டி ஆடு நடு நடுங்கிப்
பதைத்து நின்று சொல்லியதே.
தாத்தா ஆடு தடியோடு
தடுமாறிக் கொண்டு கெஞ்சியதே.
அண்ணன் ஆடு ஓடி வந்து
அடுக்காதென்று சொன்னதுவே.
எல்லாத் தடையும் தான் கடந்து
எங்கள் ஆடு சென்றதுவே.
சென்றது சென்றது சென்றதுவே
காடுநோக்கிச் சென்றதுவே
ஆ ஆ ஆ ஆ... ஆ ஆ ஆ ஆ
ஆ ஆ ஆ ஆ... ஆ ஆ ஆ ஆ

(பாடகர் மேடைக்கு வருகின்றனர். ஆடுகளுக்கு ஆறுதல் சொல்லி அழைத்துக் கொண்டு CC இற்கு ஊடாக UR சென்று ஆடுகளை விட்டு விட்டு, பின்னர் வந்து பழைய இடத்தில் அமர்கின்றனர். அவர்கள் சென்றதும் குடிசையாக நின்ற மாணவர்களும் அவர்களைத் தொடர்ந்து செல்கிறார்கள். பின்னர் கைகளில் காடுகள் இலைகள் வரையப்பட்ட அட்டைகளைத் தாங்கிய வண்ணம் அதே மாணவர்கள் வந்து காடுகளாக நிற்கிறார்கள். சிலர் குகைகளாக நிற்கிறார்கள். குகை, மேடையில் UC, UL, CC, CL ஆகிய பகுதிகள் சந்திக்குமிடத்தில் அமைக்கப்படல் வேண்டும். காட்டை மாணவரைக் கொண்டு அமைக்க நெறியாளர் தன் கற்பனையைத் தாராளமாகப் பாவிக்கலாம். எல்லோரும் நின்றதும் ஆள் 1, மேடைக்கு வருகிறார். காட்டைச் சுற்றிப் பார்க்கிறார். முள் ஒன்று காலில் குத்துகிறது. இருந்து முள்ளை எடுக்கிறார்; எறிகிறார், அவரது அபிநயம் காடு என்ற உணர்வைச் சபையோருக்கு ஏற்படுத்த வேண்டும். பின் DC இற்கு வந்து நின்று, சபையோரைப் பார்த்து)

**ஆள் 1:** (பாடல்)
காடு பெரிய காடு
கண்டாலே பயம் வரும் காடு,
நெடிதுயர்ந்த பெருமரங்கள்.
நீண்ட பெரும் கிளைகள்,
மலைகள் மலைத்தொடர்கள்,
மலைகளுள்ளே பெரும் குகைகள்.
(குகைக்குள் புகுந்து வெளிவருகிறார். பிறகு மேடையின் DR இற்கு வருகிறார்; பாடுகிறார்).

ஆனைகள் ஒருபுறம் ஆடி அசைந்தன.
(ஆனை ஒன்று அசைந்தபடி வருகிறது. கீழே பாடகரில் ஒருவர் மேடைக்கு வந்து ஆனை அருகிற் சென்று அதன் அனுமதி பெற்று, அதன் மீது ஏறி மேடை முழுக்கச் சவாரி வருகிறார்.)
மான்கள் மறுபுறம் துள்ளிப் பாய்ந்தன.
மான் துள்ளி இசைக்கு ஏற்ப ஆடி வருகிறது).

குரங்குகள் சிற்சில கூட்டமாய்க் குதித்தன,
(ஒரு குரங்கு குத்துக் கரணமடித்தபடி வந்து மானோடு சேட்டை விடுகிறது).
கரடி ஒன்று நடந்து திரிந்தது,
(கிழட்டுக் கரடி ஒன்று இடுப்பில் கையூன்றிய படி அசைந்து வருகிறது.)
பன்றி ஒன்று உறுமித்திரிந்தது.
(பன்றி உறுமியபடி வந்து ஆள் 1 ஐ முட்டி விட்டு நிற்கிறது)
நரி ஒன்று மெல்ல நடந்து திரிந்தது.
(நரி நடந்து வந்து ஊளையிடுகிறது. ஏனைய மிருகங்கள் அருவருப்புடன் காதைப் பொத்துகின்றன. இப்போது மிருகங்களனைத்தும் DR தொடக்கம் DL வரை வரிசையாக நிற்கின்றன. பின்வரும் பாடலுக்கு மிருகங்கள் ஆடுகின்றன. பாடலைக் காட்சிப்படுத்தல் நெறியாளரின் கற்பனையைப் பொறுத்தது).

**ஆள் 1:** (பாடல்)
ஆனைகள் ஒருபுறம் ஆடி அசைய
மான்கள் மறுபுறம் துள்ளிப் பாய,
காடு மிக மிக கலகலப் பாக
காட்சி தந்தது; காட்சி தந்தது,
லால லாலா லால லாலா

(மேடையில் மிருகங்கள் சுழன்று ஆடிவிட்டு ஒவ்வோர் இடத்திலும் நிற்கின்றன. ஆடு மேடைக்கு வருகிறது).

**ஆள் 2:** (பாடல்)
தாடி ஆடர் வந்தார் - காட்டுக்கு
தாடி ஆடர் வந்தார்.
ஆனையாரைக் கண்டார் - மிக மிக
ஆனந்தமே கொண்டார்
குரங்கனாரைக் கண்டார் - சேர்ந்து
குதிகுதித்துப் பாய்ந்தார்,
கரடியாரைக் கண்டார் - நன்றாய்க்
காலிடந்து நடந்தார்.
நரியனாரைக் கண்டார் - அவற்றை
வாலைத் தொட்டுப் பார்த்தார்.
லால லாலா லால லாலா
லால லாலா லால லாலா

(எல்லா மிருகங்களும் ஆடுகின்றன. ஆடிக் களைத்து மரங்களின் அருகில் களைப்புடன் நிற்கின்றன).

**யானை:** (களைப்புடன்) ஐயோ! நல்லாக் களைச்சுப் போனம். இந்த உடம்பையும் தும்பிக்கையையும் தூக்கிக்கொண்டு ஆட ஏலுதில்லை.

**பன்றி :** ஆடுறதெண்டா எங்களுக்குச் சரிப்படாது. அதுக்கு மயில்தான் சரி; அல்லாட்டா மான்தான் சரி.

**மான் :** (ஆட்டைப் பார்த்துவிட்டு) நாங்கள் இருக்கிற இடத்தில் அப்ப தொடக்கம் ஒரு புதுமுகம் தெரியுது. (ஆட்டின் அருகேபோய்) தம்பி உன்ரபேர் என்ன?

**தாடி ஆடு:** என்ரபேர்... என்ரபேர் (மறந்து ஞாபகம் வந்த பாவனை) தாடி ஆடு. அந்த ஊரில் இருந்து, இஞ்ச வந்திருக்கிறன். எனக்கு உங்கட இடத்தப்பார்க்கச் சரியான ஆசை. அதுதான்(பெருமையுடன் அம்மாவின்ரை சொல்லையும் கேட்காம வந்திட்டன்.

**குரங்கு :** (வெறுப்புடன்) என்ன? தாய் சொல்லைத் தட்டினனியே.

**தாடி ஆடு:** (யோசித்து) நான் அப்பாட சொல்லையும் கேட்கவில்லை.

**கரடி :** (அதிருப்தியுடன்) என்ன? அப்பாவின்ர சொல்லையும் கேட்க இல்லையோ?

**தாடி ஆடு:** (தயக்கத்துடன்) நான் மூத்த ஆக்களின்ர சொல்லையும் கேட்கவில்லை.

**பன்றி :** (கோபத்துடன்) என்ன மூத்த ஆக்களின்ர சொல்லையும் கேக்கேல்லையோ?

**தாடி ஆடு:** (பெருமையுடன்) எண்டாலும் நான் தனிய வெளிக்கிட்டு வந்திட்டன்.

**யானை :** (யோசித்து) அம்மா, அப்பா, பெரியாக்களின்ர சொல்லையும் கேட்கத்தான் வேணும். அதுக்காக அவையள் வீணாப் பயங்காட்டுறதையெல்லாம் கேட்டுக்கொண்டிருக்க வேணும் எண்டில்ல. நீயும் தனியாச் சிலகாரியங்களப் பார்க்கத்தானே வேணும்.

**பன்றி :** எண்டாலும் பெரிய ஆட்கள் சொல்லுறதிலையும் உண்மை இருக்கு.

**கரடி :** ஓம்! ஓம்! எங்களிட்டக் கெட்டித்தனம் இருந்தா அவையளிட்ட அனுபவம் இருக்கு. இல்லியோ? ஆனபடியா அவையளின்.ர சொல்லை மீறினா, சில வேளைகளில் கஷ்டங்களும் வரும்.

**தாடி ஆடு:** கஷ்டம் வந்தாலும் எங்கட புதியால வெல்லலாம் தானே. (யானையிடம் சென்று) மாமா ஆனை மாமா! இஞ்ச ஏதாவது கஷ்டங்கள் இருக்கோ?

**யானை :** இஞ்ச ஒரு கஷ்டமும் இல்லத் தம்பி. ஆனால் இந்தக் காட்டில ஒரு சிங்கத்தார் இருக்கிறார். அவர் கொஞ்சம் பயங்கரமான ஆள. அவருக்குத்தான் எங்களுக்குக் கொஞ்சம் பயம். ஆள்மெத்த வலுவான மனுசன்.

**மான்** : அவருக்கு ஆசைவந்தா, ஒரு தட்டுத் தட்டிப் போட்டு எங்களைச் சாப்பிட்டுப் போடுவார்.

**குரங்கு** : உன்னைச் சாப்பிட்டா அவருக்குப் போதாது. (யானையைக் காட்டி) அவர் பெரியாக்களத்தான் பிடிப்பார்.

**தாடி ஆடு:** சாப்பிட்டுப் போடுவாரோ? (நடுங்குகிறது).

**யானை** : பயப்படாதேயும் தம்பி அவர் வரேக்குள்ளை நாங்கள் ஆளை ஒருமாதிரி பிளீஸ் பண்ணிப் போடுவம். நீ புது ஆள். அதனால் சிலவேளை உன்னை அவருக்குப் பிடியாமல் இருக்கலாம். பயப்படாதேயும். நாங்கள் உன்னைப் பாதுகாப்பம்.

(மழை வருவதுபோல ஒலி; குரங்கு அங்குமிங்கும் ஓடிப் பரபரப்புடன் மழை வருவதை எதிர்நோக்குகிறது).

**குரங்கு** : மழை வரப்போகுது போல இருக்கு. காற்று மெல்ல மெல்ல வீசுது. மின்னலும் வெட்டுது. இஞ்ச, காற்று மெல்ல மெல்லக் கூடுது. ஐயோ மழை வரப்போகுது போல இருக்கு. (குரங்கு அழ, ஏனைய மிருகங்களும் கைகளை உதறிக்கொண்டு அழுகின்றன)

**தாடி ஆடி:** ஐயோ மழை வந்தா எங்களுக்கு ஊரில தங்கிறதுக்குச் சின்னக் கொட்டில் இருக்கு... இஞ்சதான் எங்க நிற்பன்... மே... மே... மே. (பதறுகிறது)

(பின்வரும் பாடலுக்கு ஏற்ப மேடையில் நிற்போர் அனைவரும் மின்னலாக, புயலாக, மழையாக அபிநயிக்கிறார்கள்).

**பாடகர்** : (பாடல்)
காற்று பெரும் காற்று
மெதுவாகத் தான் தொடங்கி
மெல்ல மெல்ல வீசியது.
வீசியது வீசியது வேகமாய் வீசியது
இடி இடித்தது மின்னல் மின்னியது
மழையும் சேர்ந்தது சோ எனப் பெய்தது.

காற்று காற்று காற்று காற்று
மின்னல் மின்னல் மின்னல் மின்னல்
படீர் படீர் என இடி இடிக்குது
படீர் படீர் என இடி இடிக்குது
ஸ்... ஸ்... ஸ்... ஸ்... ஸ்...

(மிருகங்கள் எல்லாம் பயந்து நடுங்குகின்றன; அழுகின்றன; பதங்குகின்றன. அங்கும் இங்கும் ஓடியபடி மேடையைவிட்டு அகல்கின்றன. ஆடு தனியே மேடையில் நிற்கிறது).

**தாடி ஆடு:** மே... மே... மே... அம்மா அம்மா... எனக்கு வழி தெரியலையே. எதால வீட்டுக்கு வருவன்? ஐயோ என்னக் காப்பாற்ற ஒருத்தரும் இல்லையா? காப்பாத்துறன் எண்டு சொன்ன ஒருத்தரையும் காணேல்லியே. எதாலபோவன்? அம்மா... அம்மா... மே... மே...

(அழுகிறது. வீழ்ந்துகிடக்கும் மரங்களைக் கடக்கிறது).

ஆ! (தூரத்திற் பார்த்து) அங்க ஒரு குகை தெரியுது. அங்கபோய் நிற்பம். (குகைக்குட் போகிறது. குகையினுட் புகுந்தபின்)

எனக்கு நல்லாவேணும். அம்மா சொல்லக் கேட்காம வந்த எனக்கு நல்லா வேணும். ம்... ம்...
(ஆள் 1 மேடையின் CC இற்கு வருகிறார். பின் சபையைப் பார்த்து)

**ஆள் 1 :** ஆடு ஒரு தடவை ஏங்கியது. அம்மாவை நினைத்தது. தைரியம் கொண்டது. ஆனால் ஆட்டுக்குத் தெரியாது தான் தங்கினது ஒரு பெரிய சிங்கத்தின்ர குகை எண்டு, இந்தச் சிங்கத்தக் கண்டா எல்லா மிருகங்களுக்கும் கிடு நடுக்கம். (நிதானித்து) கொஞ்சம் பொறுங்கோ (சிங்கத்தின் கர்ஜனை கேட்கிறது) சத்தம் கேட்குது. அவர்தான் வாறார். (தூரப்பார்த்து) அங்க வாலைக் கிளப்பி, உடம்பைச் சிலிர்த்து, முறைச்சுக்கொண்டு சிங்கத்தார் வாறார்.

(சிங்கம் மேடையின் நடுவில் CC இற்குப் பாய்கிறது. கம்பீரமாக ஒரு தடவை நாலாபுறமும் பார்க்கிறது. கீழ்வரும் தாளத்திற்கு ஆடுகிறது. ஆட்டம் நெறியாளரின் கற்பனையைப் பொறுத்தது).

**பாடகர் :** தந்தத் தகிர்தத் தகிர்தத் தாம்
திந்தத் திகிர்தத் திகிர்தத் தெய்
(ஆட்டக்கோலம் முடிய பாடுகிறது)

**சிங்கம் :** கண்ட மிருகம் கதிகலங்க
காலை வாலை சுழற்றி ஆட்டி

**பாடகர் :** (திருப்பிப் பாடுதல்)

**சிங்கம் :** சண்டைக்காரச் சிங்கம் இதோ
தாவிப் பாய்ந்து வருகிறார்.

**பாடகர் :** (திருப்பிப் பாடுதல்)
(ஆடி முடித்து சிங்கம் நிற்கிறது)

**சிங்கம் :** (உறுமியபடி) என்னைக் கண்டா ஓடிவாற மிருகங்களெல்லாம் எங்க? டேய்!

(உறுமுகிறது)

(மிருகங்கள் விழுந்தடித்துக்கொண்டு ஓடி வருகின்றன. யானை வந்து சாமரம் வீசுகின்றது. மான் குடை பிடிக்கிறது. குரங்கு சிங்கத்தின் வாலைத் தூக்கித் தோளில் வைத்துக் கொள்கிறது. கரடி தாளம் போடுகிறது. பன்றி அதன் கையைப் பிடித்து மசாஜ் செய்து விடுகிறது. இவற்றை ஊமங்கள் மூலம் நிகழ்த்தலாம். இத்தனை பரிவாரங்களுடனும் சிங்கராசா மேடையில் உலா வருகிறார்).

**பாடகர்** : குரங்கு வந்து வால் பிடிக்க
குட்டி யானை கவரி வீச
மான்கள் வந்து குடை பிடிக்க
மகா ராஜா வருகிறார்.

(உலா முடிந்த பின்னர் சிங்கம் DC யில் வந்து நிற்கிறது).

**சிங்கம்** : டேய் ஏனடா இந்த இடம் இப்பிடி இருக்கு? நான் போகேக்குள்ள நிமிர்ந்து நின்ற மரங்கள் எல்லாம் ஏன் இப்ப கீழை கிடக்குது? (பெருமையுடன் என்னைக் கண்டு பயந்துதான் விழுந்ததோ?

**மான்** : இல்ல ராசாவே.

**சிங்கம்** : (உறுமியபடி கோபத்துடன்) என்ன? என்னைக்கண்டு பயப்படவில்லையோ.

**மான்** : (பயந்து) ஓம் ராசாவே! பயப்பட்டு உங்களைக் கண்ட உடனே படார் எண்டு விழுந்திட்டுதுகள். (சொல்லி விட்டு மான் மறைவாகச் சிரிக்கிறது. மற்ற மிருகங்கள் ஆளை ஆள் பார்த்து கொடுப்புக்குள் சிரிக்கின்றன).

**சிங்கம்** : (அலட்சியமாக) அதுதானே கேட்டன்.
(பின்னால் நின்று சிங்கத்தின் முன்னர் தலையை நீட்டி)

**குரங்கு** : அதோட கொஞ்சம் காத்தும் அடிச்சுது. (குரங்குக்குச் சிங்கம் ஒரு அறை கொடுக்கக் குரங்கு விழுந்து எழுந்து மீண்டும் சிங்கத்தின் வாலைத் தூக்கி வைத்துக் கொள்கிறது)

**சிங்கம்** : ஆ... (பெரிய கொட்டாவிவிட்டு) எனக்கு மெத்தக்களைப்பா இருக்கு. நான் போய் என்ர குகைக்குள்ளை ரெஸ்ட் எடுக்கப் போறன். ஏய் மான் குட்டி, நான் ரெஸ்ட் எடுத்து முடிஞ்சதும் ஒரு டான்ஸ் பார்க்கவேணும். அதுக்கு நீ மயிலையும் கூட்டிக் கொண்டு வா என்ன? சரி, நீங்க எல்லாரும் போகலாம்.

(சிங்கம் வலதுகைப் பெருவிரலைச் சூப்பிய படி நின்ற நிலையில் நித்திரை கொள்கிறது. மிருகங்கள் முகத்தை நெளித்து, கையை ஆட்டிச் சிங்கத்தைப் பரிகசிக்கின்றன. சிங்கம் மெதுவாகக் கண்களைத் திறந்து பார்க்கிறது).

**சிங்கம்** : நான் சொன்னது விளங்கேல்லைப் போல. டேய்... (உறுமுகிறது)
(எல்லா மிருகங்களும் விழுந்தடித்துக் கொண்டு ஓடி மறைகின்றன).

(ஆள் 1 மேடையின் DR இற்கு வருகிறார்)

**ஆள் 1 :** சிங்கத்தார் எழுந்தார். தன்ர தலையை ஒரு உலுப்பு உலுப்பினார். ஒரு கொட்டாவியும் விட்டார். கம்பீரமாக நடந்து தன்ர குகைக்குள்ளே போனார். (சிங்கம் நடந்து போகிறது) குகைக்குள்ள குட்டி ஆடு. குகை வாசலிலே, சிங்கம். என்ன நடக்குது எண்டு பாப்பம். (போகிறார்)

(சிங்கம் நடந்தது போவதுபோல DR இல் நின்றபடி அபிநயிக்கிறது)

**தாடி ஆடு:** (பாட்டு)
ஆனை சொன்ன சிங்கராசா இவர்தானோ?
ஆளைப் பார்த்தாக் கையும் காலும் தந்தி அடிக்குதே
ஆட்டிறைச்சி என்றா இதுக்கு ஆசையாமே
ஐயோ இந்த எலும்புடலில் ஒன்றுமில்லையே,

(வசனம்)
கடவுளே மழைக்குப் பயந்து குகைக்குள்ள வந்தன். இப்ப மழையவிடப் பெரிய அபாயம் வந்திருக்கே. (யோசிக்கிறது) கஷ்டம் வாறபோது பதட்டப் படாம நிண்டு யோசிக்கவேணும் எண்டுதானே அம்மா சொன்னவ, எதுக்கும் பாப்பம், (யோசித்தபடி நிற்கிறது.)

(அபிநயித்துக்கொண்டு நின்ற சிங்கம் நடந்து சென்று குகைக்குள் நுழைகிறது தாடி ஆட்டைச் சுற்றி வருகிறது. தாடி ஆடு தலையை அசைக்க மணி டிங் டிங் என்று கேட்கிறது. அதற்குப் பயந்து வெளியிலே சிங்கம் பாய்கிறது. மேடையில் DR இற்கு வந்து பின்னர், குனிந்து வளைந்து கைகளை வீசித் தேகாப்பியாசம் செய்து தன் உடலை ஆயத்தப்படுத்தியபின் வீரபாவனையில் நின்று கேட்கிறது)

**சிங்கம் :** (சந்தத் தொனியுடனும் மேள ஒலியுடனும்)
யாரடா அவன் எனது வீட்டுக்குள்
நிற்பவன் அவன் யாரடா?
ஏனடா? நீ எனது வீட்டுக்குள்
ஏதுக்காக வந்தாயடா?
இந்தக் காட்டுக்கு அரசன் என்பவன்
நானடா இதை அறியடா
கூறடா உன்பெயர் அல்லாவிடில்
கொன்று தின்று விடுவேனடா.
(உறுமுகிறது)

**தாடி ஆடு:** (தனக்குள்) கடவுளே (நெஞ்சைத்தடவி) துணிவோடிருக்கு வேணும். பயந்தாப்போச்சு.

(பயமில்லாத மாதிரி நிமிர்ந்து தலையை அசைக்கிறது. ஆட்டின் கழுத்து மணிச்சத்தம் கேட்கிறது. அதைக்கேட்ட சிங்கம் பயப்படுகிறது)

**சிங்கம் :** (தனக்குள்) மீண்டும் அந்தப் புதுமாதிரியான சத்தம். (மணி மீண்டும் கேட்கிறது) பிறகும் பிறகும் அந்தப் பெரும் சத்தம்... (ஆட்டை மெல்ல உற்றுப் பார்க்கிறது) நீண்ட கொம்புகள், அடர்த்தியான மயிர், கழுத்தில் என்னமோ ஒன்று சத்தம் போடுது. எல்லாச் சனங்களும் என்னக் கண்டாப் பயப்பட இது நிமிர்ந்து பயமில்லாமல் நிற்குது. (சிங்கத்தின் கால்கள் மெல்ல நடுங்குகின்றன) என்ன இது என்ரகால் ஏன் நடுங்குது? சே! இந்தக் காட்டுக்குச் சண்டியன் பயந்த மாதிரிக் காட்டலாமோ? (சத்தம் போட்டு கராட்டி அடிப்பதுபோலக் கைகால்களை வீசி விளையாட்டு ஒன்று காட்டியபின்) டேய்! யாரடா நீ? என்ர குகைக்குள்ள உனக்கென்னடா வேலை?

**தாடி ஆடு:** (தனக்குள்) ஏதாவது ஒண்டு விட்டுப்பாப்பம்.

(பாடல்)
மிருக ராஜாவே வருக வருகவே...
காட்டை ஆளும் சிங்கமே வருக வருகவே.
பலம் வாய்ந்த உருவமே வருக வருகவே.
என்னுடைய பெயர்தான் தாடி வீரன்.
இதோ ஒலிக்கும் மணிதான் வெற்றிமணி.
உங்கள் வருகைக்காகவே காத்திருக்கிறேன்.
மிருக இராசாவே வருக வருகவே.

(ஆட்டின் பாடலுக்குச் சிங்கம் தன்னைப் பெரிய மனுசனாக அபிநயிக்கிறது)

**தாடி ஆடு:** சிங்க அரசே! உனக்காகத்தான் இதுவரையும் காத்திருந்தேன். நான்தான் தாடி வீரன். நூறு புலிகளையும் இருபத்தைந்து யானைகளையும் ஒரு சிங்கத்தையும் கொன்று தின்ன விரதம் கொண்டேன். புலிகளையும் யானைகளையும் தின்று விட்டேன். ஒரு சிங்கம்தான் கிடைக்கவில்லை. இங்கு ஒரு சிங்கம் இருப்பதாக யாரோ சொன்னார்கள். என் அதிஷ்டம் - உன் துர் அதிஷ்டம் - நீ கிடைத்தாய். ஹஹஹா

(தலையை அசைக்கிறது; மணி ஒலி கேட்கிறது. சிங்கம் பயத்துடனும் பரிதாபத்துடனும் பாடகரைப் பார்க்கிறது).

**ஆள் 1 :** நூறு புலிகளையும் இருபத்தி ஐந்து யானைகளையும் ஒரு சிங்கத்தையும் கொன்று தின்ன விரதம் கொண்டேன்.

**ஆள் 2 :** ஒரு சிங்கம்தான் கிடைக்கவில்லை. (கையைத்தட்டிப் பரிகசித்தபடி சிங்கத்தைப் பார்த்து)

**பாடகர் அனைவரும்**

: அகப்பட்டுக் கொண்டார்.
அகப்பட்டுக் கொண்டார்.
அகப்பட்டுக் கொண்டார்.

(சிங்கம் அங்கும் இங்கும் ஓடுகிறது)

**தாடி ஆடு:** இதோ உன்னை என் கூரிய கொம்புகளால் குத்திச் சாப்பிட்டு என் விரதத்தை முடிக்கப் போகிறேன்.

(தலையை அசைக்க மீண்டும் மணியோசை)

**சிங்கம் :** டேய்! டேய்; சாமி பொறு பொறு.
(சொல்லியபடி மெல்ல மெல்லப் பதுங்கி DR இற்கு வருகிறது. பின் நின்ற இடத்திலே வாலைத் தூக்கித் தோளிற் போட்டுக்கொள்கிறது. பாடலுக்கு ஏற்ப ஓடத்தொடங்குகிறது.)

**பாடகர் :** (பாடல்)
ஓடியதே ஓடியதே - சிங்கம்
ஓடிய தோடிய தோடியதே
வாலைக் கிளப்பிப் பாய்ந்தேதான்
வழியைப் பார்க்கா தோடியதே.
திகில் அடைந்த சிங்கம் தான்
திரும்பிப் பார்க்கா தோடியதே.
இளைக்க இளைக்க இளைக்க ஓடியதே
எங்கும் நிற்கா தோடியதே.
ஓடியதே ஓடியதே - சிங்கம்
ஓடியதோடிய தோடியதே.

**ஆள் 1 :** (இருந்த இடத்திலிருந்து எழும்பி)
ஓடிக் கொண்டிருந்த சிங்கத்தை ஒருநரி கண்டது. அங்க, நரியனார் சிங்கத்தைக் கண்டு பின்னால் கூப்பிட்டுக் கொண்டு ஓடுறார்.

(நரி CC இற்கு வருகிறது. சிங்கத்தின் பின்னால் தொடர்வதுபோல் நின்ற இடத்தில் ஓடுகிறது. இடையிடையே விசில் அடித்துக் கூப்பிடுகிறது)

**நரி :** ராசாவே! ராசாவே! நில்லுங்கோ நில்லுங்கோ. (சிங்கம் திரும்பிப் பார்த்துவிட்டு ஓடுகிறது).

**நரி :** ராசாவே! ராசாவே உங்களைத்தான் நில்லுங்கோ.

**சிங்கம் :** (ஓடியபடியே) ஏலாது, ஏலாது, நிண்டால் உயிர் போயிடும். என்னக் குளோஸ் பண்ண ஒருத்தன் வந்திருக்கிறான்.

**நரி :** நில்லுங்கோ! நில்லுங்கோ (சிங்கம் மெல்ல நிற்கிறது)

**நரி :** சரி இப்ப சொல்லுங்கோ.

**சிங்கம் :** ஒரு நாளும் நடக்காத சம்பவம் இன்றைக்கு நடந்து போச்சு. என்ர குகைக்குள்ள எனக்கு ஒரு விரோதி வந்திருக்கிறான். அவனை நினைச்சாலே பயமாக இருக்குது.

**நரி :** விரோதியா? உங்கட குகைக்குள்ளையோ?

**சிங்கம்** : ஓமோம்.

**நரி** : ராசாவே அவன்ர நிறமென்ன?

**சிங்கம்** : கறுப்பு; சரியான கறுப்பு

**நரி** : (யோசனை செய்து) கொம்பு இருக்குதோ?

**சிங்கம்** : கொம்போ? பெரிய கொம்பு, மெத்தப் பெரிய கொம்பு.

**நரி** : மயிர் இருக்குதோ?

**சிங்கம்** : ஓமோம் உடம்பெல்லாம் மயிர்

**நரி** : (ஹிஹிஹி என்று சிரித்து) ராசாவோ,! நீங்கள் வீணாப் பயந்திட்டீர்கள் எண்டுதான் நினைக்கிறன். நீங்கள் சொல்லிறதப் பார்த்தா; அதுவந்து, நான் காலையில் சந்திச்ச ஆட்டுக்கிடா போலத்தான் எனக்குத் தெரியுது.

**சிங்கம்** : ஆட்டுக்கிடாயோ? சேச்சே! அப்பிடி இருக்காது. அவன் சிங்கம் தின்னிப் பயல்போலத்தான் தெரியுது.

**நரி** : ராசாவே; வாருங்கோ, நானும் உங்களோட வாறன். இரண்டு பேரும் குகைக்குப் போய் ஒருக்கா அவனை நல்லாப் பாப்பம்.

**சிங்கம்** : பிறகுமா? குகைக்கோ? (தயங்குகிறது)

**நரி** : ராசாவே (தயக்கத்துடன்) உங்களுக்குப் பயமா இருந்தா உங்கட வாலை என்ர வாலோட சேர்த்துக் கட்டிக்கொண்டு வாங்கோ.

**சிங்கம்** : (சமாளிப்புடன்) எனக்கென்னன பயம்? எனக்கொன்றும் அதிகம் பயமில்லை. எண்டாலும் உன்ர திருப்திக்காக வேணுமெண்டால் உன்ரவாலை என்ரை வாலோட கட்டிக்கொள் என்ன?

**நரி** : (மறைவாகச் சிரித்தபிறகு) ராசாவே! ஒரு சின்ன விண்ணப்பம்.

**சிங்கம்** : என்ன அது?

**நரி** : அது ஆடாக இருந்தா, அரைவாசி இறைச்சி எனக்குத் தரவேணும். (நாக்கைச் சப்புக் கொட்டுகிறது).

**சிங்கம்** : ம்... ஆடாக இருந்ததோ ஒரே அடியில் அடிச்சு உனக்கே முழு இறைச்சியையும் தாறன். நீயே சாப்பிடு (நரி மகிழ்ச்சியில் ஊளையிடுகிறது)

**சிங்கம்** : டேய் உன்ர ஊளையை நிற்பாட்டு வந்து வாலைக் கட்டு.

(ஆள் 1 மேடைக்கு வந்து இரண்டின் வாலையும் கட்டி விடுகிறார். சிங்கம் வாலுக்கு மேலால் தன் காலைத்தூக்கிப் போட்டு நரியின் பின்னால் நிற்கிறது. நரி முன்னாலும் சிங்கம் பின்னாலுமாகக் குகையை நோக்கிச் செல்லுகிறன்றன. DR இலிருந்து DC இற்கு கூடாக DL இற்கு நடந்து வந்து, மேடையின் கீழே இறங்கி, பின்னர் DR இற்கு வந்து, நின்ற இடத்தில் நடப்பது போலப் பாவனை செய்கிறார்கள்.)

**நரி** : (குகையைக்காட்டி) அரசே! அதுதானே உங்களின்ர குகை.

**சிங்கம்** : ஓமோம்; மெல்ல, மெல்லப் போங்காணும். அவன் நரி இறைச்சியைத் தேடி வரேல்லை. சிங்க இறைச்சியைத் தேடி வந்திருக்கிறான். விளங்குதோ?

**நரி** : பொறுங்கோ இன்னும் கொஞ்சநேரத்தில் குட்டு உடைஞ்சு போயிடும். அப்ப இந்தநரி எங்க இருப்பார் எண்டு உங்கட கண்ணால பார்க்கப் போறீங்கள்.

(நரியும் சிங்கமும் வருவதை ஆடு காணுகிறது).

**தாடி ஆடு:** ஆ! என்ன இது நரியும் சிங்கமும் ஒன்றாய் வருகினம். (யோசிக்கிறது) என்ன செய்யலாம்? (யோசனைத் தெளிவும், இகழ்ச்சியும் முகத்திற் தெரிகிறது) ஆ! அதுதான் சரி... டேய் நரிப்பயலே! உன்புத்தியை மெச்சுகிறேன். என்னுடைய உண்மையான சேவகன் நீதான்.

**சிங்கம்** : (நரியைப் பார்த்து) அவனுக்குச் சேவகனோ?
(நரி கலவரத்துடன் இல்லை என்று தலையை ஆட்டுகிறது)

**தாடி ஆடு:** ஓடிப்போன சிங்கத்தாரை ஒரு மாதிரியாகச் சமாளித்துக் கூட்டிக் கொண்டு வா எண்டுதானே சொன்னன். நீயோ கட்டிக்கொண்டே வந்துவிட்டாய். இறுக்கமாகக் கட்டியிருக்கிறாயா? அந்த மொக்குச் சிங்கம் ஓடாதபடி கட்டியிருக்கிறாயா?

**சிங்கம்** : (மிகக் கலவரப்பட்டு; மிகவும் பயந்துபோய் நரிக்கு ஒரு அறைபோட்டு; அதன் மேற்பாய்ந்து ஏறி)
டேய் நரிப்பயலே இவருக்குப் பலியிட என்னைத் தந்திரமாகக் கூட்டிக்கொண்டோ வந்தனீ?

**தாடி ஆடு:** நரியனாரே சிங்கத்தை விடாதேயும். பிடித்தக் கொள்ளும் இதோ நான் வருகிறேன்.

**சிங்கம் :** (குளறியபடி) ஆ... ஐயோ! ஐயோ! (சிங்கம் ஓடுகிறது. நரி பின்னால் இழுபடுகிறது. மேடை முழுவதும் இந்த இழுபறி ஓட்டம் நடைபெறுகிறது. பாடகர்கள் கை கொட்டிச் சிரிக்கிறார்கள். இழுபறியில் நரி கீழே விழுந்து இறக்கிறது. சிங்கம் கயிற்றை அறுத்தெறிந்து விட்டு ஆடு நிற்கும் பக்கம் பார்த்துப் பயத்துடன் துள்ளி, பின் மேடையின் வலதுபக்கமாக ஓடி மறைகிறது. குகைக்குள் இருந்து புறப்பட்ட ஆடு, இறந்து கிடக்கும் நரி அருகே வந்து பார்த்து, அது இறந்ததை ஊர்ஜிதம் செய்த பிறகு, மகிழ்ச்சியோடு பாடுகிறது, ஆடுகிறது)

**தாடி ஆடு:** (பாடல்)
தப்பித்துக் கொண்டேனே - ஹாய்
தப்பித்துக் கொண்டேனே.
புத்தியைப் பாவித்ததால் - நான்
தப்பித்துக் கொண்டேனே,
அம்மா சொல்லைத் தட்டி - இங்கே
அகப்பட்டுக் கொண்டேனே
அம்மாவிடம் போனால் - கொஞ்சம்
ஆறுதலாயிருக்கும்.

(தாடி ஆடு மேடையை விட்டுச் செல்கிறது. மரங்களாக நின்றவர்களும், குகையாக நின்றவர்களும், மேடையைவிட்டுச் செல்கிறார்கள். பின்னர் பழையபடி குடிசைகளாக வந்து நிற்கிறார்கள். இந்த மாறுதல்கள் மேடையில் நடந்துகொண்டிருக்கையில் ஆள் 1, DC இற்கு வந்து பின்வருமாறு கூறுகிறார்).

**ஆள் 1 :** புத்தியால வெற்றிபெற்ற ஆடு வேகமாக வீட்டுக்கு ஓடியது. அங்க அப்பா ஆடு, அம்மா ஆடு, பாட்டி ஆடு ஆகிய எல்லா ஆடுகளும் துக்கத்தோட ஒப்பாரி வைச்சிக்கொண்டிருந்தினம்.

(மேடையின் CC இற்கு எல்லா ஆடுகளும் வந்து வளைத்திருந்து கட்டிப்பிடித்தபடி ஒப்பாரி வைக்கின்றன)

**ஆடுகள் :** (ஒப்பாரி)
பொழுது பாட்டுப் போச்சுதே
போனவனைக் காணல்லியே,
மழை காத்தடிச்சுதோ
வழியில் என்ன நேர்ந்ததுவோ?

**அம்மா ஆடு:** அம்மா என்றழைப்பானே
அந்தச் சொல் எப்ப கேட்பன்?

**பாட்டி ஆடு :** பாட்டி எண்டு கூப்பிடுவான்.
பாட்டி இனி என்ன செய்வன்?

**தாத்தா ஆடு:** (DL இற்கு வந்து தூரத்தில் பார்த்துவிட்டு) கொஞ்சம் பொறுங்கோ. அங்க எங்கட தாடித்தம்பி தனியாத் தாவித் தாவிக் குதிச்சுக் கொண்டு வாறார்.

(தாடி ஆடு மேடையின் கீழே இருந்து DL இற்கு வருகிறது. எல்லா ஆடுகளும் அதனைச் சூழ்ந்து கொள்ளுகின்றன. ஆள் 1 பின் வருவன வற்றை DRஇல் நின்றபடி கூற அதற்குத் தக ஆடுகள் அபிநயிக்கின்றன.)

**ஆள் 1 :** எல்லா ஆடுகளும் குட்டி ஆட்டைச் சூழ்ந்து கொண்டின. நடந்த விடயத்தைக் கேட்டின. குட்டிஆடு நடந்ததெல்லாம் விபரமாகச் சொல்லிற்று. எல்லா ஆடுகளும் வியப்படைந்தன. பிறகு விழுந்து விழுந்து சிரிச்சினம். குட்டி ஆடு அம்மா காலில் விழுந்து மன்னிப்புக் கேட்டுக் கொண்டது. பாட்டி ஆடு, தாடி ஆட்டிற்குத் திருஷ்டி கழித்தது. எல்லா ஆடுகளும் குட்டி ஆட்டின்ர புத்திசாலித்தனத்தப் புகழ்ந்தினம்.

(பின்வரும் பாடலைப் பாடியபடி ஆடுகள் மேடையில் CC இற்கு வருகின்றன)

**ஆடுகள் :** (பாடல்)

தாடித் தம்பி புத்திசாலி டும் டும் டும் டும்
தப்பி வந்தான் புத்தியால டும் டும் டும் டும்
நரியனாரை வென்று வந்தான் டும் டும் டும் டும்
சிங்கத்தார வெருட்டி வந்தான் டும் டும் டும் டும்

**தாடி ஆடு:** (பாடல்)

அம்மா அப்பா சொல்லைக் கேட்பன் ஓம் ஓம் ஓம் ஓம்
அதைத் தட்டினா ஆபத்துண்டு ஓம் ஓம் ஓம் ஓம்
பாட்டி பாட்டன் சொல்லைக் கேட்பன் ஓம் ஓம் ஓம் ஓம்
பரிகசித்தா ஆபத்துண்டு ஓம் ஓம் ஓம் ஓம்.

(ஆடுகள் யாவும் தாடி ஆட்டைச் சுற்றி ஆடுகின்றன. ஆட்ட இறுதியில் இதே பாடலுக்குக் கைதட்டியபடி ஆடுகள் முன்வரிசையில் நிற்கின்றன. நாடகத்தில் நடித்த ஏனையவர்கள் கைதட்டியபடி வந்து பின் வரிசையில் நிற்கின்றனர். வணக்கமுரைத்த பின்னர் கைதட்டியபடியே ஒருவர் பின் ஒருவராக வரிசையாக மேடையைவிட்டு வெளியேறுகிறார்கள்.)

**முற்றும்**

# மலைகளை அகற்றிய மூடக்கிழவன்

**- சிவசேகரம், பிரேமளா -**

## காட்சி 1

(பின்னணியில் மூன்று மலைகள், மாடுகள் மேய்த்தல், தொழுவத்தில் விட்டுக் கட்டுதல், துப்பரவாக்கல், பால் கறத்தல், தயிர் கடைதல், வெண்ணெய் எடுத்தல், மூலையில் கல்லில் அமர்ந்தபடி ஒரு கிழவர்).

**(கதை கூறுவோர் 1, 2, 3 முன்னால் வருதல்)**

க 1 : ''தெய்வத்தாலாகா தெனினும் முயற்சி தன்
மெய்வருந்தக்கூலி தரும்'' என்றார் வள்ளுவர்.

க 2 : ''ஊக்கமது கைவிடேல்'' என்றார் ஔவையார்.

க 3 : ''வைரமுடைய நெஞ்சு வேண்டும். அது வாழும் முறைமையடி பாப்பா'' என்றார் பாரதியார்.

க 1, 2, 3

: இன்றைக்கு உங்களுக்கு ஒரு கதை சொல்ல வந்தோம். இது ஒரு சீனப் பழங்கதை. மனவுறுதி மிக்க ஒரு கிழவரின் கதை.

***பாடல் (1)*** ***(மோகனம்)***

சொல்ல வந்தோம் அவையோரே - உமை வணங்கிச்
சொல்ல வந்தோம் அவையோரே
கல்வி மிக்க பெரியோரே - பிழை பொறுத்துச்
சின்னவர் நம் கதை கேளீர்
முன்னமொருகாலந் தன்னிலே - சிறியதொரு
ஊரயலில் சொல்லக் கேளீர்
மூன்று மலை கிடந்தனவே - பெரியவரே
மூன்று மலை கிடந்தனவே
மூன்று மலை கடந் தயலூர் - போய்வரவே
மூச்சிரைக்கும் பெரியோரே
மூன்று மலை அகற்றிடவே - முயன்றதொரு
மூத்தவரின் கதை கேளீர்
சொல்ல வந்தோம் அவையோரே - உங்களுக்கெங்கள்
வந்தனங்கள் அவையோரே

க 1, 2, 3

: இந்த ஊரின் பேர் புல்வெளியூர். இங்கே உள்ள மக்களது தொழில் மந்தை மேய்ந்தல். பால், தயிர், வெண்ணெய் ஆகியவற்றை அடுத்த ஊரான நல்வயலூரில் விற்று நெல்லும் காய் கனிகளும் பழங்களும் வாங்கி வருவார்கள். இரண்டு ஊர்கள் நடுவிலும் மூன்று பெரிய மலைகள். அடுத்த ஊர் போய் வருவது மிகவும் கடினம். என்றாலும் ஊராருக்கு அது பழகிவிட்டது. ஒருவரும் அதைப்பற்றி அதிகம் யோசிப்பதில்லை.

க 1 : ஒருவரை விட!

க 2 : இதோ, இந்தக் கல்லில் அமர்ந்திருக்கிறாரே, இந்தக் கிழவர்.

க 3 : இவருடைய கதையைத்தான் சொல்லப் போகிறோம்.

க 1 : அதற்கு முதல் அதோ பாருங்கள். அடுத்த ஊருக்குப் புறப்பட்டு விட்டார்கள்.

*(ஊரார் பானைகளை இடுப்பிலும் தலையிலும் சுமந்தபடி மலையேறுதல், கிழவர் கல்லில் அமர்ந்தபடி பார்க்கிறார்.)*

ஊரார் : ***பாடல் (2)*** ***(மோகனம்)***

மூன்று மலை தாண்டி நாம் நடந்து போவோம்
நல்வயலூர் போவோம் நண்பர்களைக் காண்போம்
பச்சைமலை மேலாய் பாற்குடங்கள் கொண்டு
நீலமலை ஏறி நெய்க் குடங்கள் கொண்டு
தங்கமலை தாண்டி தயிர்க்குடங்கள் கொண்டு
காய் கறிகள் நல்ல பூ பழங்கள் வாங்கி
நெல்லெடுத்துக் கொண்டு புல்வெளியூர் மீள்வோம்.

கோரஸ்: மூன்று மலை தாண்டி நாம் நடந்து போவோம்.
நல்வயலூர் போவோம் நண்பர்களைக் காண்போம்

கிழவர் : இது சரி வராது. இது சரி வராது.
*(எழுந்து மேலும் கீழும் நடந்தபடி)*

இது சரி வராது. இப்படி ஒரு நாளும் சரிவராது.
*(திரும்பிப் போய் அமர்ந்தபடி)*

இது சரி வராது. இது சரி வராது.

*(ஊரார் பானைகளைக் கையிலும் மூட்டைகளை முதுகிலும் சுமந்தபடி களைத்து இளைத்துத் திரும்புதல்)*

ஊரார் : ***பாடல் (3)*** ***(பௌளி)***

தங்கமலை தாண்டி தாகமுடன் வந்தோம்
நீலமலை ஏறிக் காலுளைய வந்தோம்
பச்சைமலை ஏறி பாடுபட்டு வந்தோம்
மூன்று மலை பார்த்து மூச்சிரைய வந்தோம்.

கோரஸ்: மூன்று மலை பார்த்து மூச்சிரைய வந்தோம்
மூன்று மலை பார்த்து மூச்சிரைய வந்தோம்.

*(ஊரார் மறையச் சிறுவர் சிறுமியர் வருகை)*

கிழவர் : இது சரி வராது . இது சரி வராது.
இப்படி ஒரு நாளுஞ் சரி வராது.

சிறுவன்/
சிறுமி 1 : தாத்தா, என்ன சரி வராது?

கிழவர் : (தன் பாட்டில்) இது சரி வராது.

சி. 2 : எது சரி வராது தாத்தா?

கிழவர் : (தன் பாட்டில்) இது சரி வராது.

சி. 3 : தாத்தா!

கிழவர் : (தன் பாட்டில்) இப்படி ஒரு நாளுஞ் சரி வராது.

சி. 1 2 3 : எப்படி சரி வராது தாத்தா?

கிழவர் : ஆ! இது சரி வராது என்று சொன்னேன்.

சி. 1 2 3: எங்களுக்கு விளங்கவில்லைத் தாத்தா.

கிழவர் : பல காலமாக யோசித்து வருகிறேன்.

சி. 1 2 3 : என்ன யோசிக்கிறீர்கள் தாத்தா?

கிழவர் : இதற்கு ஒரு முடிவு கட்ட வேண்டும்.

சி. 1 2 3 : எதற்குத் தாத்தா?

கிழவர் : இந்த மலைகளைப் பாருங்கள். (காட்டுகிறார்)

சி. 1 2 3 : பெரிய மலைகள் தாத்தா.

கிழவர் : இந்த மலைகளைத் தாண்டி அடுத்த ஊருக்குப் போவது மிகவும் கஷ்டம்.

சி. 1 : நான் அம்மா அப்பாவோடு ஒரு தரம் போனேன். வரும் போது அப்பா என்னைத் தூக்கிக் கொண்டு வந்தார்.

சி. 2 : என்னை அப்பா தூக்கிக் கொண்டு போனார்.

கிழவர் : இந்த மலைகளாற் பெரிய கஷ்டம். அதற்கு ஏதாவது செய்ய வேண்டும்.

சி. 1 2 3 : என்ன செய்ய வேண்டும் தாத்தா?

கிழவர் : அதைப் பற்றித் தான் பலகாலம் யோசித்து ஒரு முடிவுக்கு வந்தேன்.

சி. 1 2 3: என்ன முடிவு தாத்தா?

கிழவர் : ஆறு வழி மறித்தால் என்ன செய்வீர்கள்?

சி. 1 2 3 : பாலம் அமைத்திடுவோம்.

கிழவர் : சேறு வழி மறித்தால்?

சி. 1 2 3 : தாவிக் கடந்திடுவோம்.

கிழவர் : பாடுங்கள்.

எல்லோரும்: ***பாடல் (4)*** ***(பேகட)***

ஆறு வழி மறித்தால் - நாம்
பாலமமைத்திடுவோம்.
சேறு வழி மறித்தால் - நாம்
தாவிக் கடந்திடுவோம்
தீயர் வழி மறித்தால் - நாம்
சேர்ந்து விரட்டிடுவோம்
தீயும் வழி மறித்தால் - நாம்
நீரை இறைத்திடுவோம்
காடு வழி மறித்தால் - நாம்
வெட்டி விழுத்திடுவோம்
சூறை வழி மறித்தால் - நாம்
மீறி நடந்திடுவோம்
யாரும் எதிர்வரினும் - நாம்
சோர மறந்திடுவோம்
மின்னல் இடி விழினும் - நாம்
எண்ணிய செய்திடுவோம்

சி. 1 : மலைகளை என்ன செய்யலாம். தாத்தா?

சி. 2 : ஏறித்தானே போக முடியும் தாத்தா?

கிழவர் : வேறு வழி உண்டு.

சி. 3 : அதென்ன தாத்தா?

கிழவர் : மலைகளை அகற்றிடுவோம்.

எல்லோரும்: ***பாடல் (4) தொடர்*** ***(பேகட)***

பாறை வழிமறித்தால் - நாம்
தூர நகர்த்திடுவோம்
பாறை வழிமறித்தால் - நாம்
தூர நகர்த்திடுவோம்

## காட்சி 2

(கிழவர் தனியே அமர்ந்து உற்சாகமாகத் தனக்குட் பேசிக் கொண்டிருக்கிறார். ஊரார் சிலர் அவ்வழியே வருகிறார்கள்.)

கிழவர் : எல்லோரும் சேர்ந்து ஒரு நாளைக்கு ஒரு மணி நேரம் உடைத்தால் பத்து வருடம் போதும். இரு மணி நேரம் உடைத்தால் ஐந்து வருடம் போதும். மலைகளுக்கு நடுவாக ஒரு பாதை அமைந்துவிடும்.

ஊரார் 1 : என்ன, கிழவர் நல்ல உற்சாகமாக இருக்கிறார்?

ஊரார் 2 : தன் பாட்டிற் கதைக்கிறார்.

ஊரார் 3 : போய்க் கேட்போம். (கிழவரிடம் போகிறார்கள்)

ஊரார் 1 : அப்பு, ஏன் நல்ல சந்தோஷமாக இருக்கிறீர்கள்?

ஊரார் 2 : உங்கள் பாட்டில் கதைக்கிறீர்கள்.

ஊரார் 3 : பிள்ளைகளுக்குப் பாட்டுக் கட்டுகிறீர்களா?

கிழவர் : ஓ... வாருங்கள், வாருங்கள். உங்களுக்காகத்தான் காத்திருக்கிறேன்.

ஊ 1 2 3 : ஏன்?

கிழவர் : இந்த மலைகளைப் பற்றிக் கதைக்க

ஊரார் 1 : மலைகளைப் பற்றிக் கதைக்க என்ன இருக்கிறது?

கிழவர் : மலைகளை உடைத்துப் பாதை போடலாம் என்று நினைத்தேன்.

ஊரார் 2 : நல்ல யோசனை தான், என்றாலும் யார் செய்வது?

கிழவர் : நாங்கள் தான் செய்ய வேண்டும்.

ஊரார் 3 : எங்களுக்கு எங்கே நேரம்?

கிழவர் : மனம் இருந்தால் நேரம் இருக்கும், வலிமை இருக்கும். எல்லாம் இருக்கும்.

***பாடல் (5)*** ***(பேகட)***

மனதில் வலுவிருந்தால் - இந்த
மலைகளை நீக்கிடலாம்.
துணிபவர் தோற்றதில்லை - என்றும்
துயில்பவர் வென்றதில்லை.

ஊ 1 2 3 : மலையுடன் மல்லாட - அப்பு
மனிதரினாலாமோ?
மலையுடன் மோதுகையில் - அப்பு
மாடுகள் மேய்ப்பது யார்?

கிழவர் : மலைகளை விலக்கிவிடின் - மக்கள்
பயணமும் எளிதாகும்
சுமைகளும் குறைவாகும் - உங்கள்
சீவியஞ் சுகமாகும்.

ஊ 1 2 3 : சுமைகளும் குறைந்திடுமுன் - எங்கள்
சீவியம் முடிந்துவிடும்
எமக்கிது விதியெனவே - தெய்வம்
தருவதை ஏற்றிடுவோம்.

கிழவர் : தலைவிதி என உலகில் - எவருந்
தருமொரு பொருளில்லை.
நிலை தடுமாறோமேல் - இந்த
உலகையும் வென்றிடலாம்.

ஊரார் 1 : கல்லை யார் உடைப்பது?

ஊரார் 2 : மண்ணை யார் சுமப்பது?

ஊரார் 3 : மற்ற வேலைகளை யார் பார்ப்பது?

ஊரார் : ***பாடல் (6)*** ***(தர்பார்)***

ஊரார் 1 : கல்லை உடைப்போமா - வேறே
காரியம் பார்ப்போமா
நெல்லைச் சுமப்போமா - அள்ளி
மண்ணைக் குவிப்போமா

ஊரார் 2 : கொண்டு நடப்போமா - கொஞ்சம்
குந்தி இருப்போமா
குன்றைப் பிளப்போமா - ஒன்றாய்க்
கூடிக் களிப்போமா

ஊரார் 3 : வெட்டிச்சரித்திடவே - மலையும்
குட்டைச் செடியாமோ
தட்டி நொறுக்கிடவே - பாறை
புற்றுப் புதராமோ

ஊ 1 2 3 : மூடக் கதைபேசும் - எங்கள்
மூத்தவரே கேளும்
பாடுபடுவதனால் - இந்தப்
பாறை நகர்ந்திடுமோ

நாளை வரும் நலனை - நம்பி
நாங்கள் முறிவோமா
வாழும் பொழுதினையே - மலையில்
மோதி இழப்போமா
நின்று கதைபேசிக் - காலம்
வீணிற் கழியாமே
சென்றிடுவோம் வாரீர் - நீரும்
செய்ய ஏதுமிருந்தால்

கிழவர் : இப்படிச் சொல்வது பிழை. நமக்கு உற்சாகம் வேண்டும்.

ஊ 1 2 3 : அப்பு, நாங்கள் களைத்துப் போய் விட்டோம்.
வீட்டுக்குப் போக வேண்டும்.

**ஊரார் :** ***பாடல் (7)*** ***(பந்துவராளி)***
சுமந்து களைத்தோமே - கொஞ்சம்
சரிந்து படுப்போமே
அலைந்து திரிந்தோமே - வீட்டில்
அயர்ந்து கிடப்போமே

நடந்து இளைத்தோமே - நன்றாய்
நித்திரை கொள்வோமே
முறிந்து சலித்தோமே - கண்ணை
மூடித் துயில்வோமே

*(வேறு சிலர் சிறுவர்களுடன் வருகை)*

கிழவர் : உங்களில் யார் மலையை உடைக்க வருவீர்கள்?

(ஒவ்வொருவரும் ஆளை ஆள் பார்க்கிறார்கள். பிறகு ஒவ்வொருவராகத் தலையை மறுப்பாக ஆட்டுகிறார்கள். சில சிறுவர்கள் முன்னே போகப் பெரியவர்கள் பிடித்து நிறுத்துகிறார்கள்)

கிழவர் : யாருமே வரமாட்டீர்களா?

*(மௌனம்)*

கிழவர் : சரி நானே போய்ச் செய்கிறேன். (போகிறார்)

ஊரார் 4 : கிழவருக்கு புத்தி கெட்டு விட்டது.

ஊரார் 5 : கிழவர் நல்லவர். ஆனால் புத்தி குறைவு.

ஊரார் 6 : மூடக் கிழவருடன் வாக்குவாதம் கூடாது. தானாக அலுத்துப் போய்த் திரும்பி விடுவார்.

மற்றோர் : ஓம், அவரை அவர் பாட்டில் விடுவோம்.

## காட்சி 3

*(கிழவர் தனியே நின்று கொத்துதல், கூடையில் நிரப்பல், கொண்டு போதல், கொட்டுதல், கற்களைத் தூக்கி ஒதுக்கல், உளியாற் தட்டுதல்).*

(சிறுவர் சிறுமியர் வருகை)

எல்லோரும்: தாத்தா நாங்களும் வரலாமா?

கிழவர் : நீங்களா?

சி 1 : ஓம்.

சி 2 : நாங்கள் தான்.

கிழவர் : வீட்டில் சொல்லி விட்டு வந்தீர்களா?

*(ஆளையாள் பார்த்து முழிக்கிறார்கள்)*

கிழவர் : (அன்பாக) நல்ல பிள்ளைகள். வீட்டுக்குத் தெரியாமல் வரக்கூடாது. வளர்ந்து ஆளான பிறகு வாருங்கள். எல்லோரும் சேர்ந்து உடைப்போம். அதுவரை நான் தனியே செய்வேன். இப்போது ஓடிப்போங்கள்.

*(சிறுவர் சிறுமியர் தயங்கித் தயங்கிப் போதல்)*
*(கிழவர் வேலையைத் தொடர்கிறார். தூரத்தில் தேவதைகள் மூவர் வருகை)*

கதை கூறுவோர்:

இந்த மூவரும் அழகான தேவதைகள் மாதிரி இருக்கிறார்கள் இல்லையா? இவர்கள் தேவதைகளே தான். நடுவில் நிற்பவர் மலைகளின் தேவதை. அவருக்கு வலது புறம் நதிகளின் தேவதை. இடது புறம் வனங்களின் தேவதை. கிழவர் வேலை செய்கிறதைப் பல காலமாகப் பார்த்துள்ளார்கள். ஆனாலும் அவர் என்ன செய்கிறார் என்று தெரியாது. நீங்கள் யாரும் வாய் திறக்க வேண்டாம். அவர்களே கண்டுபிடிக்கட்டும்.

*(மலைத் தேவதையும் மற்றத் தேவதைகளும் ஆடிப்பாடி வருகிறார்கள்)*

***பாடல் (8)*** ***(வஸந்தா)***

வனங்களின் தேவி நான்
வனங்களின் தேவி நான்
மனமகிழ் குயிலினம் அமுதென இசைதர
மணமிகு மலர் விழ மயிலினம் நடைபயில
வனங்களின் தேவி நான்
வனங்களின் தேவி நான் (வனங்களின்)

நதிகளின் தேவி நான்
நதிகளின் தேவி நான்
பெருவயல் விளைந்திட படகுகள் மிதந்திட
மலையுடன் வனங் கடல் மகிழ்வுடன் அசைந்திடும்
நதிகளின் தேவி நான்
நதிகளின் தேவி நான் (நதிகளின்)

மலைகளின் தேவி நான்
மலைகளின் தேவி நான்
அலை தவழ் நதிகளும் அழகிய வனங்களும்
வயல்களும் வெளிகளும் எழிலுடன் விளங்கிட
மழை பெய்யும் முகில் மலை முடிதனில் அமர்ந்திட
குயில்களின் இசை எழ மலர் இதழ் விரிவுற
ஒயில் மிக நடமிடும்
மலைகளின் தேவி நான் (மலைகளின்)

உலகினர் மகிழ்ந்திட வளமுடன் நிறைவுற
மலையென நதியென வனமென வளமிக
நிறைவுடன் பொலிவுற இயல்புடன் எழில்மிக
நதிகளின் வனங்களின்
மலைகளின் தேவி நான்

ம. தே : அதோ கிழவரைப் பார்த்தீர்களா?

ந. தே : வீடு கட்ட மண் எடுக்கிறாரா?

வ. தே : எங்கேயும் கொண்டு போவதாகத் தெரியவில்லை.

ந. தே : என்ன செய்யப் பார்க்கிறார்?

வ.தே : விளையாடுகிறாரா?

ம.தே : போய்க் கேட்டுப் பார்ப்போம்.

*(கிழவர் ஒருவரையுமே கவனிக்காமல் வேலையில் இருக்கிறார்).*

ந. தே : பெரியவரே என்ன செய்கிறீர்கள்?

வ.தே : பெரியவரே என்ன செய்கிறீர்கள்?
மூவரும் : (நெருங்கி வந்து உரக்க) பெரியவரே!

கிழவர் : (திடுக்கிட்டு) யாரது?
(உற்றுப் பார்த்து) நீங்கள் யார்? நீங்கள் இந்த ஊர்க்காரராக இருக்க முடியாது. எங்கிருந்து வருகிறீர்கள்?

ம.தே : நாங்கள் வேறிடத்திலிருந்து வருகிறோம். நீங்கள் கடுமையாக வேலை செய்கிறீர்கள். என்ன வேலை என்று அறிய வந்தோம்.

கிழவர் : இந்த மலைகளை உடைக்கிறேன்.

ம.தே : ஓ... மலைகள் மீது உங்களுக்கு என்ன கோபம்?

கிழவர் : ஒரு கோபமுமில்லை. அடுத்த ஊருக்குப் போகிற எங்கள் வழியை மறிக்கின்றன. அவற்றுக்கு நடுவே பாதை போடப் போகிறேன்.

ம.தே : உங்களுக்கு உதவியாக ஒருவரையுங் காணோமே!

கிழவர் : இப்போதைக்கு இல்லை. அதற்காக யாரும் வரும் வரை நான் சும்மா இருக்க முடியுமா?

ம.தே : உங்கள் சீவிய காலத்திற்குள் வேலை முடிந்து விடுமா?

கிழவர் : முடியாவிட்டால் என்ன? எனக்குப் பிறகு என் பிள்ளைகள் எவராவது செய்வார்கள். அவர்களுக்குப் பின்பு அவர்களது பிள்ளைகள் செய்வார்கள். எப்படியாவது ஒரு நாள் இந்த வேலை முடிந்து விடும்.

ம.தே : உங்களுக்கு அதனால் என்ன பயன்?

கிழவர் : முடிவில் எவருக்காவது பயன் கிடைத்தால் போதாதா?

*(கதைத்தபடி மண்வெட்டியைத் தூக்கிப் போடுகிறார்).*

ம.தே : அதை ஒரு பக்கம் வையுங்கள்.

கிழவர் : நான் அதை வைத்தால் மலையை யார் வெட்டுவது?

ம.தே : நான் செய்கிறேன்.

கிழவர் : உங்களுடைய அழகான ஆடைகள் பழுதாகி விடும்.

ம.தே : (சிரித்தபடி) நான் மண்ணைக் கொத்த மாட்டேன்.

கிழவர் : அப்படியானால்...?

ம.தே : நான் தான் மலைகளின் தேவதை. உங்களது அயராத உழைப்பையும் நல்ல மனதையும் நான் மிகவும் மதிக்கிறேன். உங்களுக்கு வேண்டியதைக் கேளுங்கள்.

கிழவர் : இந்த மலைகள் எங்கள் வழியை மறிக்காமல் ஏதாவது செய்ய முடியுமா?

ம.தே : இனிமேல் இந்த மலைகள் இங்கே இருக்கமாட்டா.

*(கையிலுள்ள கோலால் மலைகளைத் தொடுகிறார். மலைகள் மறைகின்றன)*

கிழவர் : மலைகளின் தேவதையே மிக்க நன்றி. மிக்க நன்றி.

*(தேவதைகள் மறைகின்றனர். கிழவர் கல்லின் மேல் உட்காருகிறார்)*

ஊரார் : ***பாடல் (9)*** ***(மோகனம்)***
மூன்று மலை தாண்டி நாம் நடந்து போவோம்
நல்வயலூர் போவோம். நண்பர்களைத் காண்போம்.

ஊரார் 1 : பச்சை மலை எங்கே?

ஊரார் 2 : நீல மலை எங்கே? (கிட்ட நோக்கி)
நீல மலை எங்கே?

ஊரார் 3 : (தூர நோக்கி) தங்க மலை எங்கே?

அனைவரும்: ***பாடல் (10)*** ***(மோகனம்)***
பச்சை மலை எங்கே? நீல மலை எங்கே?
தங்க மலை எங்கே? மலைகளெல்லாம் எங்கே?
மலைகளெல்லாம் எங்கே? மலைகளெல்லாம் எங்கே?
யாரகற்றி வைத்தார்? யாரெடுத்துச் சென்றார்?

ஊ 1 2 3 : மலைகள் எங்கே போயின?

கிழவர் : (வானத்தைக் காட்டுகிறார்)

ஊரார் : தாத்தா உங்கள் முயற்சிக்குக் கிடைத்த பரிசு இது. நாங்கள் இனி ஒரு போதும் கடுமையான வேலைக்கு அஞ்ச மாட்டோம். இந்த ஊர் உங்களை ஒரு காலமும் மறவாது.

ஊரார் 1 : மலைகளை அகற்றிய மூடக்கிழவன்

எல்லோரும்: வாழ்க.

எல்லோரும்: ***பாடல் (11)*** ***(தர்பார்)***
மனிதர் மனம் வைத்தால்
மலைகளை அகற்றிடலாம்
மனிதர் இணைந்தாலே
மண்ணையும் மாற்றிடலாம்
மனிதர் நினைத்தாலே
மண்ணையும் மாற்றிடலாம்.

**முற்றும்**

***நன்றி: பாட்டும் கூத்தும்***

**தேர்ச்சி 1.0 : அனுபவங்களைப் போலச் செய்தல், கருத்துக்களை வெளிப்படுத்தல் ஆகிய திறன்களை வெளிக் காட்டுவார்.**

**தேர்ச்சி மட்டம் 1.3** : வெகுசன ஊடகங்களில் ஒலி - ஒளிபரப்பப்படும் நாடகப் படைப்புக்கள் பற்றிக் கருத்து வெளியிடுவர்.

**செயற்பாடு 1.3** : ''வெகுசன ஊடகங்களினூடாகச் சிறுவரின் உலகை நோக்குவோம்''.

**நேரம்** : 02 பாடவேளைகள்

**தர உள்ளீடுகள்** :

- சிறுவருக்குப் பொருத்தமான காட்டூன் திரைப்படங்கள் - காண் ஒளிப்பேழை (DVD/VCD) பிரதிகள்
  உதாரணம்:
  - Tom and Jerry (ட்டொம் என் ஜெர்ரி)
  - Cindarella (சின்டரெல்லா)
  - Bambi (பெம்பி)
  - Alice in wonderland(அலிஸ் இன் வொண்டலான்ட்)
  - Swami and friends (சுவாமியும் நண்பர்களும் - ஆர்.கே. நாராயண்)
  - Malgudi days (மல்குடி டேய்ஸ் - ஆர்.கே. நாராயண்)
  - சிறுவர் நாடகம் (பஞ்சவர்ண நரியார்)
- தொலைக்காட்சி நாடகங்கள் (சிறுவர்)
- ஆசிரியரிடம் இருக்கும் பல்வேறு சிறுவர் சார்ந்த DVD/CD



*Cindarella*

**கற்றல் - கற்பித்தல் முறைகள்**

**படி 1.3.1** :

- தெரிவுசெய்து கொண்ட காண்ஒளிப்பேழை மூலம் படக் காட்சியைக் காட்டுவதற்காக உரிய இடத்துக்கு மாணவரை அழைத்துச் செல்லுங்கள்.

- வீடியோப் படக்காட்சியைப் பார்த்த பின்னர் பின்வரும் விடயங்களை வெளிக்கொணரும் வகையில் கலந்துரையாடுங்கள்.
  - வானொலி செவிப்புல ஊடகமாகும், தொலைக்காட்சி கட்புல - செவிப்புல ஊடகமாகும்.
  - இந்த ஊடகங்களில் ஒலி/ஒலி - ஒளிபரப்பாகும் பெரும்பாலான நிகழ்ச்சிகளை வளர்ந்தோருக்காகவே முன்வைக்கப்படும் நிலை காணப்படுகின்றது.
  - வானொலி ஊடகத்தில் சிறுவர் நாடகங்களும், தொலைக்காட்சி ஊடகத்தில் சிறுவருக்கான காட்டூன் திரைப்படங்களும், சிறுவர் திரைப்படங்களும், சிறுவர் தொலைக்காட்சி நாடகங்களும் ஒலி - ஒளிபரப்பப்படுவதுண்டு.



*Tom and Jerry*



*Alice in wonderland*

- சிறுவருக்கான நாடகங்கள் தொலைக்காட்சி ஊடகத்தின் மூலம் காட்டப்படுவதுண்டு.
- செயற்பாடு 1.1 இல் கற்ற ''சிறுவர் நாடகத்தை இனங்காண்போம்'' எனும் பாடத்தில் தரப்பட்ட எண்ணக் கருக்கள் இப்பாடத்துக்கும் பொருத்தமானவையெனினும் ஊடகத்தின் தன்மையைப் பொறுத்து வேறுபாடுகள் காணப்பட இடமுண்டு.
- தொலைக்காட்சி நாடகத்தில் பார்ப்போரின் நேரடியான எதிர்வினை கிடைப்பதில்லை.
- சிறுவர் நாடக எழுத்துருவானது தொலைக்காட்சி நாடக எழுத்துருவிலும் வேறுபட்டதாகும்.
- தொலைக்காட்சி நாடகம் கமராவைப் பயன்படுத்தித் தயாரிக்கப்படும்.
- தொலைக்காட்சி நாடகங்கள், ஓரங்க நாடகங்களாகவும், நெடுந்தொடராகவும் (பகுதி பகுதியாகவும்) ஒலி - ஒளிபரப்பப்படுவதுண்டு.

**(20 நிமிடங்கள்)**

**படி 1.3.2** :
- ஒப்படைத் தலைப்பை வகுப்பில் காட்சிப்படுத்துங்கள்.
- வீடியோ படக்காட்சியைக் காட்சிப்படுத்துங்கள்.
- குழுவுக்கு ஒன்றாகத் தலைப்பைத் தெரிவுசெய்து கொள்ள இடமளியுங்கள்.
- செயற்பாட்டில் ஈடுபடுத்துங்கள்.

**(40 நிமிடங்கள்)**

**படி 1.3.3** :
- குழுநிலையில் திரட்டியெழுதியவற்றை வகுப்பில் முன்வைக்கச் சந்தர்ப்பமளியுங்கள்.
- பின்வரும் விடயங்களை வெளிக்கொணரும் வகையில் கலந்துரையாடுங்கள்.



*Bambi*

- நாடகத்தில் காணப்படும் நடிகனின் நேரடிப் பிரசன்னம் (வீடியோ) ஊடகப் படைப்புக்களில் காணப்படுவதில்லை.
- வீடியோ ஊடகத்தில் கமரா தொழிநுட்பம் ஏனைய சகல அம்சங்களையும் விஞ்சி முக்கியத்துவம் பெறும்.
- தொலைக்காட்சி நாடகப் படப்பிடிப்பின்போது காட்சிகளை ஒழுங்குமுறைப்படி படப்பிடிப்புச் செய்ய வேண்டியது அவசியமன்று.
- எனினும் படப்பிடிப்பின் பின்னர் காட்சிகள் ஒழுங்கு முறைக்கு அமைய தொகுப்பு/ செவ்விதாக்கம் செய்யப் பட்ட (Editing) பின்னரே தொலைக்காட்சி நாடகம் காட்சிப்படுத்தப்படும்.



*Tom and Jerry*

- தொலைக்காட்சி நாடகத்தில் பாத்திரமொன்றின் ஆழமான தன்மைகளையும் சிறப்பான நிலையையும் காட்டுவதற் காக அண்மைக் காட்சிகள் (Close - up) பயன்படுத்தப் படும்.
- தெலைக்காட்சி நாடகத்தில் காட்சிகளை ஒளிப்பதிவு செய்யும் வேளையில் சொல்லாடல்களையும் ஒலிப்பதிவு செய்யலாம்.
- எனினும் சில வேளைகளில் கட்சிகளை ஒளிப்பதிவு செய்த பின்னர் கலைக்கூடத்தில் சொல்லாடல்கள் ஒலிப்பதிவு செய்யப்படும்.
- காட்ரூன் படம் என்பது வரையப்பட்ட படங்களைக் கமரா மூலம் படப்பிடிப்புச் செய்யும் ஓர் ஊடகமாகும்.
- விருத்தியடைந்த நிலைக் காட்டூன் படங்கள், கணினி உதவியுடன் உயிரூட்ட (Animation) முறையில் உருவாக்கப்படுகின்றன.
- காட்டூன் படங்களில் படப்பிடிப்பின் பின்னர் கலைக் கூடங்களினுள்ளேயே சொல்லாடல் சேர்க்கப்படும்.
- தொலைக்காட்சித் திரையும் சினிமா ஊடகத்திரையும் அளவைப் பொறுத்தமட்டில் பாரிய வேறுபாட்டைக் கொண்டவையாகும்.

**(20 நிமிடங்கள்)**

**கணிப்பீடும் மதிப்பீடும்:**

- கட்புல - செவிப்புல மற்றும் செவிப்புல ஊடகங்களில் வரும் நிகழ்ச்சிகளுள் சிறுவருக்குப் பொருத்தமான படைப்புக்களை வேறுபடுத்தி இனங்காண்பார்.
- நாடகமொன்றுக்கும் தொலைக்காட்சி நாடகமொன்றுக்கும் இடையிலான அடிப்படை யான வேறுபாடுகளை இனங்காண்பார்.
- கட்புல - செவிப்புல ஊடகப் பயன்பாட்டின் தன்மையை இனங்காண்பார்.
- நாடகம் கொண்டுள்ள உயிரோட்டமான தன்மையின் பெறுமானத்தை மதிப்பார்.
- சிறுவருக்கான நாடகமொன்றினதும் சிறுவருக்கான தொலைக்காட்சி நாடக மொன்றினதும் அடிப்படையான இயல்புகளை வெவ்வேறாக இனங்காண்பார்.

**இணைப்பு 1.3.1**

## தேடல் அறிவுறுத்தற் பத்திரம்

### ஒப்படைத் தலைப்புக்கள்

- நீங்கள் பார்த்த ஆக்கத்தின் கதையோட்டத்தை ஒழுங்குமுறையில் எழுதுங்கள்.
- நீங்கள் பார்த்த ஆக்கத்தில் உங்களுக்கு மிகப் பிடித்த பாத்திரம் உருவாக்கப்பட்டுள்ள விதத்தை விவரியுங்கள்.
- நீங்கள் பார்த்த ஆக்கத்தினைப் பற்றி இரசனைக் குறிப்பு எழுதுங்கள்.
- நீங்கள் பார்த்த ஆக்கத்தின் நாடகப் பொருத்தமான சூழமைவுகளை வெளிப்படுத்திக் காட்டுவதற்காக இசை பயன்படுத்தப்பட்டுள்ள விதத்தை விவரியுங்கள்.

**தேர்ச்சி 1.0 : அனுபவங்களைப் போலச் செய்தல், கருத்துக்களை வெளிப்படுத்தல் ஆகிய திறன்களை வெளிக் காட்டுவார்.**

**தேர்ச்சி மட்டம் 1.4** : சிறுவர் நாடகங்களில் பாத்திரங்கள் வளர்த்தெடுக்கப்படும் முறைமையை அறிந்துகொள்வர்.

**செயற்பாடு 1.4** : ''சிறுவர் நாடகப் பாத்திரங்களை இனங்காண்போம்''

**நேரம்** : 02 பாடவேளைகள்

**தர உள்ளீடுகள்** :
- முன்னைய 1.2 செயற்பாட்டில் பயன்படுத்திய நாடக எழுத்துருக்கள், நாடக வீடியோக்கள்

**கற்றல் - கற்பித்தல் முறைகள்**

**படி 1.4.1** :
- சிறுவர் நாடக எழுத்துருக்களின் அன்றேல் தாம் பார்த்த சிறுவர் நாடகங்களின் பாத்திரங்கள் தொடர்பாக மாணவரிடம் வினவுங்கள்.
- பின்வரும் விடயங்களை வெளிக்கொணரும் வகையில் கலந்துரையாடுங்கள்.

> - ஒவ்வொரு சிறுவர் நாடகத்திலும் ஒரு பிரதான பாத்திரமும்/ பாத்திரங்களும் சில துணைப்பாத்திரங்களும் அடங்கியிருக்கும்.
> - நாடகத்தின் மையப் பொருளை வெளிப்படுத்தும் பாத்திரங்களும் அதற்கு முரணான பாத்திரங்களும் காணப்படும்.
> - சில வேளைகளில் கற்பனைப் பாத்திரங்களும் பிராணிப் பாத்திரங்களும் சிறுவர் நாடகங்களில் காணப்படும்.
> - நாடகத்தில் அடங்கியிருக்கும் பாத்திரம் எவ்வகையைச் சேர்ந்ததாயினும் சிறுவர் நம்பிக்கையைப் பேணத்தக்க வகையில் பயன்படுத்தப்படும் நிகழ்வுத் தொடரிலும் அது வளர்த்தெடுக்கப்படும்.
> - எந்தவொரு பாத்திரமாயினும் அது சிறுவரின் புறக் கணிப்புக்கு உள்ளாகாத பாத்திரமாக அமைதல் வேண்டும்.

**(20 நிமிடங்கள்)**

**படி 1.4.2** :
- மாணவரை நான்கு குழுக்களாகப் பிரியுங்கள்.
- குழுவுக்கு ஒன்றாக நாடக எழுத்துருப் பிரதிகளைப் பகிர்ந்தளியுங்கள்.

- குழுவுக்கு ஒன்றாக நாடக எழுத்துருக்களிலிருந்து பாத்திரங் களைத் தெரிவு செய்து கொள்ளுமாறு அறிவுறுத்துங்கள்.

- செயற்பாட்டில் ஈடுபடத் தேடல் அறிவுறுத்தற் பத்திரத்தில் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு எழுத்து மூலமோ வாய்மொழி மூலமோ விடையளிக்க ஆயத்தமாகுமாறு அறிவுறுத்தல் வழங்குங்கள்.

**(40 நிமிடங்கள்)**

**படி 1.4.3** :
- குழு நிலையில் தேடியறிந்தவற்றை வகுப்பில் முன்வைக்கச் சந்தர்ப்பமளியுங்கள்.

- ஏனைய குழுக்களின் ஆக்கபூர்வமான கருத்துக்களைப் பெறுங்கள்.

- பின்வரும் விடயங்களை வலியுறுத்திக் கலந்துரையாடுங்கள்.

> - பயன்படுத்தப்படும் எந்தவொரு சிறுவர் நாடக எழுத்துருவிலும் பொதுவாகப் பிரதான பாத்திரமும் துணைப் பாத்திரங்களும் அடங்கியிருக்கும்.
>
> அன்றேல்
>
> - தவறு செய்யும் ஒரு பாத்திரமாயினும் கூட இறுதியில் தனது தவறைத் திருத்தி ஒரு நல்ல பாத்திரமாக மாறும்.
> - கற்பனையான பாத்திரங்கள், பிராணிப் பாத்திரங்களாயினும் கூடச் சிறுவரின் மனதை ஈர்க்கத்தக்கவையாக இருத்தல் வேண்டும்.
> - பொல்லாத அன்றேல் பயங்கரமான ஒரு பாத்திரமாயினும் அதனை அழகான வகையில் முன்வைப்பது அவசியமாகும்.
> - சிறுவர் நாடகத்தில் பாத்திரங்களை அமைப்பதில் எல்லைகள் கிடையா.

**(20 நிமிடங்கள்)**

**கணிப்பீடும் மதிப்பீடும்:**

- வெவ்வேறு சிறுவர் நாடகப் பாத்திரங்களை இனங்காண்பார்.
- பொதுவான நாடக நடிகருக்கும் சிறுவர் நாடக நடிகருக்கும் இடையிலான வேறுபாட்டை இனங்காண்பார்.
- சிறுவர் நாடகமொன்றின் வெவ்வேறு பாத்திரங்களைப் பெயரிடுவார்.
- சிறு பராயத்தின் இரம்மியமான தன்மையை விளங்கிக் கொள்வார்.
- சிறுவரது உள்ளத்தை இனங்காண்பார்.

**இணைப்பு 1.4.1**

## தேடல் அறிவுறுத்தற் பத்திரம்

- உங்களுக்குத் தரப்பட்டுள்ள நாடக எழுத்துருவைக் கருத்தூன்றி வாசித்து. அதில் அடங்கியுள்ள பாத்திரங்களை இனங்கண்டு வினாக்களுக்கு விடையளியுங்கள்.

- உங்களது குழு அங்கத்தவர்களது விருப்பின்படி எழுத்து மூலமோ வாய்மொழியாகவோ விடையை முன்வையுங்கள்.
    1. உங்களது நாடக எழுத்துருவில் உள்ள மையப்பாத்திரம்/பாத்திரங்களை இனங் கண்டு அறிமுகஞ் செய்யுங்கள்.
    2. உங்களது நாடக எழுத்துருவில் உள்ள துணைப் பாத்திரங்கள் எவை?
    3. உங்களது நாடக எழுத்துருவில் உள்ள முரணான பாத்திரத்தை அன்றேல் கூட்டத்தினரை இனங்கண்டு அறிமுகஞ் செய்யுங்கள்.
    4. உங்களது நாடக எழுத்துருவில் உள்ள நீங்கள் மிக விரும்பும் பாத்திரத்தைக் குறிப்பிடுங்கள்.
    5. நீங்கள் அப்பாத்திரத்தை விரும்புவதற்கான காரணங்களைக் குறிப்பிடுங்கள்.



*Bambi*

**தேர்ச்சி 1.0 : அனுபவங்களைப் போலச் செய்தல், கருத்துக்களை வெளிப்படுத்தல் ஆகிய திறன்களை வெளிக் காட்டுவார்.**

**தேர்ச்சி மட்டம் 1.5** : நயப்பதற்காக மாணவரது மனதுக்குப் பிடித்தமான நாடக நிகழ்ச்சிகளைத் தெரிவு செய்வர்.

**செயற்பாடு 1.5** : ''நாடக நிகழ்ச்சிகளை நயப்போம்''

**நேரம்** : 03 பாடவேளைகள்

**தர உள்ளீடுகள்** :
- இணைப்பு 1.5.1 இல் தரப்பட்டுள்ள தேடல் அறிவுறுத்தற் பத்திரப் பிரதிகள்
- சிறுவர் திரைப்படக் காண்ஒளிப்பேழைகள் சில (DVD/VCD) உதாரணம்:
  - Alice in wonderland (அலிஸ் இன் வொண்டர்லன்ட்)
  - Children of Heaven (சில்ட்ரன் ஒவ் ஹெவன்)
  - The Jungle book (த ஜங்கள் புக்)
  - Bambi (பெம்பி)
  - Lion King

**கற்றல் - கற்பித்தல் முறைகள்**

**படி 1.5.1** :
- எம்மத்தியிலும் அயற் சமூகத்திலும் காணப்படும் அரங்கு, தொலைக்காட்சி, வானொலி, ஊடகப் படைப்புக்கள் பற்றி மாணவரிடம் வினவுங்கள்.
- அவற்றிலிருந்து தமது நயப்புக்காக ஆக்கங்களைத் தெரிவு செய்து கொள்வது குறித்து மாணவரிடம் வினவுங்கள்.
- பின்வரும் விடயங்களை வெளிக்கொணரும் வகையில் கலந்துரையாடுங்கள்.



*Alice in wonderland*

- அரங்கு, தொலைக்காட்சி, வானொலி போன்ற ஊடகங்களுக்கிடையே வேறுபாடுகள் உண்டு.
- இந்த ஒவ்வோர் ஊடகத்தின் மூலமும் கதையை வெவ்வேறு நுட்பமுறைகளைக் கையாண்டு சுவாரசியமான வகையில் முன்வைக்கலாம்.
- தெரிவுசெய்து கொள்ளும் கதை மனதைக் கவரத்தக்கதாக இருத்தல் வேண்டும்.
- கதையின் ஊடாக ஆவல் தூண்டப்படுதல் வேண்டும்.
- கதையில் காணப்படும் பகுதிகள்.
- கதையில் வியத்தகு பாத்திரங்கள் அடங்கியிருத்தல் வேண்டும்.
- அப்படைப்புக்களைப் பார்க்கும்போது வெவ்வேறு சுவைகள் தோன்றும்.
- அப்படைப்புக்கள் சுவையானவையாகையால் அதன் மூலம் கூறப்படும் கருத்துக்களைத் தெளிவாக விளங்கிக் கொள்ளலாம்.

**(20 நிமிடங்கள்)**

படி 1.5.2 :

- மாணவரை இருவரிருவராகப் பிரியுங்கள்.
- இணைப்பு 1.5.1 இல் தரப்பட்டுள்ள தேடல் அறிவுறுத்தற் பத்திரப் பிரதிகளைப் பகிர்ந்தளியுங்கள்.
- தெரிவு செய்யப்பட்ட வீடியோ திரைப்படத்தைக் காட்சிப் படுத்துங்கள்.
- செயற்பாட்டில் ஈடுபடுத்துங்கள்.
- வகுப்பில் முன்வைப்பைச் செய்ய ஆயத்தமாகுமாறு அறிவுறுத்துங்கள்.



*Children of Heaven*

**(80 நிமிடங்கள்)**

படி 1.5.3 :

- மாணவர் ஒவ்வொருவரும் வகுப்பில் முன்வைப்புச் செய்ய இடமளியுங்கள்.
- அது குறித்துச் சக மாணவருக்குக் கருத்துத் தெரிவிக்க இடமளியுங்கள்.
- பின்வரும் விடயங்களை வலியுறுத்திக் கலந்துரையாடுங்கள்.



*Lion King*

- அரங்கு, தொலைக்காட்சி, வானொலி ஆகிய ஊடகங்களுக்கு இடையே வேறுபாடுகள் உண்டு.
- வெவ்வேறு ஊடகங்களில் வெவ்வேறு உத்திகளைக் கையாண்டு படைப்பின் சுவையை மேம்படுத்தலாம்.
- கதையொன்றை நடித்துக் காட்டும் போது அதன் நாடகச் சுவை அதிகரிக்கும்.
- படைப்பொன்றினுள் பொதிந்துள்ள கருத்துக்களை விளங்கிக் கொள்வதற்காகப் பாடல், நடனம், மற்றும் வேறு துணை அம்சங்கள் சேர்க்கப்படும்.
- அவ்வாறு சேர்ப்பதால் நாடகத்தின் சுவை மேம்படுத்தப் படும்.

**(20 நிமிடங்கள்)**

**கணிப்பீடும் மதிப்பீடும்:**

- படைப்பொன்றின் நயப்புக்கு ஏதுவாகும் காரணிகளைக் குறிப்பிடுவார்.
- வெவ்வேறு ஊடகங்களுக்கு இடையே பல்வேறு வேறுபாடுகள் உண்டு என்பதை ஏற்றுக் கொள்வார்.
- படைப்பொன்றினை நயத்து, பார்ப்பார்.
- படைப்புக்களில் வரும் பாத்திரங்கள் பெறும் அனுபவங்களைக் கொண்டு தமது வாழ்க்கையை நல்ல வழியில் இசைவுபடுத்திக் கொள்வார்.
- நயப்பை, தமது நடத்தை விருத்திக்குத் துணையாகக் கொள்வார்.

**இணைப்பு 1.5.1**

## தேடல் அறிவுறுத்தற் பத்திரம்

- ஆசிரியர் வீடியோவில் காட்சிப்படுத்தும் திரைப்படத்தைக் கருத்தூன்றிப் பாருங்கள்.
- ஆசிரியரது அறிவுறுத்தலின்படி 1, 2, 1, 2, 1, 2 என்றவாறு இலக்கங்களை எண்ணி இருவரிருவராகக் குழுக்களைப் பிரியுங்கள். (ஒவ்வொரு குழுவிலும் 1, 2 எனும் இலக்கங்கள் அடங்கும் வகையில்)
- படைப்பை நயத்த விதத்தைப் பரஸ்பரம் குழுவில் இருவரும் ஒருவருக்கு ஒருவர் கூறுங்கள். (இல: 1 இலக்கம் 2 இடம் கூறுதல் - இல: 2 இலக்கம் 1 இடம் கூறுதல்)
- ஒவ்வொருவரும் தம்மிடம் தமது சகபாடி கூறியவற்றை வகுப்பில் முன்வையுங்கள்.
- முன்வைப்பின் இறுதியில் ஆசிரியருடன் கலந்துரையாடுங்கள்.

**இணைப்பு 1.5.2**

## தகவற் கோவை

- மாணவர் பார்ப்பதற்குப் பொருத்தமான ஒரு சிறுவர்களுக்கான திரைப்படத்தைத் தெரிவு செய்து கொள்ளலாம். (DVD/VCD)
  உதாரணம்: Alice in wonderland (அலிஸ் இன் வொண்டர்லன்ட்)
  Children of Heaven (சில்ட்ரன் ஒவ் ஹெவன்)
  The Jungle book (த ஜங்கள் புக்)



***The Jungle book***

**தேர்ச்சி 1.0 : அனுபவங்களைப் போலச் செய்தல், கருத்துக்களை வெளிப்படுத்தல் ஆகிய திறன்களை வெளிக் காட்டுவார்.**

**தேர்ச்சி மட்டம் 1.6** : இயற்கை உலகின் வெவ்வேறு தளவடிவங்கள், ஒத்திசைவுகள் (Rhythm), வர்ணங்கள் போன்ற அம்சங்களின்பால் கவனஞ் செலுத்துவர்.

**செயற்பாடு 1.6** : ''இயற்கைச் சூழலைக் காண்போம்''

**நேரம்** : 02 பாடவேளைகள்

**தர உள்ளீடுகள்** : பின்வருவன போன்ற வர்ண ஒளிப்படங்கள்.

- மலைத்தொடரின் ஊடாகச் சூரியன் உதித்தல்.
- கிளைகள் பரந்து வளர்ந்த மரங்களைக்கொண்ட ஒரு காடு.
- வானில் காட்சியளிக்கும் வானவில்.
- மலர்கள், பசும் இலைகள், தளிர்கள், பழுத்த இலைகள், காய்ந்துபோன இலைகளைக் கொண்ட ஒரு தாவரம்.
- தென்னந்தோப்பில் நிலா ஒளி விழுந்திருத்தல்.
- அலைமோதும் கடற்கரை.
- A4 கடதாசி.
- நிறப் பென்சில்கள்/பஸ்ரல் வர்ணம், நீர்வர்ணம்.
- தூரிகைகள்
- பென்சில்கள்

**கற்றல் - கற்பித்தல் முறைகள்**

**படி 1.6.1** :

- மாணவரை வகுப்பறைக்கு வெளியே அழைத்துக் சொல்லுங்கள்.
- அங்கு காணப்படும் மரஞ்செடி கொடிகளைக் கருத்தூன்றி அவதானிக்குமாறு வழிப்படுத்துங்கள்.
- பின்வரும் விடயங்களை வலியுறுத்திக் கலந்துரையாடுங்கள்.



***இயற்கை***

- இயற்கைச் சூழலில் காணப்படும் மரஞ்செடி கொடிகள், வயல்வெளிகள், மலைத்தொடர்கள், காற்று, ஆறு, அருவிகள், நீர்வீழ்ச்சிகள், நிலா ஒளி, பறந்து செல்லும் பறவைக் கூட்டங்கள் போன்ற எல்லாவற்றையும் கருத்தூன்றி அவதானித்து ஆராயலாம்.
- இவற்றில் வெவ்வேறு வடிவங்கள் காணப்படும். அவை வெவ்வேறு தன்மையுடையவை.
- இவ்வாறான இயற்கைப் பொருள்களின் அமைவு வெவ்வேறுபட்டது; அவற்றின் அசைவுகளில் ஒத்திசைவு (Rhythm) காணப்படும்.
- இயற்கையான பொருள்களில் கவர்ச்சிகரமான நிறங்கள் பொதிந்திருக்கும்.

- நாடகப் பண்புடைய சூழமைவுகளையும் சூழலையும் உருவாக்குவதற்காகப் பொருத்தமான வடிவங்களையும், நிறங்களையும், அசைவுகளையும், ஒத்திசைவையும் பயன்படுத்தலாம்.
- இவ்வாறான தோற்றப்பாடுகளைச் செயல்ரீதியாகக் கையாண்டு பார்க்கலாம்.

**(20 நிமிடங்கள்)**

படி 1.6.2 :

- மாணவர் ஒவ்வொருவருக்கும் A4 கடதாசிகள் இரண்டு வீதம் பகிர்ந்தளியுங்கள்.
- நிறப் பென்சில்/பஸ்டல் வர்ணம்/நீர் வர்ணம் போன்ற பொருள்களை ஆயத்தப்படுத்திக் கொள்ளுமாறு அறிவுறுத்துங்கள்.



- தேடல் அறிவுறுத்தற் பத்திரத்தை வகுப்பில் காட்சிப் படுத்துங்கள். (இணைப்பு 1.6.1)
- செயற்பாட்டில் ஈடுபடுத்துங்கள்.
- இயற்கைச் சூழலில் காணப்படும் வடிவங்கள், அசைவுகள், ஒத்திசைவுகள், வர்ணங்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்துமாறு அறிவுறுத்துங்கள்.
- ஆக்கபூர்வமான கற்பனையையும் சேர்த்துக்கொள்ளுமாறு வழிப்படுத்துங்கள்.

**(40 நிமிடங்கள்)**

படி 1.6.3 :

- மாணவரது ஆக்கங்களை வகுப்பில் முன்வைக்கச் சந்தர்ப்பமளியுங்கள்.
- அவற்றைப் பாராட்டுங்கள்.
- எல்லாத் தலைப்புக்களும் அடங்கும் வகையில், ஆக்கங் களைக் காட்சிப்படுத்துங்கள்.
- ஆக்கங்கள் தொடர்பாக ஆக்கபூர்வமான கருத்துக்களை முன்வைக்குமாறு மாணவரை வழிப்படுத்துங்கள்.
- பின்வரும் விடயங்களை வெளிக்கொணரும் வகையில் கலந்துரையாடுங்கள்.

- நாடகத்திற் கூறப்படும் சூழலை உருவாக்குவதற்காக இயற்கை உலகில் காணப்படும் பொருள்களின் வடிவத்தைப் பயன்படுத்தலாம்.

- எந்தவோர் இயற்கைப் பொருளிலும் காணப்படும் அசைவுகள், ஒத்திசைவுகள் என்பவற்றை நாடகத்தின் சித்திரிப்புக்குத் துணையாகக் கொள்ளலாம்.
- நாடகத்தின் பின்னணிக் காட்சிகளை உருவாக்குவதற் காகத் துணையாகக் கொள்ளத்தக்க நிறங்களை இயற்கைப் பொருளின் ஊடாக இனங்கண்டு கொள்ளலாம்.
- இயற்கை உலகில் பொருள்களின் சேர்மானத்தைத் தழுவி அரங்கப் பின்னணியை வரையலாம். காண்பியங்களை யும் அமைக்கலாம்.

**(20 நிமிடங்கள்)**

**கணிப்பீடும் மதிப்பீடும்:**
- ஆக்கச் செயன்முறைக்குத் தேவையான அனுபவங்களை இயற்கைச் சூழலைத் தழுவி விவரிப்பார்.
- இயற்கைச் சூழல் தொடர்பான ஆர்வத்துடன் ஒளிப்படங்களைச் சேகரித்துத் திரட்டுவார்.
- அரங்கப் பின்னணி அமைப்பதற்காகச் சித்திரம் வரையும் திறனை விருத்தி செய்து கொள்வார்.
- நாடகத்துக்காகப் பின்னணி உருவாக்குவதில் முனைப்புக் காட்டுவார்.
- சூழலை நேசிப்பார்.

**இணைப்பு 1.6.1**

## தேடல் அறிவுறுத்தற் பத்திரம்

- ஆசிரியரிடம் இருந்து A4 கடதாசிகளைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
- சூழலில் அவதானித்தவற்றையும் தகவற் கோவையையும் ஆதாரமாகக் கொண்டு, உங்கள் மனதிற் பதிந்த இயற்கைக் காட்சியை வரையுங்கள்.
- நாடகத்தின் பின்னணிக் காட்சிக்கு அந்த இயற்கைக் காட்சிகளைப் பயன்படுத்த வேண்டும் என்பதனைக் கருத்திற் கொண்டு வரைதலில் ஈடுபடுங்கள்.
- அவற்றிற்கான நிறங்களை இயற்கைத் தோற்றப்பாடுகளை அவதானிப்பதன் ஊடாகப் பெற்று, அமைத்துக் கொள்ளுங்கள்.



**இணைப்பு 1.6.2**

## தகவற் கோவை

### சூரியோதயம்



### வானவில்



## காடு



## மரம்



**தேர்ச்சி 1.0 : அனுபவங்களைப் போலச் செய்தல், கருத்துக்களை வெளிப்படுத்தல் ஆகிய திறன்களை வெளிக் காட்டுவார்.**

**தேர்ச்சி மட்டம் 1.7** : பிராணி மற்றும் மனித உலகில் காணப்படும் அசைவுகள், மெய்நிலைகள், வடிவங்களைப் போலச் செய்வர்.

**செயற்பாடு 1.7** : ''அசைவுகள், மெய்நிலைகள் (உடல்), வடிவங்கள் மூலம் ஆக்கம் படைப்போம்''

**நேரம்** : 02 பாடவேளைகள்

**தர உள்ளீடுகள்** :
- வெவ்வேறு மெய்நிலைகளைக் காட்டும் பிராணிகள் மற்றும் மனிதர்களின் ஒளிப்படங்கள்/படங்கள்

**கற்றல் - கற்பித்தல் முறைகள்**

**படி 1.7.1** :
- வெவ்வேறு மெய்நிலைகளைக் காட்டும் மனித, பிராணிகளின் ஒளிப்படங்கள்/படங்களை வகுப்பில் காட்சிப்படுத்துங்கள்.
- பின்வரும் விடயங்களை வெளிக்கொணரும் வகையில் கலந்துரையாடுங்கள்.

| |
|---|
| • மனிதர்கள் பிறப்பு தொடக்கம் இறப்பு வரையில் பல்வேறு அசைவுகளைப் பயன்படுத்துவர்.<br>• விலங்குகளின் உலகிலும் அந்தந்தப் பிராணிக்கெனத் தனித்துவமான அசைவுகள் உண்டு.<br>• மனித மற்றும் பிராணிகளின் அசைவுகளில் வெவ்வேறு வடிவங்களும் மெய்நிலைகளும் காணப்படும்.<br>• மனித மற்றும் விலங்குகளின் உலகில் காணப்படும் பல்வேறு அசைவுகளைப் போலச் செய்து காட்டலாம். |

**(20 நிமிடங்கள்)**

**படி 1.7.2** :
- மாணவரைத் திறந்த வெளியான ஓர் இடத்துக்கு/ஒரு வகுப்பறைக்கு அழைத்துச் செல்லுங்கள்.
- 1, 2... என இலக்கங்களைக் கூறச் செய்து இரண்டு குழுக்களாகப் பிரியுங்கள்.
- இல: 1 குழுவைச் செயற்பாட்டில் ஈடுபடுத்துங்கள்.
- இல: 2 குழுவை, குழு - 1 இன் செயற்பாடுகளை அவதானிப்பதில் ஈடுபடுத்துங்கள்.

- பின்வரும் அறிவுறுத்தல்களை ஒன்றன்பின் ஒன்றாக வழங்குங்கள்.

**செயற்பாடு 1**



- குழு 1 மாணவர்கள் கண்களை மூடியவாறு நடந்து செல்லுங்கள்.
- உங்களது வயது ஒரு வருடத்தினால் குறைந்துள்ளது எனக் கருதுங்கள்.
- அதற்கேற்ப நடந்து சொல்லுங்கள்.
- உங்களது வயது மேலும் இரண்டு வருடங்கள் குறைந் துள்ளதாகக் கருதுங்கள். அதற்கேற்ப நடந்து செல்லுங்கள்.
- உங்களது வயது இப்போதைய வயதிலும் 5 வருடங்கள் குறைந்துள்ளதாகக் கருதுங்கள். அதற்கேற்ப நடந்து செல்லுங்கள்.
- உங்களது வயது மேலும் ஒரு வருடத்தால் குறைந் துள்ளது எனக் கருதுங்கள்.
- நீங்கள் இப்போது ஓர் ஆறுமாதக் குழந்தை.
- உங்களுக்கு இப்போது வயது ஆறு வருடங்கள்.
- நீங்கள் இப்போது ஏழு வருட வயதுடைய ஒரு பிள்ளை
- உங்களுக்கு இப்போது வயது 15 வருடங்கள்.
- நீங்கள் இப்போது 19 வருட வயதுடைய ஒரு பாடசாலைப் பிள்ளை.
- நீங்கள் இப்போது 25 வயதுடைய ஓர் இளைஞன்/யுவதி
- உங்களுக்கு இப்போது வயது 35 வருடங்கள்.
- உங்களுக்கு இப்போது வயது 50 வருடங்கள்.
- உங்களுக்கு இப்போது வயது 75 வருடங்கள்.



- இல: 1 குழுவினர் சித்திரித்துக் காட்டிய மெய்நிலைகள் வடிவங்கள் தொடர்பாக ஆக்கபூர்வமான கருத்துக்களை முன்வைக்குமாறு இல: 2 குழுவுக்குச் சந்தர்ப்பமளியுங்கள்.

- பின்னர், இல: 2 குழுவுக்குச் செயற்பாடுகளில் ஈடுபடச் சந்தர்ப்பமளித்து, இல: 1 குழுவினருக்கு அவற்றை அவதானிக்கச் சந்தர்ப்பமளியுங்கள்.

- அவதானித்த குழுவினருக்கு மற்றைய குழுவினரின் செயற்பாடுகள் பற்றிக் கருத்துத் தெரிவிக்கச் சந்தர்ப்ப மளியுங்கள்.

**செயற்பாடு 2**

- முன்னர் போன்றே இல: 1 குழுவைச் செயற்பாட்டில் ஈடுபடுத்துங்கள். இல: 1 குழுவினரின் செயற்பாட்டை அவதானிக்குமாறு இல: 2 குழுவை ஈடுபடுத்துங்கள்.
- பின்வரும் அறிவுறுத்தல்களை ஒன்றின்பின் ஒன்றாக வழங்குங்கள்.
- இப்பொழுது நீங்கள் ஒரு பூனை. அதற்கேற்ப நடந்து கொள்ளுங்கள்.

- இப்பொழுது நீங்கள் ஒரு குரங்கு. அதற்கேற்ப நடந்து கொள்ளுங்கள்.
- இப்பொழுது நீங்கள் ஒரு காகம். அதற்கேற்ப நடந்து கொள்ளுங்கள்.
- இப்பொழுது நீங்கள் ஒரு நாக பாம்பு. அதற்கேற்ப நடந்து கொள்ளுங்கள்.
- இப்பொழுது நீங்கள் ஒரு தவளை. அதற்கேற்ப நடந்து கொள்ளுங்கள்.
- இப்பொழுது நீங்கள் ஒரு தேனீ. அதற்கேற்ப நடந்து கொள்ளுங்கள்.
- இப்பொழுது நீங்கள் 12 வயதுடைய (7ஆந்தர) பிள்ளை.

- அவதானிப்பில் ஈடுபட்ட குழுவினருக்கு ஆக்கபூர்வமாகக் கருத்துக்களைத் தெரிவிக்கச் சந்தர்ப்பமளியுங்கள்.

- பின்னர் இல: 2 குழுவினருக்கு மேற்படி பிராணிகள் போன்று செயற்படச் சந்தர்ப்பமளியுங்கள்.

- அவதானிப்புத் தொடர்பாக வெளியிடப்பட்ட கருத்துக்களையும் கருத்திற்கொண்டு சிறப்பான சித்திரிப்புத் திறன்களை வெளிக் காட்டக்கூடிய மாணவரை இனங்கண்டு ''விலங்கினக் காட்சிச் சாலை' (Zoo) ஒன்றினை அமைக்குமாறு அறிவுறுத்துங்கள்.

**(40 நிமிடங்கள்)**

**படி 1.7.3** :
- விலங்கினக் காட்சிச்சாலைப் பிராணிகளின் செயல்கள் குறித்து மாணவரின் கருத்துக்களை வினவுங்கள்.

- பின்வரும் விடயங்களை வலியுறுத்திக் கலந்துரையாடுங்கள்.

- நாடகச் சித்திரிப்பின்போது உடலும் உள்ளமும் பயன் படுத்தப்படும்.
- சிறுவருக்கான நாடகங்களில் மனித, பிராணிப் பாத்திரங்கள் இடம்பெறலாம்.
- சித்திரிப்பின்போது பிராணிகள் மற்றும் மனிதரின் மெய்நிலைகள், வடிவங்கள், அசைவுகளில் கருத்தூன்றிக் கவனஞ் செலுத்துதல் வேண்டும்.
- மேற்படி வடிவங்கள், மெய்நிலைகள், அசைவுகளைச் சித்திரிப்பின் போது பாத்திரத்துக்கும் மேடைக்கும் பொருத்தமானவாறு இசைவுபடுத்திக் கொள்ளுதல் வேண்டும்.
- அவ்வாறு இசைவுபடுத்திக் கொள்வதற்காகச் சித்திரிப்புப் பயிற்சிகளில் ஈடுபடுவது பயனுடையதாகும்.
- நாடகமும் அரங்கக் கலைகளும் பாடத்தைப் பயிலுகை யில் அயற் சூழலில் காணப்படுபவற்றை நன்கு ஆராய்தல் முக்கியமானது.

**(20 நிமிடங்கள்)**

**கணிப்பீடும் மதிப்பீடும்:**

- முன்னரை விட கூடுதலான விளக்கத்துடன் மனிதர் மற்றும் பிராணிகளின் மெய்நிலைகள், வடிவங்கள் குறித்துக் கருத்துத் தெரிவிப்பார்.
- பிராணிகள் மற்றும் மனிதரின் உலகு தொடர்பாகக் கரிசனை காட்டுவார்.
- பிராணிகள் மற்றும் மனிதப் பாத்திரங்களைப் போலச் செய்து காட்டுவார்.
- சகவாழ்வுடன் செயற்படுவதன் அவசியத்தை வெளியிடுவார்.
- தொடர்பாடற் திறனை வெளிக்காட்டுவார்.

**தேர்ச்சி 1.0 : அனுபவங்களைப் போலச் செய்தல், கருத்துக்களை வெளிப்படுத்தல் ஆகிய திறன்களை வெளிக் காட்டுவார்.**

**தேர்ச்சி மட்டம் 1.8 :** நாடகத்தோடு தொடர்புடைய கலைகள் பற்றி அறிந்து கொள்வதற்காக அனுபவங்களைத் துணையாக் கொள்வர்.

**செயற்பாடு 1.8.1 :** ''சூழலை நோக்குவோம்''

**நேரம் :** 02 பாடவேளைகள்

**தர உள்ளீடுகள் :**
- இணைப்பு 1.8.1.1 இல் தரப்பட்டுள்ள தேடல் அறிவுறுத்தற் பத்திரப் பிரதிகள் - போதுமான தொகை
- இணைப்பு 1.8.1.2 இல் தரப்பட்டுள்ள தகவற் கோவைப் பிரதிகள் - போதுமான தொகை

**கற்றல் - கற்பித்தல் முறைகள்**

**படி 1.8.1.1 :**
- மாணவரைச் சுயாதீனமான ஒரு சூழலுக்கு அழைத்துச் செல்லுங்கள்.
- கண்களை மூடி அமைதியாக இருக்குமாறு அறிவுறுத்துங்கள்.
- புற ஒலிகளைக் கவனமாகச் செவிமடுக்குமாறு அறிவுறுத் துங்கள்.
- கண்களைத் திறக்குமாறு அறிவுறுத்துங்கள்.
- சூழலின் தன்மையை எடுத்துக்காட்டுவதில் ஒலிகள் எந்த அளவுக்குப் பங்களிப்புச் செய்கின்றன என்பது பற்றி மாணவருடன் கலந்துரையாடுங்கள்.
- சூழலை நன்கு அவதானிக்க மாணவருக்குச் சந்தர்ப்ப மளியுங்கள்.
- மரஞ்செடி கொடிகளின் வடிவங்கள், நிறங்கள், வயல் வெளிகள், மலைத்தொடர்கள், பூஞ்செடிகள், பயிர்நிலைகள், அண்மைக் காட்சிகள், சேய்மைக் காட்சிகள் போன்றவற்றை அவதானிக்குமாறு ஆர்வமூட்டுங்கள்.
- பின்வரும் விடயங்களை வெளிக்கொணரும் வகையில் கலந் துரையாடுங்கள்.

- இயற்கைச் சூழலில் காணப்படும் வடிவங்களை மனிதனால் உருவாக்கப்பட்ட சூழலில் பிரதியீடு செய்யலாம்.

- இயற்கைச் சூழலில் எழும் ஒலிகளை அவதானித்தலானது சூழலில் ஏற்படும் மாற்றங்களை இனங்காண உதவும்.
- மழை பொழியும் வேளையில் இடி, மின்னல், வேகமான காற்று, மரக்கிளைகள் முறிதல், மழைநீர் வீழ்தல் போன்ற பல்வேறு ஒலிகளைக் கேட்கலாம்.
- இயற்கைச் சூழலில் எழும் ஒலிகளை நாடகத்துக்காகச் செயற்கையாக உருவாக்கிக் கொள்ளலாம்.
- வாயினாலும், பிரதியீட்டு இசைக்கருவிகளினாலும் இயற்கை ஒலிகளைப் போன்ற ஒலிகளைப் பிறப்பிக்கலாம்.
- இயற்கைச் சூழலில் காணப்படும் சூரிய ஒளி, நிலவு ஒளி, மின்னல், வானவில் போன்ற ஒளித்தோற்றப் பாடுகளை நாடகத்துக்காகச் செயற்கையாக உருவாக் கிக் கொள்ளலாம்.
- அதற்காக மின்னொளியைப் பயன்படுத்தி வெவ்வேறு நிறமுடைய ஒளிக்கற்றைகள் பிறப்பிக்கப்படும்.
- இயற்கைச் சூழலில் காணப்படும் முடுபனி, பனிப்பொழிவு போன்றவற்றையும் செயற்கையான உத்திகளைக் கையாண்டு உருவாக்கலாம்.

**(20 நிமிடங்கள்)**

**படி 1.8.1.2** :
- மாணவரைச் சில குழுக்களாகப் பிரியுங்கள்.
- தேடல் அறிவுறுத்தற் பத்திரப் பிரதிகளைக் குழுவுக்கு ஒன்றாகப் பகிர்ந்தளியுங்கள்.
- செயற்பாட்டில் ஈடுபடுத்துங்கள்.
- வகுப்பில் முன்வைக்க ஆயத்தமாகுமாறு அறிவுறுத்துங்கள்.

**(40 நிமிடங்கள்)**

**படி 1.8.1.3** :
- ஆக்கங்களை வகுப்பில் முன்வைக்கச் சந்தர்ப்பமளியுங்கள்.
- முன்வைத்த அதே குழுவின் கருத்துகளை வினவுங்கள்.
- ஏனைய குழுக்களின் ஆக்கபூர்வமான கருத்துக்களை வினவிப் பெறுங்கள்.
- பின்வரும் விடயங்களை வலியுறுத்திக் கலந்துரையாடுங்கள்.

- நாடகத்தில் ஒலிகளைப் பயன்படுத்துவதற்காகப் பல்வேறு உத்திகளைக் கையாளலாம்.
- ஒலிகளைப் பிறப்பிப்பதற்காக ‘எக்ஸ்ரே தாள்’’, நீர் நிரப்பிய பாத்திரங்கள், வெறும் பாத்திரங்கள், தகரப் பேணிகள், தென்னஞ் சிரட்டைகள், பலகைத் துண்டுகள் போன்றவற்றைப் பயன்படுத்தலாம்.

- நிலவொளி இல்லாத இரவுச் சூழல் பயங்கரமானதாக இருக்கக்கூடும்.
- ஆந்தைகளின் அலறல், நரிகளின் ஊளை, சாக்குருவியின் ஓலம் போன்ற ஒலிகளைப் பிறப்பிப்பதால் அப்பயங்கரத்தை அதிகரிக்கலாம்.
- இருண்ட சூழலில் நிலா ஒளி வீழ்வதால் சிந்தை கவரத்தக்க பல்வேறு வடிவங்கள் தோன்றும்.
- பல நிறங்களைக் கொண்டு நாடகப் பண்புடைய பின்னணியை உருவாக்கிக் கொள்ளலாம்.
- இயற்கை அழகின் சிறப்பைப் பாடல்கள், கவிதைகள் மூலம் கிரகிக்கலாம்.
- இயற்கைச் சூழலில் காணப்படும் பல்வேறு தன்மைகளான, வடிவங்கள், ஒளிகள், நிறங்கள், ஒலிகள் போன்றவை நாடகத்தின்போது மீள உருவாக்கி முன் வைக்கப்படும்.
- நாடகத்தின்போது மிகப் பொருத்தமானவற்றைச் சேர்மானம் செய்வதன் மூலம் கருத்து வெளிப்பாட்டைச் சிறப்பாக முன்வைக்கலாம்.

**(20 நிமிடங்கள்)**

**கணிப்பீடும் மதிப்பீடும்:**

- இயற்கைச் சூழலின் அழகை நயக்க முனைவார்.
- சமயோசிதமாகச் சூழலை அமைத்துக் கொள்வார்.
- ஓய்வு நேரத்தைப் பயனுடையவாறு கழிப்பதற்காகச் சித்திரம் வரைவார்.
- சூழலை அழகாகவும் ஆக்கபூர்வமாகவும் அமைத்துக் கொள்வார்.
- மேடை அலங்கரிப்பைத் திட்டமிடுவார்.

**இணைப்பு 1.8.1.1**

## தேடல் அறிவுறுத்தற் பத்திரம்

- உங்களது குழுவுக்குத் தரப்படும் தலைப்புத் தொடர்பாகத் தேடியாய்ந்து முன்வைப்புச் செய்யும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

- கருத்தூன்றி அவதானிப்பில் ஈடுபட்டு அதற்கான ஆயத்தங்களைச் செய்து கொள்ளுங்கள்.

- மறுநாள் இடம்பெறவுள்ள பாடவேளையிலேயே உங்களது முன்வைப்பைச் செய்தல் வேண்டும்.

- ஒலிகளைப் போலச் செய்வதற்காக வாயையும், பிரதியீட்டு வாத்தியக் கருவிகளையும் பயன்படுத்தலாம்.

- முன்வைப்புச் செய்த பின்னர் உங்களது குழு முன்வைப்பின் குறைநிறைகள் பற்றிக் கலந்துரையாடுங்கள்.

- அம்முன்வைப்புகள் தொடர்பாக ஆக்கபூர்வமான கருத்துக்களை முன்வையுங்கள்.

**இணைப்பு 1.8.1.2**

## தகவற் கோவை

- **குழு 1:** இரவு வேளையில் செவிமடுக்கத்தக்க பல்வேறு பிராணிகளின் ஒலிகளைப் போலச் செய்து காட்டுங்கள்.

- **குழு 2:** மழை நாளில் வானம் காட்சியளிக்கும் விதத்தைச் சித்திரமாக வரையுங்கள். (வர்ணந் தீட்டுங்கள்.)

- **குழு 3:** நிலவு ஒளி பரவியுள்ள சூழல் பற்றிய ஒரு கவிதை புனையுங்கள்.

- **குழு 4:** பூந்தோட்டமொன்றின் மத்தியில் அமைந்துள்ள ஒரு வீட்டைச் சித்திரமாக வரையுங்கள். (வர்ணந் தீட்டுங்கள்.)



***வயல்***

***பூந்தோட்டம்***



**தேர்ச்சி 1.0 : அனுபவங்களைப் போலச் செய்தல், கருத்துக்களை வெளிப்படுத்தல் ஆகிய திறன்களை வெளிக் காட்டுவார்.**

**தேர்ச்சி மட்டம் 1.8** : நாடகத்தோடு தொடர்புடைய கலைகள் பற்றி அறிந்து கொள்வதற்காக அனுபவங்களைத் துணையாக் கொள்வர்.

**செயற்பாடு 1.8.2** : ''துணைக்கலைகளை இனங்காண்போம்''

**நேரம்** : 02 பாடவேளைகள்

**தர உள்ளீடுகள்** :
- நாடகமொன்றின் காண் ஒளிப்பேழை (VCD/DVD)

**கற்றல் - கற்பித்தல் முறைகள்**

**படி 1.8.2.1** :
- நாடகமொன்றின் ஒரு பகுதியை வீடியோவில் காட்சிப் படுத்துங்கள்.
- அக்காட்சிகளில் அடங்கியுள்ள கலை அம்சங்கள் குறித்து வினவுங்கள்.
- பின்வரும் விடயங்களை வெளிக்கொணரும் வகையில் கலந் துரையாடுங்கள்.

> - நாடகமொன்றினை மேடையில் சித்திரிக்கும்போது பல்வேறு துணைக்கலைகள் பயன்படுத்தப்படும்.
> - துணைக்கலைகள் வெவ்வேறு பரப்புக்களைச் சேர்ந்தவை யாகும்.
> - நாம் மேடையில் காணும் ஒளி, ஒலி, குரல்கள், நிறம் போன்றவை துணைக் கலைகளுள் அடங்கும்.
> - மேடையில் நாம் காணும் துணைக் கலைகளுக்கும், நாளாந்த வாழ்க்கையில் நாம் காணும் கலைகளுக்கும் இடையில் வேறுபாடு உண்டு.
> - மேடையில் துணைக் கலைகளைப் பயன்படுத்துவதற்குக் கற்பனா சக்தி அவசியமாகும்.
> - துணைக்கலை ஆக்கங்களுக்காக அந்தந்தத் துறையில் சிறப்பறிவுடைய கலைஞர்களின் உதவியைப் பெறலாம்.

**(20 நிமிடங்கள்)**

**படி 1.8.2.2** :
- வகுப்பு மாணவரை நான்கு குழுக்களாகப் பிரியுங்கள்.
- தேடல் அறிவுறுத்தற் பத்திரப் பிரதிகளைக் குழுவுக்கு ஒன்றாகப் பகிர்ந்தளியுங்கள்.
- செயற்பாட்டில் ஈடுபடுத்துங்கள்.
- செயற்பாட்டை வகுப்பில் முன்வைக்க ஆயத்தஞ் செய்து கொள்ளுமாறு அறிவுறுத்துங்கள்.

**(40 நிமிடங்கள்)**

படி 1.8.2.3 :
- குழு முன்வைப்புக்களைச் செய்யச் சந்தர்ப்பமளியுங்கள்.
- அச்சித்திரிப்புகளில் அடங்கியுள்ள துணைக்கலைகள் பற்றி வினவுங்கள்.
- பின்வரும் விடயங்களை வலியுறுத்திக் கலந்துரையாடுங்கள்.

> - மேடையில் நாடகமொன்றைக் காட்சிப்படுத்தும் போது தேவைக்கேற்பப் பொருத்தமானவாறு குரல்கள், ஒலிகள், நிறங்கள், வடிவங்கள் போன்றவற்றைப் பயன்படுத்தலாம்.
> - தேவைக்கேற்பப் பொருத்தமான வகையில் வெவ்வேறு நிற ஆடையணிகளைப் பயன்படுத்தலாம்.
> - தேவைக்கேற்பப் பொருத்தமானவாறு ஒப்பனை செய்து கொள்ளலாம்.
> - நாடகப் பொருத்தமாக இசையைப் பயன்படுத்தலாம்.
> - பொதுவான வாழ்க்கையில் நாம் காண்பவற்றுக்கும் மேடை மீது உருவாக்கப்பட்டுக் காட்சிப்படுத்தப் படுபவற்றுக்கும் இடையே வேறுபாடு உண்டு.

**(20 நிமிடங்கள்)**

**கணிப்பீடும் மதிப்பீடும்:**
- நாடகத்துக்குரிய துணைக் கலைகளைக் குறிப்பிடுவார்.
- நாளாந்த வாழ்க்கையில் நாம் ஒளிகள், ஒலிகள், குரல்கள், நிறங்கள், வடிவங்களைக் காண்கிறோம் என்பதை ஏற்றுக்கொள்வார்.
- மேடையில் நாம் காணும் துணைக் கலைகளை எளிமையான வகையில் உருவாக்குவார்.
- ஆக்கத்திறனை வெளிக்காட்டுவார்.
- நாளாந்த வாழ்க்கைக்கு ஆக்கத்திறன் துணையாகும் என்பதை விளங்கிக் கொள்வார்.

**இணைப்பு 1.8.2.1**

## தேடல் அறிவுறுத்தற் பத்திரம்

- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரியுங்கள்.
- இணைப்பு 1.8.2.2 இல் தரப்பட்டுள்ள தலைப்புக்களைத் திருவுளச் சீட்டு முறையில் குழுவுக்கு ஒன்றாகத் தெரிவு செய்து கொள்ளுங்கள்.
- அச்சம்பவத்தில் அன்றேல் சூழமைவில் நாம் அனுபவிக்கும் ஒளிசார்ந்த உத்திகள், ஒலிகள் - குரல்கள், இசை, பொருத்தமான ஆடையணிகள், ஒப்பனை போன்றவற்றைப் பயன்படுத்தி அச்சூழமைவை நாடகம் போன்று நடித்துக் காட்டுங்கள்.
- நடிப்பதற்காகச் சில நாள்கள் பயிற்சி பெறுங்கள். ஓய்வாக இருக்கும் நேரத்தை இதற்காகப் பயன்படுத்தலாம்.

- நடிப்பதை 5 - 8 நிமிடத்துக்குள் வரையறைப்படுத்துங்கள்.
- நடித்த பின்னர் நாம் நாளாந்த வாழ்க்கையில் அனுபவிக்கும் ஒளி, ஒலி, குரல்கள், நிறங்கள் போன்றவை மேடையில் ஆக்கபூர்வமான வகையில் எவ்வாறு முன்வைக்கப்பட்டன எனக் குழுநிலையில் கலந்துரையாடுங்கள்.
- நாடகத்துக்காக ஒளி, ஒலி, குரல், நிறங்கள் போன்றவற்றைப் பயன்படுத்துவது தொடர்பாக நீங்கள் இனங்கண்ட சிறப்பான அம்சங்களைக் குறிப்பிடுங்கள்.

**இணைப்பு 1.8.2.2**

## தகவற் கோவை

- **குழு 1:** வீடொன்றில் இரவில் தொலைக்காட்சி பார்க்கும் சந்தர்ப்பமொன்று.
- **குழு 2:** வகுப்பறையில் இடம்பெறும் நிகழ்வொன்று.
- **குழு 3:** காடொன்றில் பிராணிகள் சிலவற்றின் சந்திப்பு.
- **குழு 4:** பிள்ளைகள் சிலர் தேவலோகத்துக்குச் சென்றுள்ள சந்தர்ப்பமொன்று.





*துணைக்கலைகள்*

**தேர்ச்சி 2.0 : படைப்பாக்கச் செயற்பாடுகளில் ஈடுபட்டு நாடகப் படைப்பாக்கத் திறனை வெளிக்காட்டுவார்.**

**தேர்ச்சி மட்டம் 2.1** : நாடகத்துக்குப் பொருத்தமாகக் கதையைத் தெரிவுசெய்து நாடக எழுத்துருவை எழுத முற்படுவர்.

**செயற்பாடு 2.1** : 'நடிப்பதற்குப் பொருத்தமாகக் கதைகள் தேடுவோம்''

**நேரம்** : 03 பாடவேளைகள்

**தர உள்ளீடு** :
- கதைகளைத் தழுவிப் படைக்கப்பட்டுள்ள நாடக எழுத்துருக்கள், நாடக வீடியோக்கள்
- கதைப்புத்தகங்கள்

**கற்றல் - கற்பித்தல் முறைகள்**

**படி 2.1.1** :
- மாணவர் அறிந்து வைத்துள்ள பல்வேறு கதைகள் பற்றி வினவுங்கள்.
- பின்வரும் விடயங்களை வெளிக்கொணரும் வகையில் கலந்துரையாடுங்கள்.

> - பல வகைப்பட்ட கதைகள் உள்ளன.
> - கதைகளில் பல்வேறு பாத்திரங்கள் அடங்கியிருக்கும்.
> - கதைகளில் சுவாரசியமான நிகழ்வுகள் அடங்கியிருக்கும்.
> - கதைகளைக் கேட்பதாலும் வாசிப்பதாலும் நடிப்பதாலும் அவற்றை நயக்கலாம்.
> - கதைகளில் 'மோதுகை' போன்ற நாடகப் பண்புடைய பண்புகளும் அடங்கியிருக்கும்.
> - நாடகங்களுக்காக வெவ்வேறுபட்ட கதைகள் பயன் படுத்தப்படும்.
> - அவற்றுள் நாடகப் பண்புடைய நிகழ்வுகள் மாத்திரம் நாடகத்துக்காகப் பயன்படுத்தப்படும்.

**(20 நிமிடங்கள்)**

**படி 2.1.2** :
- சிறிய கதையொன்றினைத் தெரிவு செய்து அதனை வகுப்பில் வாசிப்பதற்கு எழுமாறாக ஒரு மாணவனுக்கு/ மாணவிக்குச் சந்தர்ப்பமளியுங்கள்.
- அக்கதையில் தமது மனதைக் கவர்ந்த சூழமைவு யாது என மாணவரிடம் வினவுங்கள்.
- மாணவரை 4 குழுக்களாக வகுத்து, அக்குழுவுக்கு ஒன்றாகக் கதைகளைப் பகிர்ந்தளியுங்கள்.
- கதையை நடித்துக் காட்டுமாறு அறிவுறுத்துங்கள்.
- கதையில், நாடகப் பண்புடைய சில பகுதிகளைத் தெரிவு செய்து சித்திரிக்குமாறு அறிவுறுத்துங்கள்.

- ஒரு நாடகச் சித்திரிப்புக்கு 5 நிமிடம் வழங்கப்படும் என அறிவியுங்கள்.

- சித்திரிப்பை வகுப்பில் முன்வைக்க இடமளியுங்கள்.

**(80 நிமிடங்கள்)**

**படி 2.1.3** :

- அந்தக் குழுவின் சித்திரிப்புக் குறித்துக் கருத்துத் தெரிவிப்பதற்கு முதலில் அதே குழுவுக்குச் சந்தர்ப்ப மளியுங்கள்.

- ஏனைய குழுக்களின் ஆக்கபூர்வமான கருத்துக்களைப் பெறுங்கள்.

- பின்வரும் விடயங்களை வலியுறுத்திக் கலந்துரையாடுங்கள்.

  - நாட்டார் கதைகள், வீரர் கதைகள், சிறுவர் கதைகள், தேவதைக் கதைகள் போன்ற பல்வேறு வகையான கதைகளுள் சமூகத்துக்கு யாதேனும் படிப்பினையை வழங்குவதற்கு ஏற்ற அன்றேல் பார்த்துக் களிப்புறுவதற்கு ஏற்ற கதைகளையே நாடகத்துக்காகத் தெரிவு செய்து கொள்ள வேண்டும்.
  - இக்கதைகளிலிருந்து நாடகப் பண்புடைய சூழமைவு களை மாத்திரமே தெரிவு செய்து கொள்ள வேண்டும்.
  - கதையின் தொடக்கத்திலிருந்து படிப்படியாக வளர்த் தெடுக்காது அதன் எந்தப் பகுதியிலிருந்து ஆரம்பித் தும் நாடகத்தை வளர்த்தெடுக்கலாம். (உதாரணங் காட்டுக.)
  - மேடையில் காட்சிப்படுத்தத்தக்க சூழமைவுகளை மாத்திரம் தெரிவுசெய்து நடிப்பதோடு ஏனைய பகுதி களைப் பாத்திரங்கள் மூலம் அன்றேல் வேறு உத்திகள் மூலம் அறிந்து கொள்ளச் செய்யலாம்.

**(20 நிமிடங்கள்)**

**கணிப்பீடும் மதிப்பீடும்:**

- நாடகத்துக்குப் பொருத்தமான கதைகளைத் தெரிவு செய்வார்.
- கதைகளின் நாடகப் பொருத்தமான பகுதிகளை இனங்காண்பார்.
- நாடகப் பொருத்தமான சந்தர்ப்பங்களை நடித்துக்காட்டுவார்.
- கூட்டாகச் செயற்படுவதை மதிப்பார்.
- தேவையானவற்றைப் பொருத்தமானவாறு தெரிவு செய்து கொள்வது வெற்றிக்கு வழிகோலும் என்பதை விளங்கிச் செயற்படுவார்.

**இணைப்பு 2.1.1**


## தேடல் அறிவுறுத்தற் பத்திரம்

- உங்களது குழுவுக்குத் தரப்பட்டுள்ள கதையைக் கருத்தூன்றி வாசியுங்கள்.
- பொருத்தமான சந்தர்ப்பங்களையும் பாத்திரங்களையும் தெரிவுசெய்து நடித்துக் காட்டுங்கள்.


**இணைப்பு 2.1.2**

## தகவற் கோவை

- பீர்பால் கதைகள்
  ஈசாப் கதைகள்
  பரமார்த்தகுரு கதைகள்
  பாலர்களுக்கான மகாபாரதக் கதைகள்
  போன்றவற்றிலிருந்து ஒவ்வொரு கதைகளைத் தெரிவு செய்து வழங்குங்கள்.



*பீர்பால் கதைகள்*



*பரமார்த்தகுரு கதைகள்*



*மகாபாரதம்*

**தேர்ச்சி 2.0 : படைப்பாக்கச் செயற்பாடுகளில் ஈடுபட்டு நாடகப் படைப்பாக்கத் திறனை வெளிக்காட்டுவார்.**

**தேர்ச்சி மட்டம் 2.2** : மாணவரது அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு நாடகச் சூழமைவுகளைச் சித்திரிப்பார் (கூட்டாக).

**செயற்பாடு 2.2** : 'நாம் நடிப்போம்''

**நேரம்** : 03 பாடவேளைகள்

**தர உள்ளீடு** :
- இணைப்பு 2.2.1 இல் தரப்பட்டுள்ள தேடல் அறிவுறுத்தற் பத்திரப் பிரதிகள் - 04

**கற்றல் - கற்பித்தல் முறைகள்**

**படி 2.2.1** :
- 6ஆம் தர 2.1.1ஆம் செயற்பாட்டில் முன்வைத்த (சந்தை, திருமணம், பஸ் நிலையம், திருவிழா) ஆகிய நான்கு சூழமைவுகளையும் மீண்டும் காட்டி அங்கு இடம்பெறும் முக்கியமான விடயங்களை மாணவரிடம் வினவுங்கள்.
- பின்வரும் விடயங்களை வெளிக்கொணரும் வகையில் கலந்துரையாடுங்கள்.

> - தெரிவு செய்த பிரதான சூழமைவிற் பல்வேறு நிகழ்வுகள் அடங்கியிருக்கும்.
> - அவற்றுள் மிக வலிமையான, வியத்தகு சூழமைவே நாடகப் பொருத்தமானதாக அமைய இடமண்டு.
> - அச்சூழமைவுகளுக்குரிய பாத்திரங்கள், பல்வேறு இயல்புகளைக் கொண்டிருக்கும்.
> - பாத்திரங்களுக்குப் பொருத்தமான எளிமையான/ இலகுவான மொழிப்பாணி பயன்படுத்தப்படும்.
> - நாடகப் பொருத்தமான / பண்புடைய சூழமைவில் எதிர்பார்ப்புப் பொதிந்திருக்கும்.
> - அச்சூழமைவில் வெவ்வேறு பாத்திரங்கள் வெவ்வேறு வகையாக எதிர்வினைக் காட்டும்.

**(20 நிமிடங்கள்)**

**படி 2.2.2** :
- வகுப்பு மாணவரை நான்கு குழுக்களாகப் பிரியுங்கள்.
- இணைப்பு 2.2.1 இல் தரப்பட்டுள்ள தேடல் அறிவுறுத்தற் பத்திரப் பிரதிகளைக் குழுவுக்கு ஒன்றாகப் பகிர்ந்தளியுங்கள்.
- தாம் தெரிவுசெய்து கொண்ட நாடகப் பொருத்தமான சூழமைவை ஆக்கபூர்வமாகச் சித்திரிப்பதற்காகக் கலந்துரை யாடச் சந்தர்ப்பமளியுங்கள்.

- சித்திரிப்பை வகுப்பில் முன்வைப்பதற்கான ஆயத்தங்களைச் செய்து கொள்ளுமாறு அறிவுறுத்துங்கள்.

**(80 நிமிடங்கள்)**

**படி 2.2.3** :
- குழுச் சித்திரிப்புகளை வகுப்பில் முன்வைக்கச் சந்தர்ப்ப மளியுங்கள்.
- முன்வைத்த அதே குழுவின் கருத்துக்களை வினவுங்கள்.
- ஏனைய குழுக்களின் ஆக்கபூர்வமான கருத்துக்களை வினவிப் பெறுங்கள்.
- பின்வரும் விடயங்களை வெளிக்கொணரும் வகையில் கலந்துரையாடுங்கள்.

> - நாளாந்த வாழ்க்கை நிகழ்வுகள் - அனுபவங்களுள் நாடகப்பாங்கான சூழமைவுகள் காணப்படலாம்.
> - பாத்திரங்கள், நிகழ்வுகளின் பல்வகைமை காரணமாகவே அச்சூழமைவுகள் உருவாகும்.
> - அச்சூழமைவுகளைப் போலச்செய்து நடித்துக் காட்டலாம்.
> - அச்சூழமைவுகளில் என்ன நடக்குமோ என்ற எதிர்பார்ப்பு பொதிந்திருக்கும்.
> - நடிப்பின் வெற்றிக்குக் கூட்டுணர்வு முக்கியமானது.
> - சூழமைவுச் சித்திரிப்பை இரசிக்கலாம்/நயக்கலாம்.

**(20 நிமிடங்கள்)**

**கணிப்பீடும் மதிப்பீடும்:**

- நாடகப் பொருத்தமான சூழமைவொன்றினைத் தெரிவுசெய்து கொள்வார்.
- நாடகச் சூழமைவொன்றில் பல்வேறு பாத்திரங்கள் அடங்கியிருக்கும் என்பதை ஏற்றுக் கொள்வார்.
- சூழமைவொன்றினைச் சித்திரிப்பதற்காக நால்வகைச் சித்திரிப்புக்களையும் பயன்படுத்துவார்.
- நடிப்பைக் கூட்டாக முன்வைப்பார்.
- சித்திரிப்புக்காகத் தமது அனுபவங்களைத் துணையாகக் கொள்வார்.

**இணைப்பு 2.2.1**

## தேடல் அறிவுறுத்தற் பத்திரம்

- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்துத் திருவுளச் சீட்டு முறையில் உங்களது குழுவுக்குரிய தலைப்பைத் தெரிவு செய்து கொள்ளுங்கள்.
- உங்களது குழுவுக்குரிய தலைப்பைச் சூழமைவுச் சித்திரிப்பாக முன்வைக்க ஆயத்தஞ் செய்து கொள்ளுங்கள்.
- உங்களது குழுவுக்குரிய நாடகப்பாங்கான சூழமைவைப் பற்றிக் கலந்துரையாடி அதனைச் சித்திரியுங்கள் (15 நிமிடங்கள்).
- நாடகப்பாங்கான சூழமைவைச் சித்திரிப்பதற்காகப் பாத்திரங்களின் பல்வகைமை குறித்துக் கவனஞ் செலுத்துங்கள். அச்சூழமைவின்போது அப்பாத்திரங்கள் நடந்துகொள்ளும் முறைமை பற்றிக் கலந்துரையாடுங்கள்.
- அச்சூழமைவை அடுத்து என்ன நடக்குமோ என்ற எதிர்பார்ப்பு ஏற்படும் வகையில் வளர்த்தெடுக்க முயற்சி செய்யுங்கள்.
- சூழமைவுச் சித்திரிப்பின்போது உடல், உணர்ச்சி, காண்பிய வழிச் சித்திரிப்புகளைப் பயன்படுத்துங்கள்.
- உங்களது சித்திரிப்பை 8 - 10 நிமிடங்களுக்கு வரையறைப்படுத்தி முன்வையுங்கள்.
- முன்வைப்பின் பின்னர் உங்களது குழுவின் சித்திரிப்புப் பற்றியும் ஏனைய குழுக்களின் சித்திரிப்புப் பற்றியும் கருத்துக்களை முன்வையுங்கள்.

**இணைப்பு 2.2.2**

## தகவற் கோவை

- **குழு 1:** பிள்ளைகள் கிரிக்கட் விளையாடிக் கொண்டிருக்கும்போது பந்து அயலில் உள்ள வீடொன்றினுள் செல்லல்.
- **குழு 2:** வகுப்பறையினுள் நாயொன்று நுழைதல்.
- **குழு 3:** மாம்பழம் பறிக்க மரத்தில் ஏறிய சிறுவன் சறுக்கி விழுதல்.
- **குழு 4:** பட்டம் தயாரிக்கும் பிள்ளைகளுக்கு இடையே ஏற்பட்ட ஒரு நிகழ்வு

**தேர்ச்சி 2.0 : படைப்பாக்கச் செயற்பாடுகளில் ஈடுபட்டு நாடகப் படைப்பாக்கத் திறனை வெளிக்காட்டுவார்.**

**தேர்ச்சி மட்டம் 2.3** : பாத்திரத்தை மனதிலே நிறுத்திப் பாத்திரவாக்கம் செய்வர் (தனி/குழு).

**செயற்பாடு 2.3** : ''வெவ்வேறு பாத்திரங்களைச் சித்திரிப்போம்/நடிப்போம்''

**நேரம்** : 03 பாடவேளைகள்

**தர உள்ளீடு** :
- வெவ்வேறு பாத்திரங்களைக் காட்டும் ஒளிப்படங்கள்/படங்கள் சில
- வெவ்வேறு பாத்திரங்களின் பெயர் எழுதப்பட்ட அட்டைகள்
- இணைப்பு 2.3.1 - பாத்திரத் தலைப்புக்கள்

**கற்றல் - கற்பித்தல் முறைகள்**

**படி 2.3.1** :
- இரண்டு மாணவர்களை வகுப்பின் முன்னே அழைத்து, ஒரு பாத்திரத்தின் இரண்டு பாகங்களைச் சித்திரித்துக் காட்டச் செய்யுங்கள். (உதாரணம்: முதலாளிமார் இருவர்)

- ஒரு குறித்த பாத்திரமே சித்திரிக்கப்பட்ட போதிலும் அதன் ''முகங்கள்'' வெவ்வேறு இயல்புகளைக் கொண்டவையாகும் என்பதைக் காட்டி அது குறித்து மாணவரது கருத்துக்களைக் கேளுங்கள்.

- பின்வரும் விடயங்களை வெளிக்கொணரும் வகையில் கலந் துரையாடுங்கள்.

> - வெவ்வேறு பாத்திரங்களை நடித்துக் காட்டலாம்.
> - பாத்திரங்கள், பிராணிகளாகவோ, மனிதர்களாகவோ, அதிமானிடராகவோ இருக்க இடமுண்டு.
> - ஒரு குறித்த பாத்திரமாயினும் அது பல்வேறு இயல்பு களைக் கொண்டிருக்கும்.
> - பாத்திரங்களின் உள்ளார்ந்த இயல்புகளைச் சித்திரித்த லானது நன்கு பயிற்சி பெற்றுச் செய்ய வேண்டிய தொன்றாகும்.
> - பாத்திரமொன்று வெற்றிகரமானதாக அமைவதற்கு, அப்பாத்திரத்தின் அக, புற இயல்புகள் காட்டப்படுதல் வேண்டும்.
> - பாத்திரத்துக்குரிய உணர்வுகளும் நன்கு வெளிக்காட்டப் படுதல் வேண்டும்.
> - பாத்திரம் பற்றிய போதிய விளக்கத்தைப் பெற்று அப்பாத்திரத்தைச் சித்திரிப்பது அவசியமாகும்.

**(20 நிமிடங்கள்)**

**படி 2.3.2** :

- மாணவரைத் திறந்த வெளியான ஓர் இடத்தில் வட்டமாக நிறுத்துங்கள்.
- ஏறத்தாழ 20 - 30 பாத்திரப் பெயர்கள் எழுதப்பட்ட சீட்டுக்களைப் பெட்டியொன்றில் இட்டுக் குலுக்கி, அதிலிருந்து எழுமாறாகத் தலைப்புகளைத் தெரிவுசெய்துகொள்ளச் சந்தர்ப்பமளியுங்கள். (ஒரு குறித்த தலைப்பு ஒன்றுக்கு மேற்பட்டோருக்குக் கிடைக்க இடமுண்டு)
- தமக்குக் கிடைத்த தலைப்பை மறுநாள் சித்திரித்தல் வேண்டும் என அறிவியுங்கள்.

**(20 நிமிடங்கள்)**

**படி 2.3.3** :

- சித்திரிப்புக்களை வகுப்பில் முன்வைக்கச் சந்தர்ப்ப மளியுங்கள்.
- சித்திரிப்புப் பற்றி அந்தந்த மாணவருடன் கலந்துரை யாடுங்கள்.
- சித்திரிப்புகள் பற்றி பொதுக் கலந்துரையாடல் நடத்துங்கள்.
- பின்வரும் விடயங்களை வலியுறுத்திக் கலந்துரையாடுங்கள்.

> - பாத்திரமொன்றைச் சித்திரிக்க முன்னர் அப்பாத்திரத்தை நன்கு விளங்கிக்கொள்வது அவசியமாகும்.
> - அனுபரீதியான பாத்திரச் சித்திரிப்பு வெற்றிகரமானதாக அமையும்.
> - பாத்திரத்தின் உள்ளார்ந்த தன்மையை வெளிக்காட்டு வதற்குப் போதிய பயிற்சி அவசியமாகும்.
> - தனியாகவும் கூட்டாகவும் பாத்திரங்களைச் சித்திரிக் கையில் அந்தந்தப் பாத்திரத்தின் இயல்புகளை நன்கு விளங்கிச் சித்திரிப்பதன் மூலம் வெற்றிகரமான நடிப்பை முன்வைக்கலாம்.
> - கூட்டாகச் சேர்ந்து பாத்திரங்களைச் சித்திரிக்கும்போது குறித்த பாத்திரங்களின் இயல்புகளை இனங்கண்டு கொள்வதோடு அப்பாத்திரங்களுடன் பொருந்தியமையும் முறைமையிலும் சித்திரிப்பைச் செய்தல் வேண்டும்.

**(80 நிமிடங்கள்)**

**கணிப்பீடும் மதிப்பீடும்:**

- வெவ்வேறு நாடகங்களில் வெவ்வேறு வகையான பாத்திரங்கள் அடங்கியிருக்கும் எனக் குறிப்பிடுவார்.
- ஒரு குறித்த பாத்திரம் வெவ்வேறு குணாதிசயங்களைக் கொண்டிருக்கும் என்பதை இனங்காண்பார்.
- சித்திரிப்புக்காகப் பாத்திரங்களை நன்கு விளங்கிக்கொள்ளுதல் வேண்டும்.
- சமூகத்தில் வாழ்வதற்காக வெவ்வேறு பாத்திரங்களை நன்கு இனங்கண்டுகொள்வது பயனுடையது என்பதை ஏற்றுக்கொள்வார்.
- கூட்டாகச் சித்திரிப்பில் ஈடுபடும்போது ஏனைய பாத்திரங்களின் சித்திரிப்பு மூலம் தமது சித்திரிப்பு போசிப்பைப் பெறும் என்பதை ஏற்றுக்கொள்வார்.

**இணைப்பு 2.3.1**

## தேடல் அறிவுறுத்தற் பத்திரம்

- **பாத்திரப் பெயர்கள் (தனி/குழு)**

1. தற்பெருமைமிக்கவர்
2. பயந்தாங்கொள்ளி
3. விகடன்
4. எடுத்ததற்கெல்லாம் அருவருப்புப்படுபவர்
5. கடும் சுத்தம் பார்ப்பவர்
6. புளுகர்
7. அழுகுணி/சிணுங்குபவர்
8. பெருந்தீனிக்காரன் (சாப்பாட்டு ராமன்)
9. எதிலும் பிழை கண்டு பிடிப்பவர்.
10. பிடிச்சிராவி/விடாப்பிடி/பிடிவாதக்காரன்
11. கோள்மூட்டி
12. தந்திரசாலி மனிதன்/மிருகம்
13. பேராசைமிக்கவர்
14. பொல்லாதவர்
15. நல்லவர்
16. உலோபி
17. கொடைவள்ளல்
18. கோபக்காரர்
19. ஏமாளி
20. வீரன்
21. சோம்பேறி
22. கூட இருந்து குழி பறிப்பவர்
23. அன்புடையவர்
24. அதிகார ஆசையுடையவர்
25. எல்லோருக்கும் உதவுபவர்

**தேர்ச்சி 2.0 : படைப்பாக்கச் செயற்பாடுகளில் ஈடுபட்டு நாடகப் படைப்பாக்கத் திறனை வெளிக்காட்டுவார்.**

**தேர்ச்சி மட்டம் 2.4** : மிருகங்களை, மனிதர்களை, பொருள்களை அவதானித்துச் சூழமைவுகளை உருவாக்கி உடனடியாக நடித்துக் காட்டுவர்.

**செயற்பாடு 2.4** : ''புதிதளித்தலின் மூலம் நடிப்போம்.''

**நேரம்** : 02 பாடவேளைகள்

**தர உள்ளீடு** :
- இணைப்பு 2.4.1இல் தரப்பட்டுள்ள தேடல் அறிவுறுத்தற் பத்திரப் பிரதிகள் - போதுமான தொகை

**கற்றல் - கற்பித்தல் முறைகள்**

**படி 2.4.1** :
- பாதணிகளைக் களையச் செய்து மாணவர்களைத் திறந்த வெளியான ஓர் இடத்துக்கு அழைத்துச் செல்லுங்கள்.
- நடிக்கச் சொன்ன மாத்திரத்தில் நடித்துவிட முடியுமா என வினவுங்கள்.
- பின்வரும் விடயங்களை வெளிக்கொணரும் வகையில் கலந் துரையாடுங்கள்.

> - நாடக எழுத்துருவோ, ஒத்திகையோ இன்றி, பாத்திர மொன்றையோ சம்பவமொன்றையோ, சூழமைவொன்றி னையோநடித்துக் காட்டுவதே புதிதளித்தல் எனப்படு கின்றது.
> - தெரிவு செய்த தலைப்புக்குப் பொருத்தமானவாறு சித்திரிப்பை வளர்த்தெடுத்தல் வேண்டும்.
> - தமது அனுபவங்களையும் குழுவில் ஏனையோரின் அனுபவங்களையும் சித்திரிப்புக்காகத் துணையாகக் கொள்ளலாம்.
> - குழுவில் உடனடியாகத் தீர்மானம் எடுப்பது அவசிய மாகும்.
> - இப்பயிற்சியின் மூலம் ஆக்கச் சிந்தனை, கற்பனா சக்தி போன்ற இயல்புகள் விருத்தியடையும்.

**(20 நிமிடங்கள்)**

**படி 2.4.2** :
- மாணவரை நான்கு குழுக்களாகப் பிரியுங்கள்.
- குழுக்களைப் போதுமான இடவசதியுள்ள ஓர் இடத்தில் வெவ்வேறாக நிறுத்துங்கள்.
- தேடல் அறிவுறுத்தற் பத்திரப் பிரதிகளைக் குழுவுக்கு ஒன்றாகப் பகிர்ந்தளியுங்கள்.

- அறிவுறுத்தல்களை வாசிப்பதற்கு 5 நிமிட அவகாசம் வழங்குங்கள்.

- பின்வரும் செயற்பாடுகளில் ஈடுபடுத்துங்கள்.

- எளிமையான தலைப்புகளில் தொடங்கிப் படிப்படியாகக் கடினமான தலைப்புகளுக்குச் செல்லுங்கள்.

- அனைவரையும் செயற்பாட்டில் ஈடுபடுவதற்குத் தயாராக இருக்குமாறு அறிவுறுத்துங்கள்.

**தலைப்பு 1 - வட்டமொன்றை உருவாக்குங்கள்**

- 1 - 10 வரை எண்ணுங்கள்.
  (வட்டத்தை ஆக்குவதற்குரிய நேரத்தை ஆசிரியர் தீர்மானித்துக் கொள்ளலாம். 1 - 10 வரை எண்ணும் வேகத்தை மாற்றி நேர அளவைக் கூட்டலாம் அன்றேல் குறைக்கலாம்.)
- 1- 10 வரை எண்ணி முடித்ததைக் குறிப்பதற்காக ஒரு தடவை கை தட்டுங்கள்/அன்றேல் வேறு சமிக்ஞை செய்யுங்கள்.
- சமிக்ஞை வழங்கிய பின்னர் குழுவில் எவரும் அசைதலாகாது என அறிவுறுத்துங்கள்.
- நான்கு குழுக்களையும் அவதானித்து மிகச் சிறந்த வட்டத்தைத் தெரிவு செய்யுங்கள்.
- வெற்றி பெற்ற அக்குழுவைக் கூட்டாகக் கைதட்டிப் பாராட்டுங்கள்.
- வெற்றிபெற்ற குழுவின் ஆக்கபூர்வமான தன்மையையும் செம்மையையும் பற்றி விளக்குங்கள்.
- இரண்டாம் தலைப்புக்காக மாணவரை ஆயத்தப்படுத்துங்கள்.

**தலைப்பு 2 - முக்கோணியொன்று உருவாக்குங்கள்**

- முன்னர் போன்று 1 - 10 வரை எண்ணுங்கள்.
- மிகச் சிறந்த முக்கோணியை அமைத்த குழுவைத் தெரிவு செய்து பாராட்டுங்கள்.
- இவ்வாறாகவே ஏனைய தலைப்புக்களையும் நடைமுறைப் படுத்துங்கள்.

**தலைப்பு 3 - சதுரமொன்றை அமையுங்கள்**

**தலைப்பு 4 - தாமரை மலரொன்றை அமையுங்கள்**

**தலைப்பு 5 - இரட்டை மாட்டு வண்டியொன்று அமையுங்கள்.**

**தலைப்பு 6 - தனியார் பஸ்வண்டியொன்றின் உள்ளே.**

**தலைப்பு 7 - விலங்கினக் காட்சிச்சாலை**

**தலைப்பு 8 - சந்தை**

**தலைப்பு 9 - விபத்து**

**தலைப்பு 10- திருமண வைபவம்**

**(40 நிமிடங்கள்)**

படி 2.4.3 :
- ஆயத்தமின்றிய (புதிதளித்தல்) உடனடிச் சித்திரிப்புகள் குறித்து மாணவரது கருத்துக்களை வினவுங்கள்.
- பின்வரும் விடயங்களை வலியுறுத்திக் கலந்துரையாடுங்கள்.

> - புதிதளித்தற் சித்திரிப்பு/உடனடிச் சித்திரிப்பு என்பதைச் செயல் ரீதியில் இனங்கண்டு கொள்வது அவசியமாகும்.
> - மாணவரது ஆக்கபூர்வமான கற்பனைச் சக்தி வெளிக் கொணரப்படுதல் வேண்டும்.
> - குழுவாகச் சேர்ந்து வளர்த்தெடுக்கப்படும் புதிதளித்தல்/ உடனடிச் சித்திரிப்புகளின்போது தமது பங்களிப்பை உச்ச அளவில் வழங்குவது அவசியமாகும்.
> - நாடகமொன்றுக்காகப் புதிய நடிகர்களைத் தெரிவு செய்வதற்காக (நடிகர் தேர்வுக்காக) புதிதளித்தற் சித்திரிப்பைப் பயன்படுத்தலாம்.
> - புதிதளித்தல் / உடனடிச் சித்திரிப்பில் ஈடுபடுவதால் பின்வரும் தன்மைகளை விருத்தி செய்து கொள்ளலாம்.
>   - முன்வரும் தன்மை
>   - உடனடியாகத் தீர்மானமெடுக்கும் தன்மை
>   - கருத்தூன்றி உன்னிப்பாகச் செவிமடுக்கும் தன்மை

**(20 நிமிடங்கள்)**

**கணிப்பீடும் மதிப்பீடும்:**
- புதிதளித்தல்/உடனடிச் சித்திரிப்பின் இயல்புகளை விவரிப்பார்.
- சூழலை நுணுக்கமாக அவதானிப்பதில் விருப்புக் காட்டுவார்.
- நடிப்புத் திறன்களை விருத்தி செய்துகொள்வார்.
- கூட்டாகச் செயற்படுவார்.
- சமயோசிதமாக இசைவடையப் பழகுவார்.

**இணைப்பு 2.4.1**

## தேடல் அறிவுறுத்தற் பத்திரம்

- தலைப்பு காதில் விழுந்தவுடன் குழு செயற்படத் தொடங்குதல் வேண்டும்.
- ஆசிரியர் 1 - 10 வரை எண்ணி முடிப்பதற்குள் ஆக்கம் பூர்த்தி செய்யப்படுதல் வேண்டும்.
- உடனடியாகக் குழுவின் தலைவர்/தலைவி பதவி ஏற்கப்படுதல் வேண்டும்.
- ஒவ்வொரு குழுவும் தலைப்புத் தொடர்பாக ஆக்கபூர்மாகச் செயற்படுதல் வேண்டும்.
- ஒவ்வொரு தலைப்புத் தொடர்பாகவும் சிறந்த ஆக்கத்தைப் படைத்த குழு தெரிவு செய்யப்படும்.
- குழு அங்கத்தவர்கள் அனைவரும் ஆக்கத்தில் பங்களிப்புச் செய்தல் வேண்டும்.
- தேவையான சந்தர்ப்பங்களில் ஒலிகள், சொல்லாடல்களைப் பயன்படுத்த வேண்டும்.
- இந்த ஆக்கங்களை வளர்த்தெடுப்பதற்காக உடலை மாத்திரமே பயன்படுத்த வேண்டும்.

**தேர்ச்சி 2.0 : படைப்பாக்கச் செயற்பாடுகளில் ஈடுபட்டு நாடகப் படைப்பாக்கத் திறனை வெளிக்காட்டுவார்.**

**தேர்ச்சி மட்டம் 2.5** : கற்பனா சக்தியை முகிழ்த்தெளச் செய்யத்தக்க ஆக்கங்களில் ஈடுபடுவர்.


**செயற்பாடு 2.5** : 'கற்பனையைப் பறக்க விடுவோம்'

**நேரம்** : 03 பாடவேளைகள்

**தர உள்ளீடு** :
- இணைப்பு 2.5.1 இல் தரப்பட்டுள்ள தேடல் அறிவுறுத்தற் பத்திரப் பிரதிகள் போதுமான தொகை.

**கற்றல் - கற்பித்தல் முறைகள்**

**படி 2.5.1** :
- கீழே தரப்பட்டுள்ளது போன்ற 9 சிறிய வட்டங்களைச் சதுர வடிவத்தில் அமையுமாறு கரும்பலகையில் வரையுங்கள்.



- இந்த ஒன்பது புள்ளிகளையும் (வைத்த கையைத் தூக்காது) நான்கு நேர்கோடுகளால் இணைத்துக் காட்டுமாறு அறிவுறுத்துங்கள்.

- பின்வரும் விடயங்களை வெளிக்கொணரும் வகையில் கலந் துரையாடுங்கள்.

> - பிள்ளைகள் தனித்தனியாகவே கற்பனையில் ஈடுபடுதல் வேண்டும்.
> - புதியன படைப்பதற்கு மனதைப் பழக்கப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.
> - ஆக்கம் புரியும்போது புதிய கருத்துக்கள் தோன்றும்.
> - ஒவ்வொருவரதும் கற்பனைச் சக்தி வெவ்வேறுபட்ட தாகையால் புதுப்புது ஆக்கங்கள் உருவாக்கப்படுகின்றன.
> - ஏனையோரின் படைப்புக்களைக் கொண்டு தமது ஆக்கத்திறனைச் செழுமைப்படுத்திக் கொள்ளலாம்.

**(20 நிமிடங்கள்)**

**படி 2.5.2** :
- மாணவரை வட்டமாக அமரச் செய்யுங்கள்.
- தலைப்பை வழங்குங்கள்.
- தேடல் அறிவுறுத்தற் பத்திரப் பிரதிகளைப் பகிர்ந்தளியுங்கள்.
- கற்பனை செய்வதற்கு/சிந்திப்பதற்கு 03 நிமிட அவகாசம் வழங்குங்கள்.
- தாமாக முன்வரும் மாணவரை வட்டத்தின் மத்திக்கு அழைத்து நடித்துக்காட்டச் சந்தர்ப்பமளியுங்கள்.
- ஆசிரியர் உதாரணங்காட்டுதலாகாது.
- மாணவர் ஒவ்வொருவருக்கும் வட்டத்தின் மத்தியில் வந்து நடித்துக் காட்டச் சந்தர்ப்பமளியுங்கள்.
- முன்வைப்புகள் தொடர்பாகக் கருத்துத் தெரிவிப்பதற்கு ஏனைய மாணவருக்குச் சந்தர்ப்பமளியுங்கள்.

**(80 நிமிடங்கள்)**

**படி 2.5.3** :
- பின்வரும் விடயங்களை வலியுறுத்திக் கலந்துரையாடுங்கள்.

- மாணவர் ஒவ்வொருவரும் தனித்தனியாகப் புதியவற்றைக் கற்னை செய்ய/சிந்திக்க முயற்சி செய்தல் வேண்டும்.
- மேடைப் பயமானது, யாதேனுமொன்றினைச் சபையில் சரியான வகையில் முன்வைப்பதற்குத் தடையாக அமையும்.
- எந்தவொரு படைப்பினதும் மூலக்கரு முதலில் மனதிலேயே தோன்றும்.
- ஆக்கம் புரியும் போது புதிய கருத்துக்கள் தோன்றும்.
- ஆக்கத்தை/படைப்பை முன்வைப்பதற்காகப் பொருத்த மானவாறு குரல், உடலின் நிலை, அசைவுகளைக் கையாளுதல் வேண்டும்.
- புத்தாக்கம் புரிவதன் விளைவாக உளத் திருப்தி கிடைக்கும்.

**(20 நிமிடங்கள்)**

**கணிப்பீடும் மதிப்பீடும்:**
- கற்பனா சக்தி என்பது புதியன படைக்கும் ஆற்றலாகும் என்பதை ஏற்றுக் கொள்வார்.
- புதிய படைப்பதால் உளத்திருப்தி கிடைக்கும் என்பதை ஏற்றுக் கொள்வார்.
- ஆக்கம் புரிவார்.
- உள ஒருமைப்பாட்டின் மூலம் கற்பனாசக்தி விருத்தியடையும் என்பதை ஏற்றுக் கொள்வார்.
- நவீன உலகை வெற்றிகொள்வதற்காகப் புதிய சிந்தனைக் கோலமொன்று உருவாவது அவசியம் என்பதை ஏற்றுக் கொள்வார்.

**இணைப்பு 2.5.1**

## தேடல் அறிவுறுத்தற் பத்திரம்

- ''உங்களுக்குச் சிறகுகள் முளைத்தால்'' நீங்கள் என்ன செய்வீர்கள் எனக் கற்பனை செய்து செயற்படும் சந்தர்ப்பம் உங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.
- உங்களுக்குச் சிறகு முளைத்தால் நீங்கள் என்ன செய்வீர்கள் எனத் தனித்தனியே கற்பனை செய்யுங்கள். (அமைதியாக இருந்து கற்பனை செய்வது முக்கியமானது)
- நீங்கள் முன்வைக்கும் செயற்பாடு நிஜ உலகில் நிகழ முடியாத ஒன்றாகவும் இருக்கலாம்.
- ஏனையோர் முன்வைத்த செயற்பாடுகளை முன்வைத்தலாகாது.
- வட்டத்தினுள் உள்ள வெளியை முற்றுமுழுதாக நீங்கள் பயன்படுத்தலாம்.
- உணர்வு வெளிப்பாட்டுக்காகச் சொற்களைப் பயன்படுத்தலாம்.
- வெற்றிகரமான ஆக்கங்கள் முன்வைக்கப்படுமாயின் உடனடியாகக் கைதட்டிப் பாராட்டுங்கள்.

**தேர்ச்சி 2.0 : படைப்பாக்கச் செயற்பாடுகளில் ஈடுபட்டு நாடகப் படைப்பாக்கத் திறனை வெளிக்காட்டுவார்.**

**தேர்ச்சி மட்டம் 2.6 :** குழுநிலையில் கதை புனையச் சூழமைவுகளை ஏற்படுத்திக் கொள்வர்.

**செயற்பாடு 2.6 :** ''கதை புனைந்து கூறுவோம்''

**நேரம் :** 02 பாடவேளைகள்

**தர உள்ளீடு :**
- சம்பவங்கள் நன்கு பொருந்தியமைந்துள்ள கதையொன்றின் சில பிரதிகள். (வகுப்பு மாணவரது தொகைக்கு ஏற்ப) (சித்திரக் கதையாக எழுதப்பட்ட படச்சட்டகங்களைக் கொண்ட கதையொன்றினையும் பயன்படுத்தலாம்).
- மேற்படி கதையின் சில சம்பவங்களை நீக்கி எழுதிய கதையின் பிரதிகள்.
- கதையின் சில சம்பவங்கள் எழுதப்பட்ட சில அட்டைகள்.

**கற்றல் - கற்பித்தல் முறைகள்**

**படி 2.6.1 :**
- வகுப்பு மாணவர் அனைவரையும் திறந்தவெளியான ஓர் இடத்துக்கு அழைத்துச் செல்லுங்கள்.
- மாணவரை வட்டமாக நிறுத்துங்கள்.
- தயார்ப்படுத்திய சம்பவங்களுக்குப் பொருத்தமான கதையின் பிரதிகளை ஆளுக்கு ஒன்றாகப் பகிர்ந்தளியுங்கள்.
- அக்கதையை அமைதியாகக் கருத்தூன்றி வாசிக்க அவகாசமளியுங்கள்.
- சம்பவங்கள் நன்கு பொருத்தியமைந்த கதைகளை வாசித்த பின்னர், அதில் அடங்கியுள்ள ஒவ்வொரு சம்பவத்தையும் தனித்தனியே கருதி, மாணவருடன் கலந்துரையாடுங்கள்.
- இடையிடையே சில சம்பவங்கள் நீக்கப்பட்ட கதைப் பிரதிகளைப் பகிர்ந்தளியுங்கள்.
- அதனை வாசிக்க அவகாசமளியுங்கள்.
- பின்வரும் விடயங்களை வெளிக்கொணரும் வகையில் கலந்துரையாடுங்கள்.

> - கதையின் அனைத்துப் பகுதிகளும் நன்கு பொருத்திய மைவதால் சுவையான கதை உருவாகும்.
> - அக்கதையில் பல சம்பவங்கள் அடித்தளமாக அமைந்துள்ளன.

- அச்சம்பவங்கள் ஒன்றுடனொன்று பின்னிப் பிணைந் துள்ளன.
- அவற்றுள் ஒரு சம்பவத்தையேனும் நீக்குவதால் கதையின் ஒருமைப்பாடு குலையும்.
- அது கதையை இரசிப்பதற்குத் தடங்கலாக அமையும்.
- கதை சுவாரசியமாக அமைவதற்குச் சம்பவங்கள் நன்கு பொருத்தியமைவது அவசியமாகும்.

**(20 நிமிடங்கள்)**

**படி 2.6.2** :

- மாணவரை நான்கு குழுக்களாகப் பிரியுங்கள்.
- தேடல் அறிவுறுத்தற் பத்திரப் பிரதிகளைக் குழுவுக்கு ஒன்றாகப் பகிர்ந்தளியுங்கள்.
- செயற்பாட்டில் ஈடுபடுத்துங்கள்.
- ஆக்கத்தை வகுப்பில் முன்வைக்க ஆயத்தமாகுமாறு அறிவுறுத்துங்கள்.

**(40 நிமிடங்கள்)**

**படி 2.6.3** :

- குழு ஆக்கங்களை வகுப்பில் முன்வைக்கச் சந்தர்ப்ப மளியுங்கள்.
- அந்தக் குழுவின் கருத்துக்களைப் பெறுங்கள்.
- ஏனைய குழுக்களின் கருத்துக்களைப் பெறுங்கள்.
- பின்வரும் விடயங்களை வலியுறுத்திக் கலந்துரையாடுங்கள்.

- சம்பவங்களைத் தொகுத்துக் கதை புனையலாம்.
- கதையின் ஒரு சம்பவத்திலிருந்து மேலும் பல சம்பவங் களுக்குச் செல்லலாம்.
- அவ்வாறு செல்வதால் ஆக்கத்திறன்மிக்க கதைகள் புனையலாம்.
- கூட்டாகச் செயற்படுவதால் ஆக்கப்பணிகளை இலகுபடுத்திக் கொள்ளலாம்.

**(20 நிமிடங்கள்)**

**கணிப்பீடும் மதிப்பீடும்:**

- பல சம்பவங்களைப் பொருத்தமானவாறு தொகுப்பதால் கதை உருவாகும் எனக் கூறுவார்.
- அச்சம்பவங்களை ஒரு தொடராகக் கோர்ப்பதன் மூலம் ஆக்கத்திறன் மிக்க கதையைப் புனையலாம் என்பதை ஏற்றுக் கொள்வார்.
- கூட்டாகச் சேர்ந்து பல சம்பவங்களை உள்ளடக்கிய கதைகளை வளர்த்தெடுப்பார்.
- ஆக்கபூர்வமாகச் சிந்தித்துச் செயற்படும் ஒருவராக உருவெடுப்பார்.
- வாழ்க்கையை இரசிக்கப் பழகிக்கொள்வார்/பேச்சாற்றலை வளர்த்துக் கொள்வார்.

**இணைப்பு 2.6.1**

## தேடல் அறிவுறுத்தற் பத்திரம்

- இரண்டு குழுக்களாகப் பிரியுங்கள்.
- தரப்பட்டுள்ள தலைப்புக் குறித்துக் கவனஞ் செலுத்துங்கள்.
  - ஆமையும் முயலும் பந்தயம் பிடித்த கதை.
- கதையின் சம்பவங்களை எழுதுங்கள்.
- அவற்றைப் பொருத்தமாகத் தொடுத்துக் கதையைப் புனையுங்கள்.
- புதியதொரு கதையைப் புனைவதில் கவனஞ் செலுத்துங்கள்.
- அக்கதைக்குரிய சம்பவங்களைக் கற்பனை செய்து அட்டைகளில் எழுதுங்கள்.
- தலைவர் கதையைச் சொல்ல ஆரம்பியுங்கள்.
- பின்னர், குழு அங்கத்தவர் ஒவ்வொருவரும் கதையின் அடுத்தடுத்த சம்பவங்களைத் தொடுத்துக் கூறுங்கள்.
- இறுதியில் முழுக் கதையையும் வகுப்பில் முன்வையுங்கள்.

**ஒப்படை:** இப்பயிற்சியில் பல தடவை ஈடுபடுங்கள்.

**தேர்ச்சி 2.0 : படைப்பாக்கச் செயற்பாடுகளில் ஈடுபட்டு நாடகப் படைப்பாக்கத் திறனை வெளிக்காட்டுவார்.**

**தேர்ச்சி மட்டம் 2.7** : வரலாற்றுக் கதைகளைக் கற்பனையுடன் இணைத்து அவற்றை நடிப்பதற்குரிய சூழமைவை ஏற்படுத்திக் கொள்வர்.

**செயற்பாடு 2.7** : ''நாம் எம்மைப் பற்றிக் கற்போம்''

**நேரம்** : 03 பாடவேளைகள்

**தர உள்ளீடு** :
- வரலாற்றுச் சம்பவமொன்றைக் கூறும் பாடல்/கவிதை ஒலிப்பதிவு செய்யப்பட்ட இறுவட்டு (CD)
- இணைப்பு 2.7.1 இல் தரப்பட்ட தேடல் அறிவுறுத்தற் பத்திரப் பிரதிகள்.
- இணைப்பு 2.7.2 இல் தரப்பட்டுள்ள வரலாற்றுக் கதைகள் அன்றேல் அதுபோன்ற வேறு பொருத்தமான கதைகளின் பிரதிகள்.

**கற்றல் - கற்பித்தல் முறைகள்**

**படி 2.7.1** :
- இலங்கை வரலாற்றோடு தொடர்புடைய வரலாற்று நாடகமொன்றின் காட்சி ஒன்றினை மாணவர்கள் பார்க்கச் செய்யுங்கள்.

அன்றேல்

- வரலாறு சார்ந்த வானொலி நாடகமொன்றின் பகுதியைக் கேட்கச் செய்யுங்கள்.

அன்றேல்

- வரலாற்று நாடக எழுத்துருவொன்றின் ஒரு காட்சியை நாடகப் பாங்குடன் வாசித்துக் காட்டுங்கள்.

- மாணவர் கற்று வைத்துள்ள வரலாற்றுக் கதைகள் பற்றி வினவுங்கள்.

- அதன் நாடகப் பொருத்தம் பற்றி வினவுங்கள். பின்வரும் விடயங்களை வெளிக்கொணரும் வகையில் கலந்துரையாடுங்கள்.

| |
|---|
| • வரலாற்றை அடிப்படையாகக் கொண்டு ஆக்கப்பட்டுள்ள கதைகள் பல உள்ளன.<br>• அக்கதைகள் மூலம் வரலாற்றில் இடம்பெற்றுள்ள முக்கிய பாத்திரங்கள் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.<br>• அவ்வாறான பாத்திரங்களும் சம்பவங்களும் நாடகத்துக்குப் பொருத்தமான விடயப் பொருள்களைத் தருகின்றன.<br>• கற்பனையையும் படைப்பாற்றலையும் பயன்படுத்தி அச்சம்பவங்களையும் சூழமைவுகளையும் நாடகமாக முன்வைக்கலாம். |

**(20 நிமிடங்கள்)**

**படி 2.7.2** :

- மாணவரை நான்கு குழுக்களாகப் பிரியுங்கள்.
- தேடல் அறிவுறுத்தற் பத்திரப் பிரதிகளைக் குழுவுக்கு ஒன்றாகப் பகிர்ந்தளியுங்கள்.
- கதைப் பிரதிகளையும் குழுவுக்கு ஒன்றாக எழுமாறாகப் பகிர்ந்தளியுங்கள்.
- குழுவில் ஒருவர் (தலைவர்) ஏனையோருக்குக் கேட்கும் வகையில் கதையை வாசிக்குமாறு அறிவுறுத்துங்கள்.
- கதையுடன் கற்பனையைக் கலந்து நாடகச் சூழமைவை உருவாக்குமாறு மாணவரை வழிப்படுத்துங்கள்.
- தமது குழுவின் படைப்பை வகுப்பில் முன்வைக்க ஆயத்தமாகுமாறு அறிவுறுத்துங்கள்.

**(60 நிமிடங்கள்)**

**படி 2.7.3** :

- குழு ஆக்கங்களை வகுப்பில் முன்வைக்கச் சந்தர்ப்ப மளியுங்கள்.
- அந்தக் குழுவின் கருத்துக்களை வினவிப் பெறுங்கள்.
- ஏனைய குழுக்களின் ஆக்கங்களுக்கான கருத்துக்களைப் பெறுங்கள்.
- பின்வரும் விடயங்களை வலியுறுத்திக் கலந்துரையாடுங்கள்.

> - வரலாற்றுக் கதைகளில்/நாட்டார் கதைகளில் அடங்கியுள்ள நாடகப் பொருத்தமான சந்தர்ப்பங்களையும் நிகழ்வுகளையும் இனங்காண்பது அவசியமாகும்.
> - பொருத்தமான பேச்சுப் பாணியைப் பயன்படுத்திச் சொல்லாடல்களை வளர்த்தெடுத்தல் வேண்டும்.
> - சம்பவங்கள் தொடர்ச்சியாகப் பொருத்தியமைக்கப்படுதல் வேண்டும்.
> - விடயப் பொருளுக்குப் பொருத்தமானவாறு சூழமைவு களை வளர்தெடுத்தல் வேண்டும்.
> - பாத்திரச் சித்திரிப்பின்போது படைப்பாக்கத்துக்குப் பொருத்தமானவாறு பாத்திரங்களை உட்படுத்துதல் வேண்டும்.
> - நடிப்புக்குப் பொருத்தமானவாறு சூழமைவுகளை வளர்த் தெடுத்தல் வேண்டும்.

**(40 நிமிடங்கள்)**

**கணிப்பீடும் மதிப்பீடும்:**

- வரலாற்றுக் கதைகளையும் அவற்றை அடிப்படையாகக் கொண்ட நாட்டார் கதைகளையும் இனங்காண்பார்.
- அக்கதைப் பொருள்களைத் தழுவி நாடக எழுத்துருவை எழுதுவார்.
- வரலாற்றில் இடம்பெற்றுள்ள சுவாரசியமான விடயங்களைத் தேடியறிய முனைவார்.
- வரலாறு கற்கும் ஓர் உத்தி என்ற வகையில் நாடகத்தின் முக்கியத்துவத்தை விளங்கிக்கொள்வார்.
- எமது வரலாற்றின் முக்கியமான மைற்கற்களைப் (எமது அருஞ்செல்வங்களை) பற்றிய பெருமையுணர்வை அனுபவிப்பார்.

**இணைப்பு 2.7.1**

## தேடல் அறிவுறுத்தற் பத்திரம்

- உங்களது குழுவுக்குத் தரப்பட்டுள்ள வரலாற்றுக் கதையை/நாட்டார் கதையைக் கருத்தூன்றி வாசியுங்கள்.
- கதையில் நாடகப் பொருத்தமான சூழமைவுகளை இனங்கண்டு கொள்ளுங்கள்.
- அச்சூழமைவுகளுக்குப் பொருத்தமான சொல்லாடல்களை வளர்த்தெடுங்கள்.
- கதைப்பொருளுக்கு அடிப்படையாக அமைந்த காலப்பகுதியைக் கற்பனை செய்து பொருத்தமான பேச்சுப் பாணியைப் பயன்படுத்துங்கள்.
- எளிமையான நாடகச் சூழமைவொன்றினை வளர்த்தெடுங்கள்.
- உங்களது ஆக்கத்தை வகுப்பில் முன்வைக்க ஆயத்தஞ் செய்து கொள்ளுங்கள்.

**இணைப்பு 2.7.2**

## தகவற் கோவை - கதைப் பிரதிகள்

- **குழு 1 - வெடியரசன்**

அக்காலத்தில் யாழ்ப்பாணத்தின் வடபுலத்தினை ஆண்ட சிற்றரசர்களில் ‘கடலரசன்’ என அழைக்கப்பட்டவன் ‘குகன்’ என்னும் இயற்பெயரைக் கொண்ட ‘வெடியரசனாவான். வெடியரசனுக்கு வீரநாராயணன், விளங்குதேவன், போர்வீர கண்டன், ஏரிழங்குருவன் என்னும் நான்கு சகோதரர்கள் இருந்தனர். இவர்களும் சிற்றரசர்களாக யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளை ஆண்டு வந்தனர். இவர்கள் கடலில் வரும் கப்பல்களை மறித்துச் சூறையாடுவதிலும் கடற்சமர் புரிவதிலும் வல்லவர்களாகத் திகழ்ந்தனர். வெடியரசன் நெடுந்தீவினைத் தலைமை நிலமாகக் கொண்டு தீவுப்பகுதிகளை ஆண்டு வந்தான். அவனால் அமைக்கப்பட்ட கோட்டை இன்றும் நெடுந்தீவில் காணப்படுகின்றது.

ஒரு சமயம் சோழ நாட்டில் இருந்து தெய்வப் பெண்ணாகிய கண்ணகிக்குக் காற்சிலம்பு செய்வதற்கு நாகரத்தினங்களைப் பெற்றுச் செல்வதற்காக மாநாயக்கனின் ஆணைப்படி மீகாமன் இலங்கைக்குப் படை கொண்டு வந்தான். இதை அறிந்த வெடியரசன் படைதிரட்டிச் சென்று கடலில் மீகாமனின் படைகளைச் சுற்றி வளைத்தான். கடற்சமர் ஆரம்பமாகியது. வெடியரசனின் போர்த்திறனுக்கு ஈடுகொடுக்க முடியாத மீகாமன் பின்வாங்கி, கண்ணகியை வணங்கி அருள் பெற்று மீண்டும் போரிட்டுத் தெய்வ பலத்தினால் வெடியரசனைத் தோற்கடித்துக் கைது செய்தான். இதனை அறிந்த

வெடியரசனின் சகோதரன் வீரநாராயணன், படை திரட்டி மீகாமனுக்கு எதிராகப் போர் தொடுத்தான். அவனின் போர்த்திறனை அறிந்த மீகாமன் சமாதானமாவதற்கு விரும்பினான். அதை ஏற்றுக் கொள்ளாத வீரநாராயணன் வீரமாகப் போரிட்டான். அவனது போர்த்திறனுக்கு ஈடுகொடுக்க முடியாத மீகாமன் மீண்டும் கண்ணகியை வணங்கி வரம் பெற்றுப் போரிட்டு வீரநாராயணனைக் கொன்றொழித்தான். தன்னைக் காக்க வந்த சகோதரன் இறந்த செய்தி கேட்டு வெடியரசன் கடுந்துன்பமடைந்தான்.

வீரநாராயணன் இறந்த செய்தியைக் கேள்விப்பட்ட மற்றைய சகோதரனான, ஏரிழங்குருவன் சினத்துடன் மீகாமனுக்கெதிராகப் போர் தொடுத்தான். ஏரிழங்குருவனின் சீற்றத்தைக் கண்டு அஞ்சிய மீகாமன் வெடியரசனிடம் தான்வந்த காரணத்தினை எடுத்துக்கூறிக் கண்ணகி என்ற தெய்வப் பெண்ணுக்கான சிலம்பு தயாரிக்கும் புனிதப் பணிக்கு உதவும் படியும், சமாதானமாகுமாறும் கோர, இது ஒரு தெய்வ காரியம் என்றுணர்ந்த வெடியரசன் சமாதானமாகி ஏரிழங்குருவனையும் தடுத்து மீகாமன் விரும்பி வந்த நாகரத்தினங்களையும் வழங்கி மீகாமனைச் சமாதானமாக அனுப்பி வைத்தான். அவனின் பெருந்தன்மைக்கு நன்றிகூறி மீகாமன் சோழ நாடு திரும்பினான். இதனால் வெடியரசனின் புகழ் சோழ நாட்டிலும் பரவியது.

- **குழு 2 - ஆனை கட்டிய அரியாத்தை**

வன்னி மண்ணினைச் சின்ன வன்னியன் மன்னன் ஆண்ட காலத்தில் யானைகளை அடக்கிக் கட்டி வருகின்ற ஒரு பாரம்பரியம் காணப்பட்டது. இதற்கெனப் ‘பணிக்கர்’ குலமென்னும் வீரஞ்செறிந்த ஒரு பரம்பரை மரபினர் காணப்பட்டனர். அம்மரபில் ஆண்கள் மட்டுமன்றிப் பெண்களும் வீரஞ்செறிந்தவர்களாகக் காணப்பட்டனர்.

ஒரு தடவை கொம்பன் யானையொன்று கண்டல்காட்டுப் பகுதியில் மதங்கொண்டு கிராமத்தவர்களுக்குப் பெரும் அழிவைச் செய்தது. அதனை இலகுவாக யாராலும் அடக்கிக் கட்ட முடியவில்லை. இதனை அறிந்த சின்ன வன்னியன் மன்னன் ஏழூர்களிலும் இருந்த பணிக்கர்களை அழைத்து அந்த மத யானையை யார் அடக்கவல்லவரென ஆலோசனை செய்தான். ஏழூர்ப்பணிக்கர்களில் வீரஞ்செறிந்தவ னாக விளங்கியவன் வேலப்பணிக்கன். அவனது மனைவியே அரியாத்தையாவாள். அங்கிருந்த பணிக்கர்கள் அனைவரும் ‘‘அடங்காத யானைகளை அடக்கவல்லவன் வேலப்பணிக்கனே’’ என விதந்துரைக்க அங்கிருந்த வேலப்பணிக்கனில் தனிப்பட்ட ரீதியாகப் பகைமை கொண்டிருந்த நீலப்பணிக்கன் என்பவன் அவனை நகைத்து எள்ளி நகையாடி, ‘வேலப்பணிக்கனால் அதனை அடக்க முடியாது. அவன் மனைவி ‘அரியாத்தை’ வேண்டுமனால் அதனை அடக்குவாள்’ என்று இகழ்ந்துரைத்தான். பொறாமையினால் அவன் அவ்வாறு கூறினான் என்பதனை உணர்ந்த சின்ன வன்னியன் மன்னன் நீலப்பணிக்கனைக் கண்டித்து வேலப்பணிக்கனிடமே அந்த மத யானையைக் கட்டும் பொறுப்பினை ஒப்படைத்தான்.

மன்னன் சபையில் வேலப்பணிக்கனை அவமதித்த நீலப்பணிக்கனின் வார்த்தைகளை அறிந்த வேலப்பணிக்கனின் மனைவி அரியாதை கோபங்கொண்டு அவன் இகழ்ந்துரைத்த வார்த்தையையே நிறைவேற்றிக் காட்டுவேன் எனச் சூளுரைத்துக் கணவனின் ஆலோசனையோடு கண்டல்க் காட்டுக்குச் சென்று கற்பின் வலிமையினாலும் மந்திர பலத்தினாலும் வீரத்தினாலும் அந்த மத யானையை அடக்கி அதன் மேல் ஏறி அரண்மனை வந்தாள். அவளை வரவேற்ற மன்னன் அவளது வீரத்தினைப் புகழ்ந்து பாராட்டியதுடன் பல்வேறு உபசாரங்களும் செய்து வழியனுப்பி வைத்தான். அரியாத்தையின் புகழ் வன்னியெங்கும் பரவியது. இன்றுவரை ‘ஆனை கட்டிய அரியாத்தை’ என்னும் பெயர் வன்னிப் பிரதேசத்தில் நிலைத்துள்ளது.

- **குழு 3 - யாழ்ப்பாணன்**

அக்காலத்திலே இலங்கையின் வடதிசையை (செங்கடக நகர்) உக்கிரசிங்கனின் மகன் 'வாலசிங்கன்' அரசாண்டு கொண்டிருந்தான். கொடைச் சிறப்புமிக்க அவனைப் பலரும் நாடி வந்து பொருள் வேண்டிச் சென்றனர். பல்வேறு புலவர்களும் அவனைப் புகழ்ந்து பாடிப் பரிசில் பெற்றுச் சென்றனர். அவனது புகழைக் கேள்வியுற்ற பலரும் சோழ நாடு முதலாக வருகை தந்தனர்.

அக்காலத்தில் இரண்டு கண்களும் குருடான புலவர் ஒருவர் சோழ நாட்டில் இருந்து மிகுந்த சிரமத்துடன் செங்கடக நகர் வந்து, வாலசிங்கனைக்காண முயன்றார். அவர் அந்தகனாக இருந்தபடியினால் மன்னனைக் காண்பதற்கு வாயிற் காவலர் விடவில்லை. இதனால் வருத்தமுற்ற புலவர் மாளிகையின் வெளியே நின்றவாறு தன்நிலையை எண்ணி வருந்தி யாழ் இசைத்துப் பாடினார். அரண்மனையில் உலாவிக் கொண்டிருந்த மன்னனுக்கு அவ் ஏழைப் புலவனின் குரல் கேட்டது. இரக்கமுற்ற மன்னன் அவரை உடனே அழைத்து வரக் கட்டளை இட்டான். அந்தகனான அவருக்கு எல்லா உபகாரமும் செய்து மகிழ்வித்தான்.

மகிழ்வடைந்த அந்தப்புலவன் மன்னன் வாலசிங்கனைப் புகழ்ந்து பிரபந்தம் ஒன்றினை இயற்றியது மட்டுமன்றித் தானே யாழ் இசைத்து அப்பிரபந்தத்தினைப் பாடினார். அவரது பாடலில் பெரிதும் மகிழ்வுற்ற மன்னன் அப்புலவனிற்கு வட திசையில் இருந்த மணற்றிடைப் பிரதேசமொன்றினைப் பரிசாக வழங்கினான். அப்பிரதேசம் அது முதல் யாழ்ப்பாணம் என்றும் அப்புலவன் யாழ்ப்பாணன் என்றும் அழைக்கப்பட லாயினர்.

- **குழு 4 - மாருதப்பிரவல்லி**

அக்காலத்தில் இலங்கையின் வடபுலத்தினைக் கதிரமலையைத் (தற்போதய கந்தரோடை) தலைநகராகக் கொண்டு உக்கிரசிங்கன் என்னும் மன்னன் ஆட்சி செய்தான். இவன் சிறந்த இறை பக்தி மிகுந்தவனாக இருந்ததுடன், வெகுதிரளான சேனைகளைத் திரட்டிச் சில தலைமுறையாய் இழந்து போயிருந்த இலங்கையின் அரசாட்சியில் அரைவாசியை மீளவும் கைப்பற்றி நிபுணத்துவத்துடன் ஆண்டு வந்தான்.

இவனது காலத்தில் கீரிமலை நகுலேஸ்வரர் தலமும், அதில் இருந்த தீர்த்தக் குளமும் அதிக புகழ் பெற்றவையாக விளங்கின. நகுலமுனி என்னும் முனிவர், கீரிமுகத்தோடு வந்து அத்தீர்த்தத்தில் மூழ்கி எழுந்து நலம் பெற்றதனால் கீரிமலை என்று அழைக்கப்பட்டது. அத்தலத்திற்கு நீங்காத வியாதி உடைய பலரும் வந்து தீர்த்தம் செய்து வியாதி நீங்கினர் என்ற காரணத்தினால் கீரிமலை நகுலேஸ்வரர் தலம் உக்கிரசிங்கன் மன்னனால் அதிக கவனிப்புக்குள்ளாகியது.

அவ்வாறு இருக்கும் காலத்தில் சோழ நாட்டில் இருந்து சோழ தேசாதிபதியாகிய திசையுக்கிரசிங்கனின் மகள் மாருதப்பிரவல்லி 'குன்ம நோய்' ஒன்றினால் பீடிக்கப்பட்டு கீரிமலைத் தீர்த்தத்தில் நீராடி நலம் பெறலாமென்ற 'சாந்தலிங்கம்' என்னும் சந்நியாசியின் ஆலோசனையின் பெயரில் கீரிமலைக்கு வந்தாள். தாதியர், தோழியர், சேனைவீரர் எனப் பலரும் ஒன்றிணைந்து வந்தபோது அப்பிரதேசமெங்குமே பெரும் எழுச்சி ஏற்பட்டது.

கீரிமலைத் தீர்த்தத்தில் நீராடியதும் மாருதப்பிரவல்லியின் குதிரை முகத்தையொத்த குன்ம நோய் நீங்கி எழிலுடைய தோற்றம் பெற்றாள். தான் குணம் பெற்றதனை உணர்ந்து மகிழ்ந்த அவள் அதற்கு நன்றியாக ஒரு கோவில் கட்டுவதற்கு முடிவு செய்தாள்.

அச்சமயம் அங்குவந்த உக்கிரசிங்கன், மாருதப்பிரவல்லியைக் கண்டதும் அவள் அழகில் மயங்கி, அவளை திருமணம் செய்ய விரும்பினான். தனது நோக்கத்தினை அவளுக்கு எடுத்துரைத்தான். அதை மறுத்த மாருப்புரவல்லி தனது நோக்கம் நிறைவேறாமல் திருமணம் செய்ய மாட்டேன் என்று உறுதிபடக் கூறினாள். உடனே ஏமாற்றம் அடைந்தாலும் அவளின் நோக்கம் என்ன என்பதனை அறிய முயன்றான். கோவில் கட்டுவதுதான் அவள் நோக்கம் என்று அறிந்ததும் மகிழ்ந்து, மாவிட்டபுரத்திலே தனது முழுப்பலத்தையும் கொண்டு அவள் விரும்பியவாறு கோவில் ஒன்றைக் கட்டுவித்தான். அதுவே மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் என இன்றும் வழங்கிவருகின்ற கோவிலாகும்.

கோவில் கட்டப்பட்டதும் மகிழ்வடைந்து உக்கிரசிங்கனையே மாருதப்பிரவல்லி திருமணம் செய்தாள். அவர்கள் இருவருக்கும் பிறந்த வாரிசுகளே பின்னர் கதிரமலையை ஆண்டனர்.

**தேர்ச்சி 2.0 : படைப்பாக்கச் செயற்பாடுகளில் ஈடுபட்டு நாடகப் படைப்பாக்கத் திறனை வெளிக்காட்டுவார்.**

**தேர்ச்சி மட்டம் 2.8** : பல்வேறு வேடமுகங்களை உணர்வுகள்/கருத்துக்கள் புலப்படுமாறு தயாரிப்பர்.

**செயற்பாடு 2.8** : ''வேடமுகமொன்று செய்வோம்''

**நேரம்** : 03 பாடவேளைகள்

**தர உள்ளீடு** :
- கழித்தொதுக்கப்படும் காட்போட் துண்டுகள் சில
- உலர்ந்த பாளைத்துண்டுகள் சில
- மாக்கர் பேனைகள் சில
- லக்கர் பூச்சு
- றப்பர் பூச்சு
- தூரிகைகள்
- றப்பர் வார்கள்/துணி நாடாக்கள்/இலாஸ்ரிக் நாடாக்கள்
- ஸ்டேப்ளர் கருவி
- A4 கடதாசிகள்/டிமை தாள்கள்
- கத்தரிக்கோல்/கடதாசி வெட்டி
- தயாரித்து முடிக்கப்பட்ட வேட முகங்கள் சில (சிரிப்பு, அழுகை, பீதி முகங்கள்)

**கற்றல் - கற்பித்தல் முறைகள்**

**படி 2.8.1** :
- மாணவரை வெளியான ஓர் இடத்தில் திரட்டி இருவரிருவராகப் பிரித்து முகத்தை முகம் நோக்கியவாறு இருக்கும் வகையில் நிறுத்துங்கள்.



***வேடமுகம்***

- ஒருவர் முகத்தை மற்றொருவர் சிறிது நேரம் பார்த்திருக்குமாறு அறிவுறுத்துங்கள்.
- ஒருவர் அவதானித்துக் கொண்டிருக்கையில் மற்றவர் கட்டளைகளுக்கேற்பச் செயற்படுதல் வேண்டும் என அறிவுறுத்துங்கள்.
- மாற்றி மாற்றி இருவருக்கும் கட்டளைகள் பிறப்பியுங்கள்.
- அவரவரது முகத்தில் உணர்வுகள் வேறுபடும் விதத்தை அவதானிக்கத்தக்க வகையில் கட்டளைகளை வழங்குங்கள்.
  உதாரணம்:
  - பல்வரிசைகளைக் காட்டிச் சிரியுங்கள்.
  - ஒப்பாரி வையுங்கள்.
  - பயப்படுங்கள்.
  - பெருமிதத்தைக் காட்டுங்கள்.
  - கவலையைக் காட்டுங்கள்.
  - வியப்படையுங்கள்.

- பின்வரும் விடயங்களை வெளிக்கொணரும் வகையில் கலந் துரையாடுங்கள்.



*வேடமுகம்*

> - மனிதனின் முகம் வெவ்வேறு உணர்வுகளின்படி நிதமும் வேறுபாடுகளைக் காட்டும்.
> - ஒருவரின் முகத்தைப் பார்த்திருப்பவருக்கு அவ்வேறுபாடு களைத் தெளிவாக இனங்காணலாம்.
> - அவ்வுணர்வுகளை ஏனையோர் இனங்காணத்தக்க வகையில் வெளிக்காட்டுவது 'பாவ வெளிப்பாடு' எனப் படும்.
> - கவலை, மகிழ்ச்சி, வியப்பு, சினம் போன்ற வெவ்வேறு நிலைகளில் பாவ வெளிப்பாடு வேறுபடும்.
> - அவ்வாறான பாவ வெளிப்பாடுகளை மீள உருவாக்கலாம்.
> - பாவ மீள் உருவாக்கத்திற்காக வேடமுகங்களைத் தயாரிக்கலாம்.
> - வேடமுகங்களை அணிவதால் ஒரு நிரந்தரமான பாவ வெளிப்பாட்டைக் காட்டலாம்.
> - நாடகத்தில் வேடமுகங்கள் சிறப்பிடத்தைப் பெறும்.
> - கழித்தொதுக்கும் பொருள்களைப் பயன்படுத்தி இலகுவாக வேடமுகங்கள் செய்யலாம்.
> - அரிமரம், வேறு பொருள்கள் போன்றவற்றைப் பயன் படுத்தி இலங்கையில் வேடமுக உற்பத்தி மேற்கொள்ளப் படுகின்றது.

**(20 நிமிடங்கள்)**

**படி 2.8.2** :


- மாணவருக்கு A4 கடதாசி அன்றேல் டிமை தாள் ஒவ்வொன்று வீதம் பகிர்ந்தளியுங்கள்.
- மாணவரை இருவரிருவராகப் பிரியுங்கள்.
- பரஸ்பரம் முகங்களைப் பார்த்து அழுகை முகம், சிரிப்பு முகம், அச்ச முகம் என்றவாறாக முகங்களை எளிமையான வகையில் வரைந்துகொள்ள அவகாசமளியுங்கள்.

☺ 😐 ☹



*வேடமுகம்*

- இருவர் கொண்ட குழுக்களுக்குத் தர உள்ளீடுகளைப் பகிர்ந்தளியுங்கள்.
- தம்மாலான அளவுக்கு ஆக்கபூர்வமாக அப்பொருள்களைப் பயன்படுத்தி எளிமையான வேடமுகமொன்றை அமைக்குமாறு ஒவ்வொரு குழுவுக்கும் அறிவுறுத்துங்கள்.
- போதுமான அளவு நேரம் வழங்குங்கள்.
  (ஒரு பாடவேளை அளவு)



வேடமுகம்

- கண், வாய், மூக்கு போன்றவை அமையும் இடங்களில் துவாரங்கள் அமையுமாறு வேடமுகத்தை ஆக்குமாறு அறிவுறுத்துங்கள்.
- டிமைதாள்கள், மார்க்கர் பேனைகள், நிறப்பூச்சு, தூரிகைகள் போன்றவற்றைப் பயன்படுத்தி ஆக்கத்தை அழகுபடுத்த அறிவுறுத்தல் வழங்குங்கள்.
- சூழலில் காணப்படுகின்ற இலகுவாகப் பெறத்தக்க எந்தவொரு பொருளையும் இதற்காகப் பயன்படுத்தத்தக்க முறைமை தொடர்பாக மாணவரது கவனத்தைத் திருப்புங்கள்.
  உதாரணம்: தென்னம்பாளை, கமுகம்பாளை, பனம்பாளை, காட்போட், ஈரப்பலா இலை, தேக்கு மர இலை...
- மாணவரது ஆக்கங்களைத் தமது திறன்கள் வெளிக்கொணரப் படும் வகையில் ஆக்குவதற்குச் சந்தர்ப்பமளியுங்கள்.
- ஆசிரியரும் மாணவருடன் கூட்டாகச் செயற்பட்டு எளிமை யான வேடமுகமொன்றினை ஆக்குங்கள்.
- ஆக்கங்களை வகுப்பில் முன்வைக்க ஆயத்தஞ் செய்து கொள்ளுமாற அறிவுறுத்துங்கள்.

**(80 நிமிடங்கள்)**

**படி 2.8.3** :

- மாணவரது ஆக்கங்களை வகுப்பில் முன்வைக்கச் சந்தர்ப்பமளியுங்கள்.
- முன்வைத்த குழுவின் கருத்துக்களை வினவிப் பெறுங்கள்.
- ஏனைய குழுக்களின் ஆக்கபூர்வமான கருத்துக்களைப் பெறுங்கள்.
- பின்வரும் விடயங்களை வலியுறுத்திக் கலந்துரையாடுங்கள்.



வேடமுகம்

- வேடமுகம் அணிந்து கொள்வதானது சித்திரிப்புக்குத் துணையாக அமையும்.
- மேடைப் பயத்தைத் தவிர்க்கும் ஒரு வழியாகவும் வேடமுகம் உதவும்.
- சூரன்போர், வேட்டைத் திருவிழா போன்ற சடங்குகளில் வேடமுகங்கள் பயன்படுத்தப்படுகின்றன.
- சிங்கள மக்களின் சாந்திக் கிரியைகள், தொவில் போன்றவற்றில் வேட முகங்கள் பயன்படுத்தப்படுகிறன.
- சூழலில் காணப்படும் தாவர இலைகள் ஏனைய தாவரப் பகுதிகள் போன்றவற்றால் சமயோசிதமாக வேட முகங்களை ஆக்கிக் கொள்ளலாம். அதன் மூலம் ஆக்கத்திறன் விருத்தியடையும்.

- வெவ்வேறு பாவங்களை/உணர்ச்சிகளை வெளிப்படுத்தக் கூடிய வகையில் பல்வேறு விதமாக வேடமுகங்களை அமைத்துக் கொள்ளலாம்.
- ஆக்கத்திறன்மிக்க கலைஞர்களுக்கு ஆக்கபூர்வமான வகையில் வேடமுகங்களை அமைத்துக் கொள்ளலாம்.

**(20 நிமிடங்கள்)**


**கணிப்பீடும் மதிப்பீடும்:**

- அரங்கக் கலையில் அரங்கப் பொருளாக வேடமுகங்கள் பயன்படுத்தப்படுகின்றமையைக் குறிப்பிடுவார்.
- வெவ்வேறு பாத்திர வகைகளை முன்வைப்பதற்கு வேடமுகங்கள் துணையாகும்.
- இலகுவாகப் பெறத்தக்க பொருள்களைப் பயன்படுத்தி உணர்ச்சி/பாவங்கள் வெளிப்படுத்தப்படும் வகையில் வேடமுகங்களை ஆக்கிக் கொள்ளலாம்.
- கைத்திறன் மிக்க ஒருவராக உருவெடுப்பார்.
- ஆக்கம்புரிவதில் ஈடுபடுவார்.

**இணைப்பு 2.8.1**

## தேடல் அறிவுறுத்தற் பத்திரம்

- இணைப்பு 2.8.1 இற்குரியவை படி 2.8.2 இல் சகல விபரங்களும் தரப்பட்டுள்ளன.


*வேடமுக ஒப்பனை*

**தேர்ச்சி 2.0 : படைப்பாக்கச் செயற்பாடுகளில் ஈடுபட்டு நாடகப் படைப்பாக்கத் திறனை வெளிக்காட்டுவார்.**

**தேர்ச்சி மட்டம் 2.9.1 :** பாத்திரத்துக்கு ஏற்ற வகையில் வேட உடைகளைத் தயாரிப்பர்.

**செயற்பாடு 2.9.1 :** ''பாத்திரத்திற்கேற்ப வேட உடை தரிப்போம்; வேட மேற்று நடிப்போம்''

**நேரம் :** 02 பாடவேளைகள்

**தர உள்ளீடு :**
- பல்வேறு விதமான வேட உடைகள் தரித்துள்ள சில பாத்திரங்களைக் காட்டும் ஒளிப்படங்கள்/படங்கள்/சித்திரங்கள்

**கற்றல் - கற்பித்தல் முறைகள்**

**படி 2.9.1.1 :**
- வேட உடைகள் தரித்துள்ள நாடகப் பாத்திரங்களின் ஒளிப்படங்களை வகுப்பில் காட்சிப்படுத்தி அப்பாத்திரங்கள் எவை என மாணவரிடம் வினவுங்கள்.
- பாத்திரங்களை இனங்காண்பதற்கு அவர்கள் அணிந்துள்ள உடைகள் எந்த அளவுக்குத் துணையாக அமைந்தன என வினவுங்கள்.
- பின்வரும் விடயங்களை வெளிக்கொணரும் வகையில் கலந்துரையாடுங்கள்.

> - நாடகமொன்றுக்காக நடிகர்கள் வெவ்வேறு பாத்திரங்களைச் சித்திரிப்பதற்கெனத் தரிக்கும் உடைகள் வேட உடைகள் எனப்படும்.
> - முதன்மையாகப் பாத்திரங்களை இனங்காண்பதற்கு வேட உடைகள் துணையாகும்.
> - பொதுவான, நாளாந்த வாழ்க்கையில் அணியும் உடைகளுக்கும், நாடகத்துக்காகத் தரிக்கும் வேட உடைகளுக்கும் இடையே வேறுபாடுகள் உண்டு. இதற்குப் புறநடைகளும் உள்ளன. (சமகாலச் சமூக நாடகங்கள்)
> - வேட உடைகள், அந்தந்தப் பாத்திரத்துக்குப் பொருத்தமானவாறு தயாரிக்கப்படுவது அவசியமாகும்.

**(20 நிமிடங்கள்)**

**படி 2.9.1.2 :**
- வகுப்பு மாணவரை நான்கு குழுக்களாகப் பிரியுங்கள்.
- தேடல் அறிவுறுத்தற் பத்திரப் பிரதிகளைக் குழுவுக்கு ஒன்றாகப் பகிர்ந்தளியுங்கள்.

- அந்தந்தப் பாத்திரத்துக்குரிய வேட உடைகளை ஆக்குமாறு அறிவுறுத்துங்கள்.
- தமது குழுவுக்குரிய பாத்திரங்களுக்கான வேட உடைகளைத் தயாரித்துக் கொண்டு வருமாறு அறிவுறுத்துங்கள்.

**(20 நிமிடங்கள்)**

**படி 2.9.1.3** :

- குழுக்கள் வீட்டில் தயாரித்துக்கொண்டு வந்த வேட உடைகளை வகுப்பில் காட்சிப்படுத்தச் சந்தர்ப்பமளியுங்கள்.
- அவற்றை அணிந்து பாத்திரத்தை நடித்துக் காட்டச் சந்தர்ப்ப மளியுங்கள்.
- ஏனைய குழுக்களின் கருத்துக்களை வினவுங்கள்.
- பின்வரும் விடயங்களை வலியுறுத்திக் கலந்துரையாடுங்கள்.

| |
|---|
| • தயாரிக்கும் வேட உடைகள் பாத்திரத்துக்கு நன்கு பொருந்துதல் வேண்டும்.<br>• வேட உடைகளை நடிகன்/நடிகை இலகுவாக அணிந்து கொள்ளத்தக்கதாக இருத்தல் வேண்டும்.<br>• நடிக்கும் வேளையில் அவ்வேட உடைகள் காரணமாக நடிகருக்கு அசௌகரியங்கள் ஏற்படலாகாது.<br>• வேட உடைகள் இலேசானவையாகவும் எளிமையான வையாகவும் இருத்தல் வேண்டும். |

**(40 நிமிடங்கள்)**

## கணிப்பீடும் மதிப்பீடும்:

- நாளாந்த வாழ்வில் அணியும் உடைகளை விட வேட உடைகள் வேறுபட்டவை என்பதைக் குறிப்பிடுவார்.
- வேட உடை தரித்த வெவ்வேறு பாத்திரங்களின் ஒளிப்படங்கள்/படங்கள்/சித்திரங்களைச் சேகரிப்பார்.
- வெவ்வேறு பாத்திரங்களுக்குரிய வேட உடைகள் தயாரிப்பார்.
- வெவ்வேறு மோடிகளுக்கமைவான வேட உடைகள் தொடர்பான தகவல்களைத் தேடித் திரட்டுவார்.
- வேட உடை தரித்து நடிப்பார்.

**இணைப்பு 2.9.1.1**

## தேடல் அறிவுறுத்தற் பத்திரம்

- பின்வரும் பாத்திரங்களுக்கான வேட உடைகளைத் தயாரிப்பது உங்களது குழுவின் பொறுப்பாகும்.

- ஆசிரியரின் அறிவுறுத்தல்களின்படி வேட உடைகளை வீட்டில் தயாரித்துக் குறித்த தினத்தில் வகுப்புக்குக் கொண்டு வருவதற்கான ஒழுங்குகளைக் குழுநிலையில் கலந்துரையாடிச் செய்து கொள்ளுங்கள்.

குழு 1 : கடற்கரையில் மீன்வியாபாரி ஆண்/பெண்
கரையோரத்தில் வாழும் ஆண்கள்/பெண்கள் ஆகியோருக்கான வேட உடைகள்

குழு 2 : புராண இதிகாசப் பாத்திரங்கள்

குழு 3 : அதிமானிடப் பாத்திரங்கள்

குழு 4 : சிறுவர் நாடகத்துக்குரிய பிராணிப் பாத்திரங்கள்



*வேட உடை*

**தேர்ச்சி 2.0 : படைப்பாக்கச் செயற்பாடுகளில் ஈடுபட்டு நாடகப் படைப்பாக்கத் திறனை வெளிக்காட்டுவார்.**

**தேர்ச்சி மட்டம் 2.9.2 :** பாத்திரத்துக்கு ஏற்ற வகையில் அணிகலன்களைத் தயாரிப்பர்.

**செயற்பாடு 2.9.2 :** ‘‘அணிகலன்கள் செய்வோம்; அணிந்து நடிப்போம்’’

**நேரம் :** 02 பாடவேளைகள்

**தர உள்ளீடு :**
- பல்வேறு நாடக அணிகலன்களைக் காட்டும் படங்கள்
- நாடக அணிகலன்கள் அணிந்த நடிகரின் படங்கள்
- நாடக அணிகலன்கள் சில
- நாடக அணிகலன்கள் செய்வதற்குத் தேவையான சில மூலப்பொருள்கள்
  - சிவப்புநிற பொப்ளின் துணி
  - காட்போட்
  - ‘‘பைண்டர் கம்’’ (பசை)
  - வரிச்சுக்கம்பி/கம்பி
  - பொன்னிறப் பெட்டி
  - நிறப்பூச்சு
  - கோட் நூல்
  - தூரிகைகள்

**கற்றல் - கற்பித்தல் முறைகள்**

**படி 2.9.2.1 :**
- நாடக அணிகலன்களைக் காட்டும் ஒளிப்படங்களை அன்றேல் சில அணிகலன்களை வகுப்பில் காட்சிப்படுத்துங்கள்.
- ‘‘அவை என்ன’’ என வினவுங்கள்.
- அவற்றை எவ்வாறு இனங்கண்டு கொண்டீர்கள் என வினவுங்கள்.
- பின்வரும் விடயங்களை வெளிக்கொணரும் வகையில் கலந்துரையாடுங்கள்.



***அணிகலனுடனான பாத்திரம்***

- நடிப்பதற்காக நடிகர் தன் பாத்திரத்தை வெளிப்படுத்த அணியும் உபகரணங்கள் அணிகலன்கள் எனப்படும்.
- இவ்வணிகலன்கள் நாளாந்த வாழ்க்கையில் பயன் படுத்தும் அணிகலன்கள் போன்றும் வேறுபட்டும் அமையும்.
- அணிகலன்களைத் தயாரிக்கையில் கவனஞ்செலுத்த வேண்டிய சில விடயங்கள் உள்ளன.
  - இலகுவாக அணியத்தக்கதாக இருத்தல்
  - இலகுவாகக் கழற்றத்தக்கதாக இருத்தல்.
  - இலேசானதாக இருத்தல்
  - நாடகப் பாத்திரத்துக்குப் பொருத்தமானதாக இருத்தல்.
  - செலவு குறைந்ததாக இருத்தல்.

**(10 நிமிடங்கள்)**

**படி 2.9.2.2** :
- அணிகலன்கள் செய்வதற்காகப் பயன்படுத்தப்படும் சில பொருள்கள் பற்றி வகுப்பு மாணவர் அனைவருக்கும் அறிவூட்டம் செய்யுங்கள்.
- அவற்றுள் பொருத்தமான பொருள்களைப் பயன்படுத்தி எளிமையான அணிகலனொன்றைச் செய்து காட்டுங்கள். (அணிகலன் செய்யும் முறை இணைப்பு 2.9.2.2 இல் தரப்பட்டுள்ளது.)
- மாணவரை நான்கு குழுக்களாகப் பிரியுங்கள்.
- குழுவுக்கு ஒன்றாகத் தலைப்புகளைப் பகிர்ந்தளியுங்கள்.
- தேவையான மூலப்பொருள்களைப் பகிர்ந்தளியுங்கள்.
- இணைப்பு 2.9.2.2 இல் தரப்பட்டுள்ள தகவற்கோவைப் பிரதிகளையும் பகிர்ந்தளியுங்கள்.
- செயற்பாட்டில் ஈடுபடுத்துங்கள்.
- ஆக்கங்களை வகுப்பில் முன்வைக்க ஆயத்தஞ் செய்து கொள்ளுமாறு அறிவுறுத்துங்கள்.

**(60 நிமிடங்கள்)**

**படி 2.9.2.3** :
- குழு ஆக்கங்களைக் காட்சிப்படுத்தச் சந்தர்ப்பமளியுங்கள்.
- அணிகலன்களை அணிந்து காட்டச் சந்தர்ப்பமளியுங்கள்.
- அவை பற்றி மாணவரது ஆக்கபூர்வமான கருத்துக்களை வினவுங்கள்.
- பின்வரும் விடயங்களை வலியுறுத்திக் கலந்துரையாடுங்கள்.

> - அணிகலன்கள் நாளாந்த வாழ்வில் பயன்படுத்தும் பொதுவான அணிகலன்களை விடப் பெரிய அளவுடைய தாகவோ அதே அளவானதாகவோ (தேவைக்கேற்பத்) தயாரிக்கப்படும்.
> - அணிகலன்கள் இலேசானவையாகவும் சருமத்துக்கு அசௌகரியம் விளைவிக்காத வகையிலும் தயாரிக்கப் படுதல் வேண்டும்.
> - பாத்திரத்துக்கு ஏற்ற வகையில் அணிகலன்கள் வெவ்வேறு விதமானதாகத் தயாரிக்கப்படும்.

**(10 நிமிடங்கள்)**

**கணிப்பீடும் மதிப்பீடும்:**

- நாடக அணிகலன்களுக்கும் நாளாந்த வாழ்வில் பயன்படுத்தும் ஆபரணங்களுக்கு மிடையிலான வேறுபாட்டை இனங்கண்டு கூறுவார்.
- நாடக அணிகலன்கள் தயாரிப்பதில் விருப்புக் காட்டுவார்.
- நாடக அணிகலன்கள் தயாரிப்பார்.
- சூழமைவுக்குப் பொருத்தமானவாறு நாடக அணிகலன்களைத் தெரிவு செய்து கொள்வார்.
- உடல் தோற்றத்தை அழகாகப் பேண முனைவார்.

**இணைப்பு 2.9.2.1**

## தேடல் அறிவுறுத்தற் பத்திரம்

- தரப்பட்டுள்ள தலைப்பில் அணிகலனொன்று செய்வது உங்களது குழுவின் பொறுப்பாகும்.

- ஆசிரியரது அறிவுறுத்தல்களின்படி தேவையான பொருள்களைத் தேடிப் பெறுங்கள்.

- ஆசிரியர் தரும் பொருள்களையும் பெற்றுக் கொள்ளுங்கள்.

- கூட்டாகச் செயற்பாட்டில் ஈடுபட்டு அணிகலனை அழகாகத் தயாரியுங்கள்.
    - குழு 1: காட்போட் மட்டையும் தடித்த நூலையும் (கோட் நூல்) பயன் படுத்திக் காட்போட் துண்டுகள் கோர்த்த மாலையொன்றைச் செய்யுங்கள்.
    - குழு 2: காட்போட் மட்டையையும் தடித்த நூலையும் பயன்படுத்தி இடுப்புப் பட்டியொன்று செய்யுங்கள்.
    - குழு 3: காட்போட் மட்டையையும் தடித்த நூலையும் பயன்படுத்திக் கிரீடம் ஒன்று செய்யுங்கள்.
    - குழு 4: காட்போட் மட்டையையும் தடித்த நூலையும் பயன்படுத்தி வளையல்களும் தோடுகளும் செய்யுங்கள்.

- ஆக்கத்தை வகுப்பில் முன்வைப்பதற்குத் தயாராகுங்கள்.



**இணைப்பு 2.9.2.2**

# தகவற் கோவை

## அணிகலன்கள் தயாரித்தல்

### 1. மாலை/கழுத்தணி/அட்டியல்

**தேவையான பொருள்கள்**

1. காட்போட் (அட்டைப் பெட்டிகளையும் பயன்படுத்தலாம்)
2. வெவ்வேறு அளவுடைய தெறிகள் (Buttons) அன்றேல் காட்போட் வட்டங்கள்.
3. மரத்தூள்
4. மணல்
5. தடித்த நூல் (Code நூல்)
6. துணி
7. பைண்டர் கம் (பசை)
8. நிறப்பூச்சு
9. தூரிகை
10. பொப்ளின் துணி




**செய்முறை**

- படத்தில் காட்டியுள்ளவை போன்ற வடிவங்களைக் காட்போட் அட்டையில் வெட்டிக் கொள்ளுங்கள். அதே அளவான துணித்துண்டுகளையும் வெட்டிக் கொள்ளுங்கள்.
- அக்காட்போட் துண்டுகளின் இரண்டு பக்கங்களிலும் பைண்டர்கம் தடவி துணித்துண்டுகளை ஒட்டிக் கொள்ளுங்கள்.
- அவ்வட்டைத் துண்டுகளின் மீது பொருத்தமானவாறு ‘கோட் நூலை’ ஒட்டி அழகுபடுத்திக் கொள்ளுங்கள்.
- வெவ்வேறு அளவுடைய காட்போட் அட்டைகள். தெறிகளைப் பயன்படுத்துங்கள்.
- அட்டைகளின் மீது பைண்டர் கம் தடவிப் பொன்னிறப்பொடி அன்றேல் மென் மணல் தூவுங்கள்.
- அட்டைகளை உலர்த்துங்கள்.
- அட்டைகளைச் சேர்த்து மாலையாக்குங்கள்.
- கழுத்தில் அணிந்துகொள்வதற்காக இரண்டு அந்தங்களிலும் இரண்டு கோட் நூல் துண்டுகளை இணைத்துக் கொள்ளுங்கள்.

### 2. இடுப்புப்பட்டி/ஒட்டியாணம்

**தேவையான பொருள்கள்**

1. காட்போட்
2. Code நூல்
3. வெவ்வேறு அளவுடைய காட்போட் வட்டங்கள் அன்றேல் தெறிகள்
4. சிறிய பிளாத்திக்கு மூடிகள்/குளிர்பானப் போத்தல் மூடிகள்
5. சிவப்புப் பொப்ளின் துணி



**செய்முறை**


- மேலே படத்தில் காட்டியுள்ளவாறு அன்றேல் வேறு பொருத்தமான வடிவத்தில் காட்போட் துண்டுகளை வெட்டிக் கொள்ளுங்கள்.
- காட்போட் துண்டுகளில் பைண்டர் கம் தடவிப் பொப்ளின் துணி ஒட்டுங்கள்.
- கோட் நூலையும் தெறிகளையும் பயன்படுத்திக் காட்போட் துண்டுகளை அலங்கரியுங்கள். அவற்றை உலரவையுங்கள்.
- கோட்நூல் துண்டொன்றினை இரண்டாக மடித்து (இடுப்பில் அணியக்கூடிய அளவு நீளமுடையதாக) அதன் மீது மேற்படி காட்போட் துண்டுகளை ஒட்டுங்கள்.
- முன்புறத்தே தொங்கும் வகையில் சிறிய குளிர்பானப் போத்தல் மூடிகளைத் தொங்க விடலாம்.
- காட்போட் அட்டைத்துண்டுகள், தெறிகள், குளிர்பானப் போத்தல் மூடிகள் போன்ற எல்லாவற்றின் மீதும் பசை தடவிப் பொன்னிறப்பொடி அன்றேல் மென்மணல் தூவி உலர்த்துங்கள்.
- பொருத்தமானவாறு நிறந்தீட்டிக் கொள்ளுங்கள்.
- கழுத்தில் அணிந்துகொள்வதற்காக இரண்டு அந்தங்களிலும் இரண்டு கோட் நூற் துண்டுகளை இணைத்துக் கொள்ளுங்கள்.

**3. கிரீடம்/முடி செய்தல்**





**காட்போட் கீலம்**



**தேவையான பொருள்கள்**

1. காட்போட்
2. பைண்டர் கம்
3. கோட் நூல்
4. மரத்தூள் அன்றேல் மென் மணல்
5. பொன்னிறப்பொடி
6. பொப்ளின் துணி

**செய்முறை**

- தலையில் அணிந்துகொள்வதற்குப் போதுமான அளவுடையதாக காட்போட் கீலமொன்றினை வெட்டியெடுங்கள்.
- அதன் மீது பைண்டர் கம் தடவிப் பொப்ளின் துணியை ஒட்டிக் கொள்ளுங்கள்.
- தலையின் பின்புறத்தே கட்டுவதற்காகக் கோட்நூல் துண்டுகளிரண்டை இணைத்துக் கொள்ளுங்கள்.

- வெட்டியெடுத்த வடிவங்களில் துணியை ஒட்டுங்கள். கோட் நூலினை அலங்கரியுங்கள்.
- அவ்வாறாக அலங்கரித்த காட்போட் வடிவங்களை ஏற்கெனவே தயார்ப்படுத்திய கீலத்தின் மீது ஒட்டுங்கள்.
- மேற்பரப்பில் பசை தடவி மரத்தூள் அன்றேல் மென்மணல் தூவுங்கள்.
- உலரவிட்டு நிறப்பூச்சுப் பூசிக்கொள்ளுங்கள்.

## 4. வளையல்களும் காதணியும்

### வளையல் செய்தல் - தேவையான பொருள்கள்

1. காட்போட்
2. கோட்நூல்
3. பைண்டர் கம் (பசை)
4. தெறிகள், மணிகள் அன்றேல் காட்போட் அட்டையில் வெட்டியெடுத்த சிறிய வட்டங்கள்.
5. பொன்னிறப்பொடி அன்றேல் மணல் அன்றேல் மரத்தூள்
6. துணி (பொப்ளின்)
7. நிறப்பூச்சு (Paint)

### செய்முறை

- கையில் அணிவதற்குப் பொருத்தமான அளவுடைய காட்போட் கீலமொன்றை வெட்டியெடுங்கள்.
- அதன் மீது துணி ஒட்டுங்கள்.
- கோட் நூலினால் அலங்கரியுங்கள். அன்றேல் மணிகள், தெறிகள், சிறிய காட்போட் வட்டங்களைக் கொண்டு அலங்கரியுங்கள்.
- மேற்பரப்பில் பசை (பைண்டர்கம்) தடவுங்கள்.
- அதன்மீது பொன்னிறப்பொடி அன்றேல் மென்மணல் அன்றேல் மரத்தூள் தூவுங்கள்.
- உலரவிடுங்கள்.
- பொருத்தமானவாறு நிறப்பூச்சுப் பூசி உலரவிடுங்கள்.

### காதணி செய்தல் - தேவையான பொருள்கள்

1. சிறிய பிளாத்திக் மூடிகள் அன்றேல் குளிர்பானப் போத்தல் மூடிகள்.
2. கம்பி.
3. மணிகள் அன்றேல் துளைத்துக்கொள்ளத்தக்க வித்து வகைகள்.
4. கோட்நூல்.
5. பைண்டர் கம் (பசை).
6. பொன்னிறப்பொடி அன்றேல் மென்மணல்.
7. நிறப்பூச்சு.

**செய்முறை**

- சிறிய பிளாத்திக்கு முடிகளின் மீது அன்றேல் குளிர்பானப் போத்தல் மூடிகளின் மீது பசை தடவி மரத்தூள் அன்றேல் மென்மணல் விசிறி உலர்த்திக் கொள்ளுங்கள்.
- பின்னர், பொன்னிறப்பொடி அன்றேல் நிறப்பூச்சுப் பூசுங்கள்.
- காதில் தொங்கவிட ஏற்றவாறு கம்பித்துண்டொன்றினை இணையுங்கள்.
- நூலில் மணிகளை அன்றேல் துளையிட்ட வித்துக்களைக் கோர்த்து அதனையும் இணைத்துக் கொள்ளுங்கள்.

இவை மாத்திரமன்றி வேறு பொருள்களையும் பயன்படுத்தலாம்.

**தேர்ச்சி 2.0 : படைப்பாக்கச் செயற்பாடுகளில் ஈடுபட்டு நாடகப் படைப்பாக்கத் திறனை வெளிக்காட்டுவார்.**

**தேர்ச்சி மட்டம் 2.10 :** நாடகத்துக்குத் தேவையான மேடைப் பொருள்களைச் செய்வர்.

**செயற்பாடு 2.10 :** ''மேடைப் பொருள்கள் செய்வோம்''

**நேரம் :** 02 பாடவேளைகள்

**தர உள்ளீடு :**
- மேடைப் பொருள்கள் அடங்கியுள்ள நாடகக் காட்சிகள் சிலவற்றின் ஒளிப்படங்கள்.
- மேடைப் பொருள்கள் சில (தேடிப் பெற முடியுமாயின்)
- மேடைப் பொருள்கள் செய்வதற்குத் தேவையான மூலப் பொருள்கள். (பிளாத்திக்குப் பாத்திரங்கள் சில, இலேசான தடிகள் சில, பிளாத்திக்குக் குழாய்கள். பசை (பைண்டர் கம்), மரத்தூள், சலித்த மென்மணல், துணித்துண்டுகள். பத்திரிகைத் தாள்கள் சில, கோட் நூல், பொன்னிறப் பொடி, நிறப்பூச்சுகள்)
- தகவற் கோவைப் பிரதிகள் போதுமான தொகை

**கற்றல் - கற்பித்தல் முறைகள்**

**படி 2.10.1 :**
- மேடைப் பொருள்களின் ஒளிப்படங்களை அன்றேல் மேடைப் பொருள்களை வகுப்பில் காட்சிப்படுத்துங்கள்.
- அவை பற்றி மாணவரிடம் வினவுங்கள்.
- பின்வரும் விடயங்களை வெளிக்கொணரும் வகையில் கலந் துரையாடுங்கள்.

> - நடிப்பின் போது நடிகர்கள் பயன்படுத்துகின்ற உடைகள். அணிகலன்கள் தவிர்ந்த ஏனைய பொருள்களும் மேடை யில் பயன்படுத்தப்படும் பொருள்களும் மேடைப் பொருள் கள் எனப்படும்.
> - மேடைப் பொருள்கள், மேடை நடிகர்கள் இலகுவாகக் கையாளத்தக்கவையாக இருத்தல் வேண்டும்.
> - அவை இலேசானவையாயும் எளிமையானவையாயும் இருத்தல் வேண்டும்.
> - மேடைப் பொருள்களை ஆக்குவதற்காகப் பயன்படுத்தப் படும் மூலப் பொருள்கள், நாளாந்தம் பயன்படுத்தும் பாவனைப் பொருள்களைத் தயாரிக்கப் பயன்படுத்தும் மூலப்பொருள்களை விட வேறுபட்டவையாகும்.

**(10 நிமிடங்கள்)**

படி 2.10.2 :
- மேடைப் பொருள்கள் தயாரிப்பதற்காகப் பயன்படுத்தத்தக்க மூலப் பொருள்களை வகுப்பில் காட்சிப்படுத்துங்கள்.
- அம் மூலப்பொருள்களைப் பயன்படுத்தி எளிமையான மேடைப் பொருளொன்றை ஆக்கும் விதத்தைச் செய்து காட்டுங்கள்.
- மாணவரை நான்கு குழுக்களாகப் பிரியுங்கள்.
- குழுவுக்கு ஒன்றாகத் தலைப்புக்களைப் பகிர்ந்தளியுங்கள்.
- தேவையான மூலப்பொருள்களைப் பகிர்ந்தளியுங்கள்.
- செயற்பாட்டில் ஈடுபடுத்துங்கள்.
- ஆக்கத்தை வகுப்பில் முன்வைப்பதற்கான ஆயத்தங்களைச் செய்துகொள்ளுமாறு அறிவுறுத்துங்கள்.

**(60 நிமிடங்கள்)**

படி 2.10.3 :
- குழு ஆக்கங்களை வகுப்பில் முன்வைக்கச் சந்தர்ப்ப மளியுங்கள்.
- முன்வைத்த அதே குழுவின் கருத்துக்களைப் பெறுங்கள்.
- ஏனைய குழுக்களின் ஆக்கபூர்வமான கருத்துக்களைப் பெறுங்கள்.
- பின்வரும் விடயங்களை வலியுறுத்திக் கலந்துரையாடுங்கள்.

| |
|---|
| • மேடைப் பொருள்கள் செய்வதற்காகப் பல்வேறு வகையான மூலப்பொருள்கள் பயன்படுத்தப்படும்.<br>• கழித்தொதுக்கும் பல்வேறு பொருள்களைக் கொண்டு மேடைப் பொருள்களைச் செய்து கொள்ளலாம்.<br>• அரங்கில் வைக்கப்படும் மேடைப் பொருள்கள் மேடைக்கும் நடிப்புக்கும் கச்சிதமாகப் பொருந்தியமை வனவாக இருத்தல் வேண்டும்.<br>• தமது ஆக்கத்திறனைப் பயன்படுத்தி மேலும் பொருத்தமான வகையில் மேடைப் பொருள்களைச் செய்து கொள்ளலாம். |

**(10 நிமிடங்கள்)**

**கணிப்பீடும் மதிப்பீடும்:**

- அரங்கில் பயன்படுத்துவதற்காகப் பல்வேறு வகைப்பட்ட மேடைப் பொருள்கள் தேவை என்பதை ஏற்றுச் செயற்படுவார்.
- ஆக்கத்திறனையும் கற்பனாசக்தியையும் பயன்படுத்தி ஆக்கபூர்வமான வகையில் மேடைப் பொருள்களைச் செய்து கொள்ளலாம்.
- நாடகங்களில் பயன்படுத்தப்படும் மேடைப் பொருள்களின் ஒளிப்படங்கள்/படங்கள் என்பவற்றைச் சேகரிப்பார்.
- தேவைக்கேற்பப் பல்வேறு வகையான மேடைப் பொருள்களைத் தயாரிப்பார்.
- கழித்தொதுக்கும் பொருள்களைப் பயன்படுத்திப் பயன்மிக்க வேலைகள் செய்யலாம் என்பதை விளங்கிச் செயற்படுவார்.

**இணைப்பு 2.10.1**

## தேடல் அறிவுறுத்தற் பத்திரம்

- ஆசிரியரது அறிவுறுத்தலின்படி வகுப்பு மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரியுங்கள்.
- உங்களது குழுவுக்குரிய தலைப்புத் தொடர்பாகக் கவனஞ் செலுத்துங்கள்.
- மேடைப் பொருள்களைச் செய்வதற்குத் தேவையான மூலப்பொருள்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
- தகவற் கோவையை உசாவுங்கள்.
- கூட்டாகத் திட்டமிட்டுச் செயற்பாட்டில் ஈடுபடுத்துங்கள்.
- ஆக்கத்தை வகுப்பில் காட்சிப்படுத்த ஆயத்தஞ் செய்து கொள்ளுங்கள்.

**இணைப்பு 2.10.2**

## தகவற் கோவை

- **மேடைப் பொருள்கள் செய்தல்**

***குழு 1: கிண்ணம்/வெற்றிக்கிண்ணம் செய்தல்***

**தேவையான பொருள்கள்**

1. வரிச்சுக்கம்பி (Binding wire)
2. கோட் நூல் (Code நூல்)
3. கடதாசி (பத்திரிகைத் தாள்கள்)
4. பைண்டர் கம் (பசை)
5. மென்மணல், மென்மரத்தூள்
6. பிளாத்திக்குப் பாத்திரங்கள் 2
   (பெரியதும் சிறியதுமாக)



### செய்முறை

- பிளாத்திக்குப் பாத்திரங்கள் மீது பத்திரிகைத்தாளை ஒட்டுங்கள். பத்திரிகைத் தாளைப் பொருத்தமான வடிவங்களில் வெட்டிப் பயன்படுத்துங்கள்.
- கம்பித் துண்டுகளிரண்டை வளைத்து, அவற்றின் மீது கடதாசி ஒட்டுங்கள்.
- அவ்வாறு தயார்ப்படுத்திய பகுதிகளைப் படத்திற்காட்டியுள்ளவாறு பாத்திரங்களி ரண்டையும் இணைக்கும் வகையில் வைத்து இணையுங்கள்.
- பாத்திரங்களின் மீது சிறு சிறு கடதாசித் துண்டுகளை ஒட்டுங்கள்.
- அதன் மீது பொருத்தமானவாறு கோட் நூற் துண்டுகளை ஒட்டி அழகுபடுத்துங்கள்.
- உலரவிடுங்கள்.
- உலர்ந்த பின்னர். பாத்திர மேற்பரப்பு முழுவதிலும் பசை தடவுங்கள்.
- அரிதட்டில் மென்மணல் அன்றேல் மென்மரத்தூள் இட்டுப் பாத்திரத்தின் மீது தூவுங்கள்.
- நன்கு உலர்ந்த பின்னர், நிறப்பூச்சுப் பூசிக் கொள்ளுங்கள்.

## *குழு 2: கோடரி செய்தல்*

### தேவையான பொருள்கள்

1. ஏறத்தாழ 60 சென்ரிமீற்றர் (2 அடி) நீளமுடைய 6 சென்றிமீற்றர் (2 1/2 அங்குல) விட்டமுடைய கோடரிப்பிடி (மரப்பிடி அன்றேல் P.V.C குழாய் பயன்படுத்தலாம்.)
2. தடித்த காட்போட் துண்டு
3. கடதாசி
4. பைண்டர் கம் (பசை)
5. நிறப்பூச்சு

### செய்முறை

- காட்போட் துண்டைப் படத்தில் காட்டியுள்ள வடிவங்களில் இரு துண்டுகளாக வெட்டிக் கொள்ளுங்கள்.
- கைப்பிடியின் ஓர் அந்தத்தில் காட்போட் துண்டுகளிரண்டையும் வைத்துப் பைண்டர் கம் பூசி ஒட்டிக்கொள்ளுங்கள்.





- கோடரி அலகின் மீது சிறு சிறு கடதாசித் துண்டுகளை ஒட்டி அழகுபடுத்துங்கள்.
- கைப்பிடியாகப் பி.வி.சி குழாய் பயன்படுத்துவதாயின் அக்குழாயின் மீதும் கடதாசித் துண்டுகளை ஒட்டுங்கள்.
- உலர்ந்த பின்னர் நிறப்பூச்சுப் பூசுங்கள்.

### *குழு 3: ஈட்டி செய்தல்*

- தேவைக்கேற்ப 120 - 150 சென்றி மீற்றர் (4- 5 அடி) நீளமுடைய 5 சென்றி மீற்றர் (2 அங்குல) விட்டமுடைய பி.வி.சி குழாய்த் துண்டொன்றினை எடுங்கள்.
- இரண்டு வடிவங்களைக் காட்போட்டினால் வெட்டிக் கொள்ளுங்கள்.
- மேலே எடுத்த பி.வி.சி. குழாயினுள் சற்று விட்டம் குறைவான ஒரு தடியின் ஒரு அந்தத்தைச் சற்று பிளந்து அதனுள் காட்போட் துண்டை இறுக்குங்கள்.
- பின்னர் தடியின் கீழ் அந்தத்தைப் பி.வி.சி குழாயினுள் இட்டு இறுக்குங்கள்.
- பின்னர் நிறப்பூச்சுப் பூசுங்கள்.



### *குழு 4: வாள்*

- இலேசான பலகைத் துண்டொன்றில் வாள்வடிவத்தை (கைப்பிடி அமையுமாறு) வெட்டியெடுங்கள்)
- காட்போட் வடிவங்களை வெட்டியெடுங்கள்.
- காட்போட் வடிவங்களை வாள் அலகுடன் இணைத்துக் கொள்ளுங்கள்.
- கைப்பிடியில் கோட்நூல் சுற்றி அழகுபடுத்துங்கள்.
- கைப்பிடியின் பின்புற அந்தத்தில் மேசைப் பந்து (Pin pong ball) ஒன்றை ஒட்டிக் கொள்ளுங்கள்.
- நிறந்தீட்டி அழகுபடுத்துங்கள்.

**தேர்ச்சி 3.0 : செயன்முறைச் செயற்பாடுகளில் ஈடுபட்டு, அவற்றுக் குரிய கொள்கைகள் பற்றிய விளக்கத்தை விருத்தி செய்து கொள்வார்.**

**தேர்ச்சி மட்டம் 3.1** : தெளிவாகக் கருத்தை வெளிப்படுத்தி விளக்கத்துடன் சொல்லாடுவர்.

**செயற்பாடு 3.1** : ''சொல்லாடல்களைப் பயன்படுத்துவோம்''

**நேரம்** : 04 பாடவேளைகள்

**தர உள்ளீடு** :
- நாடக எழுத்துருக்கள் (கண்மணிக் குட்டியர், கண்டறியாத கதை)
- தேடல் அறிவுறுத்தற் பத்திரப் பிரதிகள்
- தகவற் கோவைப் பிரதிகள்

**கற்றல் - கற்பித்தல் முறைகள்**

**படி 3.1.1** :
- உச்சரிப்பில் சிறு சிறு வேறுபாடுகளைக் கொண்ட கதையை/ பாடலை, உரைப்பகுதியை வாசிக்க எழுமாறாக ஒரு சில மாணவருக்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

- உச்சரிப்புத் திருத்தல்/உச்சரிப்பு விதம் தொடர்பாக மாணவரது கவனத்தைத் திருப்புங்கள்.

- பின்வரும் விடயங்களை வெளிக்கொணரும் வகையில் கலந் துரையாடுங்கள்.

- நாடக எழுத்துருவில் பாத்திரங்கள் அடங்கியிருக்கும்.
- நாடகம் கூறும் பொருள் பாத்திரங்களினால் வெளிக் கொணரப்படும்.
- நாடகம் கூறும் பொருளை வெளிக்கொணருவதற்காகப் பாத்திரங்கள், சொல்லாடல்கள், பாடல்கள் ஆகியன பயன்படுத்தப்படும்.
- சொல்லாடல்களின்போது நடிகர்கள் எழுத்துருவில் உள்ள சொற்களைச் சரியாகவும் தெளிவாகவும் உச்சரிப்பது அவசியமாகும்.
- சொற்களை உச்சரிக்கும்போது கருத்து வெளிப்படும் வகையில் குரலை உயர்த்தியும் தாழ்த்தியும் பயன் படுத்தலாம்.
- சொல்லாடல்களின்போது குரலை வெவ்வேறு பாணிகளிலும் தாளங்களிலும் பயன்படுத்தலாம்.

**(20 நிமிடங்கள்)**

**படி 3.1.2** :
- மாணவரை நான்கு குழுக்களாகப் பிரியுங்கள்.
- நாடக எழுத்துருக்களிரண்டிலிருந்து தெரிவு செய்த இரண்டு பகுதிகளின் பிரதிகளை எல்லாக் குழுக்களுக்கும் வழங்குங்கள்.
- தேடல் அறிவுறுத்தற் பத்திரப் பிரதி, தகவற்கோவைப் பிரதிகளையும் குழுக்களுக்கு வழங்கிச் செயற்பாட்டில் ஈடுபடுத்துங்கள்.
- வகுப்பில் முன்வைக்க ஆயத்தமாகுமாறு அறிவுறுத்துங்கள்.

**(120 நிமிடங்கள்)**

**படி 3.1.3** :
- குழு முன்வைப்புச் செய்யச் சந்தர்ப்பமளியுங்கள்.
- அதே குழுவின் கருத்துக்களைப் பெறுங்கள்.
- ஏனைய குழுக்களின் ஆக்கபூர்வமான கருத்துக்களைப் பெறுங்கள்.
- பின்வரும் விடயங்களை வலியுறுத்திக் கலந்துரையாடுங்கள்.

> - தரப்பட்ட எழுத்துருவில் தாளத்துக்கு அமைவான சொல்லாடல்களும் அடங்கியுள்ளன.
> - குழுவாகச் சேர்ந்து உச்சரிக்கும்போது தாளத்தை வேறுபடுத்தி இனங்காண்பது அவசியமாகும்.
> - சொல்லாடல்களில் நிறுத்தம், தரிப்பு. வினாக்குறி போன்ற பண்புகள் காணப்படும்.
> - சொல்லாடல்களை உச்சரிப்பதற்குக் காத்திரமான குரல் இருப்பது அவசியமாகும்.
> - சொல்லாடல் என்பது நடிக்கும்போது பயன்படுத்தும் ஒரு காத்திரமான அம்சமாகும்.
> - நடித்தவாறே சொல்லாடலைப் பயன்படுத்துவது அவசியமாகும்.

**(20 நிமிடங்கள்)**

**கணிப்பீடும் மதிப்பீடும்:**
- அந்தந்தப் பாத்திரத்துக்குப் பொருத்தமானவாறு சொல்லாடலை உச்சரிப்பார்.
- நாடகச் சொல்லாடலில் பொதிந்துள்ள வியத்தகுதன்மையை விவரிப்பார்.
- நாடக எழுத்துருவில் அடங்கியுள்ள சொல்லாடலைக் கொண்டு அதனை நயப்பார்.
- குரலைக் காத்திரமானவாறு பயன்படுத்துவார்.
- கருத்துக்களைச் சரியாகவும் தெளிவாகவும் முன்வைப்பார்.

**இணைப்பு 3.1.1**

## தேடல் அறிவுறுத்தற் பத்திரம்

- உங்களது குழுவுக்குத் தரப்பட்டுள்ள இரண்டு சொல்லாடற் பகுதிகளுள் ஒன்றைத் தெரிவு செய்து கொள்ளுங்கள்.
- குழுவில் அனைவரும் அவற்றை உரத்து வாசியுங்கள்.
- உங்களது குழு அங்கத்தவர்களின் உச்சரிப்புக் குறித்துக் கவனஞ் செலுத்துங்கள்.
- தேவைப்படுமிடத்து ஆசிரியரின் உதவியை நாடி உச்சரிப்புக் குறைபாடுகளைத் திருத்திக் கொள்ளுங்கள்.
- ஆசிரியரின் அறிவுறுத்தலின்படி சொல்லாடற் பகுதிகளைத் தனித்தனியே ஒவ்வொருவரும் உரத்து வாசியுங்கள்.
- இனி, அச்சொல்லாடற் பகுதியை உச்சரித்து நடித்துக் காட்ட ஆயத்தமாகுங்கள்.
- நடிப்புடன் சொல்லாடலைச் சரியாகப் பொருத்தி முன்வைப்பது குறித்துக் கவனஞ் செலுத்துங்கள்.

**இணைப்பு 3.1.2**

## தகவற் கோவை

### சிறுவர் நாடக எழுத்துருப் பகுதிகள்

- # கண்மணிக்குட்டியர்

கண்ணன், கவிதா இருவரும் மேடையில் இருக்கின்றனர். உடனடியாகவே குட்டி ஆடு கத்தி அழுதவாறு வருகின்றது.

| | | |
|---|---|---|
| குட்டி ஆடு | : | மே...ஏ...! மே...ஏ...! மே...ஏ...ஏ...! |
| கண்ணன் | : | குட்டி ஆடே! ஏன் அழுகிறீர்? |
| குட்டி ஆடு | : | கவலையா இருக்கு, அழுகிறன்! |
| கவிதா | : | உமக்கேன் கவலை? |
| குட்டி ஆடு | : | அம்மாவைக் காணேல்லை! |
| கண்ணன் | : | ஏன் காணேல்லை? |
| குட்டி ஆடு | : | ஓடினவா! காணேல்லை! |
| கவிதா | : | (கண்ணனை வியப்போடு பார்த்து) எங்க ஓடினவா? |
| குட்டி ஆடு | : | தெரியேல்லை! |
| கண்ணன் | : | ஏன் ஓடினவா? |
| குட்டி ஆடு | : | நாயொண்டு கலைக்க. |
| கவிதா | : | உம்மைக் கலைக்க இல்லையே? |

குட்டி ஆடு : கலைச்சது.
கண்ணன் : நீர் ஓட இல்லையே?
குட்டி ஆடு : ஓடினனான்!
கண்ணன் : அம்மாவோடையோ?
குட்டி ஆடு : இல்லை! தனிய
கவிதா : ஏன் அம்மாவோடை ஓடேல்லை?
குட்டி ஆடு : ஓட முடியேல்ல!
கண்ணன் : ஏன் முடியேல்ல?
குட்டி ஆடு : அவ வேற பக்கம் ஓடினா!
கவிதா : உம்மைத் தனிய விட்டுட்டோ?
குட்டி ஆடு : கூப்பிட்டவா!
கவிதா : நீர் ஏன் சேந்தோடேல்ல?
குட்டி ஆடு : ஓட முடியேல்ல!
கண்ணன் : ஏன்?
குட்டி ஆடு : தெரியேல்லை!

கண்ணனும் கவிதாவும் ஒருவரை ஒருவர் வியப்போடு பார்க்கின்றனர். குட்டியாட்டிடம், நடந்ததை எப்படிக் கேட்டறியலாம் என்ற பிரமிப்பு அவர்களுக்கு. குட்டி ஆட்டின் மீது இரக்கமும் அதிகரிக்கின்றது.

கவிதா : நீர் ஓட இல்லையே?
குட்டி ஆடு : (குட்டி கோபத்தோடு) ஓடினான் எண்டு சொன்னன்!
கண்ணன் : ஓம் சொன்னனீர்!
குட்டி ஆடு : பிறகென்ன?
கவிதா : அம்மா ஒரு பக்கத்தாலை ஓடினவா?
குட்டி ஆடு : ஓம்!
கண்ணன் : நீர் வேறை பக்கத்தாலை ஓடினனீர்?
குட்டி ஆடு : ஓம்!
கவிதா : இப்ப அம்மாவைத் தேடுறீரோ?
குட்டி ஆடு : ஓம்!
கண்ணன் : எங்கை எல்லாம் தேடினனீர்?
குட்டி ஆடு : எல்லா இடமும்!
கவிதா : வீட்டை போக இல்லையே?
குட்டி ஆடு : இல்லை!
கண்ணன் : ஏன்?
குட்டி ஆடு : வீடு எங்கை எண்டு தெரியா!
கவிதா : வழி தவறி இங்கை வந்திட்டடீங்களோ?
குட்டி ஆடு : (யோசித்துவிட்டு) ஓம்!
கண்ணன் : இப்ப என்னண்டு வீட்டை போறது?
குட்டி ஆடு : தெரியா!
கவிதா : நீர் எங்களோடை இரும்!
குட்டி ஆடு : அம்மா வேணும்!
கண்ணன் : அம்மா தேடி வருவா!
குட்டி ஆடு : வருவாவோ?
கவிதா : ஓம், வருவா!
கண்ணன் : நீர் அம்மாவோடை போகலாம்!
கவிதா : உம்மட வீட்ட போகலாம்!

கண்ணன் : அது வரை, எங்களோடை இரும்!
குட்டி ஆடு : (ஆம் என்பது போலத் தலை அசைத்துவிட்டு) தண்ணி விடாய்க்குது!
கவிதா : பாவம், குட்டி ஆடு!
குட்டி ஆடு : சரியா விடாய்க்குது!!
கவிதா : கனதூரம் நடந்தனீரே?
குட்டி ஆடு : ஓம்!
கண்ணன் : எவ்வளவு தூரம்?
குட்டி ஆடு : தெரியா! (எரிச்சலோடு தான் கூறுவார்)
கவிதா : எத்தினை நாளா நடக்கிறீர்?
குட்டி ஆடு : (யோசித்துவிட்டு) தெரியா! தண்ணி விடாய்க்குது!!!
கண்ணன் : கோவிக்காதையும் (பார்வையாளரைப் பார்த்து) பிள்ளையள்! குட்டி ஆடாருக்குச் சரியாத் தண்ணி விடாய்க்குது!
கவிதா : நாங்கள் மேடைக்கு ஒரு கிணத்தைக் கொண்டு வரவேணும்.
கண்ணன் : ஓம், கிண்ணத்தை மேடைக்குக் கொண்டு வரவேணும்!
குட்டி ஆடு : தண்ணி விடாய்க்குது!!!
கவிதா : அச்சாக் குட்டி, கொஞ்சம் பொறுங்கோ!
கண்ணன் : இந்தா, பாட்டோடை கிணறு மேடைக்கு வருகுது!!

*நன்றி: குழந்தை ம. சண்முகலிங்கம்*

# கண்டறியாத கதை

கரடியார் : குட்டித்தம்பி, தங்கைகளே, இண்டைக்கு நாங்கள் சப்பாத்தைப் பற்றின கதையைத்தான் நாடகமாக நடிக்கப் போறம்.
வரிக்குதிரையார் : பெரிய ஒரு காட்டிலதான் இந்தக் கதை நடக்கப் போகுது.
குரங்கார் : நாங்கள் தான் அந்தக் காட்டிலை இருக்கிற மிருகங்கள்!
ஆந்தையார் : பறவைகள்! நான் மிருகமில்லை, பறவை.
மானார் : ஓம், எங்கள் ஆறுபேருக்கையும் இவர் மட்டும் தான் பறவை.
நரியார் : மிச்ச அஞ்சு பேரும், நாங்கள் மிருகங்கள்.
கரடியார் : நான் தான் கட்டைக் கறுப்புக் கரடியார்! கறுப்புத் தான் வடிவு!
வ.குதிரையார்: நான் வரிக்குதிரையார், வரிவரியா இருக்கிறதுதான் வடிவு!
குரங்கார் : நான் நீளவால் குரங்கார்! நீளமான வால் தான் வடிவு!
மானார் : நான்தான் புள்ளி மானார். புள்ளிகள்தான் வடிவு!
நரியார் : நான் குஞ்சவால் நரியார்! குஞ்சம் போல வால் தான் வடிவு!
ஆந்தையார் : நான் வெறும் ஆந்தையார். என்னை நான் வடிவெண்டு நினைச்சுக் கொள்ளுறதில்லை; வடிவில்லை எண்டும் நினைச்சுக் கொள்ளுற தில்லை.
கரடியார் : ஆ, நீர் போம், புழுகாமல்.
வ.குதிரையார்: பிள்ளையள், இப்ப நாங்கள் போய், ஒரு பெரிய சப்பாத்தைக் கொண்டு வரப்போறம்!
குரங்கார் : ஓம், பெரிய ஒரு சப்பாத்தைக் கொண்டு வரப் போறம்!
மானார் : கொண்டு வந்து, இங்க நடுவிலை வைக்கப் போறம்!

நரியார் : பாட்டுப்பாடிக் கொண்டுதான் வருவம்!
ஆந்தையார் : ஆட்டமும் ஆடிக்கொண்டு வருவம்!
அனைவரும் : இப்பபோய், உடன வாறம்!

அனைவரும் வெளியேறுகின்றனர். பாடி ஆடியவாறு சப்பாத்தைச் சுமந்து வருகின்றனர்.

**பாடல்**

ஆஹா! ஓஹோ! டொக் டொக்! சறுக்புறுக்
ஆஹா! ஓஹோ! டொக் டொக்! சறுக்புறுக்

காலணிகள் ஆஹா! பாதணிகள் ஓஹோ!
காலணிகள் டொக் டொக்! பாதணிகள் சறுக்புறுக்!
காலணிகள் பாதணிகள் சப்பாத்துச் செருப்பு!
கால்களை நன்றாகவே பாதுகாக்கும் பொறுப்பு!

பாதணிகள் பலவகையாம்
பார்க்க நல்ல அழகவையாம்
பாதையிலே நடந்துசெல்லப்
பாதுகாப்புத் தருமவைதான்

சின்னஞ்சிறிய பாப்பாவின்
பூம்பஞ்சுப் பாதத்திற்கு
அன்னச்சிறகு போன்ற நல்ல
அழகான பாதணிகள்

எட்டுமாதம் ஆனதுமே
எட்டி நடை நடந்துவரும்
கட்டித்தங்கக் குட்டிக்குக்
கீச்சுக் கீச்சுக் காலணிகள்

அம்மா அப்பா அண்ணா அக்கா
அத்தை மாமி தாத்தா பாட்டி
எம்மூர் அயலூர் உலகமெல்லாம்
எங்கும் அணிவார் பாதணிகள்

சறுக்குப் புறுக்குச் செருப்புப் போட்டுச்
சுறுக்கா நடக்க எமக்குத் தெரியா!
விறுக்கு விறுக்கு என்று நாங்கள்
வெறுங்காலோடு நடந்து வாறோம்!

கரடியார் : பிள்ளையள், எப்பிடிச்சப்பாத்து?
வடிவோ?
பிள்ளைகள் : ஓம்!
வ.குதிரையார்: சரியான பெரிசு, என்ன?
பிள்ளைகள் : ஓம்!
குரங்கார் : பிள்ளைகளே, இனித்தான் நாடகத்தின்ர கதை துவங்கப் போகுது.

மானார் : இந்தக் காட்டில இருக்கிற நாங்கள் ஒருநாளும் சப்பாத்தைக் கண்டதில்லையாம்.
நரியார் : நாங்கள் இப்ப மிருகங்களாக வேஷம் போட்டு நடிக்கிறமல்லோ
ஆந்தையார் : மிருகங்கள் மட்டுமில்லை, பறவையாயும் வேஷம் போட்டு நடிக்கிறம்.
கரடியார் : ஓம். அதால இந்தக் காட்டிலை இருக்கிற எங்களுக்குச் சப்பாத்தைத் தெரியாதாம்.
வ.குதிரையார்: நாங்கள் மனிசரையும் கண்டதில்லையாம்.
குரங்கார் : ஓம், அதாலை நாங்கள் சப்பாத்தைக் கண்டதும் என்ன செய்யப் போறமெண்டதை நீங்கள் கவனமாப் பாருங்கோ.
மானார் : இப்ப நாங்கள் உள்ளை போய்த் திரும்பி வருவம்.
நரியார் : முதல் முறையா இவடத்துக்கு வாறது போல வருவம்.
ஆந்தையார் : நான் மட்டும் (பின்மத்திய மேடையில் உள்ள மரத்தைக் காட்டி) அந்த மரத்திலை ஏறி இருப்பின்.
கரடியார் : சரி வாருங்கோ, நாங்கள் போய் உடன வருவம்.

***- நன்றி : குழந்தை ம. சண்முகலிங்கம்***

**தேர்ச்சி 3.0 : செயன்முறைச் செயற்பாடுகளில் ஈடுபட்டு, அவற்றுக் குரிய கொள்கைகள் பற்றிய விளக்கத்தை விருத்தி செய்து கொள்வார்.**

**தேர்ச்சி மட்டம் 3.2.1 :** அந்தந்தப் பாத்திரத்துக்குப் பொருத்தமானவாறு குரலைக் கையாண்டு குறித்த செயற்பாடுகளில் ஈடுபடுவர்.

**செயற்பாடு 3.2.1 :** ''உணர்ச்சி வெளிப்பாட்டுக்குக் குரலைப் பயன்படுத்துவோம்''

**நேரம் :** 03 பாடவேளைகள்

**தர உள்ளீடு :** • சொற்களஞ்சியம்

**கற்றல் - கற்பித்தல் முறைகள்**

**படி 3.2.1.1 :**

- மாணவரைத் திறந்தவெளியான ஓர் இடத்துக்கு அழைத்துச் செல்லுங்கள்.
- பாதணிகளைக் களையுமாறு அறிவுறுத்துங்கள்.
- அனைவரையும் ஒரு வட்டத்தில் நிறுத்துங்கள்.
- உங்களது (ஆசிரியரது) அனுபவமொன்றினை விவரியுங்கள்.
  உதாரணம்:
  (...பிள்ளைகளே...நான் அதிகாலையில் எழும்பினேன். நித்திரைக் கலக்கம் தீரவில்லை... சரியாகப் பசித்தது. காலைச்சாப்பாடு மேசையில் கொண்டு வந்து வைக்கப் பட்டிருந்தது. நான் அதைச் சாப்பிட்டேன். பசி தீர்ந்தது... பின்னர் புறப்பட்டேன். பஸ் தரிப்பிடத்திற்கு வந்தேன். சனம் நிரம்பி வழிந்தது. இரண்டு தடவை கால் நசிந்தது. தலை மோதியது... இளங்காற்றுடன் கலந்து நறுமணம் பரவியது... சுற்றுமுற்றுப் பார்த்தேன். மரங்களில் பூக்கள் கொத்துக் கொத்தாய்ப் பூத்திருந்தன.... பசுவொன்று எதிரே வந்தது. பின்னர் பசுக்கன்றொன்றும் வாலை உயரத்தித் துள்ளியோடி வந்தது. தாய்ப் பசுவிடம் பால் குடிக்கத் தொடங்கியது...)
- ''சரி, இந்த நிகழ்வுகள் உங்களுக்கு நிகழ்ந்திருந்தால் உங்களது மனதில் எவ்வாறான உணர்ச்சிகள் தோன்றி யிருக்கும்'' என வினவுங்கள்.
  (கவலை, மகிழ்ச்சி, இரக்கம், சினம், வெறுப்பு போன்ற உணர்ச்சிகளை மாணவர்கள் வாய்மொழி மூலம் வெளியிடத் தக்கவாறு வினவுதல் வேண்டும்.)

  (ஆசிரியர் தனது அனுபவங்களைக் கூறுவது பொருத்த மானது. கவலை, மகிழ்ச்சி, இரக்கம், சினம், வெறுப்பு போன்ற உணர்வுகள் உள்ளடங்கும் வகையிலான அனுபவங்களை முன்வைத்தல் வேண்டும்.)

- பின்வரும் விடயங்களை வெளிக்கொணரும் வகையில் கலந்துரையாடுங்கள்.

> - வாழ்க்கை அனுபவங்களுள் கவலை, மகிழ்ச்சி, இரக்கம், சினம், வெறுப்பு, பயம், அருவருப்பு போன்றன அடங்கியிருக்கும்.
> - இவை மனிதனின் உணர்ச்சிகளாகும்.
> - உணர்ச்சிகளை வெளிப்படுத்துவதற்குச் சொற்கள் துணையாகும்.
> - யாதேனும் சொல்லை உச்சரிக்கும் விதத்துக்கேற்ப அதன் அர்த்தம் வேறுபடும்.
> - பாத்திரச் சித்திரிப்பின்போது வெவ்வேறு அர்த்தங்களை வெளிப்படுத்துவதற்காகக் குரலைப் பொருத்தமானவாறு கையாளுதல் அவசியமாகும்.

**(20 நிமிடங்கள்)**

**படி 3.2.1.2** :

- மாணவரை வட்டாக நிறுத்துங்கள்.
- நீங்கள் (ஆசிரியர்) வட்டத்தின் மத்தியில் நில்லுங்கள்.
- ஒரு தனிச்சொல்லைக் கூறி, அதனை வெவ்வேறு அர்த்தங்கள் தொனிக்கும் வகையில் உச்சரிக்கச் சந்தர்ப்பமளியுங்கள்.
- தரப்பட்ட சொல்லுடன் வேறு எழுத்துக்களையோ சொற்களையோ சேர்ந்தலாகாது எனக் கூறுங்கள்.
- பின்வரும் சொற்களை உச்சரிக்கச் சந்தர்ப்பமளிப்பது பொருத்தமானது.
  - என்ன
  - பொய்
  - என்னால முடியாது/ஏலாது
  - ஓம்/ஆமா
  - வாரும்
  - என்னால ஏலும்
  - நல்லது
  - அம்மா
  - திறம்
  - வர வேண்டாம்
  - வணக்கம்
  - அழ வேணாம்

**(80 நிமிடங்கள்)**

**படி 3.2.1.3** :

- உணர்ச்சி வெளிப்பாட்டுடன் உச்சரித்த மாணவரைப் பாராட்டுங்கள்.
- மாணவரை அதே இடத்தில் அமரச் செய்யுங்கள்.

- பின்வரும் விடயங்களை வலியுறுத்திக் கலந்துரையாடுங்கள்.

> - உணர்ச்சிகளை வெளிப்படுத்துவதற்குக் குரல் பெருந் துணையாக அமையும்.
> - உணர்ச்சிகளை வெளிப்படுத்துவதற்காக அந்தந்த உணர்ச்சிக்குப் பொருத்தமானவாறு குரலை மாற்றிப் பயன்படுத்த வேண்டும்.
> - தமது சூழலில் இருப்போரை அவதானிப்பதன் மூலம் இந்த அனுபவங்களைப் பெறலாம்.
> - குரலை ஒரு மட்டத்திலிருந்து வெவ்வேறு மட்டங்களுக்கு மாற்றுவதால் அதாவது உயர்த்துவதாலும் தாழ்த்துவ தாலும் உணர்வுகளை வெளிப்படுத்தக்கூடியவாறு அதனைப் பயன்படுத்தலாம்.
> - பாத்திரச் சித்திரிப்பின்போது நாடக எழுத்துருவில் அடங்கி யுள்ள பாத்திரத்துக்குரிய சொல்லாடற் பகுதிகளின் உணர்ச்சிகளையும் அர்த்தங்களையும் இனங்காண்பது அவசியமாகும்.

**(20 நிமிடங்கள்)**

**கணிப்பீடும் மதிப்பீடும்:**

- மனித வாழ்க்கை அனுபவங்களில் பொதிந்துள்ள உணர்ச்சிகளைக் குறிப்பிடுவார்.
- வெவ்வேறு உணர்ச்சிகளை வெளிப்படுத்துவதற்காகக் குரலை மாற்றிக் கையாளுவது அவசியமென்பதை ஏற்றுக்கொள்வார்.
- வெவ்வேறு உணர்ச்சிகள் ததும்பும் வகையில் சொற்களைக் கையாள்வார்.
- வாய்மொழி மூலம் சரியாகத் தொடர்புபடும் திறனை விருத்தி செய்து கொள்வார்.
- சிறந்த பேச்சாளராக உருவெடுக்கும் பரிச்சயத்தைப் பெறுவார்.

**தேர்ச்சி 3.0 : செயன்முறைச் செயற்பாடுகளில் ஈடுபட்டு, அவற்றுக் குரிய கொள்கைகள் பற்றிய விளக்கத்தை விருத்தி செய்து கொள்வார்.**

**தேர்ச்சி மட்டம் 3.2.2 :** ஸ்வர இராகப் பயிற்சிகளில் ஈடுபடுவர்.

**செயற்பாடு 3.2.2 :** ''குரற் பயிற்சி பெறுவோம்''

**நேரம் :** 04 பாடவேளைகள்

**தர உள்ளீடு :**
- உச்சரிப்பு, குரற் பயிற்சிக்குப் பொருத்தமான வாசிப்புப் பிரதிகள்.
- சொற்கள்/சொற்றொடர்கள்/பாடல் போன்றவை
- கடினமான சுலோகங்கள் போன்றவை
  - பிரதிகள் போதுமான தொகை
- தேடல் அறிவுறுத்தற் பத்திரம்

**கற்றல் - கற்பித்தல் முறைகள்**

**படி 3.2.2.1 :**
- இணைப்பு 3.2.2.2 இல் தரப்பட்டுள்ளவற்றுள் சில சொற்களை/ சொற்றொடர்களை (ஆசிரியர் வாய்மொழி மூலம்) வகுப்பில் முன்வையுங்கள்.

- பின்வரும் விடயங்களை வெளிக்கொணரும் வகையில் கலந் துரையாடுங்கள்.

| |
|---|
| • சொல்லாடலைப் பயன்படுத்தும்போது உச்சரிப்புக் கோலங்களைக் கவனத்திற்கொள்வது அவசியமாகும்.<br>• சொல்லாடலைப் பயன்படுத்துவதற்குத் தெளிவான குரல் இருப்பது அவசியமாகும்.<br>• சொல்லாடலைப் பயன்படுத்துவதற்குக் காத்திரமான/ வலிமையான குரல் இருப்பது அவசியமாகும்.<br>• காத்திரமான குரலைப் பெறுவதற்குக் குரற் பயிற்சி அவசியமாகும்.<br>• இணைப்பு 3.2.2.2 இல் தரப்பட்டுள்ளவற்றை உரத்து வாசிப்பதால் குரலைக் கையாளும் பயிற்சியைப் பெறலாம். |

**(20 நிமிடங்கள்)**

**படி 3.2.2.2 :**
- தேடல் அறிவுறுத்தற் பத்திரப் பிரதிகளையும் தகவற் கோவைப் பிரதிகளையும் ஆளுக்கு ஒன்றாகப் பகிர்ந்த ளியுங்கள்.

- தகவற் கோவையை வாசித்துப் பழகுமாறு அறிவுறுத்துங்கள்.

- வாசிப்பதில் சிரமப்படும் பிள்ளைகளுக்கு உதவி புரியுங்கள்.

- வகுப்பில் வாசித்துக்காட்ட ஆயத்தமாகுமாறு அறிவுறுத் துங்கள்.

**(60 நிமிடங்கள்)**

படி 3.2.2.3 :

- மாணவரைத் திறந்த வெளியான ஓர் இடத்துக்கு அழைத்துச் செல்லுங்கள்.
- தகவற் கோவையின் பகுதிகளை ஒவ்வொருவரும் ஒத்திசைவுடன் (Rhythm) அதிக சத்தமின்றி வாசிக்கச் சந்தர்ப்பமளியுங்கள்.
- சொற்களைச் சரியாக வாசிக்கின்றாரா என அவதானித்துத் தேவைப்படுமிடத்து உதவி புரியுங்கள்.
- சரியாக வாசிக்கப்பழகிய பின்னர் ஒவ்வொருவருக்கும் உரத்து வாசிக்கச் சந்தர்ப்பமளியுங்கள்.
- அனைவரும் அவ்வாறு வாசித்து முடிந்த பின்னர் தத்தமது அனுபவங்களைப் பற்றி மாணவரிடம் வினவுங்கள்.
- பின்வரும் விடயங்களை வலியுறுத்திக் கலந்துரையாடுங்கள்.

- இணைப்பு 3.2.2.2 இல் தரப்பட்டுள்ள சொற்களை/ சொற்றொடர்களை ஒத்திசைவுடன் வாசித்தல் வேண்டும்.
- இணைப்பு 3.2.2.2 இல் தரப்பட்டுள்ள சொற்களை/ சொற்றொடர்களைப் பாடல் போன்று வாசித்தல் வேண்டும்.
- இணைப்பு 3.2.2.2 இல் தரப்பட்டுள்ள சொற்களை/ சொற்றொடர்களை மந்திரம் போன்று வாசித்தல் வேண்டும்.
- வல்லினம், இடையினம். மெல்லினம், குறில், நெடில் எழுத்துக்களை வாசித்துப் பழகுவதால் குறித்த ஒலிகளைச் சரியாகப் பிறப்பிக்க முடியும்.
- நிதமும் குரற் பயிற்சி பெறுவது பயனுடையதாகும்.
- இவ்வாறாகப் பயிற்சி பெறுவதால் நடிப்பதற்குப் பொருத்த மானவாறு குரலை இசைவுபடுத்திக் கொள்ளலாம்.

**(80 நிமிடங்கள்)**

**கணிப்பீடும் மதிப்பீடும்:**

- இணைப்பு 3.2.2.2 இல் தரப்பட்டுள்ள சொற்களை/சொற்றொடர்களை மனனமாகக் கூறுவார்.
- காத்திரமான குரலில் சொற்களை உச்சரிக்க முனைவார்.
- குரலைத் தெளிவாகப் பயன்படுத்துவதில் விருப்புக் காட்டுவார்.
- மேடைப் பயமின்றி வாய்மொழி மூலத் தொடர்பாடலில் ஈடுபடுவார்.
- குழுவாகச் செயற்படுவதில் ஆர்வம் காட்டுவார்.

**இணைப்பு 3.2.2.1**

## தேடல் அறிவுறுத்தற் பத்திரம்

- ஆசிரியர் தரும் தகவற் கோவைப் பிரதிகளைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
- அவற்றைக் கருத்தூன்றி வசியுங்கள்.
- கடினமான சொற்களிருப்பின் அவற்றை உச்சரிக்கும் விதத்தை ஆசிரியரின் உதவியுடன் அறிந்து கொள்ளுங்கள்.
- ஆசிரியரின் கட்டளைப்படி உரத்து வாசித்துப் பழகுங்கள்.
- வாசிக்கும்போது நிறுத்த வேண்டிய இடங்கள் குறித்துக் கவனஞ் செலுத்துங்கள்.
- அந்தந்த வகைப் பிரதியை வாசிக்கும்போது அனுசரிக்க வேண்டிய ஒத்திசைவு, கவிப்பாங்கு, மந்திரப்பாங்கு போன்றவற்றைக் குறித்துக் கவனஞ் செலுத்துங்கள்.

**இணைப்பு 3.2.2.2**

## தகவற் கோவை

### பகுதி 1 - சொற்கள்/சொற்றொடர்கள் அடங்கிய பிரதிகள்

- கற்றாழை
- வற்றாளை
- சீற்றாளை
- இளவாலை
- இளவாழை
- இளவாளை
- சுவரொட்டி
- பதாகை
- சண்ட மாருதக்கூத்தர்
- மாருதப்பிரவல்லி
- வணிகர் குழாம்
- நீர்க்குழாய்
- ஆலங்குளா
- கூழாவடி
- மருதநிலா
- மதுரகலா
- ஜலதரங்கம்
- வலிக்கண்டி
- கொக்குத் துரட்டி
- கொத்துப் புரட்டி
- துப்புரவு
- பனங்காமம்
- பணங்காசு
- குரலொலி ஓசை
- கலிங்கத்துபரணி
- காளிங்க நர்த்தனி
- வங்குரோத்து
- சுற்றுப் பிரகாரம்
- கோயிற் பிரசாதம்
- சேனைப் பரிவாரம்
- சேவைப் பரிகாரம்
- அமுதப் பிரவாகம்
- அழுத்தற் பிரயோகம்
- வாட்போர்
- வார்ச் செருப்பு
- வாற்பேத்தை
- செவ்வாழை
- வாளை மீன்
- வாலைக் குமரி

ஆடிப் பெருக்கு
கொறுக்காப்புளியும் கொடுவா மீனும்
மொட்டைக் கறுப்பனும் அறக்குழாவும்
கொவ்வைச் செவ்வாயில் குமிண் சிரிப்பும்
நாரையும் நாராயும் அலகைப் புரட்டின
ஒற்றைக் கால் கோழியும் தம்பி தலைக் கோலியும்
தோற் பாவைக் கூத்தும் தோழியர் தோறும்

**பகுதி 2 - பாடற் பாணியில் வாசிப்பதற்கான பகுதி**

1. பொன்னை உயர்வைப் புகழை விரும்பிடும்
என்னைக் கவலைகள் தின்னத் தகாதென்று
மிடிமையும் அச்சமும் மேவியென் நெஞ்சில்
குடிமை புகுந்தன கொன்றவை போக்கென்று
தன் செய லெண்ணித் தவிப்பது தீர்ந்திங்கு
நின் செயல் செய்து நிறைவு பெறும் வளம்

*நன்றி - பாரதிபாடல்*

2. சங்குகள் முழங்க முத்தெறிந்திடும் கடற்கரையில்
நங்கையர் நடந்தவை உரைத்திடும் சதங்கை ஒலி

ஆறு நடந்து திரிந்து வயல்கள் அடைந்து
கதிர்கள் விளைந்திட வான் ஏறி உயர்ந்த
மலையேதுமில்லையே மலையேதுமில்லையே
என்ற ஒரு கதை சொல்வதுண்டு
ஏறி உயர்ந்த மலையில்லை யாயினும்
இருந்தன தோள்கள் இருந்தன தோள்கள்

*நன்றி - கவிஞர். இ. முருகையன்*

3. கூழையே நீ குடித்தாலும்
குளிந்த பிறகு குடி அப்பா
ஏழையே நீ ஆனாலும்
இரவில் நன்றாய் உறங்கப்பா

## 4. நாரை விடு தூது

நாராய்! நாராய்! செங்கால் நாராய்
பழம்படு பனையின் கிழங்குபிளந் தன்ன
பவளக் கூர்வாய்ச் செங்கால் நாராய்!
நீயுநின் மனையும்
தென்றிசைக்குமரி யாடி
வட திசைக் கேகுவீராயின் னெம்மூர்ச்

சத்திமுத்த வாவியுள் தங்கி
நரைசுவர்க் கூரைக் கனைகுரற் பல்லி
பாடுபார்த் திருக்குமென் மனைவியைக் கண்டு
''எங்கோன் மாறன் வழுதி கூடலில்
ஆடையின்றி வாடையின் மெலிந்து
கையது கொண்டு மெய்யது பொத்திக்
காலது கொண்டு மேலது தழீஇப்
பேழையுள் இருக்கும் பாம்பென உயிர்க்கும்
ஏழை யாளனைக் கண்டனம் எனுமே?''

*நன்றி - சத்திமுத்தப்புலவர்*

5. எங்கடை தச்சன் சுத்தச் தச்சன்
செத்தைச் சத்தகம் குத்திச் செத்துப் போனான்

6. ஓடுற நரியிலை ஒருநரி கிழ நரி
கிழ நரி முதுகிலை ஒரு பிடி நரை மயிர்
கடலலையிலை உரல் உருழுது
பிரழுது, தத்தளிக்குது, தவழுது, தாளம் போடுது

7. ஆலையிலே சோலையிலே ஆலம்பாடிச் சந்தையிலே
கிட்டிப் புள்ளும் பம்பரமும் கிறுகி அடிக்கப்
பாலாறு பாலாறு பாலாறு

கவடியடிக்க கவடியடிக்க
கைகால் முறிய கைகால் முறிய
காலுக்கு மருந்து
தேடிக் கட்டு தேடிக்கட்டு, தேடிக்கட்டு

8. துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉம் மழை

அன்பிலார் எல்லாம் தமக்குரியர்
அன்புடையார் என்பும் உரியரி பிறர்க்கு

பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு

**பகுதி 3 - கந்தசஷ்டி கவசம்**

நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண

ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி

டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு

உன்னைத் துதிக்க உன் திருநாமம்
சர வண பவனே சைவொளி பவனே
திரிபுர பவனே திகலொளி பவனே
பரிபுர பவனே பவம் ஒளி பவனே
அரிதிரு முருகா அமரா பதியைக்
காத் துன்தேவர்கள் கடுஞ் சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர் வேலவனே!

அண்டமும் பிண்டமும் கண்டவனாரடா
ஆண்டவனோ டங்கே நின்ற வனாரடா
ஆதிபரன் மனுவாயுலகில் வந்தாரே - சோதி
அவர் பிறந்தார் வளர்ந்தார் பூலோகமாண்டார்
போனார் பரலோகம்

**தேர்ச்சி 3.0 : செயன்முறைச் செயற்பாடுகளில் ஈடுபட்டு, அவற்றுக் குரிய கொள்கைகள் பற்றிய விளக்கத்தை விருத்தி செய்து கொள்வார்.**

**தேர்ச்சி மட்டம் 3.3** : உடல், உள ஒருமைப்பாட்டை ஏற்படுத்திக் கொள்வதற்காகப் பயிற்சிகளில் ஈடுபடுவர்.

**செயற்பாடு 3.3** : ''உடலையும் உள்ளத்தையும் ஒருமுகப்படுத்துவோம்''

**நேரம்** : 03 பாடவேளைகள்

**தர உள்ளீடு** :
- பாய்/விரிப்பு (தரையில் விரித்து அமருவதற்காக)

**கற்றல் - கற்பித்தல் முறைகள்**

**படி 3.3.1** :
- மாணவரைச் சுயாதீனமான திறந்தவெளியான ஓர் இடத்துக்கு அழைத்துச் செல்லுங்கள்.
- பாதணிகளைக் களையுமாறு அறிவுறுத்துங்கள். (செயன் முறைச் செயற்பாடுகளுக்குப் பொருத்தமான சௌகரியமான உடை அணிந்து கொள்வது நல்லது)
- மாணவரை வட்டமாக நிறுத்துங்கள்.
- கைகளை இருபுறமாகவும் நீட்டிப் போதுமான இடைவெளி விட்டு நிற்குமாறு அறிவுறுத்துங்கள்.
- விரல்களை ஊன்றி நடந்து செல்லுமாறு அறிவுறுத்துங்கள். (2 - 3 வட்டங்கள்)
- தரித்து நிற்குமாறு அறிவுறுத்துங்கள்.
- கைகளை நீட்டி இடைவெளியைச் சீர்செய்து கொள்ளுமாறு கூறுங்கள்.
- உடலைத் தளர்த்தித் தமக்குச் சௌகரியமானவாறு தரையில் அமருமாறு அறிவுறுத்துங்கள்.
- பின்வரும் விடயங்களை வெளிக்கொணரும் வகையில் கலந் துரையாடுங்கள்.

> - உடல் - உள ஒருமைப்பாட்டுச் செயற்பாட்டுக்காக ஒரு வரை ஒருவர் தொடாத வகையில் விலகி அமர்ந்திருப்பது அவசியமாகும்.
> - கண்களை மூடிக்கொள்ளுதல் வேண்டும்.
> - உள்ளத்தைத் தமது உடலின்பால் செலுத்துதல் வேண்டும்.

- உடலில் விறைப்பு/இறுக்கம் உணரப்படும் இடங்களை இனங்கண்டு அவ்விடங்களைத் தளர்த்திக் கொள்ள வேண்டும்.

**(40 நிமிடங்கள்)**

**படி 3.3.2** :

- சௌகரியமாக அமர்ந்திருக்கும் மாணவரைச் சுவாசப் பயிற்சியில் ஈடுபடுத்துங்கள்.
- உள்ளத்தை உடலின் மீது செலுத்துமாறு அறிவுறுத்துங்கள்.
- உள்மூச்சு வாங்கி வெளிமூச்சு விடுமாறு கூறுங்கள்.
- இவ்வாறு சில தடவைகள் (10) செய்வியுங்கள்.
- பின் இலக்கங்கூறி உள்மூச்சுவாங்கி, வெளிமூச்சு விடச் செய்யுங்கள்.
  1. உள்மூச்சு வாங்கல்
  2. வெளிமூச்சு விடுதல்

  (இதனை ஏறத்தாழ 10 தடவைகள் செய்யுங்கள்.)
- இலக்கங் கூறுவதை நிறுத்தி மீண்டும் சுவாசச் செயற்பாட்டில் ஈடுபடுத்துங்கள்.
- உள்மூச்சு - வெளிமூச்சுக் காற்று (வளி) நாசித்துவார ஓரத்தில் தொடுகையடையச் செய்வது குறித்துக் கவனஞ் செலுத்துமாறு அறிவுறுத்துங்கள்.
- இப்பயிற்சியை 10 - 12 நிமிடங்கள் வரை செய்வது போதுமானது.

**(60 நிமிடங்கள்)**

**படி 3.3.3** :

- உடலைத் தளர்த்திச் சுயாதீனமாக அமர்ந்திருக்குமாறு அறிவுறுத்துங்கள்.
- உடல் - உள ஒருமைப் பயிற்சி பற்றி மாணவரது கருத்துக்களை வினவுங்கள்.
- அவர்களது உணர்சிகளை வெளியிடச் சந்தர்ப்பமளியுங்கள்.
- பின்வரும் விடயங்களை வலியுறுத்திக் கலந்துரையாடுங்கள்.


- உட்சுவாசம் - வெளிச்சுவாசம் தொடர்பாகக் கவனஞ் செலுத்துவதால் உடல் - உள ஒருமைப்பாட்டை ஏற்படுத்தலாம்.
- உடல் - உள ஒருமைப்பாட்டை ஏற்படுத்திக் கொள்வதால் உடலும் உள்ளமும் தளர்வடையும்.

- உள ஒருமைப்பாடு படைப்பாற்றலுக்கு இன்றியமையாத தாகும்.
- பாத்திரச் சித்திரிப்புக்கு உள ஒருமைப்பாடு துணை யாகும்.

**(20 நிமிடங்கள்)**

**கணிப்பீடும் மதிப்பீடும்:**

- உள ஒருமைப்பாட்டுக்குச் சுவாசப் பயிற்சி துணையாகும் எனக் கூறுவார்.
- நிதமும் சுவாசப் பயிற்சிகளில் ஈடுபடுவதில் விருப்புக் காட்டுவார்.
- சுவாசப் பயிற்சிகளின்போது பொருத்தமான மெய்நிலையைப் பேணுவார்.
- உள ஒருமைப்பாட்டின் ஊடாக உடல் - உளக் கட்டுப்பாட்டை வெளிக்காட்டுவார்.
- உள ஒருமைப்பாட்டுடன் நாளாந்தப் பணிகளில் ஈடுபடுவார்.



*தியானம்*

**தேர்ச்சி 3.0 : செயன்முறைச் செயற்பாடுகளில் ஈடுபட்டு, அவற்றுக் குரிய கொள்கைகள் பற்றிய விளக்கத்தை விருத்தி செய்து கொள்வார்.**

**தேர்ச்சி மட்டம் 3.4** : உயிர்ப்பூட்டும் அரங்கப் பயிற்சிகளில் ஈடுபடுவர். (Warming up)

**செயற்பாடு 3.4** : ''நடிப்பதற்காக உயிர்ப்பூட்டும் பயிற்சிகள் செய்வோம்''

**நேரம்** : 02 பாடவேளைகள்

**தர உள்ளீடு** :
- துள்ளிசை இறுவட்டு/ஒலிப்பேழை (CD/Cassette)
- கசெற் இசைக்கும் கருவி (Cassete Recorder)

**கற்றல் - கற்பித்தல் முறைகள்**

**படி 3.4.1** :
- மாணவரைச் சுயாதீனமான திறந்தவெளியான ஓர் இடத்துக்கு அழைத்துச் செல்லுங்கள்.
- பாதணிகளைக் களையுமாறு அறிவுறுத்துங்கள்.
- வட்டமாக நிற்குமாறு அறிவுறுத்துங்கள்.
- உடலைச் சௌகரியமாகத் தளர்த்தி வைத்திருக்குமாறு அறிவுறுத்துங்கள்.
- பின்வரும் விடயங்களை வெளிக்கொணரும் வகையில் கலந்துரையாடுங்கள்.

> - விளையாட்டுக்களின்போதும் நடித்தலின்போதும் உயிர்ப் பூட்டும் பயிற்சிகள் செய்யப்படும்.
> - உயிர்ப்பூட்டும் பயிற்சிகள் மூலம் உடலில் தசைநார்கள் தொழிற்பட்டு உறுதி பெறும்.
> - இப்பயிற்சிகள் மூலம் உடலும் உள்ளமும் புதுத்தெம்பு பெறும்.
> - நடிப்புக்கு முன்னர் உடலைத் தளர்த்திக் கொள்வது முக்கியமானது.
> - உயிர்ப்பூட்டிய உடல் (தளர்வான) நடிப்பின் வெற்றிக்குப் பங்களிப்புச் செய்யும்.

**(20 நிமிடங்கள்)**

**படி 3.4.2** :
- மாணவரை வட்டமாக நிற்குமாறு அறிவுறுத்துங்கள்.
- கைகளை இருபுறமாகவும் நீட்டி இடைவெளியைச் சீர்செய்து கொள்ளுமாறு அறிவுறுத்துங்கள்.

- கண்களை மூடிக்கொள்ளுமாறு கூறுங்கள்.
- துள்ளிசையை இசையுங்கள். இசையைச் செவிமடுத்து அதன் தாளத்தை இனங்காண அவகாசமளியுங்கள்.
- பாதத்தினால் தாளந்தட்டச் செய்யுங்கள்.
- கைகளால் உடலில் தாளந்தட்டுமாறு அறிவுறுத்துங்கள்.
- அத்தாளத்தின்படி தலையை அசைக்குமாறு அறிவுறுத் துங்கள்.
- கண்களைத் திறந்து, சுயாதீனமாக நடமாட (அசைந்தாட) அவகாசமளியுங்கள்.
- தரையில் அமருமாறு அறிவுறுத்துங்கள்.
- சகல மாணவரும் இந்தப் பயிற்சியில் ஈடுபடச் சந்தர்ப்ப மளியுங்கள்.

**(40 நிமிடங்கள்)**

**படி 3.4.3** :
- இப்பயிற்சி பற்றி மாணவரது கருத்துக்களை வினவுங்கள்.
- பின்வரும் விடயங்களை வலியுறுத்திக் கலந்துரையாடுங்கள்.

| |
|---|
| • இசையைக் கேட்டவாறே உடலுக்கு உயிர்ப்பூட்டும் பயிற்சிகளில் ஈடுபடுவதால் களைப்பு உணரப்படுவதில்லை.<br>• யாதேனும் செயலைத் தொடங்க முன்னர் முன்னாயத்தம் செய்து கொள்வது அவசியமாகும்.<br>• மேடைப் பயத்தைக் களைவதற்கு உயிர்ப்பூட்டும் பயிற்சிகள் துணையாகும்.<br>• தாளத்திற்கேற்ப ஒத்திசைவான வகையில் உடலுக்கு உயிர்ப்பூட்டுவதானது உடலின் செயற்பாடுகள் சீராக நிகழத் துணையாகும். |

**(20 நிமிடங்கள்)**

**கணிப்பீடும் மதிப்பீடும்:**
- உடலுக்கு உயிர்ப்பூட்டும் பயிற்சிகள் தொடர்பாகத் தேடியறிவார்.
- முன்னாயத்தம் செய்துகொள்வதற்காக உடலுக்கு உயிர்ப்பூட்டும் பயிற்சிகள் பொருத்தமானவையாகும் என்பதை ஏற்றுக்கொள்வார்.
- உடலுக்கு உயிர்ப்பூட்டும் பயிற்சிகளைச் சரியாகச் சொல்வார்.
- படைப்பாக்கச் செயற்பாடுகளின்போது உடலுக்கு உயிர்ப்பூட்டும் பயிற்சிகளில் ஈடுபடுவது முக்கியமானது என்பதை விளங்கிக் கொள்வார்.
- நாளாந்தப் பணிகளை வெற்றிகரமாகச் செய்வதற்கு முன்னாயத்தம் அவசியமாகும் என்பதை ஏற்றுச் செயற்படுவார்.

**தேர்ச்சி 3.0 : செயன்முறைச் செயற்பாடுகளில் ஈடுபட்டு, அவற்றுக் குரிய கொள்கைகள் பற்றிய விளக்கத்தை விருத்தி செய்து கொள்வார்.**

**தேர்ச்சி மட்டம் 3.5** : உடலைத் தளர்த்தும் பயிற்சிகளில் ஈடுபடுவர்.

**செயற்பாடு 3.5** : ''பயிற்சிகள் செய்வோம்; உடலைத் தளர்த்துவோம்''

**நேரம்** : 02 பாடவேளைகள்

**தர உள்ளீடு** :
- திறந்த வெளியான ஓர் இடம்

**கற்றல் - கற்பித்தல் முறைகள்**

**படி 3.5.1** :
- மாணவரைச் சுயாதீனமாகத் திறந்தவெளியான ஓர் இடத்துக்கு அழைத்துச் செல்லுங்கள்.
- பாதணிகளைக் களையுமாறு கூறுங்கள்.
- வட்டமாக நிற்குமாறு அறிவுறுத்துங்கள். செயற்பாடு 3.4ஐ நினைவு கூருங்கள்.
- பின்வரும் விடயங்களை வெளிக்கொணரும் வகையில் கலந் துரையாடுங்கள்.

| |
|---|
| • பயிற்சிகள் மூலம் உடலைத் தளர்த்தலாம்.<br>• நடிப்பதற்கு உடல் தளர்வாக இருப்பது அவசியமாகும்.<br>• தளர்வான உடல் நெகிழ்ச்சித் தன்மையைக் கொண்டிருக்கும்.<br>• நாளாந்தக் கருமங்களைச் செவ்வனே செய்வதற்குத் தளர்வான உடல் உறுதுணையாகும். |

**(05 நிமிடங்கள்)**

**படி 3.5.2** :
- வட்டத்தில் கைகளை இருபுறமாக நீட்டி இடைவெளியைச் சீர்செய்து கொள்ளுமாறு கூறுங்கள்.
- பயிற்சியில் ஈடுபடுத்துங்கள்.
  - ஆசிரியர் 1 எனக் கூறியதும் உள்மூச்சு வாங்கி, இறுக்கிப் பிடித்திருக்குமாறு அறிவுறுத்துங்கள். (சில செக்கன்கள் வரை)
  - ஆசிரியர் 2 எனக் கூறியதும் வெளிமூச்சு விட்டு உடலைத் தளர்வாக வைத்திருக்குமாறு அறிவுறுத்துங்கள்.
  - எவ்வாறு உடலை வைத்திருப்பது இலகுவானது என வினவுங்கள்.
  - தளர்வாக வைத்திருப்பது இலகுவானது என்பதை அனுபவம் மூலம் உணர இடமளியுங்கள்.

**(10 நிமிடங்கள்)**

**படி 3.5.3** :

- மாணவரை முன்னர் போன்று வட்டமாக நிறுத்துங்கள்.
- கைகளை நீட்டி இடைவெளியைச் சீர்செய்து கொள்ளுமாறு அறிவுறுத்துங்கள்.
- கவனமாக நிற்குமாறு அறிவுறுத்துங்கள்.
- செயற்பாட்டில் ஈடுபடுத்துங்கள்.
    - ஆசிரியர் 1 எனக் கூறியதும் தலையை முன்னோக்கித் தளர்த்தித் தொங்கவிடுமாறு அறிவுறுத்துங்கள்.
    - ஆசிரியர் 2 எனக் கூறியதும் உடலின் மேற்பகுதியைத்
    - தளர்த்திக் கைகளையும் தலையையும் தொங்கவிட்டுக் குனிந்து இருக்குமாறு அறிவுறுத்துங்கள்.
    - ஆசிரியர் 3 எனக் கூறியதும் ஆரம்ப நிலைக்கு வருமாறு அறிவுறுத்துங்கள்.
    - சகல மாணவருக்கும் உடல் தளர்ச்சியாக உள்ளதா என அவதானியுங்கள்.
    - இப்பயிற்சி பற்றி மாணவரது கருத்துக்களை வினவுங்கள்.
- பின்வரும் விடயங்களை வலியுறுத்திக் கலந்துரையாடுங்கள்.

> - உடல் தளர்வாக இருத்தலானது நடித்தலின் வெற்றிக்குத் துணையாக அமையும்.
> - பயிற்சிகளில் ஈடுபடுவதால் உடலைத் தளர்வாக வைத்திருக்கலாம்.
> - தளர்வான உடலைச் சித்திரிப்பின்போது தேவைக்கேற்ப நெகிழ்வுடன் கையாளலாம்
> - உடலைத் தளர்த்தும் பயிற்சிகள் காரணமாக உடல் மலர்ச்சி பெறும்.

**(25 நிமிடங்கள்)**

**கணிப்பீடும் மதிப்பீடும்:**

- உடலைத் தளர்த்துதல் என்பதை விளக்குவார்.
- உடலைத் தளர்தும் செயற்பாடுகளில் நிதமும் ஈடுபட விருப்புத் தெரிவிப்பார்.
- சரியான மெய்நிலைகளைப் பேணப் பயிற்சிகளில் ஈடுபடுவார்.
- தளர்வான உடல் நாளாந்தச் செயற்பாடுகளை இலகுவாக்கும் என்பதை ஏற்றுக் கொள்வார்.
- தளர்வான உடல், தெளிவான சிந்தனை பிறப்பதற்குத் துணையாகும் எனக் குறிப்பிடுவார்.

**தேர்ச்சி 3.0 : செயன்முறைச் செயற்பாடுகளில் ஈடுபட்டு, அவற்றுக் குரிய கொள்கைகள் பற்றிய விளக்கத்தை விருத்தி செய்து கொள்வார்.**

**தேர்ச்சி மட்டம் 3.6** : ஊமச் சித்திரிப்பில் ஈடுபடுவர்.

**செயற்பாடு 3.6** : ''வாய் பேசாது சித்திரிப்போம்''

**நேரம்** : 04 பாடவேளைகள்

**தர உள்ளீடு** :
- ஊமச்சித்திரிப்புக் கலைஞர் ஒருவரின் சித்திரிப்புகளைக் காட்டும் சில ஒளிப்படங்கள்.

**கற்றல் - கற்பித்தல் முறைகள்**

**படி 3.6.1** :
- மாணவரைத் திறந்தவெளியான சுயாதீனமான ஓர் இடத்துக்கு அழைத்துச் செல்லுங்கள்.
- பாதணிகளைக் கழற்றுமாறு அறிவுறுத்துங்கள். மாணவரை வட்டமாக நிற்குமாறு அறிவுறுத்துங்கள்.
- எழுமாறாக ஒரு மாணவரை வட்டத்துக்கு மத்தியில் அழைத்து ''வாழைப்பழமொன்றினைத் தோலுரித்துச் சாப்பிடுவது'' போலச்செய்து காட்டுமாறு அறிவுறுத்துங்கள். ''மற்றுமொரு மாணவனை வட்டத்தின் மத்தியில் அழைத்துக் கிணற்றிலிருந்து நீர் அள்ளி இறைப்பது'' போலச்செய்து காட்டுமாறு அறிவுறுத்துங்கள்.
- மாணவர் இருவருமே செய்து காட்டிய செயல்கள் எவை என வகுப்பு மாணவரிடம் வினவுங்கள்.
- பின்வரும் விடயங்களை வெளிக்கொணரும் வகையில் கலந் துரையாடுங்கள்.

| |
|---|
| • யாதேனும் சம்பவத்தை, வாய் பேசாது செய்து காட்டலாம்.<br>• அதற்காக நாம் நாளாந்த வாழ்க்கையில் காணும்/ அனுபவிக்கும் நிகழ்வுகளை அவதானித்தல் வேண்டும்.<br>• வாய் போசாது அதாவது சொற்களைப் பயன்படுத்தாது உடலை மாத்திரம் பயன்படுத்தி யாதேனும் சம்பவத்தை ஆக்கபூர்வமாக முன்வைத்தலே ''ஊமச் சித்திரிப்புக் கலை'' எனப்படுகின்றது.<br>• இதற்காகப் புறவாரியாக எந்தவொரு பொருளையும் பயன்படுத்தலாகாது.<br>• ஊமச் சித்திரிப்பைப் படைப்பதற்குக் கற்பனா சக்தி துணையாகும்.<br>• ஊமச் சித்திரிப்புக்கான சூழமைவுகளை உருவாக்குவதற் காக நிஜ உலக நிகழ்வுகளையும் கற்பனையுலக நிகழ்வுகளையும் பயன்படுத்தலாம். |

**(40 நிமிடங்கள்)**

**படி 3.6.2** :

- மாணவரைத் திறந்தவெளியான சுயாதீனமான ஓர் இடத்துக்கு அழைத்துச் செல்லுங்கள்.
- பாதணிகளைக் கழற்றுமாறு கூறுங்கள். மாணவரை வட்டமாக நிறுத்துங்கள்.
- இரு கைகளையும் நீட்டி இடைவெளியைச் சீர்செய்து கொள்ளுமாறு அறிவுறுத்துங்கள்.
- அதே இடத்தில் தரையில் அமரச் செய்யுங்கள்.
- கண்களை மூடிக்கொள்ளுமாறு அறிவுறுத்துங்கள்.
- இன்று காலை நித்திரைவிட்டு எழுந்த வேளை தொடக்கம் பாடசாலைக்குப் புறப்படுவது வரையிலான நேரத்துள் இடம்பெற்ற எல்லாச் சம்பவங்களையும் ஒழுங்கு முறைப்படி நினைவுகூருமாறு வழிப்படுத்துங்கள்.
- அந்தந்தச் சந்தர்ப்பத்தில் தாம் செயற்பட்ட விதம் பற்றியும் பயன்படுத்திய பொருள்கள் குறித்தும் கவனஞ் செலுத்துமாறு அறிவுறுத்துங்கள்.
- நினைவு கூர்வதற்காகப் போதுமான அளவு நேர அவகாசம் வழங்குங்கள். (5 - 10 நிமிடம்)

**(80 நிமிடங்கள்)**

**படி 3.6.3** :

- மாணவரை எழுமாறாகத் தனித்தனியே வட்டத்தின் மத்தியில் அழைத்து நினைவுபடுத்திய சம்பவங்கள்/நிகழ்வுகளை வாய் பேசாது உடலை மாத்திரம் பயன்படுத்திச் செய்து காட்டச் சந்தர்ப்பமளியுங்கள்.
- சகல மாணவருக்கும் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- சித்திரிப்புகளின் நிறைகுறைகளை அவதானித்து நிறைகளைப் பாராட்டுங்கள். குறைகளிருப்பின் உடனடியாகத் திருத்திக் கொள்ள ஆவன செய்யுங்கள்.
- பின்வரும் விடயங்களை வலியுறுத்திக் கலந்துரையாடுங்கள்.

> - வாய்பேசாமலேயே யாதேனும் சூழமைவைச் சித்திரித்துக் காட்டலாம்.
> - ஊமச்சித்திரிப்பில் ஈடுபடும்போது மனிதரின் உடல் நெகிழ்வாகவும் தளர்வாகவும் இருத்தல் வேண்டும்.
> - நாம் நாளாந்த வாழ்வில் காணும்/ அனுபவிக்கும் நிகழ்வுகளைக் கருத்தூன்றி அவதானித்து அவற்றுள் ஊமச் சித்திரிப்புக்குப் பெருத்தமானவற்றை மாத்திரம் தெரிவு செய்து கொள்ள வெண்டும்.

- ஊமச் சித்திரிப்பை நிஜ உலகில் மாத்திரமன்றிக் கற்பனை உலகிலும் செய்யலாம்.
- ஓர் ஊமச் சித்திரிப்பு 5 - 10 நிமிடங்கள் நீடிக்கலாம்.
- ஊமச் சித்திரிப்பில் நாடகப் பொருத்தமான ஒரு சூழமைவு அடங்கியிருத்தல் வேண்டும்.
- யதார்த்த நிலையை விஞ்சிய மிகைப்படுத்தலாகவும் ஊமச் சித்திரிப்பு முன்வைக்கப்படலாம்.
- ஊமச் சித்திரிப்புக்காகப் பொருத்தமான உடையும் ஒப்பனையும் அவசியமாகும்.
- ஊமச் சித்திரிப்புக்காக உடலைத் தயார்ப்படுத்துவதற்கு அரங்கப் பயிற்சிகளில் இடுபடலாம்.
- ஊமச் சித்திரிப்பின் மூலம் முகத்தின் உணர்ச்சி வெளிப்பாடும், உடலுறுப்புக்களினூடான உணர்ச்சி வெளிப்பாடும் காத்திரமாக அமைதல் அவசியமாகும்.

**(40 நிமிடங்கள்)**

**கணிப்பீடும் மதிப்பீடும்:**

- ''ஊமச் சித்திரிப்பு'' என்பதை விளக்குவார்.
- ''ஊமச் சித்திரிப்பு'' சுவாரசியமான ஒரு கலையாகும் என்பதை ஏற்றுக் கொள்வார்.
- ஊமச் சித்திரிப்பில் ஈடுபடுவார்.
- உடல் - உள ஒருமைப்பாட்டை ஏற்படுத்திக் கொள்வார்.
- மேடைப் பயமின்றிச் செயற்படுவார்.





*ஊம நடிகர்*

**தேர்ச்சி 3.0 : செயன்முறைச் செயற்பாடுகளில் ஈடுபட்டு, அவற்றுக் குரிய கொள்கைகள் பற்றிய விளக்கத்தை விருத்தி செய்து கொள்வார்.**

**தேர்ச்சி மட்டம் 3.7** : நாடகப் பொருத்தமான நாட்டார் விளையாட்டுக்களில் ஈடுபடுவர்.

**செயற்பாடு 3.7** : ''நாட்டார் விளையாட்டுக்களை விளையாடுவோம்'' - ''இரண்டு கோட்டைகள்''

**நேரம்** : 03 பாடவேளைகள்

**தர உள்ளீடு** :
- இணைப்பு 3.7.1 தேடல் அறிவுறுத்தற் பத்திரப் பிரதிகள் போதுமான தொகை
- இணைப்பு 3.7.2 தகவற் கோவை

**கற்றல் - கற்பித்தல் முறைகள்**

**படி 3.7.1** :
- மாணவர் விளையாடும் விளையாட்டுக்களின் பெயர்களைக் கூறுமாறு அறிவுறுத்துங்கள்.
- அவற்றைக் கரும்பலகையில் குறித்துக்கொள்ளுங்கள்.
- நாட்டார்/கிராமிய விளையாட்டுக்கள் எவை என வினவுங்கள்.
- அவற்றை வேறாகப் பட்டியற்படுத்துங்கள்.
- நாட்டார்/கிராமிய விளையாட்டுக்கள் பற்றி மாணவரது அனுபவங்களை வினவுங்கள்.
- பின்வரும் விடயங்களை வெளிக்கொணரும் வகையில் கலந் துரையாடுங்கள்.



*கபடி*

- எந்தவொரு சமூகத்தினதும் பண்பாட்டு அருஞ்செல்வங் களுள் ஒன்றாக நாட்டார் விளையாட்டுக்களை/கிராமிய விளையாட்டுக்களைக் கருதலாம்.
- வெளிக்கள விளையாட்டுக்கள் உள்ளக விளையாட்டுக் கள் மக்களின் நம்பிக்கைகள் சார்ந்த கேளிக்கை விளை யாட்டுக்கள், மிருகங்கள் சார்ந்த விளையாட்டுக்கள். மயிர்க்கூச்செறிய வைக்கத்தக்க விளையாட்டுக்கள் போன்ற பலவகைப்பட்ட நாட்டார் விளையாட்டுக்கள் உள்ளன.
- சிறுவருக்கு, பெண்களுக்கு, ஆண்களுக்கு எனத் தனியான நாட்டார் விளையாட்டுக்களும் ஆண் - பெண் வேறு பாடின்றி விளையாடத்தக்க நாட்டார் விளையாட் டுக்களும் உள்ளன.

- களிப்பு, அறிவூட்டம், தர்க்க சிந்தனை விருத்தி, பதட்டமின்றிச் சாவதானமாகப் பிரச்சினைக்குத் தீர்வு காணல், புலனுறுப்புக் கட்டுப்பாடு, உடலாரோக்கியம் பேணல் போன்ற பல்வேறு நோக்கங்களுக்காக நாட்டார் விளையாட்டுக்கள் விளையாடப்படும்.
- சறுக்குமரமேறுதல், தலையணைச் சண்டை, சடுகுடு, கபடி, முட்டி உடைத்தல், எவடம் வடம், கிட்டிப்புள், கிளித்தட்டு போன்ற பல்வேறு விளையாட்டுக்கள் புத்தாண்டு, தைப்பொங்கல் போன்ற பண்டிகைக் காலங்களில் விளையாடப்படுவதுண்டு.

**(30 நிமிடங்கள்)**

**படி 3.7.2** :

- மாணவரைத் திறந்தவெளியான சுயாதீனமான ஒரு இடத்துக்கு அழைத்துச் செல்லுங்கள்.
- மாணவரை இரண்டு குழுக்களாகப் பிரியுங்கள்.
- தேடல் அறிவுறுத்தப் பத்திரத்தைக் குழுவுக்கு ஒன்றாக வழங்கி வாசிப்பதற்கு அனைவருக்கும் சந்தர்ப்பமளியுங்கள்.
- தகவற் கோவைப் பிரதிகளைக் குழுவுக்கு ஒன்றாக வழங்கி அதனை உசாவச் சந்தர்ப்பமளியுங்கள்.
- விளையாடுவதற்காக அணித் தலைவரைத் தெரிவுசெய்து கொள்ளுமாறு அறிவுறுத்துங்கள்.
- விளையாட்டில் ஈடுபடுத்துங்கள்.



*கிளித்தட்டு*

**(60 நிமிடங்கள்)**

**படி 3.7.3** :

- தாம் ஈடுபட்ட விளையாட்டுக் குறித்து மாணவரிடம் வினவுங்கள்.
- அதன் மூலம் கிடைக்கும் பயன்களை வினவுங்கள்.
- பின்வரும் விடயங்களை வலியுறுத்திக் கலந்துரையாடுங்கள்.

- கூட்டாகச் சேர்ந்து விளையாடுவதால் களிப்பு ஏற்படும்.
- உத்திகளைக் கையாண்டு விளையாடுவதால் தனது அணியை வெற்றி பெறச் செய்யலாம்.
- ‘‘இரண்டு கோட்டைகள்”எனும் கிராமிய /நாட்டார் விளையாட்டில் ஈடுபடுவதன் மூலம் ஒற்றுமை, போட்டியிடல், முயற்சி போன்றவற்றினூடாக உடல், உளத் திறன்கள் விருத்தியடையும்.
- நட்புணர்வு, மோதுகை, கவனம் போன்ற பல்வேறு நாடகச் செயற்பாடுகள் நாட்டார் விளையாட்டுக்களில் அடங்கியிருப்பதைக் காணலாம்.

**(30 நிமிடங்கள்)**

**கணிப்பீடும் மதிப்பீடும்:**

- பல்வேறு நாட்டார் விளையாட்டுக்கள் தொடர்பான தகவல்களைச் சேகரிப்பார்.
- நாட்டார் விளையாட்டுக்களில் ஈடுபடுவார்.
- கூட்டாகச் சேர்ந்து செயற்படுவதன் பெறுமானத்தை விளங்கிக்கொள்வார்.
- வெற்றியையும் தோல்வியையும் ஏற்றுக்கொள்ளும் பக்குவத்தைப் பெறுவார்.
- உடல், உள வலிமையை வளர்த்துக் கொள்வதற்காகக் கிராமிய / நாட்டார் விளையாட்டுக்களைத் துணையாக் கொள்வார்.

**இணைப்பு 3.7.1**

## தேடல் அறிவுறுத்தற் பத்திரம்

- ஆசிரியரது அறிவுறுத்தலின்படி சமமான இரண்டு குழுக்களாகப் பிரிந்து கொள்ளுங்கள்.
- தேடல் அறிவுறுத்தற் பத்திரப் பிரதிகளைப் பெற்று வாசியுங்கள்.
- தகவற் கோவைப் பிரதிகளையும் பெற்று வாசியுங்கள்.
- ‘இரண்டு கோட்டைகள்’ எனும் விளையாட்டில் ஈடுபடுவதற்கான சந்தர்ப்பம் உங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.
- ஆசிரியரது ஆலோசனையுடன் உங்களது கோட்டையை அமைத்துக் கொள்ளுங்கள். அது ஒரு மரமாக அன்றேல் உறுதியாக நாட்டப்பட்ட கோலாக இருக்கலாம்.
- இரண்டு கோட்டைகளுக்கும் இடையில் 20 மீற்றர் (60 அடி) தூரம் இடைவெளி இருக்கும் வகையில் கோட்டைகளை அமைத்துக் கொள்ளுங்கள்.
- உங்களது கோட்டையை (மரத்தை/தூணை) எதிர்க் குழுவினர் கைப்பற்றுவதைத் தவிரத்துக் கோட்டையைப் பாதுகாப்பதே உங்களது பொறுப்பாகும்.
- கோட்டையைக் கைப்பற்றுவதற்கென எதிர்த்தரப்பிலிருந்து வருவோரைப் பிடித்து/ தொட்டு அவர்களை விளையாட்டிலிருந்து நீக்கலாம்.
- எதிர்த்தரப்பினரின் உடலைத் தொட்டு அவர்களைப் போட்டியிலிருந்து நீக்குவதற்கான உத்திகளைக் கையாண்டு செயற்படுங்கள்.
- எதிர்த்தரப்பில் உள்ளோரின் தொகையைப் படிப்படியாகக் குறைத்துக் கோட்டையைக் கைப்பற்ற முயற்சி செய்யுங்கள்.
- எதிர்த்தரப்புக் கோட்டையைக் கைப்பற்றும் (மரத்தை/துணைத் தொடும்) அணி வெற்றி பெறும்.

**இணைப்பு 3.7.2**

## தகவற் கோவை

## இரண்டு கோட்டைகள்
## (நாட்டார்/கிராமிய விளையாட்டு)

### விளையாட்டுத் திடலைத் தயார்ப்படுத்தல்

விளையாட்டுத் திடலாகத் திறந்தவெளியான, தடங்கல்களற்ற, பாதுகாப்பான ஓர் இடத்தைப் பயன்படுத்தலாம். ஒன்றிலிருந்து ஒன்று ஏறத்தாழ 20 மீற்றர் (60 அடி) தூரத்தில் அமைந்த இரண்டு மரங்கள் காணப்படுமாயின் அவற்றைக் கோட்டைகளாகப் பயன்படுத்தலாம். அவற்றான 2 மரங்கள் இல்லையேல் இருக்கும் ஒரு மரத்திலிருந்து 20 மீற்றர் தூரத்தில் ஒரு தூணை உறுதியாக நாட்டிக் கொள்ளலாம். ஒரு மரங்கூட இல்லையெனின் 20 மீற்றர் தூரத்தில் அமையுமாறு இரண்டு தூண்களை உறுதியாக நாட்டிக்கொள்ளலாம். அந்தக் கோட்டைகளுக்குச் சரிமத்தியில் ஒரு வட்டம் விரைதல் வேண்டும்.

வகுப்பு மாணவர் இரண்டு அணிகளாகப் பிரிந்து விளையாடலாம். ஒரு அணியில் 4 பேருக்கு மேல் இருப்பது அவசியமாகும். எனினும் ஓர் அணியில் 20 இற்கு மேற்பட்டோர் இருப்பது பொருத்தமானதன்று.

அணிக்கு ஒருவராகத் தலைவரை நியமித்து விளையாடலாம்.

### விளையாடும் விதம்

பூவா - தலையா போட்டுப் பார்த்து விளையாட்டைத் தொடங்கும் அணியைத் தீர்மானித்துக் கொள்ளலாம். தெரிவு செய்த அணியின் ஒருவர் வட்டத்தினுள் வருதல் வேண்டும். அவரைப் பிடிப்பதற்காக எதிர் அணியிலிருந்து ஒருவர் செல்லலாம். தேவையெனின் இருவர் அன்றேல் அதற்கு மேற்பட்டோரும் செல்லலாம். எனினும் தமது அணியின் மரத்தைப் பாதுகாப்பதற்காக மரத்தின் அருகிலும் சிலர் காவல் காத்து நிற்றல் வேண்டும்.

மரத்தைக் கைவிட்டுச் சென்று போரிடுவோருக்குத் தூர ஓடிச் சென்று தப்பித்துக் கொள்ளவும் பிடிக்கவும் உரிமை உண்டு. மரத்தைக் கைவிட்டுப் போரிடச் செல்லும் எவரையும் எதிரணியினர் பிடித்து ஆட்டமிழக்கச் செய்யவும் முடியும். எவரேனும் வீரர் களைப்புற்றா ராயின் அவர் மரத்தைக் காவல் காப்பதில் ஈடுபடலாம். மரத்தைக் காத்துக்கொண்டு ஓய்வாக இருந்த ஒருவரைக் களத்துக்கு அனுப்பலாம். இவ்வாறாக ஓடித்துரத்தியவாறு எதிரணியின் எண்ணிக்கையைக் குறைக்க முயற்சி செய்தல் வேண்டும்.

தாம் எதிரணியினரின் பிடிக்கு அகப்படாதவாறு அவர்களைப் பிடிக்க முயற்சி செய்தல் வேண்டும். எவரேனும் விளையாட்டு வீரர் எதிர் அணியினரின் கையில் பிடிபடாது அவ்வணியின் மரத்தைத் தொட்டாராயின் அம்மரம் தொட்டவரின் அணிக்கு உரித்தாகும். அதாவது அவரது அணி வெற்றி பெறும். மரத்தைப் பறிகொடுத்த அணி தோல்வியடையும். அத்தோடு விளையாட்டு முடிவடையும்.

பின்னர் விளையாட்டை மீண்டும் தொடங்கி ஆடலாம்.

**தேர்ச்சி 4.0 : பண்பாட்டுப் பின்புலத்தை அறிந்து ஆற்றுகை செய்வார்.**

**தேர்ச்சி மட்டம் 4.1** : வரலாற்றுக் கதைகளின் பின்புலங்களை அறிந்து கொள்வர்.

**செயற்பாடு 4.1** : ''வரலாற்றினூடாக நாடகத்தை அணுகுவோம்''

**நேரம்** : 05 பாடவேளைகள்

**தர உள்ளீடு** :
- தமிழ் அரச பரம்பரைக் கதைகள்
- இணைப்பு 4.1.1 இல் தரப்பட்டுள்ள தேடல் அறிவுறுத்தற் பத்திரப் பிரதிகள் - 04
- இணைப்பு 4.1.2 இல் தரப்பட்டுள்ள தகவற் கோவைப் பிரதிகள் - 04

**கற்றல் - கற்பித்தல் முறைகள்**

**படி 4.1.1** :
- பண்டாரவன்னியன், சங்கிலியன், எல்லாளன், குளக்கோட்டன் போன்ற அரச கதையொன்றின் ஒரு சிறு பகுதியை அடிப்படையாகக் கொண்டு ஏற்கெனவே ஆயத்தம் செய்யப் பட்ட ஒரு நாடகப் பகுதியை மாணவரூடாக வகுப்பில் முன் வையுங்கள்.

- அவ்வரச கதையைப் போன்ற வேறு வரலாற்றுக் கதைகள் தொடர்பாக மாணவர் அறிந்துள்ளவற்றை வினவுங்கள்.

- பின்வரும் விடயங்களை வெளிக்கொணரும் வகையில் கலந்துரையாடுங்கள்.

> - இலங்கையுடன் தொடர்புடைய பல்வேறு வரலாற்றுக் கதைகள் உள்ளன. அதனை அரியாத்தை கதை, பண்டார வன்னியன், சங்கிலியன் போன்றவர்களினூடாக இனங்கண்டு கொள்ளலாம்.
> - அக்கதைகளை வகைப்படுத்திக் காட்டலாம்.
>   உதாரணம்: வீரக் கதைகள்
>   அரசர் கதைகள்
>   அரசியர் கதைகள்
> - இவ்வாறான வரலாற்றுக் கதைகளில் நாடகப் பண்புடைய கருப்பொருள்களும் அடங்கியுள்ளன.

**(20 நிமிடங்கள்)**

**படி 4.1.2** :
- வகுப்பு மாணவரை நான்கு குழுக்களாகப் பிரியுங்கள்.

- இணைப்பு 4.1.1இல் தரப்பட்டுள்ள தேடல் அறிவுறுத்தற் பத்திரப் பிரதிகளைக் குழுவுக்கு ஒன்றாகப் பகிர்ந்தளியுங்கள்.

- இணைப்பு 4.1.2 இல் தரப்பட்டுள்ள தகவற் கோவைப் பிரதிகளைக் குழுவுக்கு ஒன்றாகப் பகிர்ந்தளியுங்கள்.
- குழு முன்வைப்புக்கான ஆயத்தங்களைச் செய்து கொள்ளு மாறு அறிவுறுத்துங்கள்.

**(60 நிமிடங்கள்)**

**படி 4.1.3** :
- தமது ஆக்கங்களை வகுப்பில் முன்வைப்பதற்குக் குழுவுக்குச் சந்தர்ப்பமளியுங்கள்.
- முன்வைப்புத் தொடர்பாக அதே குழுவின் கருத்துக்களை வினவுங்கள்.
- ஏனைய குழுக்களின் ஆக்கபூர்வமான கருத்துக்களை வினவிப் பெறுங்கள்.
- பின்வரும் விடயங்களை வலியுறுத்திக் கலந்துரையாடுங்கள்.

| |
|---|
| • வரலாற்றுக் கதைகள், நாடக உருவாக்கத்துக்குப் பொருத்தமான கருவைத் தருவனவாகக் காணப் படுகின்றன.<br>• வரலாற்றுப் பாத்திரங்களை அடிப்படையாகக் கொண்டு நாடகங்களைப் படைக்கலாம்.<br>• எமது நாடகக் கலையைச் செழுமைப்படுத்துவதற்காக வரலாற்றுக் கதைகளைப் பயன்படுத்தலாம்.<br>• வரலாற்றுக் கதைகளை அடிப்படையாகக் கொண்டு தற்கால சமூகத்தைக் கட்டியெழுப்பலாம். (தற்கால சமூகப் படிப்பினைகள் பெறலாம்) |

**(40 நிமிடங்கள்)**

## கணிப்பீடும் மதிப்பீடும்:

- பல்வேறு வரலாற்றுக் கதைகளைக் கொண்டு நாடகச் சூழமைவுகளைக் கட்டி யெழுப்புவார்.
- இலங்கைக்கேயுரிய பல்வேறு வரலாற்றுக் கதைக் கருக்கள், நாடகம் படைப்பதற்குப் பொருத்தமானவை என்பதை ஏற்றுக்கொள்வார்.
- வரலாற்றுக் கதைகளில் அடங்கியுள்ள நாடகப் பண்புடைய சூழமைவுகளை இனங்கண்டு சேகரித்து நூலாக்குவார்.
- வரலாற்றில் விட்ட தவறுகளைத் திருத்திக்கொள்ள முனைவார்.
- சிறந்த ஆளுமையைக் கட்டியெழுப்பிக் கொள்வார்.

**இணைப்பு 4.1.1**

## தேடல் அறிவுறுத்தற் பத்திரம்

- ஆசிரியரின் உதவியுடன் வெவ்வேறு வகையான வரலாற்றுக் கதைகளைத் திரட்டுங்கள்.
- அக்கதைகளை, அரசியற் கதைகள், சமயக் கதைகள், வீரதீரக் கதைகள் என வகைப்படுத்துங்கள்.
- அந்தந்தக் கதைக்கு அடிப்படையாக அமைந்துள்ள சமூகப் பண்பாட்டுச் சூழ்நிலைகள் பற்றிக் கலந்துரையாடுங்கள்.
- நீங்கள் திரட்டிய கதைகளுள் நாடகப் பண்புடைய சூழமைவுகள், பாத்திரங்கள், சம்பவங்கள் அடங்கிய கதையொன்றினைக் கட்டியெழுப்புங்கள்.
- கதையை வகுப்பில் முன்வைக்க ஆயத்தஞ் செய்து கொள்ளுங்கள்.

**இணைப்பு 4.1.2**

## தகவற் கோவை

- **வரலாற்றுக் கதைகள்**
  1. சங்கிலியன் போர்த்துக்கேயரை எதிர்த்துப் போரிட்ட கதை.
  2. மாருதப்பிரவல்லி, கீரிமலையில் நீராடிக் குதிரைமுகம் மாறிய கதை.
  3. குளக்கோட்டன் ஆற்றை மறித்த கதை
  4. வன்னியில் அரியாத்தை ஆனையை அடக்கிய கதை.
  5. பூதத்தம்பி அந்திராசியின் சூழ்ச்சியினால் அநியாயமாகக் குற்றஞ்சாட்டப்பட்டுக் கொல்லப்பட்ட கதை.
  6. பண்டாரவன்னியன் ஆங்கிலேயருக்கு எதிராகப் போரிட்ட கதை.
  7. கலிங்க மாகன், இலங்கையைக் கைப்பற்றிய கதை.
  8. வெடியரசனை மீகாமன் வென்ற கதை.

**தேர்ச்சி 4.0 : பண்பாட்டுப் பின்புலத்தை அறிந்து ஆற்றுகை செய்வார்.**

**தேர்ச்சி மட்டம் 4.2** : வரலாற்றுக் கதைகளின் உள்ளடக்கத்தை அறிந்து கொள்வர்.

**செயற்பாடு 4.2** : ''வரலாற்றுக் கதைகளையும் அவற்றில் பொதிந்துள்ள முக்கியமான நிகழ்ச்சிகளையும் பயிலுவோம்''

**நேரம்** : 05 பாடவேளைகள்

**தர உள்ளீடு** :
- வரலாற்றுக் கதைகள் அடங்கியுள்ள சில நூல்கள்
- அக்கதைகளில் அடங்கியுள்ள சம்பவங்களை உள்ளடக்கி வரையப்பட்ட சில சித்திரங்கள்.
- டிமை கடதாசிகள்/A4 கடதாசிகள்
- பெல்ற் பேனைகள் / பேனைகள்

**கற்றல் - கற்பித்தல் முறைகள்**

**படி 4.2.1** :
- மாணவர் அறிந்து வைத்துள்ள/ வசமுள்ள வரலாற்றுக் கதைப் புத்தகங்களைக் குறித்த நாளில் வகுப்புக்குக் கொண்டு வருமாறு முன்கூட்டியே மாணவருக்கு அறிவுறுத்துங்கள்.
- வெவ்வேறு துறைகளையும் வெவ்வேறு பின்னணிகளையும் கொண்ட கதைகள் அடங்கியுள்ள புத்தகங்களைத் தேடிப் பெற்றுக் கொண்டு வருமாறு அறிவியுங்கள்.
  உதாரணம்: வீரக்கதை, தேவதைக் கதை, அரச கதை, சமயக்கதை, கமத்தொழில் சார்ந்த வரலாற்றுக் கதை, புனை கதை
- கதைகளில் வரும் சம்பவங்களைக் காட்டும் சித்திரங்களைத் தயாரித்து அன்றேல் திரட்டி வந்து வகுப்பில் காட்சிப் படுத்துங்கள்.
- மாணவர் கொண்டுவந்த கதைப் புத்தகங்களையும் காட்சிப்படுத்துங்கள்.
- அவை பற்றி மாணவரது கருத்துக்களை வினவுங்கள்.
- பின்வரும் விடயங்களை வெளிக்கொணரும் வகையில் கலந் துரையாடுங்கள்.

> - வரலாற்றுக் கதைகளை வெவ்வேறு பிரிவுகளாக வகைப் படுத்தலாம்.
> - அக்கதைகளில் வெவ்வேறுபட்ட கருப்பொருள்கள் அடங்கியிருக்கும்.
> - அக்கருப்பொருள்களில் நாடகப் பண்புடைய நிகழ்ச்சி களும் பின்னணிகளும் அடங்கியிருக்கும்.

- இலங்கை வரலாற்றுக் கதைகளில் அடங்கியுள்ள பெரும் பாலான நிகழ்ச்சிகள் நாடகம் போன்று எமது மனதில் பதியும் தன்மையுடையவையாகும்.
  உதாரணம்:
  - விஜயன் - குவேனி கதை
  - சங்கிலியன் மன்னன் கதை
  - குளக்கோட்டன் கதை
  - சேனன் - குத்திகன் கதை
  - கலிங்க மாகன் கதை
  - பண்டாரவன்னியன் கதை
- வெளிநாட்டுத் தொடர்புகள் காரணமாக எமது வரலாற்றிலும் இலக்கியத்திலும் மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன.
- அவ்வாறான வரலாற்றுக் கதைகளைத் திரட்டுவதன் மூலம் நாடகக் கலையைச் செழுமைப்படுத்தத் துணை புரியலாம்.

**(40 நிமிடங்கள்)**

**படி 4.2.2** :
- மாணவரைச் சிறு குழுக்களாகப் பிரியுங்கள். ( மூவர்/இருவர் கொண்ட குழுக்கள்)
- தேடல் அறிவுறுத்தற் பத்திரப் பிரதிகளைக் குழுவுக்கு ஒன்றாகப் பகிர்ந்தளியுங்கள்.
- கதைகளின் நிகழ்ச்சிகளைக் காட்டும் சித்திரங்களை வகைப் படுத்திப் பகிர்ந்து பரிமாறிக் கொள்ளுமாறு அறிவுறுத்துங்கள்.
- மாணவர் திரட்டிய கதைப் புத்தகங்கள் உட்படக் கதைப் புத்தகங்களைக் குழுக்களுக்கிடையே பகிர்ந்து பரிமாறிக் கொள்ளுமாறு அறிவுறுத்துங்கள்.
- செயற்பாட்டில் ஈடுபடுத்துங்கள்.
- ஆக்கத்தை வகுப்பின் முன்வைக்க ஆயத்தஞ்செய்து கொள்ளு மாறு அறிவுறுத்துங்கள்.

**(80 நிமிடங்கள்)**

**படி 4.2.3** :
- குழு ஆக்கங்களை வகுப்பில் முன்வைக்கச் சந்தர்ப்பம் அளியுங்கள்.
- அதே குழுவின் கருத்துக்களை வினவுங்கள்.
- ஏனைய குழுக்களின் ஆக்கபூர்வமான கருத்துக்களை வினவிப் பெறுங்கள்.

- பின்வரும் விடயங்களை வலியுறுத்திக் கலந்துரையாடுங்கள்.

- பெரும்பாலான வரலாற்றுக் கதைகளில் முக்கியமான வரலாற்று நிகழ்ச்சிகளை நாடகமும் அரங்கக் கலைகளும் பாடத்துடன் தொடர்புபடுத்திக் கொள்ளலாம்.
- அந்நிகழ்ச்சிகளை வெவ்வேறு விதமாக நாடகத்துடன் தொடர்புபடுத்திக் கொள்ளலாம்.
- அவ்வரலாற்றுக் கதைகளில் பொதிந்துள்ள நிகழ்ச்சிகளில் அடங்கியுள்ள பாத்திரங்களுக்கான சொல்லாடல்களைக் கட்டியெழுப்பலாம்.
- அவற்றின் மூலம் நாடகப் பண்புடைய சூழமைவுகளை உருவாக்கலாம்.
- சில கதைகள் மூலம் சிறந்த நாடக எழுத்துருக்களை எழுதலாம்.
- அந்தந்தச் சூழமைவில் இடம்பெறும் பாத்திரங்களைப் பற்றிய மனப்படத்தை உருவாக்கிக் கொள்வதற்காக வெவ்வேறு வேட உடைகளைத் தயாரிக்கலாம்.
- வரலாற்றுக் கதைகளில் இடம்பெறும் பல்வேறு நிகழ்ச்சி களைச் சிந்தை கவரத்தக்க வகையில் சித்திரங்களாக வரையலாம். பல்வேறு வரலாற்றுக் கதைகளை வெவ்வேறு தலைப்புக்களின் கீழ் வகைப்படுத்தித் திரட்டி வைக்கலாம்.

  உதாரணம்:
  - சமயக் கதைகளை எழுதி ஒரு சிறு நூலாக்குதல்.
  - இந்து/சைவ சமயக் கதைகள்
  - விவிலியக் கதைகள்
  - இஸ்லாமியக் கதைகள்
  - புராண தெய்வீகக் கதைகள்
  - பௌத்த கதைகள்
- வரலாற்றுக் கதைகளில் அடங்கியுள்ள நிகழ்வுகளுக்கு/ சூழமைவுகளுக்கு அடிப்படையாக அமைந்த ஆடல், பாடல், வாத்திய இசை போன்றவைப் பற்றி நுணுகி ஆராயலாம்.

  உதாரணம்:
  - அரசவை நிகழ்வுகள்
  - விகடகவி நிகழ்வுகள்
- வரலாற்றில் இடம்பெற்ற முக்கிய பாத்திரங்களின் வாழ்க்கைத் தகவல்களைத் திரட்டலாம்.

  உதாரணம்: அரசர்கள் பற்றியவை
- அக்கதைகளுக்கு அடிப்படையாக அமைத்த சமூக, பொருளாதார, அரசியல்த் தகவல்களைத் தேடித்திரட்டி ஆவணப்படுத்தி வைக்கலாம்.
- எதிர்காலச் சந்ததியினரின் பரிசீலனைக்கு அவை வளங்களாக உதவும்.

**(80 நிமிடங்கள்)**

**கணிப்பீடும் மதிப்பீடும்:**

- வெவ்வேறு துறைகளின் கீழ் எழுதப்பட்ட வரலாற்றுக் கதைகள் உள்ளன எனக் குறிப்பிடுவார்.
- அவ்வரலாற்றுக் கதைகளைக் கொண்டு நாடகக் கலை சார்ந்த பல்வேறு செயற்பாடுகளில் ஈடுபடலாம் என்பதை ஏற்றுக் கொள்வார்.
- அச்செயற்பாடுகளில் செயல் ரீதியில் ஈடுபடுவார்.
- வரலாற்று நிகழ்வுகளினூடாக நாடகத்துக்குப் பொருத்தமான எளிமையான கதைப் பொருள்களைக் கட்டியெழுப்புவார்.
- கதைப் பொருள்களினூடாக நயப்புத் திறனை விருத்தி செய்து கொள்வார்.

**இணைப்பு 4.2.2**

## தேடல் அறிவுறுத்தற் பத்திரம்

- நீங்கள் வகுப்புக்குக் கொண்டு வந்த கதைப் புத்தகங்களையும் ஆசிரியர் தரும் கதைப் புத்தகங்களையும் ஏனைய ஆக்கங்களையும் சித்திரங்களையும் ஆசிரியரின் உதவியுடன் வகைப்படுத்திக் கொள்ளுங்கள். (வீரக் கதைகள், தேவதைக் கதைகள், அரச கதைகள்...)

- அவற்றைக் குழுக்களுக்கு இடையே பரிமாறியவாறு அவதானியுங்கள்/உசாவுங்கள்.

- ஆசிரியர் வழங்கும் அறிவுறுத்தல்களைக் கவனமாகச் செவிமடுத்து விளங்கிக் கொள்ளுங்கள்.

- உங்களது குழுவுக்குரிய ஒப்படை குறித்துக் கவனஞ் செலுத்துங்கள்.

- ஒப்படையைக் குறித்த நேரத்துள் பூர்த்திசெய்து வகுப்பில் முன்வைக்க ஆயத்தஞ் செய்து கொள்ளுங்கள்.

- இவ்வொப்படைக்குப் பாடசாலை மட்டக் கணிப்பீட்டுப் புள்ளி வழங்கப்படுமென்பதைக் கவனத்திற்கொண்டு சிறப்பாக நிறைவு செய்வதிற் கவனஞ் செலுத்துங்கள்.

## ஒப்படை

**குழு 1:**
உங்களது குழுவுக்குத் தரப்பட்டுள்ள சித்திரத்துக்குரிய வரலாற்றுக் கதையை எழுதுங்கள்.

**குழு 2:**
நீங்கள் வாசித்த வரலாற்றுக் கதையொன்றின் யாதேனுமொரு சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு நாடகத்துக்குப் பொருத்தமான சொல்லாடலொன்றினை எழுதுங்கள்.

**குழு 3:**
உங்களது குழுவுக்குத் தரப்பட்டுள்ள சித்திரத்தில் அடங்கியுள்ள அன்றேல் கதையொன்றில் இடம்பெறும் பாத்திரங்களுக்குப் பொருத்தமான வேட உடைகளை வரையுங்கள்.

**குழு 4:**
உங்களது குழுவுக்குத் தரப்பட்டுள்ள சித்திரத்தில் அன்றேல் கதையொன்றில் இடம்பெறும் மேடைபொருள்கள்/காண்பியங்கள் எவையென இனங்கண்டு பட்டியற்படுத்தி எழுதுங்கள்.

**குழு 5:**
நீங்கள் வாசித்த கதைக்கு அமைவாக எளிமையான நாடகப் பண்புடைய சூழமைவொன்றினைக் கட்டியயெழுப்பி எழுதுங்கள்.

**தேர்ச்சி 4.0 : பண்பாட்டுப் பின்புலத்தை அறிந்து ஆற்றுகை செய்வார்.**

**தேர்ச்சி மட்டம் 4.3** : நாடு பற்றிய விருப்பும், கடப்பாடும் ஏற்படும் வகையில் கதைகளை அறிந்து கொள்வர்.

**செயற்பாடு 4.3** : ''நாட்டுப் பற்றுமிக்க பாத்திரங்களை இனங்காண்போம்''

**நேரம்** : 05 பாடவேளைகள்

**தர உள்ளீடு** :
- தேசிய வீரர்களின் படங்கள்
  சேர் பொன்னம்பலம் ராமநாதன்
  சேர் பொன்னம்பலம் அருணாச்சலம்.
  கலாநிதி ரீ.பீ. ஜாயா, சித்திலெப்பை, மத்துமபண்டார, கெப்பெட்டிபொல
- தேசிய வீர்கள் பற்றிக் கூறும் பாடல்கள் - இறுவட்டு/ ஒலிப்பேழை
- தேசிய வீரர்கள் பற்றிக்கூறும் கதைகள்
- இணைப்பு 4.3.1 இல் தரப்பட்டுள்ள தேடல் அறிவுறுத்தற் பத்திரப் பிரதிகள்
- இணைப்பு 4.3.2 இல் தரப்பட்டுள்ள தகவற் கோவை - கதை

**கற்றல் - கற்பித்தல் முறைகள்**

**படி 4.3.1** :
- இணைப்பு 4.3.1, 4.3.2 இல் தரப்பட்டுள்ள கதையை வாசித்துக் காட்டுங்கள்.

- அவ்வாறான மேலுமொரு பாடலை மாணவருடன் சேர்ந்து உணர்வுபூர்வமாகப் பாடுங்கள்.

- எமது வரலாற்றில் இடம்பெற்றுள்ள, நாட்டின்மீது பற்றுக் கொண்ட வீரர்கள்/வீராங்கனைகள் பற்றிய வரலாற்றுக் கதைகளைப் பற்றி மாணவருடன் கலந்துரையாடுங்கள்.
  (வசதி உள்ளதாயின், வரலாறு தொடர்பான சிறப்பறிவுள்ள வளவாளர் ஒருவரை அழைத்து மாணவருடன் கருத்துப் பரிமாறச் சந்தர்ப்பமளியுங்கள்)

- அதனூடாக எமது நாட்டில் வாழ்ந்த தேசிய வீரர்களை இனங்காண வழிப்படுத்துங்கள்.

- பின்வரும் விடயங்களை வெளிக்கொணரும் வகையில் கலந் துரையாடுங்கள்.

> - எமது நாட்டிலும் உலகின் ஏனைய நாடுகளிலும் அவற்றின் வரலாற்றில் நாட்டுப் பற்றாளர்கள் தொடர்பான பல்வேறு கதைகள் உள்ளன.

- அக்கதைகளைப் பாடல், நாடகம், நாவல் போன்ற வெவ்வேறு வடிவங்களில் நாம் பயிலலாம்.
- அவ்வாறான வரலாற்றுக் கதைகளினூடாக நாட்டுப்பற்று மிக்க வீரப் பாத்திரங்களை இனங்கண்டு கொள்ளலாம்.
- அப்பாத்திரங்களைக் கொண்டு நாடகச் சூழமைவுகளைக் கட்டியெழுப்பலாம்.
- அப்பாத்திரங்களை ஏற்று நடிப்பதன் மூலம் நாம் எமது வாழ்க்கையுடன் அப்பாத்திரத்தின் சிறப்பியல்புகளை இணைத்துக் கொள்ளலாம்.

**(40 நிமிடங்கள்)**

**படி 4.3.2** :

- மாணவரை ஐந்து குழுக்களாகப் பிரியுங்கள்.
- தேடல் அறிவுறுத்தற் பத்திரப் பிரதிகளைக் குழுவுக்கு ஒன்றாகப் பகிர்ந்தளியுங்கள்.
- வீரர் ஒருவரின் பாத்திரத்தைத் தெரிவு செய்து கொள்ளுமாறு அறிவுறுத்துங்கள். (குழுவில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பாத்திரம் வீதம்)
- செயற்பாட்டில் ஈடுபடுத்துங்கள்.
- ஆக்கத்தை வகுப்பில் முன்வைக்க ஆயத்தஞ் செய்து கொள்ளுமாறு அறிவுறுத்துங்கள்.

**(40 நிமிடங்கள்)**

**படி 4.3.3** :

- மாணவரது ஆக்கங்களை வகுப்பில் முன்வைக்கச் சந்தர்ப்ப மளியுங்கள்.
- பின்வரும் விடயங்களை வலியுறுத்திக் கலந்துரையாடுங்கள்.

- எமது வரலாறு வீரர்கள், வீராங்கனைகளின் பாத்திரங்கள் பெருந்தொகையானவற்றைக் கொண்டது.
- அப்பாத்திரங்களையும் சம்பவங்களையும் நாடகமாக முன்வைக்கலாம்.
- பாத்திரமொன்றைச் சித்திரிக்கும்போது தாம் அப்பாத்திரத் துடன் ஒன்றிருத்தல் வேண்டும்.
- பாத்திரத்தைச் சித்திரிக்க முன்னர் அப்பாத்திரத்தின் தன்மையையும் பண்புகளையும் நன்கு அறிந்திருப்பது அவசியமாகும்.
- தேசிய வீரர்கள் பற்றிப் பயிலுகையில், இனங்காணத்தக்க நாட்டுப்பற்று, மதிப்புணர்வு, நேர்மை, தைரியம், வீரம் போன்ற குணாதிசங்களை நாம் சித்திரிப்பின் மூலம் வெளிப்படுத்துவது அவசியமாகும்.

**(120 நிமிடங்கள்)**

**கணிப்பீடும் மதிப்பீடும்:**

- வரலாற்றுக் கதைகள், அவற்றுடன் தொடர்புடைய வீரர்கள்/வீராங்கனைகள் பற்றிய தகவல்களை விளங்கிக் கொள்வார்.
- வரலாற்று வீரர்கள்/வீராங்கனைகளின் பாத்திரங்களையும் அவர்களுடன் தொடர்புடைய சம்பவங்களையும் சித்திரிப்பார்.
- வரலாற்றில் முக்கியத்துவமுடைய சூழமைவுகளைத் தேடியறியவும், சித்திரிப்புக்காக அவற்றைப் பயன்படுத்தவும் முனைவார்.
- தேசப்பற்றினால் நெறிப்படுத்தப்படும் நல்லாளுமையை வளர்த்துக் கொள்வார்.
- பெருமைமிக்க இலங்கையனாக உலகில் ஜொலிப்பார்.

**இணைப்பு 4.3.1**

## தேடல் அறிவுறுத்தற் பத்திரம்

- கீழே தரப்பட்டுள்ள பாத்திரங்கள், சம்பவங்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்துங்கள்.
- உங்களது குழுவுக்குரிய தலைப்பைத் தெரிவுசெய்து கொள்ளுங்கள்.
    - யானையை அடக்கி அதன் மேல் ஏறிவந்த அரியாத்தை நீங்களாயின்...
    - போர்த்துக்கேயரினால் சங்கிலி கைது செய்யப்பட்டபோது ‘சங்கிலி’ மன்னன் நீங்களாயின்...
    - துட்டகைமுனுவால் எல்லாளன் தோற்கடிக்கப்பட்டபோது எல்லாளன் நீங்களாயின்...
    - இலங்கைக்கு முதன் முதலில் விஜயன் தனது தோழர்களுடன் வந்தபோது குவேனியை முதன் முதலில் சந்திக்கும்போது நீங்கள் குவேனியானால்...
    - காக்கைவன்னியனின் காட்டிக் கொடுக்கும் குணத்தைப் பண்டாரவன்னியன் அறியும் போது நீர் பண்டாரவன்னியன் ஆனால்...
    - ஸ்ரீவிக்கிரமஇராஜசிங்கன் குமாரிஹாமியின் பிள்ளைகளின் தலையை உரலில் போட்டு இடிக்கச் சொல்லும் போது நீர் குமாரிகாமியாயின்...
    - ஒல்லாந்தத் தளபதி பூதத்தம்பி மீது தேசத்துரோகக் குற்றம் சுமத்தியபோது நீர் பூதத்தம்பியாயின்...
    - குளக்கோட்டனின் தூதுவன், நந்தி உடையாரிடம் சென்று குளக்கோட்டன் அவரது மகளைப் பெண் கேட்பதாகத் தூது சொன்ன போது நீர் நந்திஉடையராயின்...
    - வெடியரசனை மீகாமன் கைது செய்தபின், வெடியரசனுடன் மீகாமன் சமாதானம் செய்து கொள்ள முற்பட்டபோது நீர் மீகாமனானால்...
    - யாழ்ப்பாணன், வாலசங்கன் மன்னனிடம் இரந்து செல்லும்போது நீர், யாழ்ப்பாணனாயின் (யாழ்பாடி)...

**இணைப்பு 4.3.2**

## தகவற் கோவை

- முன்னொரு காலத்தில் சீனாவில் வாழ்ந்த ஒரு சிறுமி பாடசாலை செல்லும் வழியே சோளப் பயிர் செழித்து வளர்ந்திருந்தது. ஒரு சோளத்தாவரத்தில் பெரிய பொத்தியொன்று நிலத்தை நோக்கி வளைத்திருப்பது அவளது கண்களில் பட்டது. நாட்டு மக்களுக்கு உணவாகும் அச்சோளம் நிலத்தில் வீழ்ந்து அழுகிப்போய் விடுமோ எனக் கவலைப்பட்டாள். எப்படியேனும் அதைக் காப்பாற்ற எண்ணினாள். தனது பின்னற் சடைகளைக் கட்டியிருந்த இரண்டு வார்களுள் ஒன்றை அவிழ்த்துச் சோளத்தாவரத்தைப் பொத்தியோடு நிமிர்த்தி ஆதாரத் தடியுடன் கட்டனாள். பின்னற் சடைகளிரண்டையும் ஒன்றாகச் சேர்த்துத் தனிப்பின்னலாகக் கட்டிக்கொண்டு பாடசாலையைச் சென்றடைந்தாள்.

  சிறுமிகள் அனைவரும் இரண்டு பின்னற் சடைகளுடன் பாடசலைக்கு வரவேண்டும் என்பது சீனாவில் பாடசாலைகளில் விதிக்கப்பட்டுள்ள ஒரு ஒழுங்குமுறையாகும். அவளது ஒற்றைப் பின்னற் சடையைக் கண்ட ஆசிரியர் அது பற்றி அச்சிறுமியிடம் விசாரித்தார். சிறுமி சற்றுப் பதட்டத்துடன் காலையில் பாடசாலைக்கு வரும் வழியில் நடந்தவற்றைக் கூறினாள். ஆசிரியர் தட்டிக்கொடுத்துப் பாராட்டுத் தெரிவித்தார். அவளது நல்ல செயல் குறித்து வகுப்பில் ஏனைய மாணவருக்கும் அறிவித்தார். மறுநாள் காலைக்கூட்டத்தில் அவள் பாடசாலை மாணவர் அனைவருக்கும் முன்னிலையிலும் அதிபரால் பாராட்டப்பட்டாள்.

  சீனாவில் பாடசாலைப் பிள்ளைகளான சிறுவர் சிறுமியர் கூடத் தமது நாட்டின் மீது பற்றுக் கொண்டிருப்பதையும் நாட்டுக்காக அர்ப்பணிப்புடன் தன்னலமின்றிச் செயற்படுவதையும் இக்கதை எடுத்துக் காட்டுகிறது.

# பகுதி III
# கணிப்பீடும் மதிப்பீடும்

# பாடசாலை மட்டக் கணிப்பீடு

## அறிமுகம்

கற்றல் - கற்பித்தல் மதிப்பீடு ஆகியன கல்விச் செயன்முறைகளின் முக்கிய மூன்று கூறுகளாகும் என்பதும், கற்றல் கற்பித்தலின் முன்னேற்றத்தை அறியக் கணிப்பீடு மதிப்பீட்டைப் பயன்படுத்த வேண்டும் என்பதும் எல்லா ஆசிரியர்களும் தெளிவாக அறிந்திருக்க வேண்டிய ஒரு விடயமாகும். அவை ஒன்றன் மீது ஒன்று செல்வாக்குச் செலுத்தும் அதேவேளை ஒவ்வொன்றும் மற்றையவற்றின் முன்னேற்றத்திலும் செல்வாக்குச் செலுத்துகின்றன என்பதும் ஆசிரியர்கள் யாவரும் அறிந்த உண்மையாகும். தொடர் (நிதமும் நிகழும்) மதிப்பீட்டுக் கோட்பாடுகளுக்கிணங்கக் கற்றல் நடைபெறும் போதே மதிப்பீடும் இடம்பெற வேண்டும். இது கற்றல் கற்பித்தற் செயன்முறையின் ஆரம்பப்பகுதி, இடைப்பகுதி, இறுதிப்பகுதி ஆகிய எந்த ஒரு சமயத்திலும் இடம் பெறலாம் என்பதை ஆசிரியர்கள் விளங்கிக் கொள்வது அவசியமாகும். தமது மாணவரை மதிப்பிட எதிர்பார்க்கும் ஓர் ஆசிரியர் கற்றல் - கற்பித்தல் மதிப்பீடு ஆகியன தொடர்பான ஒழுங்கான திட்டமொன்றைப் பயன்படுத்தல் அவசியம்.

பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட கணிப்பீட்டு வேலைத்திட்டமானது ஒரு பரீட்சை முறையோ சோதனை நடத்துவதோ அன்று. அது மாணவர்களது கற்றலையும், ஆசிரியர்களது கற்பித்தலையும் மேம்படுத்துவதற்காகப் பயன்படுத்தப்படும் ஒரு தலையீடாகும். ஆதலால் மாணவர்களுக்கு அருகில் இருந்து அவர்களுடைய பலங்களையும் பலவீனங்களையும் இனங்கண்டு அவற்றிற்குப் பரிகாரம் கண்டவாறு மாணவர்களை அவர்களது உச்ச வளர்ச்சி மட்டத்தை அடையச் செய்வதற்காகப் பயன்படுத்தக்கூடிய ஒரு வேலைத் திட்டமாகும். கற்றல் - கற்பித்தற் செயல்மூலம் தேடற் செயன்முறையின் பால் மாணவர்கள் வழிப்படுத்தப்படு கின்றனர். பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட கணிப்பீட்டு வேலைத்திட்டத்தைச் செயற்படுத்தும்போது மாணவர்களிடையே ஆசிரியர் சஞ்சரித்து அவர்கள் செய்யும் வேலைகளை அவதானித்து வழிகாட்டலை வழங்கிச் செயற்படல் வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இங்கு மாணவர்கள் தொடர்ச்சியாக மதிப்பீட்டுக்கு உள்ளாக்கப்படுவ தோடு அவர்களின் ஆற்றல் அபிவிருத்தி எதிர்பார்த்தவாறு நடைபெறுகின்றதா என்பதை ஆசிரியர் உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

மாணவருக்குத் தக்க அனுபவங்களைப் பெற்றுக்கொடுத்து அவற்றை அவர்கள் சரியாகப் பெற்றுக்கொண்டார்களா என்பதை உறுதிப்படுத்தல் கற்றல்-கற்பித்தல் ஊடாக நிகழ வேண்டும். அத்தோடு அதற்குத் தக்க வழிகாட்டல் வழங்கப்பட வேண்டும். மதிப்பீட்டில் (கணிப்பீட்டில்) ஈடுபட்டுள்ள ஆசிரியர்கள் தமது மாணவர்களுக்கு இரண்டு வகையான வழிகாட்டல்களை வழங்க முடியும். அவை பொதுவாகப் பின்னூட்டல் / முன்னூட்டல் எனப்படும்.

மாணவர்களின் பலவீனங்களையும் இயலாமைகளையும் கண்டறிந்தபோது அவர்களது கற்றற் பிரச்சினைகளை நிவர்த்திப்பதற்காகப் பின்னூட்டலையும் மாணவர்களின் திறமைகளையும் ஆற்றல்களையும் இனம்காணும்போது அவற்றை மேம்படுத்த, முன்னூட்டலையும் வழங்குவது ஆசிரியரின் கடமையாகும்.

கற்றல்- கற்பித்தற் செயன்முறையின் வெற்றிக்காகப் பாடநெறியின் நோக்கங்களுள் எந்த நோக்கத்தை எந்த மட்டத்தில் நிறைவேற்ற முடிந்தது என்பதை இனங்காணல், மாணவர்களுக்கு அவசியமாகின்றது. மதிப்பீடுகள் மூலம் மாணவர்கள் அடைந்துள்ள தேர்ச்சி மட்டங்களைத் தீர்மானித்தல் சம்பந்தப்பட்ட ஆசிரியரிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றது. மாணவர்கள், ஆசிரியர்கள், வேறு பிரிவினர்களுக்கு மாணவர்களின் முன்னேற்றம் பற்றிய தகவல்களை

அறிவிப்பதற்கு ஆசிரியர் முனைய வேண்டும். இதற்குப் பயன்படுத்தக்கூடிய மிகவும் பொருத்தமான முறை, தொடர்ச்சியாக மாணவரை மதிப்பீட்டுக்கு உட்படுத்த வாய்ப்பளிக்கும் பாடசாலை மட்ட மதிப்பீட்டு முறையாகும்.

மேற்படி நோக்கத்துடன் செயற்படும் ஆசிரியர்கள் தமது கற்பித்தற் செயன்முறையையும் மாணவர்களின் கற்றற் செயன்முறையையும் மேலும் வினைத்திறன் மிக்கதாக்குவதற்கு வினைத்திறன் மிக்க கற்றல் -கற்பித்தல் மதிப்பிடல் முறைகளைப் பயன்படுத்த வேண்டும். இது தொடர்பாக ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் பயன்படுத்தத்தக்க அணுகுமுறைப் பேதங்கள் (வகைகள்) சில கீழே தரப்பட்டுள்ளன. இவை நீண்டகாலமாக ஆசிரியர்களுக்குத் தேசிய கல்வி நிறுவகத்தினாலும், பரீட்சைத் திணைக்களத்தினாலும் விளக்கமளிக்கப்பட்ட முறைகளாகும். எனவே அவை தொடர்பாகப் பாடசாலைத் தொகுதியைச் சேர்ந்த ஆசிரியர்கள் போதிய அறிவூட்டம் பெற்றிருப்பர் என எதிர்பார்க்கப்படுகின்றது. அப்பேதங்கள் வருமாறு;

1. ஒப்படைகள்
2. செயற்றிட்டங்கள்
3. அளவாய்வுகள்
4. தேடியாய்வுகள்.
5. அவதானிப்புக்கள்
6. கண்காட்சி / முன்வைத்தல்கள்
7. களச் சுற்றுலாக்கள்
8. குறுகிய எழுத்துப் பரீட்சைகள்
9. அமைப்புக் கட்டுரைகள்
10. திறந்த நூற் சோதனைகள்
11. ஆக்கச் செயற்பாடுகள்
12. செவிமடுத்தற் சோதனைகள்
13. செய்முறைச் செயற்பாடுகள்
14. பேச்சுக்கள்
15. சுய ஆக்கங்கள்
16. குழுச் செயற்பாடுகள்
17. எண்ணக்கருப் படங்கள்
18. இரட்டைப் பதிவு - ஜேர்னல்
19. சுவர்ப் பத்திரிகைகள்
20. வினா-விடை நிகழ்ச்சிகள்
21. வினா-விடைப் புத்தகங்கள்
22. விவாதங்கள்
23. குழுக் கலந்துரையாடல்கள்
24. கருத்தரங்குகள்.
25. உடனடிச் சொற்பொழிவு
26. பாத்திரமேற்று நடித்தல்

அறிமுகம் செய்யப்பட்டுள்ள மேற்படி கற்றல் கற்பித்தல் மதிப்பீட்டு முறைகள் அனைத்தையும், எல்லாப் பாடங்களினது எல்லா அலகுகளுக்காகவும் பயன்படுத்த முடியும் என எதிர்பார்க்கப்படவில்லை. தமது பாடத்திற்கும் குறித்த பாட அலகிற்கும் பொருத்தமான கருவியைத் தெரிவு செய்துகொள்வதற்கு அறிவூட்டம் பெற வேண்டும்.

மேற்படி ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியில் தமது மாணவர்களின் கற்றல் முன்னேற்றத்தைக் கணிப்பிடப் பயன்படுத்தக்கூடிய கற்றல் கற்பித்தல் மற்றும் மதிப்பீட்டுப் பேதங்கள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆசிரியர்கள் தமது மாணவர்களின் முன்னேற்றத்திற்காக அவற்றைத் தக்கவாறு பயன்படுத்தல் வேண்டும். இவற்றைப் பயன்படுத்தாது தவிர்த்தல் மாணவர் தமது அறிவாற்றல் மற்றும் உள எழுச்சி, உள இயக்கத் திறன்களை வளர்த்துக் கொள்வதற்கும் அவற்றை வெளிப்படுத்துவதற்கும் தடையாக அமையும்.

## கற்றல் - கற்பித்தல் மதிப்பீட்டுத் திட்டங்களைத் தயாரிப்பதற்கான மாதிரி நாடகமும் அரங்கக் கலைகளும் - தரம் 07

**01. மதிப்பீட்டுத் தவணையும்**

**கருவி இலக்கமும் :** தவணை 1, கருவி 1

**02. உள்ளடங்கும் தேர்ச்சி மட்டங்கள் :** 1.8

**03. விடய உள்ளடக்கம் :**
- துணைக்கலைகளை இனங்காணல்
- துணைக்கலை அம்சங்களை நிர்மாணித்தல்
- துணைக்கலை அம்சங்களைப் பயன்படுத்தல்

**04. கருவியின் தன்மை :**
- வெவ்வேறு நாடகப் பொருத்தமான சூழமைவுகளுக்காக ஒரு துணைக்கலை அம்சமாக மேடைப் பின்னணியை அமைத்தல்.

**05. கருவியின் குறிக்கோள்கள்**
- நாடகத்திற்கான துணைக் கலைகள் எவையென்பதைக் குறிப்பிடுவார்.
- மேடைப் பின்னணியை எளிமையான முறையில் ஆக்குவார்.
- ஆக்கத்திறனை வெளிக்காட்டுவார்.
- தாம் வாழும் சூழலை அவதானிக்கப் பழகுவார்.

**06. கருவியை நடைமுறைப்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள் :**
**ஆசிரியருக்கானவை:**
- செயற்பாடு 1.8 ஆரம்பிக்கும் போது துணைக்கலைகள் பற்றி விளக்கமளிக்கும் சந்தர்ப்பத்தில் இக்கருவியை வகுப்பில் அறிமுகஞ் செய்யுங்கள்.

- துணைக்கலைகளுள் மேடைப் பின்னணி அமைப்பானது நாடகத்தின் தரத்தையும் பொருளையும் முனைப்பாக்கிக்காட்ட உதவும் என்பதை மாணவருக்கு விளக்குங்கள்.

- மாணவரைச் சில குழுக்களாகப் பிரியுங்கள்.

  உதாரணம்:
  - காடொன்றினுள் நடிக்கும் ஒரு சந்தர்ப்பம்
  - வீடொன்றின் நடிக்கும் சந்தர்ப்பம் (வரவேற்பறையில்/சமையலறை)
  - பூந்தோட்டமொன்றில் நடிக்கும் சந்தர்ப்பம்
  - சூரியன் மறைத்து செல்லும் போது நடிக்கும் சந்தர்ப்பம்
  - பஸ் நிலையத்தில்/புகையிரத நிலையத்தில் நடிக்கும் சந்தர்ப்பம்

- இச்சந்தர்ப்பங்களை உருவாக்குவதற்குத் தேவையான பொருள்களைத் தேடிப் பெற்றுக் கொண்டு வருமாறு ஓரிரு தினங்களுக்கு முன்னரே மாணவருக்கு அறிவியுங்கள் அன்றேல் தரவிருத்தி உள்ளீட்டிலிருந்து அவற்றை வழங்க ஆவன செய்யுங்கள்.

- பொருள்களைச் சிக்கனமாக (வீண்விரயம் செய்யாது) பயன்படுத்துமாறும் உபகரணங்கள்/கருவிகளைக் கையாளும்போது விபத்துகள், காயங்கள் ஏற்படாதவாறு கவனமாகச் செயற்படுமாறும் மாணவருக்கு அறிவுறுத்துங்கள்.

- பொருள்கள்
  காட்போட், ஹாட்போட், ரெஜிபோ.ஃம் தகடுகள், பிரிஸ்டல் போட், ஆணி, டிமை கடதாசி, கத்தரிக்கோல், கத்தி, வாள், சுத்தியல், கம்பி, கயிறு, மரச்சலாகைகள். தடிகள், மரக்கட்டைகள் போன்றவை.

**மாணவருக்கானவை:**

- நீங்கள் தேடிப்பெற்ற பொருள்களையோ ஆசிரியர் வழங்கிய பொருள்களையோ பயன்படுத்தி உங்களது குழுவுக்குத் தரப்பட்டுள்ள நாடகப் பொருத்தமான சூழமைவுக்கு ஏற்ற பின்னணியொன்றினை அமைக்க முயற்சி செய்யுங்கள்.

- பின்னணி அமைக்கும்போது பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்துங்கள்.
  1. உங்களுக்குத் தரப்பட்டுள்ள நாடக சூழமைவை நன்கு விளங்கிக் கொள்ளுங்கள்.
  2. அதற்குத் தேவையான பின்னணி எவ்வாறானது எனக் குழுவில் சக மாணவருடனும் கலந்துரையாடுங்கள்.
  3. மூல வளங்களை இயன்ற அளவுக்குச் சிக்கமாகப் பயன்படுத்திப் பின்னணியை அமைக்க முயற்சி செய்யுங்கள்.
  4. பின்னணியை
     - இலகுவாகக் கையாளத்தக்கதாக
     - இலகுவாக இடத்துக்கிடம் கொண்டு செல்லத்தக்கதாக
     - நடிகரது சித்திரிப்புப் பணிக்குக் காத்திரமான வகையில் பயன்படுத்தத்தக்கதாக
     - இலகுவாக மேடையில் தாபிக்கத்தக்கதாக
     - ஒரு தடவை பயன்படுத்திய பின்னர் ஒதுக்கிவிடாது மீண்டும் பயன்படுத்தத்தக்கதாக அமைப்பது குறித்துக் கவனஞ் செலுத்துங்கள்.

- உங்களது குழுவுக்குத் தரப்பட்ட சூழமைவுக்குப் பொருத்தமானவாறு பின்னணியை ஆக்கிய பின்னர் பாடசாலை மேடை மீது அதனை இடப்படுத்துங்கள்.

- நீங்கள் அமைத்த பின்னணியைப் பயன்படுத்திக் குழு அங்கத்தவர் அனைவரும் கூட்டாகச் சேர்ந்து சித்திரிப்புகளைக் கட்டியெழுப்புங்கள்.

- ஏனையோரின் சித்திரிப்புகளையும் அவதானியுங்கள்.

- ஆசிரியருடனும் ஏனைய குழுக்களுடனும் அவை பற்றிக் கலந்துரையாடி நலனாய்வு செய்யுங்கள்.

## 07. மதிப்பீட்டு நியதிகள்

| தொ. இல. | மாணவர் பெயர் | 04 புள்ளி | 04 புள்ளி | 04 புள்ளி | 04 புள்ளி | 04 புள்ளி | 20 புள்ளி | 10 புள்ளி |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | தேவையான மூலப்பொருள்களைப் பெறல். | ஆசிரியரின் அறிவுறுத்தல்களைப் பின்பற்றல். | பொருள்களைச் சிக்கனமாகக் கையாண்டு ஆக்கபூர்வமாக ஆக்கம் புரிதல் | குழுவில் ஒத்துழைத்துச் செயற்படல் | நாடகப் பொருத்தமான குழமையைக் கட்டியெழுப்புதல். | மொத்தப்புள்ளி | இறுதிப்புள்ளி |
| | | | | | | | | |

மிக நன்று : 04
நன்று : 03
நடுத்தரம் : 02
மேலும் முன்னேற வேண்டும் : 01

## கற்றல் - கற்பித்தல் மதிப்பீட்டுத் திட்டங்களைத் தயாரிப்பதற்கான மாதிரி நாடகமும் அரங்கக் கலைகளும் - தரம் 07

**01. மதிப்பீட்டுத் தவணையும் கருவி இலக்கமும் :** தவணை 2, கருவி 1

**02. உள்ளடங்கும் தேர்ச்சி மட்டங்கள் :** 2.8, 2.9

**03. விடய உள்ளடக்கம் :**
- எளிமையான வேடமுகங்கள் தயாரித்தல்
- எளிமையான மேடைப்பொருள்கள் தயாரித்தல்.
- எளிமையான அரங்க அணிகலன்கள் தயாரித்தல்.

**04. கருவியின் தன்மை :**
- நாடகமொன்றின் நடிகரின் ஒப்பனைக்காகப் பயன்படும் அரங்க அணிகலன்களையும் சித்திரிப்பின்போது பயன் படும் மேடைப் பொருள்களையும் தயாரித்தல். (ஆக்கச் செயற்பாடு)

**05. கருவியின் குறிக்கோள்கள்:**
- நாடகச் சித்திரிப்புக்குத் தேவையான வேடமுக மொன்றைத் தயாரிப்பார்.
- நடிகருக்குத் தேவையான வளையல்கள், மாலைகள், கிரீடங்கள்/மகுடங்கள் தயாரிப்பார்.
- மேடையில் பயன்படுத்தத்தக்க வாள், வில், ஈட்டி, போன்ற மேடைப் பொருள்கள் தயாரிப்பார்.

**06. கருவியை நடைமுறைப்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள் :**
**ஆசிரியருக்கானவை:**
- செயற்பாடு 2.8, 2.9 ஆகியவற்றை ஆரம்பிக்க முன்னர் இக்கருவி பற்றி மாணவருக்கு அறிவூட்டம் செய்யுங்கள்.
- மாணவரை மூன்று குழுக்களாகப் பிரியுங்கள்.
- அந்தக் குழு தயாரிக்க வேண்டிய மேடைப் பொருள்கள்/அணிகலன்கள் குறித்துத் தெளிவாக விளக்கமளியுங்கள்.
- தேவையான மூலப்பொருள்கள் குறித்து அறிவூட்டம் செய்யுங்கள்.
- தாம் தயாரிக்க வேண்டிய மேடைப் பொருள்கள்/அணிகலனின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாகக் கலந்துரையாட வாய்ப்பளியுங்கள்.
- தயாரித்த முடிவுப் பொருள்களை ஒப்படைக்க வேண்டிய திகதியை அறிவியுங்கள்.

**மாணவருக்கானவை:**
- ஆசிரியர் வழங்கும் அறிவுறுத்தல்களைக் குறித்துக் கொள்ளுங்கள்.
- உங்களது குழு தயாரிக்க வேண்டிய மேடைப் பொருள்/அணிகலன் பற்றிய விவரங்களைத் தெளிவாக அறிந்து கொள்ளுங்கள்.
- தேவையான மூலப்பொருள்கள் எவை என அறிந்து குறித்துக் கொள்ளுங்கள்.
- குழுவில் கலந்துரையாடிப் பொறுப்புக்களைப் பகிர்ந்து கொள்ளுங்கள்.
- குறித்த தினத்தில் முடிவுப் பொருள்களை ஒப்படையுங்கள்.

## 07. மதிப்பீட்டு நியதிகள்

| தொ. இல. | மாணவர் பெயர் | 04 புள்ளி | 04 புள்ளி | 04 புள்ளி | 04 புள்ளி | 04 புள்ளி | 20 புள்ளி | 10 புள்ளி |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | ஆசிரியரது அறிவுறுத்தல்களைப் பின்பற்றல். | ஆக்கத்துக்குத் தேவையான மூலப் பொருள்களைத் தேடிப்பெறல் | ஆக்கத்திறன் வெளிப்பாடு | ஆக்கத்தைப் பயன்படுத்திச் சித்திரித்தல். | குழுவில் ஒத்துழைத்துக் கூட்டாகச் செயற்படல். | மொத்தப் புள்ளி | இறுதிப்புள்ளி |
| | | | | | | | | |

மிக நன்று : 04
நன்று : 03
நடுத்தரம் : 02
மேலும் முன்னேற வேண்டும் : 01

## கற்றல் - கற்பித்தல் மதிப்பீட்டுத் திட்டங்களைத் தயாரிப்பதற்கான மாதிரி நாடகமும் அரங்கக் கலைகளும் - தரம் 07

**01. மதிப்பீட்டுத் தவணையும் கருவி இலக்கமும் :** தவணை 2, கருவி 2

**02. உள்ளடங்கும் தேர்ச்சி மட்டங்கள் :** 2.10

**03. விடய உள்ளடக்கம் :**
- மேடைப் பொருள்கள் - அறிமுகம்
- மேடைப் பொருள்கள் - தயாரித்தல்.
- நாடகச் சூழமைவுகளுக்குப் பொருத்தமானவாறு அவற்றைப் பயன்படுத்துதல்.

**04. கருவியின் தன்மை :**
- நாடகப் பொருத்தமான மேடைப் பொருள்களைத் தயாரித்தல். (ஆக்கச் செயற்பாடுகள்)

**05. கருவியின் குறிக்கோள்கள்:**
- மேடைப்பொருள்கள் என்றால் என்ன என விளக்குவார்.
- வெவ்வேறு நாடகங்களில் வெவ்வேறு மேடைப் பொருள்கள் பயன்படுத்தப்படுகின்றமையைக் கலந்துரையாடுவார்.
- பல்வேறு மேடைப் பொருள்கள் தயாரிப்பார்.
- தயாரித்த மேடைப்பொருள்களை நாடகங்களுக்காகப் பயன்படுத்துவார்.

**06. கருவியை நடைமுறைப்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள் : ஆசிரியருக்கானவை:**
- செயற்பாடு 2.10 இன் ஆரம்பத்தில் இந்தக் கருவியை அறிமுகஞ் செய்யுங்கள்.
- செயற்பாடு 2.10 இல் பெற்ற அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு வெவ்வேறு நாடக சூழமைவுகளுக்குப் பொருத்தமான மேடைப் பொருள்களைத் தயாரிக்குமாறு மாணவருக்கு அறிவுறுத்தல் வழங்குங்கள்.
- மாணவரைச் சில குழுக்களாகப் பிரியுங்கள்.
- குழுவுக்கு ஒன்றாகப் பின்வரும் நாடகங்களிலிருந்து பொருத்தமான சில சந்தர்ப்பங்களை வழங்குங்கள்.
  - தொப்பி வியாபாரி - தொப்பி தயாரித்தல்
  - ஒற்றுமையின் சின்னம் - பனிக்கட்டி வீடு ஆக்குதல்
  - மலையை அகற்றிய மூடக்கிழவன் - மலை ஒன்றை ஆக்குதல்
  - முயலார் முயல்கிறார் - சிங்கத்தின் குகை, கிணறு
- இச்சந்தர்ப்பங்களை உள்ளடக்கிய நாடகக் காட்சிகளை நேரடியாகப் பார்க்க அன்றேல் வீடியோ இறுவட்டில் பார்க்கச் சந்தர்ப்பமளியுங்கள்.
- நாடகக் காட்சிகளைப் பார்க்கும்போது மேடைப் பொருள்கள் குறித்து விசேட கவனஞ் செலுத்துமாறு அறிவுறுத்துங்கள்.

- தாம் தயாரிக்கப்போகும் மேடைப் பொருளைத் தயாரிப்பதற்குத் தேவையான மூலப் பொருள்களைச் சேகரித்துக்கொள்ளுமாறு ஓரிரு தினங்களுக்கு முன்ன தாகவே அறிவுறுத்தல் வழங்குங்கள்.
- தாம் தயாரிக்கவுள்ள மேடைப் பொருள் தொடர்பாகத் தெளிவான விளக்கத்தைப் பெற்றுக்கொண்டு, அதனைத் தயாரிக்கத் தொடங்குமாறு அறிவுறுத்துங்கள்.
- தேவையான மூலப்பொருள்களைத் தேடிப் பெற்றுக்கொள்வதற்கும் ஆயத்தமாவ தற்கும் போதுமான கால அவகாசம் வழங்குங்கள்.

**மாணவருக்கானவை:**

- ஆசிரியர் காட்டும் நாடகக் காட்சிகளைக் கவனமாகப் பாருங்கள்.
- உங்களது குழு தயாரிக்கவுள்ள மேடைப் பொருளைக் கருத்தூன்றிப் பாருங்கள்.
- நீங்கள் தேடிப்பெற்ற மூலப்பொருள்களைப் பயன்படுத்தி உங்களது குழுவுக்குரிய மேடைப் பொருளைத் தயாரியுங்கள்.
- மேடைப் பொருளைத் தயாரித்த பின்னர் அதனைப் பயன்படுத்தி நீங்கள் பார்த்த நாடகக் காட்சியைச் சித்திரித்துக் காட்டுங்கள்.
- அந்த மேடைப் பொருளைப் பயன்படுத்தி யாதேனும் நாடகச் சூழமைவொன்றினைக் கட்டியெழுப்புங்கள்.

## 07. மதிப்பீட்டு நியதிகள்

| தொ. இல. | மாணவர் பெயர் | 04 புள்ளி | 04 புள்ளி | 04 புள்ளி | 04 புள்ளி | 04 புள்ளி | 20 புள்ளி | 10 புள்ளி |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | மேடைப் பொருள்கள் தயாரிப்ப தற்குத் தேவையான பொருள் களைத் தேடிப்பெறல் | மேடைப் பொருளைத் திட்டமிடுதல் | ஆக்கபூர்வமான வகையில் மேடைப் பொருளைத் தயாரித்தல். | குழுவில் கூட்டாக ஒத்துழைத்துச் செயற்படல். | தாம் தயாரித்த மேடைப் பொருளை வெவ்வேறு சித்திரிப்புக்களுக்காகப் பயன்படுத்தல். | மொத்தப் புள்ளி | இறுதிப்புள்ளி |
| | | | | | | | | |

மிக நன்று : 04
நன்று : 03
நடுத்தரம் : 02
மேலும் முன்னேற வேண்டும் : 01

**கற்றல் - கற்பித்தல் மதிப்பீட்டுத் திட்டங்களைத் தயாரிப்பதற்கான மாதிரி நாடகமும் அரங்கக் கலைகளும் - தரம் 07**

**01. மதிப்பீட்டுத் தவணையும்**
**கருவி இலக்கமும் :** தவணை 3, கருவி 1

**02. உள்ளடங்கும் தேர்ச்சி மட்டங்கள் :** 4.3

**03. விடய உள்ளடக்கம் :**
- வரலாற்றுக் கதைகள் திரட்டுதல்.
- வரலாற்றுக் கதைகளில் அடங்கியுள்ள நிகழ்ச்சிகளைக் கொண்டு நாடகப் பொருத்தமான சூழமைவுகளைக் கட்டியெழுப்புதல்.
- வரலாற்றுக் கதையொன்றினைத் தழுவி நாடகப் பாட லொன்று எழுதுதல்.

**04. கருவியின் தன்மை :**
- வரலாற்றுக் கதையொன்றினைத் தழுவி நாடக எழுத்துருவொன்றை எழுதுதல்.
(ஆக்கச் செயற்பாடுகள்)

**05. கருவியின் குறிக்கோள்கள்:**
- வரலாற்றுத் தகவல்களில் பொதிந்துள்ள சுவாரசிய மான கதைகளைத் தேடியறிவார்.
- அக்கதைகளில் பொதிந்துள்ள சுவாரசியமான சம்பவங் களைத் திரட்டுவார்.
- அச்சம்பவங்களை நாடகப் பொருத்தமானவாறு தயாரிப்பார்.
- நாடகப் பொருத்தமான நிகழ்வுகளையெல்லாம் உள்ளடக்கி, நாடக எழுத்துரு ஒன்று எழுதுவார்.

**06. கருவியை நடைமுறைப்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள் :**
**ஆசிரியருக்கானவை:**
- செயற்பாடு 4.3 ஐ ஆரம்பிக்க முன்னர் இக்கருவியை மாணவருக்கு அறிமுகஞ் செய்யுங்கள்.
- மாணவர் சகலரும் அறிந்த வரலாற்றுச் சம்பவமொன்றினைத் தெரிவு செய்து கொள்ளுங்கள்.

  உதாரணம்: வெடியரசன் - மீகாமன் போர்
  யானையை அடக்கி அரியாத்தை
  போர்த்துக்கேயரினால் சங்கிலி மன்னன் கைது செய்யப்படுதல்.
  ஒல்லாந்தத் தளபதியினால் பூதத்தம்பி மீது தேசத்துரோகக் குற்றம் சுமத்தப்படுதல்.
- இச்சம்பவங்கள் சார்ந்த கதைகள் உள்ளனவா எனத் தேடியறியுமாறு அறிவுறுத்துங்கள்.

- இவ்வாறாக வரலாற்றுக் கதையை எழுதிய பின்னர் மாணவரைக் குழுக்களாகப் பிரியுங்கள்.
- குழு அங்கத்தவர்கள் அனைவரும் எழுதிய கதைகளைக் குழுநிலையில் வாசித்த பின்னர் அதில் அடங்கியுள்ள நிகழ்வுகளை நாடகப் பொருத்தமாக ஒழுங்குபடுத்தி நாடகப் எழுத்துருவாகக் கட்டியெழுப்புமாறு மாணவரை வழிப்படுத்துங்கள்.

**மாணவருக்கானவை:**

- ஆசிரியர் தரும் வரலாற்று நிகழ்வுடன் தொடர்புடைய கதை பற்றிய விவரங்களைத் தேடியறியுங்கள்.
- அக்கதையை எழுதுங்கள்.
- ஆசிரியர் அறிவுறுத்தலின்படி குழுக்களாகப் பிரியுங்கள்.
- குழு அங்கத்தவர்கள் எழுதியுள்ள கதைகளைப் பரிமாறி வாசியுங்கள்.
- அக்கதைகளிலுள்ள சம்பவங்களை ஒரு நாடகமாக எழுதுங்கள்.
- அனைவரும் எழுதிய பின்னர் எல்லா அம்சங்களையும் உள்ளடக்கிய ஒரு தனி நாடக எழுத்துருவை எழுதுங்கள்.
- அந்நாடக எழுத்துருவை ஆசிரியருடன் சேர்ந்து நாடகமாக்குங்கள்.

## 07. மதிப்பீட்டு நியதிகள்

| தொ. இல. | மாணவர் பெயர் | 04 புள்ளி | 04 புள்ளி | 04 புள்ளி | 04 புள்ளி | 04 புள்ளி | 20 புள்ளி | 10 புள்ளி |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | வரலாற்றுத் தகவல்களைத் தேடியாய்தல். | தரப்பட்ட வரலாற்றுச் சம்பவத்தினைக் கொண்டு கதையொன்று எழுதுதல். | தனித்தனியே எழுதிய கதை களைக் குழுநிலையில் வாசித்து நாடகப் பொருத்தமான சூழமைவு களைக் கட்டியெழுப்புதல். | நாடகப் பொருத்தமான சகல சூழமைவுகளையும் உள்ளடக்கி நாடக எழுத்துருவொன்று எழுதுதல். | எழுதிய நாடக எழுத்துருவைச் சித்திரித்தல். | மொத்தப் புள்ளி | இறுதிப்புள்ளி |
| | | | | | | | | |

மிக நன்று : 04
நன்று : 03
நடுத்தரம் : 02
மேலும் முன்னேற வேண்டும் : 01